www.tamilarangam.net

# சமர்



சமர்: 24

அரசியற் தத்துவார்த்த புரட்சிகர
விமர்சன ஏடு

ஓவியம்:- சிவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமர் - 24

அரசியற் தத்துவார்த்த
புரட்சிகர விமர்சன ஏடு

பக்கங்கள்: 68

ஐப்பசி 1998

பிரான்ஸ்



**அனைத்துவித
திரிபுவாதங்களுக்கும்
எதிராக சமர்**

இது ஒரு புரட்சிகர மக்கள் பத்திரிகை

**கருத்து மக்களை பற்றிக்கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்**

ஒன்று **25F**

# உள்ளே


| | |
|---|---|
| மக்களின் அவலங்கள்... | *05* |
| இருள்வெளி என்ற இருண்ட மலர் | *14* |
| அப்பாவிகளுக்கு வழங்கிய ... | *19* |
| போராட்டமே மகிழ்ச்சிக்குரியது | *24* |
| பொருளாதார மறுசீரமைப்பை கோரும் | *31* |
| பகிர்த்து உண்ண வரும்படி.. | *43* |
| புலியெதிர்புக்குப் பின்.. | *49* |



**ம.க.இ.க புதிய பாடல் கசட்டுக்கள்**

- **6** வது தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரப் பேச்சு
- **7** வது ஆண்ட பரம்பரையா? அடிமைப் பரம்பரையா? (சாதித் தீண்டாமைக்கு எதிரான பாடல்கள்)
- **8** வது இந்து மதவெறி பாசிச பயங்கரவாதத்திற்கு எதிரான பாடல்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசம் கடந்த அமெரிக்க ஆக்கிரமிப்பு



## பயங்கரவாதமும்

## சமூக அக்கறையற்ற எம்மவர்களின்

## சோடை போதலும்

உலகம் புதிய ஆக்கிரமிப்புகளை உலக மயமாதல் மூலம் சந்திக்க தொடங்கிவிட்டது. அமெரிக்க தலைமையிலான ஒற்றை உலக அமைப்பு மற்றைய ஏகாதிபத்தியங்கள் உடன் இனைந்து உலகை பங்கிட்ட போக்கில் புதிய பரிணாமங்கள் அரங்கிக்கு வந்துள்ளது. இதுவரை காலமும் பொருளாதார ஆக்கிரமிப்பு மூலம் உலகமயமாதலை ஏகாதிபத்தியம் நடைமுறையாக்கிய போக்கில் புதிய பரிணாமாக அண்மையில் சூடான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மீது நடாத்திய இராணுவதாக்குதல் எல்லை கடந்த அதிகாரத்தை ஏகாதிபத்தியம் சட்டப்படியாக்க ஜனநாயக வடிவமாக்க மாற்றத்தொடங்கியுள்ளது. தனிநபர் பயங்கர வாதங்களை தமக்கு சாதகமாக்கி தேசங்களின் தேசிய எல்லையை அழிக்கும் ஆக்கிரமிப்பில் உலக மயமாதல் இராணுவத்துறையிலும் அப்பட்டமாக தொடங்கியுள்ளது.

முன்பு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள் நேரடியான காலணியாக்கத்துக்குள்ளும், மனிதாபிமான உதவிக்குள்ளும் நடந்த போக்குகளை கடந்து இனி உலகம் ஒற்றை அதிகாரத்துக்குள் ஆளப்படவேண்டும் என்பதை இத்தாக்குதல் மிகதெளிவாக்கியுள்ளது. பொருளாதாரத்தில் தேசியங்களை உடைத்து நொருக்கி ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட ஏகாதிபத்தியம் இதற்க்குள்ளும் தம்மால் சுரண்டுவது போதாது என்ற நிலையில் நேரடியான அதிகாரம் மூலம் உலகை கட்டுப்படுத்த, தனது அதிகாரத்தை உலகளவில் முழுமையில் நிறுவ, உலகில் சுரண்டுவதில் ஒரு சட்ட அமைப்பு கொண்டுவர விரும்பும் போக்கில் நடத்தப்பட்ட காட்டுமிராண்டி தாக்குதல் தான் இது.

இனியும் தேசங்கள் சுயாதீனமானது எனவோ, சுதந்திரமான தேசவிடுதலைப் போராட்டமோ இருக்கவோ நடக்கவோ முடியாது என்பதை இத்தக்குதல் மூலம் மீள ஒருமுறை உலகிக்கு துல்லியமாக்கியுள்ளது. தேசங்களின் சுயாதீனத்துக்கான போராட்டம் உலகளாவிய ரீதியில் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் ஊடாக ஏகாதிபத்திய சுரண்டலை எதிர்த்து போராட்டமாகவே இருக்கும் ஒரே மார்க்கத்தை நாம் சரியாக இனம் கண்டுகொள்ள இத்தாக்குதல் மேலும் துல்லியமாக்கியுள்ளது. உலகளவில் தேசியம் கடந்த சுரண்டல், இராணுவ அரசு வன்முறைகள் மிககோரமாகியுள்ள நிலையில் சமூகம் பற்றிய எமது அக்கறை என்ன என்பதே எம்முன் உள்ள முக்கிய பிரச்சனையாகியுள்ளது. அண்மைக்காலமாக உலகுகெங்கும் நாட்டு பொருளாதாரங்கள் திவாலாகி பணவீக்கத்துக்கு உள்ளாகியுள்ள (உ+ம்- ருசியா, இந்தோசீனா......) நிலையில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் கடன் பிச்சையிட்டு முண்டுகொடுப்பதுடன் பொம்மையரசுகளை பாதுகாத்தும், உருவாக்கியும் ஜனநாயகம் பேசுகின்ற நிலையில், நாம் எந்த ஜனநாயகத்துக்கு குரல் கொடுப்பது என்பது எம்முன் உள்ள பிரச்சனையாகியுள்ளது.

இலங்கை முதல் புலம்பெயர் தமிழ் சிங்கள சமூகங்களின் சமூக அக்கறைக்குரியோர் என வலிந்து காட்டிக்கொள்வோர் சமூகம் பற்றிய அக்கறையை படிப்படியாக கைவிட்டுச் செல்கின்றனர். சமூகத்தின் நடைமுறை நெருக்கடிகள் மீது தமது எழுத்தை, பத்திரிகையை, நடைமுறையை நகர்த்துவதுக்குப் பதில் சமூகத்துக்கு வெளியில் ஆள்வோரின் நிலைக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் குரல் கொடுக்கின்றனர். ஜனநாயகம் பற்றியும், மனித உரிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீறல் பற்றியும், தமது சொந்த வக்கிரங்களையும் பற்றி பேசியும் எழுதியும் கொள்ளும் இவர்கள் அதை இந்த ஏகாதிபத்திய எல்லைக்குள்ளான கோட்பாட்டுதளத்துக்குள் சிந்தித்தும் எழுதியும் சமூகத்துக்கு எதிராக திட்டவட்டமாக ஏகாதிபத்தியத்துக்காக சேவை செய்கின்றனர்.

இன்று தேவை சமூகம் பற்றிய பார்வை. சமூகத்தின் நேரடிப்பிரச்சனை மீது தலையிடவும் அதை மாற்றவும் புரட்சி செய்யவும் உலகளாவிய ரீதியில் ஒத்த புரட்சிகர கோரிக்கையுடன் உள்ளடக்கிய போராட்டமார்க்கம் எல்லாத்துறையிலும் முடுக்கிவிடப்படவேண்டும். இது அல்லாத அனைத்து ஏகாதிபத்திய கோட்பாட்டை அம்பலப்படுத்தியும் வேர் அறுத்தும் போராடவேண்டும். உங்கள் எழுத்துகளை, பத்திரிகைகளை, நடைமுறைகளை உலகளாவிய ரீதியில் சமூகத்தைப் புரட்டிப் போடும் புரட்சிக்காக மாற்றக் கோரி சமூக அக்கறைக்குரியவர்களிடம் அறைகூவுகின்றோம். இதை எதிர்த்த, மறுத்த, பேசாத அனைத்தின் பின் உள்ள ஏகாதிபத்திய சார்புத்தனத்தை அம்பலப்படுத்தி புரட்சி செய்ய அறைகூவுகின்றோம். இது மட்டும்தான் இன்று சமூகத்தின் வாழ்வோர் முன் உள்ள ஒரேஒரு புரட்சிகர முற்போக்கு மார்க்கமாக உள்ளது. o

-சமர்- 24 -


சமர்

# வாசகர்களுக்கு

இதுவரை வெளியாகியுள்ள 24 சமர் இதழ்களையும் முழுமையாகப் பெற விரும்புவோர் □ 275F களை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.



இவற்றை பையின் பண்ணிப் பெற 75F மேலதிகம்.

24 இதழ்களுக்கு,

தபாற்கட்டனம் 75F மட்டுமே!

தொடர்பு, சமர் முகவரி

தனி இதழ் 15F கள் மட்டுமே

"samar"

வாசகர்களே! தங்களது தரமான ஆக்கங்களையும், விமர்சனங்களையும் உதவிகளையும் சந்தாக்களையும் விரைவுபடுத்துங்கள்


53ம் பக்கத் தொடர்..

இதைப் பிரித்தெடுத்துப் போராட யாராலும் முடியாது. எனவே பெண்விடுதலைப் போராட்டம் என்பது இருக்கு சமுதாயத்துக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற்று இதை தலைகீழ் ஆக்குவதில் மட்டும்தான் சாத்தியம். இது பாட்டாளிவர்க்க தலைமையிலான போராட்டத்தில் மட்டும்தான் வெற்றி பெறமுடியும் என்பதும் சமூக விஞ்ஞான உண்மை என்பதை யாராலும் மறுக்கவும் முடியாது. இதை மறுத்து திசைதிருப்பி எழுதும் எஸ்வி.ஆ.'.பேல் போன்றோர் கட்டுரை ஆணாதிக்கத்தை பாதுகாக்கும் மறைமுக கதையளப்புகளே.

www.tamilarangam.net

இலங்கையில் இனங்களுக்கிடையே தொடரும் யுத்தமும், அதன் பரிணாமவளர்ச்சியும், இலங்கையில் முற்போக்கு மற்றும் புரட்சிகர அரசியலும் அதை ஒட்டிய சக்திகளை இல்லாது ஒழித்துக்கட்டுகின்றது. இவை ஒருபுறம் அழித்தொழிப்பு மூலமும், மறுபுறம் சொந்த வர்க்க அடிப்படை மாற்றத்துடன் முற்றுப் பெற்றுவருகின்றது.

# மக்களின் அவலங்களின் மீது பிழைப்பு நடத்துவோர் யார்?



சமூக அக்கறைக் குரியவர்களாக காட்டி நடமாடியவர்கள், இன்று பலவகையான பிழைப்புவாத சந்தர்ப்பவாத கருத்துகளை தமது பூர்ஷ்சுவா நிலைகளுக்கு ஏற்ப விசுவாசமாக சுவீகரித்துக்கொண்டனர். இதன்மூலம் நேரடியாக மறைமுகமாக ஏகாதிபத்தியத்துக்கு கோட்பாட்டிலும் நடைமுறையிலும் வெட்கமின்றி சேவகம்செய்கின்றனர். இவர்கள்தான் இன்று இலங்கையிலும் புலம்பெயர் தமிழர்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு தடையான முதல் எதிரியாக இன்று பரிணாமித்துள்ளனர். இவர்களுக்கு எதிரான போராட்டம் கோட்பாடு மற்றும் நடைமுறை தளத்தில் கட்டியமைக்கப்பட வேண்டிய அளவுக்கு இன்றைய நிலையில் அவசியமாகின்றது.

இந்த அரசியல் மற்றும் நடைமுறை கோட்பாட்டு உருவாக்கத்துக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச புரட்சியை காட்டிக் கொடுப்புடன், குறிப்பாக அவர்களின் சொந்த வர்க்க அடிப்படை மீதான விழிப்புநிலையில் அரங்கிற்குவந்துள்ளது. இன்று இலங்கையில் சிங்கள பேரினவாதம் உச்சத்தில் விசுபரூபம் எடுத்து ஆடிக்கொண்டிருக்க, அதற்க்கு துரோக இயக்கங்கள் முண்டுகொடுத்து தூக்க, மறுபுறம் புலிகளின் சுத்த இராணுவகண்ணோட்டத்துடன் கூடிய ஜனநாயக மறுப்பை அடிப்படையாக கொண்டு இராணுவவாதமாக சீரழிகின்றது. இந்நிலையில் சிங்கள முற்போக்கு மற்றும் நடுநிலைப்பிரிவுகளை வென்று எடுத்தல் அல்லது நடுநிலைப்படுத்தலுக்குப் பதில், அவர்களை எதிரியாக மாற்றும் நடவடிக்கைகள் தொடரும் நிலையில், சோவியத் மற்றும் சீனாவில் அப்பட்டமான முதலாளித்துவம் அரங்கேறி முன்னைய கம்யூனிச வெற்றிகளை சேறுயடிக்கும் நிலையில், உலகில் நூறுவீத செய்தி அமைப்பை ஏகாதிபத்தியங்கள் தனது கட்டுப்பாட்டில் கொண்டு இருக்கும் நிலையில், உலக ரவுடியான அமெரிக்கா ஏகாதிபத்திய ஒற்றை உலக சாகத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இன்நிலையில் ஏகாதிபத்திய செய்திகள் மட்டுமே செய்தியாக, முன்னால் சோசலிச அரசுகள் மீது அவதூறுகள் காறி உமிழும் நிலையில், சமூக அக்கறைக்குரியவர்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் முற்றாக மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட நிலையில், தமது அரசியல் நிறத்தை மாற்றிக் கொள்ள, ஏகாதிபத்திய கோட்பாடுகள் ஏகாதிபத்திய மனிதாபிமான செயல்பாடுகள் இனிப்பான தேன்தடவிய உணவாக இவர்கள் முன் ஜனநாயகத்தின் பெயரில் இன்று உள்ளது. இலங்கையில் ஏற்பட்ட யுத்தம், தொடர்ச்சியான தமிழினச்சுத்திகரிப்பும் இன அழிப்பு, இயக்க உள்வன்முறைகள் கொலைகள், இயக்க மோதல்கள் கொலைகள், ஜனநாயக விரோத கைதுகள் படுகொலைகள், மற்றைய இனங்கள் மீதான தமிழினத்தாக்குதல்கள் படுகொலைகள் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட கணிசமான பிரிவுகளை சொந்த மண்ணில் இருந்து வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு துரத்தியது.

இந்தவகையில் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் புலம்பெயர்நாட்டுக்கும் வலுக்கட்டாயமாக தம்மைத்தாம் நாடுகடத்திக் கொள்ள கணிசமானவர்களை நிர்ப்பந்தித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைவிட முன்பே பொருளாதார காரணத்துக்காக முன்னமே புலம்பெயர்ந்தவர்களில் சிலர், இங்கு இயக்கசார்பு அரசியலில் ஈடுபட்டு இருந்தவர்கள், இயக்க அழிவுடன் தம்மை இந்த புலம்பெயர் சமூக அக்கறைக்குரியவர்களின் பட்டியலில் அடையாளப்படுத்தினர். இதைவிட எந்த அரசியல் இயக்கத்திலும் ஈடுபாடத சிலர்ரும் தம்மை இப்படி அடையாளப் படுத்தினர். இந்த சமூக அக்கறைக்குரிய பிரிவு, இலங்கையில் மத்திய மற்றும் மேல்தட்டு பூர்ஷ்வா வர்க்கப் பின்னணியில் இருந்து வந்ததுடன், பெரும்பகுதியினர் முன்பு உழைப்பில் ஈடுபடாததுடன், இராணுவ சாகசத்துக்கு உட்பட்டு இயக்கங்களை நோக்கி ஓடிய தொடர்ச்சியில், எந்த விதத்திலும் மக்களுக்குள் இயங்காத இராணுவவாதத்துக்குள்தான் இவர்களின் அரசியல் தொடங்கியது.

பின்னால் அதற்க்குள் ஆங்காங்கே இருந்த அரைகுறையான புத்தகபடிப்பு மார்க்சியம் மூலமும், துரோகம் இழைத்த இந்திய போலி கம்யூனிசக்கட்சியின் வகுப்புகள் மூலமும், நடைமுறையற்ற வரட்டுவாத மார்க்சிய வேடமிட்ட பிழைப்புவாத புத்தியீவிகளின் சவாடல் மார்க்சியம் மூலமும், நடைமுறையற்ற அரைகுறை பிரசவ மார்க்சிய நம்பிக்கைகளுடன், புலம்பெயர்ந்த இந்த அரைவேக்காட்டு மார்க்சியத்துக்கு அப்பால், அன்றும் இன்றும் மார்க்சியம் என்றால் என்ன எனத்தெரியாத அறிவுச்சூனியங்களாகவே அன்றும் இன்றும் நடமாடுகின்றனர்.

குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் இந்த பிரிவு முதல் முதலாக பணத்தை அடைய முடிந்த நிலையில் இது, இந்தப்பிரிவுக்குள் விமர்சித்து வேரருக்காது மறைந்து கிடந்த பூர்ஷ்சுவா இயல்பை மேல் கொண்டுவந்தது. இதனால் இவர்கள் காட்டிக் கொண்ட சமூக அக்கறை மெதுவாக கைவிட தயங்காத இயல்பான போக்கு அவர்களின் வாய்ச் சவாடலை மீறியும் விழித்துக்கொண்டது. இதனால் பலர்தமது முன்னைய பம்மாத்தை கைவிட்டு மிக மோசமான மனிதர்களாக மாறியுள்ள நிலையில், எஞ்சியுள்ளோர் அதே பாதையை நோக்கி படிப்படியாக புதிய கோட்பாட்டு தாவல்மூலம், எல்லாவற்றையும் கைவிட தயங்காத நிலையில் இன்று முன்னேறுகின்றனர்.

நடைமுறையற்ற மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டத்தை கைவிட்ட கோட்பாட்டுத் தேவை மட்டுமே தொடர்ந்து பிரமுகராகவும், சவாடல் அடிக்க நடைமுறையற்ற சூனியத்தின் மீதான தேவையாக இருந்தது மட்டுமின்றி, மக்கள் பற்றி அக்கறையற்ற போக்கு இலங்கை நிலையில் இது சாத்தியமானதாகவும் உள்ளது. இன்னுமொருபிரிவு நாட்டைவிட்டு நாடுதாண்டிய நிலையில் அங்கு புரட்சி செய்யமுடியும் என்ற சொல்அலங்கார புத்தக பூச்சிகளாக, திரொக்சிய கோட்பாட்டுடன் மக்களை ஏமாற்றி கதைத்தே புரட்சிசெய்கின்றனர். நடைமுறைப்புரட்சி சொந்த நாட்டில் சாத்தியமாக்க போராட முடியாத இப்பிரிவு, வாழும் நாட்டில் தமது இருத்தலை பாதுகாக்க அங்குபுரட்சி செய்வது பற்றி பிதற்றுகின்றனர். புரட்சியை கைவிட்டவர்கள் செய்தது போல் இவர்களும் கம்யூனிசக் கட்சி என்ற பெயரை சோசலிச சமத்துவக் கட்சி எனமாற்றி முதலாளிக்கு பங்கம் ஏற்படாத, புரட்சியை பேசாத விளம்பர மலிவுக்கு கட்சியை மாற்றியவர்கள், புரட்சி செய்வதுகூட ஓதுவதற்க்கு மேல் தாண்டியதல்ல. யாருக்காவது ஓதவெளிக்கிட்டபின் அங்கு முரண்பட்ட நபர்கள் சென்றால், நாயைக் கண்டு ஓடுபவர்கள்போல் நெளிந்து வளைந்து ஓடுகின்றனர்.

கருத்துக்கு நேரடியாக பதில் அளிக்க முடியாத கோழைத்தன அரசியலுடன், எதிர்க்கேள்வி கேட்காத சட்டாம்பிமார்களாக இருக்க விரும்பும் இப்பிரிவு புரட்சிபற்றி வாய்சவாடலடித்து மக்களை ஏமாற்றுகின்றனர். எந்தவிதமான இயங்கியல் தன்மையுமின்றி, மார்க்சியத்தின் அடிப்படை வர்க்கப் போராட்ட விதிகளை மறுத்தபடி பிரச்சனைக்கு நேரடியாக பதிலளிக்க மறுத்து, பிரச்சனைகளுக்கு நேரடியாக பதிலளிக்காத மேதமை தாவல்கள் மூலம் ஏமாற்றி பிழைக்கின்றனர். மற்றும்மொருபிரிவு ஏகாதிபத்திய சம்பளப்பட்டியலில் இணைந்து கொண்டதன் மூலம், அதையே சமூகசேவையாக பிரகடனம் செய்யவும் தயங்காத, அதையே உண்மையான நடைமுறை செயல்தள களப்பணி என இன்றைய இலங்கை இராணுவ யுத்த சூனியவாதத்துக்குள், ஏகாதிபத்திய தயவுடன் நிறுவத் தயங்காது உரத்துகுரல் கொடுக்கின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றனர்.

இன்று ஏகாதிபத்திய சம்பளப் பட்டியலில் உள்ளோர் இலங்கை - புலம்பெயர்நாடென எங்கும் குட்டிபோட்ட பூனை போல் பல்கிப் பெருகுகின்றனர். இதுபோல் அறக்கட்டளை பல்கலைக் கழக ஆய்வுகள்...........எனப் பற்ப்பலவாக பணம் பெற்று சமூகமாற்றம் பற்றி வீரவசனம் பேசுவது அதிகரித்துச் செல்கின்றது. புலம்பெயர் நாடுகளில் சமூக அக்கறைக்குரியவர்களாக காட்டிக்கொண்டு பிழைக்க தெரிந்தவர்கள், பெரிய சம்பளத்துடன் பெரிய பணப் பொதிகளுடன் சிங்கள - தமிழ் எல்லைப்புறங்களிலும் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் தரை இறங்கிவருகின்றனர். இந்த ஏகாதிபத்திய கைக்கூலிகள் மட்டும்தான் இன்று இலங்கையில் இராணுவம் - புலியை மீறி எங்கும் எதையும் செய்யும் வல்லமையை ஏகாதிபத்தியம் ஏற்படுத்தி கண்காணிக்கின்றது.

மக்களின் துன்பம், துயரம், பசி, பட்டினி, இழப்புகள், மரணங்கள், வெட்டவெளி புலம் பெயர்வுகள், முடிவற்ற விதவைகளின் உற்பத்தி, இராணுவ ஆணாதிக்க கொடூரங்கள் என எங்கும் எதிலும் விற்பனைக்குரிய விபச்சார மையங்களாக, ஏகாதிபத்திய கனவுக் கோட்டையாக, ஏகாதிபத்தியத்தின் செயல்தள வீரர்களின் நடைமுறை செயல்தள மையங்களாக இன்று இவை மாறி உள்ளது. இந்தமனித அவலங்களை தமது வயிறுவளர்க்கவும், இதன் மூலம் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு தேவையான அரசியல் அடிப்படையை ஏற்படுத்தும் எட்டப்பர்கள் தான், இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் முதல் எதிரியாக உள்ளனர். இவர்கள் உடன் ஒப்பிடும் போது யுத்தத்தை செய்பவர்களின் மக்கள்விரோதம் மக்கள்முன் நிர்வாணமாக உள்ளதால், இவர்களை மக்கள் எப்போதும் ஒளிவு மறைவுயின்றி நேர்ருக்குநேர் சந்திக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

ஆனால் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யும் எட்டப்பர்கள்தான், மக்களின் ஆழ்மனங்களில் கீறியும், கொரிலாவாக எப்போதும் உள்ள மக்களுக்குள் ஊடுருவி உள்ளிருந்தே அரித்து கொறித்து மக்களை சூறையாடியும், மக்களின் போராட்டங்களை சிதைத்தும் ஏகாதிபத்தியத்துக்கு சார்பான வகையில் சமூக இயக்கங்களை வழிநடத்தவும் மட்டுப்படுத்தவும், ஏகாதிபத்தியத்தால் திட்டமிட்டு பயிற்றுவிக்கப்பட்ட செயல்தள ஊழியர்களாக உள்ளனர். இவர்கள் இன்று அப்பட்டமாக சீலை உரிந்து துரோகம் இழைத்த இயக்கங்களைவிட, மிக மோசமான துரோகிகள் மட்டுமின்றி மக்களின் முதல் எதிரியாகவும் உள்ளனர். ஜனநாயக மறுப்பு மக்கள் விரோத போராடும் அமைப்புகளுடன் கூட சில நிபந்தனையின் அடிப்படையில் கூட்டுக்கு போக முடியும், ஆனால் இந்த ஏகாதிபத்திய சம்பளப் பட்டியல் செயல்தள வீரர்கள் உடன் எந்தக் கூட்டும் சாத்தியமில்லை.

கொழும்பு - புலம்பெயர் நாட்டில் இருந்து செல்லும் இந்த அற்ப ஏகாதிபத்திய பிறவிகள் இன்று பெண்கள் அமைப்புகள், அகதிகள் குடியேற்றம், அகதிச்சேவை, விதைவைகளுக்கு மறுவாழ்வளிப்பு, சமூகநோக்கு பத்திரிகை என எண்ணற்ற செயல்தளங்களை அரசு - புலியை மீறி எங்கும் செயல்படக் கூடிய ஒரே செயல்தள அமைப்பாக மாற்றுவதில் ஏகாதிபத்தியம் வெற்றிபெற்றுள்ளது. காட்டிக்கொடுத்தும் கூட்டிக்கொடுத்தும் பிழைக்கும் இந்தப்பிரிவு போல் அடுத்தபிரிவு முதுகுசொறியும் பிழைப்புவாதிகளாக, கும்பல் சேரும் குழுக்களாக இன்று உள்ளனர். இதில் தலித் என்றும், பின்நவீனத்துவம் என்றும் எண்ணற்ற கலவைச் சாக்கடைக்குள் மூழ்கி எழுந்த நாற்றத்துடன், முதுகு சொறிவதும், தம்மைத்தாம் முதுகு சொறிந்தும் திரிகின்றனர். இதில் ஒருபகுதியினர் தரகுமுதலாளிகளுக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் சார்பான வீரகேசரியிலும், சிங்கள இனவாத அரசின் தினகரன் பத்திரிகை முதல் ஐரோப்பிய பத்திரிகைளிலும் தம்மைத்தாமே புகழ்ந்து எழுதிக்கொள்கின்றனர்.

இவர்கள் கோட்பாடற்ற சந்திப்புகள், பத்திரிகைகள், வாதங்கள் என பலவற்றை முன்தள்ளுகின்றனர். இந்த சந்திப்புகளில், பத்திரிகைகளில் ஆணாதிக்கம் சார்பாக, சாதிஆதிக்கம் சார்பாக, பாரப்பனியம் சார்பாக, இந்துத்தத்துவம் சார்பாக, ஏகாதிபத்தியம் சார்பாக, குறுகிய இனவாதம் சார்பாக, நாசிகள் சார்பாக, இனவாத சிங்கள அரசு சார்பாக, துரோக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்கள் சார்பாக பேசவும் எழுதவும் முடியுமென வாதிட ஜனநாயகத்தின் பேரால், புதியதை தேடுவதன் பெயரால் கட்டுடைப்பின் பெயரால் பல வண்ண விளக்கங்கள் மூலம் உரத்த பிரகடனம் செய்கின்றனர். ஏன் ஜனநாயக விரோதத்தைக் கூட மறுப்பின்றி பிரகடனம் செய்ய முடியும் என்பதை பலமுறை இவர்கள் நிறுவிக் காட்டியுள்ளனர். இவர்கள் தமது சந்திப்புகளில் பத்திரிகைகளில் ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதிப்படுத்தி வரையறுப்பதில்லை மாறாக எல்லா மக்களையும் பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொண்டு சுரண்டும் வர்க்க கோட்பாட்டுக்கு நனவு பூர்வமாக செயல்படுகின்றனர்.

ஒரு விபச்சாரியைப் போல் திறந்துவைத்து இருக்க கோரும் இவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களும் அதன் கோட்பாடுகளையும் கதைக்க எழுதமுடியும் எனக் கூறுவதன் மூலம், அவர்களையும் தம்முடன் விபச்சாரம் செய்ய பாய் விரித்து அழைக்கின்றனர். இதன் மறுபக்கத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் அனுமதிக்கப்படுவதில்லை என்பதை பல முறை மீளமீள நிறுவியுள்ளனர். இவர்களின் விபச்சார சந்திப்புகள் பத்திரிகைகள் எப்படி எதை அடிப்படையாக கொண்டு புகுந்து கொண்டது என ஆராய்ந்தால் அதிர்ச்சிதான் எமக்கு கிடைக்கும். ஆதை ஆராய்வோம்.

இது ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதல் கோட்பாட்டுடன் தொடர்புடையது. **உலகமயமாதல் மூன்றாம் உலகநாடு முதல் எல்லா மக்கள் இடமும் எதைக்கோருகின்றனரோ, அதை அப்படியே முற்போக்காக வடிவம் கொடுத்து மீளக் கோருகின்றனர்.** உலகமயமாதல் உலக சந்தையை திற! எனக் கோருகின்றது. போட்டிச் சந்தை, எல்லோரும் சுதந்திரமாக வியாபாரம் செய்ய (எழுதவும், கதைக்கவும்) இடம்வேண்டும் என்கிறது. சந்தையில் எது வெல்கிறதோ அதை பாதுகாப்போம் (இதை இவர்கள் கோட்பாட்டில் கோருகின்றனர்) என்கிறது. அதாவது இவர்கள் கூறுவது போல் எல்லா கருத்தும் முட்டி மோதி ஒன்று இறுதியில் வெல்லும் என்பதைத்தான், ஏகாதிபத்தியம் இவர்களின் கருத்துறை உட்பட எல்லாவற்றிலும் விதிவிலக்கின்றி கோருகின்றது. இதற்க்கு இறக்குமதித் தடை, மானியம், தேசியம் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சாதகமான அனைத்தையும் நீக்கு என்கிறது. இவர்களின் பத்திரிகை சந்திப்பு போல் தடையற்ற சூறையாடலுக்கு ஏகாதிபத்தியம் கோருவது மட்டுமின்றி பாதுகாக்க இவர்களைப் போல் போராடுகின்றது.

இதை ஏகாதிபத்தியம் பொருளாதாரம், பண்பாடு, கலாசாரம் என அனைத்திலும் இடைவெளியின்றி கோருவதுடன் அதை நடைமுறைப்படுத்தி பாதுகாத்து போராடுகின்றது. இவர்களும் தமது சந்திப்புகளிலும் பத்திரிகைகளிலும் எந்த திட்டமுமின்றி ஏகாதிபத்திய உலகமயமாதல் கோட்பாட்டுக்கு அமைய முற்போக்கின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால், கட்டுடைப்பின் பெயரால், சுதந்திர விவாதத்தின் பெயரால் ஏகாதிபத்தியம் கோருவது போல் அதை மீளக் கோருகின்றனர். அண்மையில் பிரான்சில் அமெரிக்கா கலாசாரத்தை குறிப்பாக அமெரிக்க திரைப்படங்களை தடுக்கும் பிரான்சின் சட்டத்தை நீக்கக் கோரி இவர்களைப் போல் அமெரிக்கா குரல் கொடுத்தது. பிரான்ஸ் மற்றைய துறைகளில் இதை உலகளாவிய ரீதியில் கோரியும் கலாசாரத்தில் அனுமதிக்க முடியாது என்கிறது. ஆனால் அமெரிக்கா இவர்களைப் போல் எல்லா கலாசாரமும் முட்டி மோதட்டும் என்கிறது. அதில் வெல்வதைக் கொண்டு நாம் உலக கலாசாரத்தை தீர்மானிப்போம் என்கிறது. இவர்களோ மோதி வெல்லும் கோட்பாட்டைக் கொண்டு புரட்சி செய்வோம் என்கின்றனர். அதாவது இவர்கள் தேடிக் கண்டுபிடிக்கும் மட்டும் மக்கள் செம்மறி மாதிரி இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றனர்.

ஏன் அண்மையில் தரகு பார்ப்பாணிய இந்தியாருடே தனது ஆசிரியர் தலையங்கத்தில், பத்திரிகைத்துறையை ஏகாதிபத்தியத்துக்கு பரந்தவிவாத தளத்துக்கு திறந்து விடவேண்டும் என ஜனநாயகத்தின் பெயரில் எந்தவேறுபாடுமின்றி இவர்களைப் போல் கோரியிருந்தனர். அப்போதுதான் மக்கள் செய்தியைப் படித்து உண்மையை வந்தடைய முடியும் என இவர்களைப் போல் ஏகாதிபத்தியத்துக்காக எச்சில் வடிய எழுதினர். இவர்கள் எல்லாக் கோட்பாடும் முட்டி மோதித்தான் புரட்சி செய்யும் கோட்பாட்டை வந்தடைய முடியும் என்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதையே இந்தியவில் நிறப்பிரிகை பத்திரிகைக்குழுவும், அதன் சந்திப்புகளும் மாபெரும் கண்டுபிடிப்புகளாக பீற்றியபடி, இந்தியாரூடே வழியிலும் ஏகாதிபத்தியக் கோட்பாட்டு வளர்ச்சியில் முன்வைத்து வம்பளக்கின்றனர்.

இதையே அண்மையில் பிரான்சின் வலதுசாரி கட்சி நாசிகள் உடன் கூட்டுச் சேர்ந்து பிரான்சின் சில அதிகார மையங்களை கைப்பற்றிய போது, இங்கிலாந்து தொழில்கட்சியைச் சேர்ந்த பிரதமர் டொனிபிளேயர் பிரான்சின் பாராளுமன்றத்தில் பேசும் போது, தான் வலது - இடது அற்ற பாதையில் போவதாகவும் (இவர்களைப் போல்), அதை பிரன்சில் நடைமுறைப்படுத்த கோரியபோது பிரான்சின் ஆட்சியளார்கள் வலது - இடது வேறுபாடுயின்றி தமது வாழ்த்துகளை தமது கைதட்டு மூலம் தெரிவித்துக் கொண்டனர். அதாவது வலது - இடது இனித் தேவையில்லை எல்லோரும் சேர்ந்து கூடிச் சுரண்டுவோம் என்பதைத்தான், கோட்பாடற்ற சந்திப்புகளில், பத்திரிகைகளில் கூடியிருந்து பேசி ஏமாற்றுவோம் என தமிழ் முற்போக்கின் பெயரால் பிரகடணம் செய்கின்றனர்.

கோட்பாடுயற்ற தேடுதல் தீர்வை பின்நவீனத்துவ சாக்கடையில் இருந்து இன்று இவர்கள் தோண்டித் துருவி முன்வைக்கின்றனர். பின்நவீனத்துவ சாக்கடையை முதலில் முன்வைக்க பிரான்சின் 1968இல் ஏற்பட்ட எழுச்சியே காரணமாகும். எழுச்சியின் தொடர்ச்சியில் இதைத் தடுக்க மக்கள் போராட்டங்களைக் கட்டுப்படுத்த ஆளும்வர்க்கங்களால் அதன் அடிவருடிகளால் முன்தள்ளப்பட்ட கோட்பாடே இவை. இதைப்போன்று நடைமுறையில் ஆளும் வர்க்கத்தால் சேர்ந்து விவாதிக்க இவர்களைப் போல் உருவாக்கப்பட்ட முதலாளி - தொழிலாளி (COMITTE ENTEPRISE) கொண்ட அமைப்புதான் பிரான்சின் சமூக நெருக்கடியை விலை பேசி காட்டிக்கொடுத்து விற்றது. இன்று பிரான்சில் லட்சத்துக்கு மேற்பட்ட முதலாளி - தொழிலாளி கூடித் தீர்வுகாணும் நடைமுறை பிரான்சின் தொழிலாளிவர்க்கத்தை விலை பேசி விற்கும் சந்திப்புகளாக உள்ளது.

தொழிலாளர் தனியாக அமைப்பாகி போராடுவதை முதலாளி விரும்பாதது போல்,
இவர்களும் இன்று ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றினைவதற்க்குப் பதில், கூடிக்கூலாவி குடித்துக் கும்மாளமடிப்பதன் மூலம் தீர்வு காணமுடியும் என முதலாளிகள் போல் பிரகடணம் செய்கின்றனர். அதாவது இன்று மக்கள் பலகட்சி தேர்தலில் மாறிமாறி கொள்கை கேட்டு வாக்களிப்பது போல் இவர்கள் அதையே தமது நடைமுறையாக கொள்கின்றனர். பலகட்சிகள் தமது கொள்கையை வைத்து மக்கள் தீர்வை அடைவது போல், நாமும் அதே வழியில் விவாதிக்கின்றோம் எனக் கூறுவதன் மூலம் கட்சிகள் மக்களை ஏமாற்றி பிழைக்கின்றனவோ அதுபோல் இவர்களும் நடைமுறையில் இருப்பதால் அதையே கோருகின்றனர். தொழிலாளி வர்க்கம் திட்டவட்டமாக தனக்கான தனியான அமைப்பைக் கொண்டு இருக்கவேண்டும்.
இதைவிடுத்து இவர்களைப் போல் முதலாளி - தொழிலாளி கூடியிருக்கும் அமைப்போ, விவாதமுறையோ துரோகத்துக்கு மட்டுமின்றி, முதலாளியின் தலைமையில் தொழிலாளரை
இவர்களைப் போல் அணிதிரட்டுவதாகும். இன்று இந்தமாதிரி கோட்பாடு அற்ற கூட்டு கதம்ப சந்திப்புகள், பத்திரிகைகள் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஏகாதிபத்திய கோட்பாட்டுக்கு பலியிடுவதற்க்கு செய்யும் திட்டமிட்ட சதியாகும்.

ஒடுக்கப்பட்ட மக்கள், மூன்றாம் உலகநாடுகள் தமது பொருளாதாரம் பண்பாடு கலாசாரத்தை திறந்த ஏகாதிபத்திய செயல்தளத்தில் குறைந்தபட்சம் பாதுகாக்கவே முடியாது. பின் வெல்வது எப்படி? இதற்க்கு நடைமுறை அனுபவம் உலகம் முழுக்க நீண்டு போய் உள்ளது. ஒடுக்கப்பட்ட மக்கள் தமது கோட்பாட்டை கோட்பாடற்ற திறந்த சந்திப்புகளில், பத்திரிகைகளில் வெல்வது இருக்கட்டும் முன்வைப்பதே வரையறுக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் சாத்தியமில்லை. அண்மையில் வெளியாகிய மாசி "கவிதாசரன்" இதழில் எப்படி திறந்த விவாதம் நடத்தும் நிறப்பிரிகை விவாத அரங்கில் கருத்துகள் முன்வைப்பது மறுக்கப்பட்டு
இருட்டடிப்பு செய்யப்படுகின்றது என்பதை, அதில் பங்குபற்றிய நிலையில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய தளத்தில் சரி அல்லது இதுபோன்ற கோட்பாட்டைக் கொண்ட எல்லா தளத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களினதும், மூன்றாம் உலகமக்களினதும் இருத்தலுக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்து அடையாளத்தையும் தின்று செறிக்கவும், பின் ஏப்பமிடவும் தான் இப்படியான விவாதங்களின் பின் உள்ள உண்மையான நோக்கமாகும். இன் நிலையில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைத் தத்துவத்தையும் சரி, மூன்றாம் உலக மக்கள் தமது அடையாளத்தைப் பாதுகாப்பது சரி, திறந்த கோட்பாடு அற்ற செயல் தளத்தை எதிர்த்த ஒரு போராட்டத்தில் மட்டுமே பாதுகாக்கப்பட முடியும் என்பதற்க்கு நீண்ட பல வரலாறுகள் நீண்டு போய் யுள்ளது. அவை மட்டுமே உண்மையில் மனிதனின் போராட்டங்களை நடத்தின நடத்தும்.

இன்று புலம்பெயர் நாடுகளிலும் மற்றைய இடங்களிலும் கோட்பாடுயற்ற சந்திப்புகள், செயல் தளங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கோட்பாடுகளை தின்று செறிக்கப் படுவதுடன், அதன் மீதான சேறுயடிப்புகள் தான் விதிவிலக்கின்றி அரங்கேறுகின்றன. இது நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யும் வழியை, அவர்களிடம் இருந்தே இரவல் பெற்று கனவான நனவுகளுடன் மானம் வெட்கமின்றி அரங்கு ஏற்றுகின்றனர். இவர்கள் சீரழிவதுடன் மாறுபட்ட கோட்பாட்டு தளத்தில் வம்பளப்பு மையங்களாக மாறிவிடுகின்றது. இதனால் முதுகு சொறிவது தேவையான அடிப்படை விடையமாக மாறிவிடுகின்றது. இந்த முதுகு சொறிவு கூட வரையறுக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் அறிவு சூனியத்தால் மூழ்கிவிடுவதால், தமக்கு தாம் முதுகு சொறிவது அவசியமாகிவிடுகின்றது.
கோட்பாடற்ற சந்திப்புகள் கூட்டமுன்பே பத்திரிகைச் செய்தியை தயார் செய்தபடிதான் தமது முதுகுசொறிவைத் தொடங்குகின்றனர். இங்கு தமது பெயர் பத்திரிகையில் வருவதுதான் முக்கியமான விடையமாகி விடுகின்றது. இதனால் மற்றவர் கொண்டு முதுகு சொறிவது அல்லது தம்மைத் தாம் முதுகு சொறிந்து பத்திரிகைக்கு எழுதிவிடுகின்றனர். இந்த மோசடிக்கு புனைபெயரிலும் மற்றவர்களின் பெயரிலும் எழுதிவிடுகின்றனர். மறுபுறம் புத்தியீவிகள் பற்றி மயிர்பிளக்கும் தாக்குதலை தொடுக்கும் இவர்கள், புத்தியீவியாக நடமாட வேறு அங்கலாய்ப்புடன் நெளிந்து புரளுகின்றனர். தனிநபர் புகழ்பாடலை கண்டு சீறுவதாக காட்டும் இவர்கள், தம்மைத் தாம் தனிநபர் புகழ்பாடி அறிக்கை எழுதுகின்றனர்.

உதாரணமாக அண்மைய பாரிஸ் இலக்கியச் சந்திப்புபற்றி சரிநிகர்க்கு புனைபெயரில் எழுதியவர், தனக்கு வழக்கமாக முதுகுசொறிபவர்களை புகழ்ந்தபின், தன்னை புகழ்ந்து எழுதியது மட்டுமின்றி தன்னைத்தான் கவிஞர் எனப் போட்டும் புகழ்ந்துவிடுகிறார். இதுபோல் லண்டன் வெளி பத்திரிகைக்கு வழக்கமாக முதுகுசொறிபவர் தன்னைப்புகழ்ந்து எழுதியது மட்டுமின்றி, சரிநிகரில் தன்னைக் கவிஞர்எனப்போட்டு எழுதியவரை புகழ்ந்ததுமல்லாது அதில் இவரை புகழ்ந்த விசுவாசத்துக்கு ஏற்ப ஒரேமாதிரி இருவரும் எழுதியிருந்தனர். இந்த முதுகுசொறிவில் தன்னால் முதுகுசொறியக் கூடிய வேறு ஒருவரின் பெயரைக் கூட பாவிக்க தயங்காத இயக்க மரபில் இருந்து கையாண்டுள்ளனர்.

இதுபோல் வீரகேசரி, தினக்குரல் ..............என எங்கும் தம்மைத்தாமும், மற்றவர்களையும் முதுகுசொறிந்த இந்த நபர்கள், தமது பெயர்களைப் போடுவதன் மூலம் இன்றைய நடைமுறையற்ற இராணுவ சூனியவாதத்துக்குள் பிழைத்துக் கொள்ள அங்கலாயத்து, கொப்புமாறி கொப்பாக தாவி அலைகின்றனர். இன்று ஒருவரை புலி என்றும் ஈபி (EPRLF) என முத்திரை குத்திஅதில் வம்பளந்து பிழைப்பதும், பின் அவர்கள் உடன் கூடிக் கூலாவிக் கொண்டு நாய்பிழைப்பு நடத்துகின்றனர். இந்த நபர்கள் மக்களுக்கு வழிகாட்டி மக்களின் விடுதலைக்கு உழைப்பார்கள் என நம்ப முட்டாள்கள் அல்லத்தான். ஆனால் இன்றைய இராணுவ சூனியவாதத்துக்குள் சொந்த தனிநபர் புகழ்பாடல் மூலம் பிரமுகர்களாக காலாற நடக்க முடிகின்றது.

இந்த நபர்களைப் போல் இந்தியாவில் அ.மார்க்ஸ் - ரவிக்குமார்ரும் மற்றும் இந்தியாவில் ஏகாதிபத்திய கோட்பாடுகளை உடனுக்கு உடன் சுடச்சுட வியாபாரம் செய்யும் எல்லா எடுபிடிகளும் சாக்கடை அரசியலால் உயிர் வாழ்பவர்களே. ஏகாதிபத்தியம் வீசும் எச்சில் எலும்புகளை கௌவ்வியபடி அதற்காக உழைத்து நியாயப்படுத்தும் தரகுமுதலாளி போல, இவர்களும் அதற்காகவே கோட்பாட்டில் வாய்யைப் பிளந்து அலைகின்றனர்.
பின்நவீனத்துவம், தலித்தியம்.............என முன்வைக்கும் எல்லா வண்ணக் கோட்பாடுகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்படி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையை போராட்ட வழியை காட்டும் எனக் கேட்டால் கண்முழி பிதுங்க அப்படி ஒன்று உண்டா என வாய்பிதுங்கி நிற்கின்றனர். இவர்கள் தாம் வைக்கும் கோட்பாடுகளில் தெளிவுமின்றி, மார்க்சியம் பற்றி எந்த அறிவுமற்ற சூனியங் களாக இருந்தபடி, மார்க்சியம் மீது ஏகாதிபத்திய எச்சிலில் இருந்து தாக்குகின்றனர். பாட் டாளி வர்க்க ஜனநாயகம் மீது ஏகாதிபத்திய சக்திகளை நக்கி காறி உமிழ்கின்றனர். தத் தமது கோட்பாடுகள் எப்படி மக்களை வழிநடத்தும், எப்படி அது போராடும், என்ன தீர்வைத் தரும், முரண்பாடுகளை எப்படி கையாளும் என எதுவும் முன்வைக்க முடியாத, தமது இயல் பான பூர்ஷ்சுவா தப்பித்துச் செல்லும் இருத்தலுடன், தெளிவற்ற சூனியத்தை முன்வைத்து புலம்பித் திரிகின்றனர்.

தலித் எப்படி தலித் விடுதலையைத் தரும், பின் நவீனத்துவம் எப்படி விடுதலையைத் தரும் என சொல்லத் தெரியாத இவர்கள் இந்தியாவில் உள்ளவர்கள் போல் முதுகுசொறியச் செய் வதுடன், திறந்த விவாதம் பத்திரிகை எனத் தொடங்கி விபச்சாரம் செய்கின்றனர். இவர்கள் நடைமுறையற்ற பிரமுகர்த்தனத்தை விரும்புவதுடன், சமூக அக்கறைக்குரியவர்களை சிதைக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்கின்றனர். மக்களின் துன்பம் துயரங்கள் தொடர வேண் டும் என்ற நனவான கனவுடன், ஏகாதிபத்திய கோட்பாட்டுக்கு நனவாக செயல்படுகின்றனர்.
இப்படி அ.மார்க்சின் கோட்பாடு அருள் பெற்று வரிந்து கட்டி நின்ற மனிதம்குழுவினர் இன்று சீரழிந்து போன வரலாறு, என்னால் அன்று சரியாக சுட்டிக்காட்ட முடிந்தது. அன்று விடாப் பிடியான உடும்புபிடியான மூடிமறைப்புடன் கூடிய தாவித் திரிந்த விவாதம் மூலம் தம்மை கவசமிட்டவர்கள், இன்று அதன் முன்னணி பிரிவு புலிக்காக திரைப்படம் (முன்பு மனிதம் 1,2,3 என்ற தரமான வீடியோ கசெட்டை வெளியிட்டனர்.) தயாரித்து போட்டிக்கு அனுப்பிய போது, யார்ரும் மூக்கில் விரல்வைக்க முடியாத நாற்றத்தால் நாறத் தொடங்கியுள்ளது. அ.மார்க்ஸ்க் கு எந்த கோட்பாடு புலிகள் உடன் கூடிக்குலாவ உதவியதோ, அதைக் கொண்டே அ.மார்க்ஸ் போல் புலிகள் உடன் மனிதம் குழுவும் கைகோத்துக் கொண்டது. ஏன் அண்மையில் பாரிசில் உள்ளோர் ஐ.பி.சி தமிழ் சேவைக்கு (RADIO) நிகழ்ச்சி நடத்தியதும் இதே கோட்பாட்டின் தொடர்ச்சியில் தான். இந்த ஐ.பி.சி யை முன்பு புலி எனக் கூறித் திரிந்ததும் இவர்கள்தான் என்பது ஆச்சரியமான விடையங்கள் அல்ல இன்றைய கோட்பாட்டு நடைமுறைகள். பாரிஸ் தமிழ் ஒலியும், லண்டன் ஐ.பி.சி பச்சை குறும் தேசியத்தை கையாள்வது மட்டுமின்றி, புலிகளின் போராட்டத்தை ஒரு இந்து போராட்டமாக சிதைக்க, பெரியளவில் பிரச்சாரத்தை செய்யும்களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தியாவின் பாசிச பார்ப்பானிய இந்துத்துவ பாரதியஜனதாவை ஊழலற்ற மனிதாபிமான ஜனநாயக சோசலிச மக்கள் அரசுயென பார்பானிய சதியுடன் கூடிய வர்ணனையை ஒரு பார்ப் பானனை விட கச்சிதமாக தொடங்கியுள்ளனர். பார்ப்பனியத்துக்காக சேவை செய்யும் யமுனா ராஜேந்திரன் இச்சேவையில் ஆய்வு என்ற போர்வையில் கோட்பாடற்ற அரசியல் சந்தர்ப்பவாத பேர்வழியாக ஈரோஸ் போல் இயங்குகின்றார். இந்தநபர் புலிகளுக்குளும் புலிகளுக்கு எதிரானவர்களுக்கும் முற்போக்கு வேடம் போடமுடிந்த சக்களத்தி அரசியல் அ.மார்க்சின் பின்நவீனத்துவ பிதற்றலில் மையமிட்டு தொடங்கிறறு. இந்த நபர் "ரங்கூனுக்கு" அப்பால் என்ற சினிமா தொடர்பாக நோர்வை "சக்தி" இதழில், பர்மாவில் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக வழமைபோல் தலைமை தாங்கும் வெளிநாட்டு நாய், அமெரிக்காவின் வாலாட்டும் நாயாக அமெரிக்காவை தலையிடக் கோரி, அமெரிக்காவின் மறுகாலணியாக புதிய ஒழுங்குக் கு உட்பட்ட ஜனநாயகத்தை பெயரளவில் இராணுவத்திடம் மீட்டுத்தரக் கோரி, அமெரிக்கா தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்வதை முற்போக்கான மனிதத்துவத்தைக் கொண்ட படம் எனச் சொல்லும் துணிவுக்கு, ஒடுக்கப்பட்ட மக்கள் துரோகிகள் என்ற பரிசே கொடுப்பார்.
இதைப் போல் மூன்றாம் உலக எட்டப்ப துரோகிகள் படம் எடுக்க வேண்டும் எனக் கோரி வேறு ஆலோசனை வைக்கின்றார். இப்படி எல்லாம் துரோகமான கோரிக்கைகளை மக்களுக்கு முன்வைக்க உதவும் கோட்பாடு பின்நவீனத்துவ சாக்கடைக்குள் தான் உயிர்த்தெழுகின்றது.
இதே போல் பச்சை பாசிச பார்பனியத்தை நியாயப்படுத்திய பம்பாய் படத்தை இதே தத் துவத்தால் நியாயம் கொடுத்து மகுடம் சூட்டி, தமிழீழத்துக்கு போராடும் இயக்க சார்பு பத் திரிகையில் எழுதிய பார்பனியத்துக்கு என்ன பதில் என்பதை, பார்பனியத்துக்கு எதிராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போராடும் ஒரு வழியில் மட்டும்தான் பதில் கூறமுடியும்.

ஏன் அம்மா 5இல் யதார்த்தப் படைப்பு பாசிசம் பயங்கரவாதம் என ஏகாதிபத்தியத்துக் காக, அதைப் பாதுகாக்க எழுதிய போது புல்லரிக்கத்தான் செய்கின்றது. ஒடுக்கப்பட்ட மக் கள் அனுபவிக்கும் யதார்த்தம் பேசுவது, அதனால் கிளர்ந்து எழுவதும் விடுதலையைக் கோருவதும் பாசிசமாக பயங்கரவாதமாக இருக்கும் என்ற பார்ப்பனிய நரித்தனம் தான் பம் பாய் முதல் கொண்டு எல்லாவற்றையும் நியாயப்படுத்தும் துணிவும், அதை புலிகளின் தேசியம் சார்பான பத்திகையிலும் முற்போக்கு பத்திரிகையிலும் எழுதும் துணிவுக்கு, அவரிடமல்ல எம்மிடம் கேட்க்கப்பட வேண்டிய கேள்வியாக உள்ளது.

ஆபிரிக்கா வானம் என்ற அவரின் புத்தகத்தில் சோவியத் கமியூனிசக்கட்சி ஆட்சியை இழந்த ஐந்து வருடங்களின் பின் ஆபிரிக்கா நாடு ஒன்று சோவியத் கமியூனிசகட்சியின் எடுபிடியாக உள்ளது என எழுதும் நேர்மை எங்கிருந்து உருவாகின்றது. தன்னையும் மீறி காக்கும் கம்யூனிச எதிர்ப்புதான், இவரின் அடிப்படை ஏகாதிபத்திய நக்குத்தனமாகும்.
இவரைப் போன்று அதே நரித்தனத்துடன் நேரடியாக கொழும்பில் இருந்து இலங்கை அரசின் கைக்கூலியான இ.பி.டி.பி (EPDP) என்ற துரோகக் குழு நடத்தும் தினமுரசு பத்திரிகை இன்று தேசவிடுதலைப் போராட்டத்தை சிதைப்பதில் ஏகாதிபத்திய ஆலோசனையுடன் மிகத் தீவிரமாக இயங்குகின்றது.

சிங்கள இனவாத அரசின் உளவுத்துறையுடன் மிக நெருக்கமாக கைகோர்க்க அன்னிய ஆலோசனையுடன் வெளிவரும் வாரப்பத்திரிகைதான், இலங்கை புலம்பெயர் நாடுகளிலும் புலிகளுக்கும் அதிகமாக விற்க்கப்படும் பத்திரிகையாக உள்ளது. இப்பத்திரிகை புலிகளை புகழ்வது போன்று நடித்தபடி, அதன் அணிகள் மீதும், தேசிய விடுதலையில் அக்கறை கொண்டோர்க்களுக்கும் எதிராக, திட்டமிட்ட தேசிய எதிர்ப் பிரச்சாரத்தை அன்னிய ஆலோசனையுடன் நடத்திவருகின்றது. வருடம் அண்ணளவாக நாலு கோடி ரூபா விற்பனையை எட் டியுள்ள இச்செய்தியேடு, இலங்கையின் உளவுத்துறையுன் மிக நெருங்கிய வகையில் கைகோர்த்துள்ளதால், இலங்கையில் மற்றைய சிங்கள தமிழ் ஏடுகள் பெறமுடியாத துல் லியமான யுத்த தகவல்கள் உடனுக்கு உடன் தாக்குதலின் அடுத்த கணத்தில் வெளியிடுவதன் மூலம், இயக்க மற்றும் இராணுவ வரலாற்று கட்டுரை மூலமும், போராட்ட மற்றும் ஆதரவு சக்திகளின் ஆர்வத்தை விருப்பத்தையும் அதன் காதலையும் கவர்ந்து, மிக நேர்த்தியாக கற்பழிப்பதில் முரண்பாட்டு எதிர்ப்பின்றி சதியாளர்கள் அரங்கேறுகின்றனர்.
தேசிய போராட்ட வரலாற்றை தொடர்ந்து வெளியிடும் இப்பத்திரிகை இலங்கை அரசின் கடந் தகால உளவு மற்றும் பொலிஸ் செய்தியையும் தமது இயக்க தொடர்பை மட்டும் கொண்டு வெளியிடுவதை கொஞ்சம் ஆராய்ந்தால் இனம் காணமுடியும். தக்குதலில் ஈடுபட்டவர்கள் கூட திகதிவாரியாக வெளியிட முடியாத செய்திகளை உளவுத்துறை மட்டுமே தனது விசாரணையில் தகவலாக கொண்டு உள்ளனர். இது போல் உளவுத்துறைக்கும் காலம் கடந் தபின்னும் எது தெரிய வில்லையோ அவை மட்டுமே இக் கட்டுரை கொண்டு இருக்கவில் லை. இதில் அவர் இருந்த இயக்க நடவடிக்கையில் அவருக்கு தெரிந்தவை மட்டும் விதிவிலக்கா உள்ளது. இதை விட இந்த அரசியல் பகுதிகளை எழுதிவரும் ஈ.பி.டி.பி எம்.பி யாழ்பாணத்தில் சில பத்து வாக்கு பெற்று மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து துரோகியாக உள்ளவர். இன்று இராணுவ தாக்குதல்கள் திட்டமிட்டு தாக்குதல் தொடங்கிய அடுத்த நிமிடமே உளவுத்துறையால் கொடுக்கப் பெற்று செய்தியாகின்றது.
இதை ஏன் உளவுத்துறை செய்கின்றது என்ற கேள்வி எல்லாவற்றிலும் அடிப்படையானது.
புலிகளை யுத்ததில் வெல்ல முடியாது என்ற பேர் உண்மையை புரிந்து கொண்ட ஏகாதிபத் தியமும் சிங்கள இனவெறி அரசும் புலிகளுள் சென்று கலாசார பண்பாட்டு ரீதியாக சிதைப் பதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை சிதைக்க முடியும் என்ற பேர் உண்மையில் தான் இப்பத்திரிகையின் அடிப்படையே தொடங்குகின்றது. இது உலகளவில் சோவியத், சீனா என பல நாடுகளில் பல செயல் தளங்களில் பலமுறை நடந்தன நடக்கின்றன.
பொதுவாகவே புலிகள் மற்றைய செய்திகளை படிப்பதில்லை என்பதையும், படிக்க வைப் பதாயின் அவர்களைப் புகழ்வது போன்ற தோற்றப் பாட்டை ஏற்படுட்தவும், அதே நேரம்

www.tamilarangam.net

புலிகளின் அரசியலற்ற இராணுவ தன்மையை பயன்படுத்தி புலிகளை இராணுவ தன்மைக் குள் இழுப்பதன் மூலம் பத்திரிகையை வாங்க தூண்டுவதில் சிங்கள இனவாத அரசு வெற்றி பெற்றது.

இவர்கள் அரசியலில் சமரசம் செய்பவர்கள் அல்ல. அதாவது இலங்கை அரசுடன் கூடி ஏகாதிபத்தியத்துக்காக தமிழ்மக்களுக்கு எதிராக செயல்படுவதில் சமரசம் செய்யமறுப் பவர்கள். அதை அவர்கள் 19.7.1998 தினமுரசில் "........அரசியல் அலசல்கள் கருத்துகள் என் பவற்றை பொறுத்தவரை வியாபார ரீதியான சமரசத்திற்க்கு இடமின்றி வெளிவருகின்றது." என் பதன் மூலம் புலி ஆதரவு நாடகம் புலிகளை உள்ச்சென்று சிதைக்கும் என்பதை மிகத் தெளிவாக இப்பிடிப்பி (EPDP) எம்பி கூறுகின்றார். இச்செய்தியை வாசிக்க தூண்டிய தொடர்ச்சியில் தான் பண்பாட்டு கலாசார சிதைவுக்கான வேலை தொடங்கி வைக்கப்படுகின் றது. அதாவது புலிகளிடம் சாதாரண மக்களை விட இருக்க கூடிய விடுதலைபற்றிய சிந் தனையுணர்வு, பண்பாடு கலாசார ரீதியில் சிதைப்பதன் மூலம் போராட்டத்தை சிதைக்க முடியும். போராட்டத்தை ஒட்டிய செய்திகளை வாசிக்க தூண்டிய பின்பு மிக மோசமான வக் கிர ஆண்ணாதிக்க சினிமா கவர்ச்சிப் படங்கள் செய்திகள், டயானா பூலான்தேவி, இடியமீன் போன்றவர்களின் விறுவிறுக்கும் வக்கிர செக்ஸ் செய்திகளுக்குள் இட்டுச் சென்று போராட்ட உணர்வுகளை வடிய வைக்கின்றனர். இதைவிட போராட்டத்தை நிராகரிக்கும் ஆண்மீகம், 15 முதல் 25 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் படத்துடன் கூடிய கவர்ச்சி பேனா நன்பர் பகுதி மூலம் போராட்ட சக்திகளை அதன்பால் கவனத்தை நேரத்தை இழுப்பதன் மூலம் பொதுவாக போராட்டத்தை சிதைக்கின்றனர். அண்ணளவாக 250 இதழ்கள் மூலம் 3000 பேரின் படங் களை வெளியிட்டதன் மூலம் அவர்களை இதற்குள் முடக்கியதுடன், பலரை பெண் பேனா நன்பிகள் பால் அலையவைத்துள்ளனர். இப்படி பத்திரிகை தமிழ் மக்களுக்குள்ளும் போராட்ட சக்திகளுக்குள்ளும் எதிர்கருத்து நிலையை விதைக்க பலவகை பண்பாட்டு சிதைவுக்கு இசைவாக செய்திகளை திட்டமிட்டு தொகுக்கின்றது. நீலப்படம் போல், மஞ்சள் பத் திரிகையாக கலந்து போராட்ட செய்திகளை உளவு அமைப்புடன் இணைந்து தொகுத்தளிக் கின்றது.

யுத்தத்தில் வெல்ல முடியாத போது பண்பாடு கலாசார ரீதியாக சிதைப்பது யுத்தத்தை இலகுவாக வெல்வதற்கான ஒரு பாதையாக உள்ளது. இது ஆயுதம் ஏந்தா யுத்தமாக சதியை அடிப்படையாக கொண்ட சூதாட்டமாக இருப்பதை சரியாக இனம்காணவேண்டிய காலத்தில் நாம் உள்ளோம். புலிகளின் அரசியல் வங்குரோத்துடன் கூடிய புகழ்ச்சியைக் கோரிய இராணுவ வாதத்தை இலங்கை உளவுத்துறை மற்றும் துரோககுழு சரியாக உள்வாங்கியதன் மூலம் தமது எதிர்புரட்சி சதியை தினமுரசுக்கு ஊடாக கட்டியமைக்கப்படுகின்றது. புலிகள் புகழ்பாடலை வெறும் நன்பனாக பார்ப்பதும், அதேநேரம் விமர்சனத்துடன் கூடிய தேசிய விடுதலைச் சக்திகளை எதிரியாக பார்க்கும் வகையில் அரசியல் ரீதியில் சீரழிந்து கிடக்கின் றனர். இதைத்தான் தினமுரசுக்கு பின் உள்ள சதியாளர்கள் தமது அரசியல் மார்க்கமாக கையில் எடுத்துள்ளனர். புலிக்கும் - எமக்கும் உள்ள முரண்பாடு சனநாயகம் என்ற ஒரு விடையத்தில் அரசியலுக்கு அப்பால் உள்ளது. அரசியலுக்கு அப்பால் சனநாயகம் உள்ள நிலையில் ஐக்கியப்படவும் போராடவும் தயாரக இருந்துள்ளோம். இதை புலிகள் எதிராக காண்பதும், அரசின் அரவணைப்பில் உள்ளவர்களின் புகழ்பாடலை நட்பாக பார்ப்பதும் என் பது, தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் சிதைக்க முன்கையெடுத்து கொடுத்தாக உள்ளது.

புலிகளின் அரசியலில் மதிநுட்பம் இன்மை எதிரியை நன்பனாக பார்ப்பதும், நன்பனை எதிரியாக பார்ப்பது என்பது, புலி தனக்குதானே சவக்குழி தோண்டத் தொடங்கியுள்ளது.
இன்று இதற்க்கு வெளியில் கோட்பாடற்ற பிரகடணங்கள், ஏகாதிபத்திய சம்பளப் பட்டியல் செயல்தளங்கள், போராட்டத்தை சிதைப்பதுடன் மக்களை விற்று ஏகாதிபத்தியத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் காலாற சேவையை செய்கின்றனர். மக்கள் தமது விடுதலை-யைப் பெற எதிரியை இனம் காண்பதும் நன்பனை அடையாளம் காண்பதும் இன்றைய வரலாற்று தேவையாக உள்ளது. ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக முகிழ்ந்த <u>'இருள்வெளி'</u> என்ற இருண்டமலர்

அண்மையில் பாரிசில் இருந்து "இருள் வெளி" என்ற தொகுப்பு மலரை சுகன் வெளியிட்டிருந்தார். இம்மலர் திட்டவட்டமாக பட்டாளிவர்க்க எதிர்ப்பில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக வெளியாகியுள்ளது. தொகுப்புரையில் ஒரு வார்த்தை கூட சுரண்டலுக்கு எதிராக பேசாது மௌனம் சாதித்து சுரண்டுவோருக்கு கம்பளம் விதித்தவர், சுரண்டலுக்கும் ஆணாதிக்கத்துக்கும் சாதியத்துக்கு எதிராக போராடும் மார்க்சியத்துக்கு எதிராக தனது தாக்குதலை நடத்தியதன் மூலம் குரு அ.மார்க்ஸ் போல் சுரண்டுவோரையும், அதன் எழுத்தாளர்களையும் புல்லரிக்கவைத்துள்ளார்.

இம் மலர் வெளியீடே ஒரு கடைந்தெடுத்த மோசடியில் தொடங்கியது. 1998 மே யில் ஜெர்மனியில் நடந்த இலக்கியச் சந்திப்பு சார்பாக அவர்களுக்கே தெரியாது மோசடியாக அதிகாரத்தை தனதுகையில் எடுத்து, அதன் சார்பாக வெளியிடுவதாக போட்டதன் மூலம் ஜனநாயக சந்திப்பு எனப் பீற்றித் திரிந்த சந்திப்பின் மீது அதிகாரவன்முறையை புலிகளுக்கு நிகராக கையான்டார். ஜனநாயகவாதிகள் எல்லை கடந்த மௌனம், இதன்மீது கேள்வி கூட எழுப்பமுடியாத மௌனம், ஜனநாயக விரோதம் பற்றி எழுதும் கைகள் மௌனமாக தமது சகா என்பதால் உறங்கிய மர்ம வேஷசங்கள் வெளிச்சமாகட்டும். அடுத்த மோசடியை பார்ப்போம். "இலக்கியச் சந்திப்பின் 10வது ஆண்டினை யொட்டி (1988 - 1998) ∴பிராங்போர்ட்டில் 98 மே, 30-31 தினங்களில் நிகழும் 24வது இலக்கியச் சந்திப்பிற்காக வெளியாகும் பின்நவீனத்துவ இலக்கியப் படைப்புகளின் தொகுதி" எனப் போட்ட பின்நவீனத்துவ மோசடியை, பாசீச அதிகார வன்முறையை, பறித்தெடுத்த ஜனநாயக உரிமையை கேள்விகேட்க்க நாதியற்று போன அதீத ஜனநாயகவாதிகளின் ஜனநாயகம் பற்றிய புலம்பல் புலியெதிர்ப்பும் ஏகாதிபத்திய சார்பு அரசியல்தான்.

பின்நவீனத்துவ படைப்பு எனப் போட்டதன் மூலம் இலக்கியச் சந்திப்பையும் அதன் அரசியலையும் அதன் நோக்கத்தையும் மற்றைய கோட்பாட்டாளர்க்கும் தெளிவாக்கிய பெருமை சுகனைச் சாரும். ஆம் நாம் எல்லாக் கருத்துக்கும் கம்பளம் விரிப்பவர்கள் என்று கூறியபடி மார்க்சியத்தின் (மார்க்சியம் எதற்காக போராடுகின்றது எனின் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்பதை அமுல்படுத்த இதை எதிர்த்து இலக்கியச் சந்திப்பு) மீது எல்லோரும் ஒன்றிணைந்து நடத்தும் தாக்குதல் மூலம் சுரண்டப்படும் மக்களின் ஒரே குரலை நசுக்கிய பெருமையில் வெளிப்பாடாக எதிர்ப்பின்றி மோசடியுடன் வெளிவந்த நூல் தான் இந்த இருண்டவெளி என்ற இருண்டநூல். இதில் எழுதிய அப்பாவிகள் பலர்க்கு இது பின்நவீனத்துவ சாக்கடை நூல் என்பது முன்கூட்டியே தெரியாதது மட்டுமின்றி, புலிகள் சிறுவர்களின் அறியாமையில் யுத்தம் செய்வதாக கூறிக்கொள்வோர், அதேபாதையில் எந்த வெட்கமுமின்றி புத்தகத்தின் நோக்கத்தைகூட கட்டுரையாளருக்கு சொல்லாத அறியாை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மயில் ஏமாற்றி மோசடி செய்து கட்டுரை பெற்று வெளியான தொகுப்பு இது. இந்த மோசடிக் காரன் அ.மார்க்ஸ்சுடன் இனைந்து பாரிசில் நடந்த இலக்கியச் சந்திப்பு மலர்பற்றி, நிறப் பிரிகை இலக்கம் 9இல் தலித்மலர் வெளியிட்டதாக கதையளந்த மோசடியை பற்றி மௌனம் சாதித்த ஜனநாயகவாதிகளை இனம்காணவேண்டிய நிலையில் உள்ளோம். இதை புலிகள் செய்திருந்தால் விட்டுவிடாத புலியெதிர்ப்புவாதிகள் தமது முதுகுசொறிவு செய்யும் போது மௌனமாக அங்கீகாரம். வாழ்க ஜனநாயகம் என இந்த பன்றிகள் உடன் சேர்ந்து கோசம் எழுப்புவோமாக.

தனது சுரண்டும்வர்க்கச் சார்புடன் சுரண்டலையெதிர்த்து பின்நவீனத்துவ வழியில் "இருள் வெளி" என்ற இருண்ட நூல் ஊடாக சுகன் கூறுவதைப் பார்ப்போம். "சாதி வெறியை மறைக் க வர்க்கப் பூனூல் போடுவோர் ஆணாதிக்கத்தைக் காக்க வர்க்க மட்டப்பலகையுடன் மார்க் சியத் தூக்குகுண்டுடனும் இரவும் பகலும் உழைக்கும் மேசன்மார்" என அழகாக தனது சுரண்டப்படும் மக்களுக்கு எதிரான பின்நவீனத்துவ சுரண்டும் கோட்பாட்டை முன்மொழிந்துள் ளார். இதைப் புகழ்ந்து கொள்ள ஒரு கூட்டமும், இதில் எழுதியதை சுயவிமர்சனம் செய்யாது நக்கிப் பிழைக்கும் ஒரு கூட்டமும் இருக்கத்தான் செய்கின்றது. அத்துடன் இம்மலரையொட்டி சுகித்த கூட்டத்தில் வீணி ஒழுக கூடித்து கும்மாளம் அடித்தனர். மலர் தொகுப்புரை பொன் மொழிகளில் இதை ஆராய்வோம்.

மறுதலையை எழுதின் பார்ப்பணியத்தை மறைக்க தலித்தியம், ஆணாதிக்கத்தை மறைக்க பூர்சுவா பெண்ணியம், ஏகாதிபத்தியத்தை மறைக்க பின்நவீனத்துவம் இதைத்தான் "இருள் வெளி" என்ற இருண்ட மலர் கோருகின்றது. இல்லை என்றால் சுரண்டலை ஒழிக்க, ஆணாதிக் கத்தை ஒழிக்க, சாதியத்தை ஒழிக்க என்ன மாற்று மார்க்சியத்துக்கு வெளியில் உண்டு என நாம் கேட்பதில் நியாயம் உண்டல்லவா?. இதைக் கேட்பது ஆணாதிக்கமாம், சாதிவெறியும் எப்படி? தெரிந்தவர்கள் சேர்ந்து சுகித்தோர்தான் உடன்பட்டவர்கள் இதில் எழுதியதுக்கு சுயவிமர்சனம் செய்யாதவர்கள் தான் விளக்க வேண்டும். இல்லையெனின் அவர்களும் ஒடுக் கப்பட்ட மக்களுக்கு எதிரான மக்கள் விரோதிகள்தான்!

தொழிலாளர், கூலிவிவசாயிகள் முதலாளிக்கும் நிலப்பிரபுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பார்ப் பணியத்துக்கும் ஆணாதிக்கத்துக்கும் எதிராக போராடினால் எப்படி ஐயா சாதிவெறியை, ஆணாதிக்கத்தை நிலை நிறுத்தும் செயல் என்பதை கொஞ்சம் உங்கள் தலித்திய பின் நவீனத்துவ வழிகளில் சொல்லியிருக்கலாமே. இப்படி கதையளப்பவர்கள், சொல்விளையாட்டு நடத்துபவர்கள் ஏகாதிபத்தியமும், அதன்கோட்பாட்டாளர்களுமே. ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக் காக சாதியை எதிர்த்தும், ஆணாதிக்கத்தை எதிர்த்தும், சுரண்டலை எதிர்த்தும் இது போன்ற அனைத்து ஒடுக்கு முறையையும் எதிர்த்து போராடும் ஒரே தத்துவம் மார்க்சியம் மட்டும் தான். இதற்க்கு வெளியில் யாராவது ஒரு கோட்பாட்டை முன்வைக்க முடியாத பேடித்தனமும், மார்க்சியத்தின் மீதான சேறுயடிப்பும் அதன் நோக்கமும் ஏகாதிபத்திய உலகை ஆணந்தமாக காப்பாற்றும் முயற்சி என்ற உண்மையைச் சொன்னால், ஏன் உங்களுக்கு கோபம் பொத்துக் கிட்டு வருகின்றது. நீங்கள் சுரண்டல், ஆணாதிக்க, சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான உங் கள் கோட்பாட்டை வையுங்கள் பார்க்கலாம், எப்படி இதை ஒழித்துக் கட்டுமென்று. இதை எக்ஸில், இருள்வெளி.... என எங்கும் எழுதும் எல்லா எழுத்தாளர்களையும் சவால் விட்டுக் கோருகின்றோம். இது முடியாத அனைத்துக் கோட்பாடும் ஏகாதிபத்திய கோட்பாடு என்கின் றோம். மறுக்க முடியுமா?

இந்த இடத்தில் இருள்வெளி முன்னுரையில் "தலித்தியமா புகலிடத்திலா என்று புருவத்தை நெரித்தவர்கள்" என்று புலம்பும் சுகன் தன்னுடைய புகலிட தலித்தியம் என்ன என தனது தலித்திய புத்தகத்தில் ஓர் இடத்தில் தானும் சொல்ல முடியாத வார்த்தையாடல்கள் எள் ளிநகையாடப்பட வேண்டியது. பின்நவீனத்துவ தொகுப்பு, தலித்திய குத்தகையாளன் அவைபற் றி ஒருவார்த்தை புத்தகத்தில் எழுத முடியாத அறிவுச் சூனியம் என்பதை திட்டவட்டமாக நிறுவியுள்ளார். தலித்தல்லாத உயர் சாதியின் பிரதிநிதியாக உள்ள சுகன் வசதிகருதி தன் னை தலித்தாக காட்டி உலாவரும் போது, தலித் மக்களுக்கு என்ன தீர்வை சாதியொழிப்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்கின்றார் எனக் கேட்டால் மௌனம் முடிவற்ற மௌனம் ஆனால் தலித் விடுதலை என சொல்லடுக்கு என்பதுதான் விடுதலைக்கு வழியாகும். அரசல்புரசலாக சில இடத்தில் சொன்னதாக "இரட்டை வாக்குரிமை" தான் தலித்விடுதலையின் அத்திவாரம் என்றாராம். இலங்கை சாதி ஒழிப்பில் இரட்டை வாக்குரிமை எப்படி சாதியை ஒழிக்கும்? இந்தியாவில் இருக்கும் தலித்பிரிவு அதிகாரவர்க்கத்தின் எண்ணிக்கை இரட்டிப்பானல் எப்படி சாதியொழியும். தலித் ஏழில்மலை போல் பார்ப்பாணிய வானரங்களுடன் இந்திய பராளுமன்ற சேற்றில் உழன்று சேறுபூசி எழத்தான் முடியும். இதற்க்கு வெளியில் பாதை காட்ட வழி காட்ட முடியுமா? முடியவே முடியாது.

இன்று தலித் என்ற தொடர்ச்சியான சொல் உச்சரிப்பு ஆதிக்கத்தால் மருண்டு வெருண்டு போய் தலித்தை உச்சரிப்போரும், எதோ உண்டு என்போரும் தலித் விடுதலையை, சாதி ஒடுக்குமுறையை எப்படி ஒழிக்கும் என்பதை கூறக்கூடாது என சபதம் எடுத்தாற் போல் சொல்லால் நியாயப்படுத்துவதை நிறுத்தி அறிவியல்பூர்வமாக, விஞ்ஞான பூர்வமாக ஆராய்வது அல்லவா சமூக அக்கறைக்குரியவரின் அழகு. இதை மறுத்தால் உங்களுக்கு சமூக நோக்கம் கிடையாது என்பதை கூறுவதில் என்ன தவறு. சிலர் தலித்திலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இதற்க்கு முன்னோடியாக இது உள்ளது எனக் கதையளக்கின்றனர். நான் உங்கள் இடம் கேட்கின்றேன் தலித் விடுதலையை வழிகாட்டி எத்தனை படைப்புகள் வெளியாகியுள்ளது. டானியல் படைப்பை தலித் படைப்பாக்கியது போல் சாதி ஒடுக்குமுறையை பேசிய படைப்புகளை தலித் படைப்பாக்கியதுதான் நிகழ்ந்தது. தலித் பெயரில் வெளியாகி இதுபோன்ற படைப்புகளை விட வெளியில் நிறைய படைப்புகள் வெளியாகியுள்ளது. இதுபற்றி ஆய்வு செய்யின் இதை துல்லியமாக்கும். தலித் அரசியலை பேசும் படைப்புகள் அல்ல சாதி ஒடுக்குமுறையைப் பேசும் படைப்புகள்தான் வெளியாகின. இது சாதாராணமாக ஒடுக்குமுறைக்கு எதிரான போக்கில் வெளிவந்து கொண்டிருப்பவைதான். இது சமூக ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டதுதான்.

இந்த இருண்ட "இருள்வெளி"த் தொகுப்பில் முதலாவது பக்கத்தில் சங்கானை சாதிப் போராட்டத்தில் கொல்லப்பட்டவர் நினைவாக எனப் போட்ட சதியைப் பார்ப்போம். மார்க்சியத்துக்கு எதிரான முன்னுரையில் "சாதி வெறியை மறைக்க வர்க்கப் பூனூல் போடுவோர்" எனக் குற்றம் சாட்டியவர் மார்க்சியம் சாதியை ஒழிக்க போராடி வரலாற்றில் கொல்லப்பட்டவர்க்கு நினைவாக தொகுப்பு என்பது மோசடிப் பிழைப்புவாதமல்லவா. மார்க்சியத்தின் போராட்டவெற்றிகள் எல்லாம் வேண்டும், ஆனால் மார்க்சியம் மட்டும் வேண்டாம், அதன் மேல் சேறு வீசும் உரிமை வேண்டும், அதன் ஊடாக பிழைப்பதை கண்டுகொள்ளக் கூடாது என்பதே பெரும்பாலன எழுத்தாளர்களின் கோரிக்கை. வாழ்க பிழைப்புவாதம் என வாழ்த்துவோமாக.

சங்கானைப் போராட்டத்தை முன்னெடுத்தது 1960களில் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்கு கம்யூனிசக் கட்சி தலைமை தாங்கி போராடிய தியாக வரலாற்றை மார்க்சிய சேறுயடிப்பூடாக சேறுயடித்தபடி அதில் கொல்லப்பட்டவர் பெயரில் புத்தகத்தை கொண்டுவருவது அப்போராளியின் தியாகத்தை வர்க்கப் போராட்ட தியாகத்தை தமது முதுகு சொறிவுக்கு தீனியாக்கிக் கொள்ள தயங்காத மோசடியில் வெளிவந்ததே "இருள்வெளி" என்ற இருண்டமலர். சங்கானைப் போராட்டம் வர்க்க தலைமைகளால் மார்க்சிய தூக்குண்டன் உடன் இரவு பகலாக கிராமம் கிராமமாக அணிதிரட்டி நடந்த போராட்டத்தை மறைத்து சேறடிக்கும் தலித்குஞ்சுகள், அந்த மக்கள் பற்றிய அனுதாபத்தில் அல்ல தமது விளம்பரத்துக்கு அஞ்சலிதான் எஞ்சிப்போய்யுள்ளது.

மார்க்சியம் மட்டும்தான் சாதியொழிப்பு போராட்டத்தில் விடாப்பிடியாகவும், உறுதியாகவும் போராடின போராடி வருகின்றது. மற்றையவை பெயருக்கு முன் பட்டம் போட்ட போட விரும்பும் தலித்தியம். தலித்துக்கள் சாதியை பேணவிரும்பும் பார்ப்பாணியம். மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு பாதை காட்டாத பிழைப்புத்தனம். சுரண்டுபவனை பகைக்காத எதிர்க்காத கோட்பாட்டு பன்றித்தனம். இதுதான் இன்றைய நவீன கோட்பாட்டு உற்பத்தியில் கேள்விக்குள்ளாக்கல் ஊடேயான இவர்களின் கருத்துச் சுதந்திரம் மீதான புலம்பல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து இராஜகுலேந்திரன் என்ற புனைபெயரில் எழுதிய புலியெதிர்ப்பு அரசுசார்பு செய்தியில் தமிழ் கலண்டர் மாவோவை கொச்சைப்படுத்தியதை இவர் மேலும் அவர்களைவிட மோசமாக கொச்சைப்படுத்தி கையாண்டவர், பெரியாரை கொச்சைப்படுத்தியதை பாதுகாக்க பின்நிக்காத போக்கு பாட்டாளி வர்க்க எதிர்ப்பில் எழுந்த வர்க்க எதிரியின் நச்சுத்தனங்கள் ஆகும். இதே சுகன் எக்ஸில் இரண்டில் புலம்பியதைப் பார்ப்போம். "தன்னைச் சாதிவெறியன் இல்லை என்று தொடர்ந்து நிருபிக்காதவரை ஒவ்வொரு வெள்ளாளனும் சாதி வெறியனேதான் என்று தலித் கருதுவதில் தவறில்லை." தனி வெள்ளாளன் சாதிவெறியன் அல்ல என நிறுவுவது மட்டுமல்ல, அதற்கு எதிராக போராடுவதும் மட்டுமின்றி அதை கருவறுக்க முன்வராத வாய்சவடலும், எழுத்தும் கூடமறைமுகமாக சாதியை பாதுகாப்பதுதான். சாதியை ஒழித்துக்கட்ட நடைமுறையில் சாத்தியமான வழியில் ஒடுக்கப்பட்ட மக்கள் உடன் இனைந்து போராடவேண்டும். இது தனிய வெள்ளானுக்கு மட்டுமல்ல தலித்துக்கும் பொருந்தும். தலித்துக்குள் உள்ள உயர்சாதி பார்ப்பணியத்துக்கும், சாதிகட்டமைப்பான பார்ப்பணிய சிந்தனைக்கு எதிராக போராடுவதன் மூலம், தலித்துக்குள் உள்ள சாதி கட்டமைப்பை தகர்க்க போராட வேண்டும். இதை மறுத்த பிழைப்புத்தனமான சாதி பாதுகாப்பு அதே வெறிபிடித்த வெள்ளாளத் தனம்தான். சாதியைக் கடந்த அமைப்பு முறை மட்டும்தான் அனைத்து சாதிய ஒடுக்குமுறையையும் தகர்க்கும். இதை மறுத்து சிலரின் நலனுக்காக சிலவற்றை மட்டும் மறுப்பது, சாதியை அணைகட்டிப் பாதுகாக்கத்தான். சாதியைக் கடந்த போராட்ட மார்க்கம் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலையை சாதிக்க வர்க்கப் போராட்ட பாதையில் அணிதிரள்வதன் மூலம் சாதியை கடந்த சமூகத்தை போராடிப் பெற வேண்டும்.

அடுத்த பொன்னான மேற்கோள்களைப் பார்ப்போம். "பலமா? யாருக்கு? செற்றியிருந்து ஜொனிவோக்கர் அடித்தபடி சோவியத் யூனியனின் சரிவை ஆராய்ந்தார்கள் (பார்த்திபன் சிறுகதை)"................என்பதை சுகன் பின்நவீனத்துவ தலித் வழியில் "எனக்கு உறுத்துகின்றது, நான் சாராயம் காய்ச்சி விற்கின்ற விளிம்பு மனிதன்." என்கின்றார். நாங்கள் சாராயம் காய்ச்சி விற்க்கும் எல்லோருக்கும் எதிரானவர்கள். சாராயம் காய்ச்சி விற்க்கும் முதலாளியால் (அது தலித்தென்டாலும் சரி, பிற்படுத்தப்பட்டாலும் சரி எந்த நாய்யானாலும் சரி) கொல்லப்பட்ட ஆயிரம்ஆயிரம் குடும்பங்கள் சார்பாக, பிற்படுத்தப்பட்ட சாராயத்தை குடித்து விட்டு வீடு சென்று வீரம் பேசும் ஆண்களிடம் அடிவாங்கி பட்டிணியில் உழலும் பெண்கள் சார்பாக கூறுகின்றோம், இந்த சாராய கொட்டத்தை ஒழித்து கட்டும்வரை நாம் ஓய்ந்துவிடப்போவதில்லை. அன்றாட அற்ப கூலியை பறித்துவிடும் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாராய்யம் காய்ச்சி விற்க்கும் முதலாளிகள், அதிகார வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து நடத்தும் இந்த கடைந்தெடுத்த பிழைப்பை எதிர்த்து இதனால் பாதிக்கப்படும் பெண்கள் சார்பாக, பட்டினி கிடக்கும் குழந்தைகள் சார்பாக, குடும்ப அங்கத்தவரை இழந்து தவிர்க்கும் எழைகள் சார்பாக எச்சரிக்கின்றோம், நீங்கள் தலித்தென்றோ அல்லது எந்த வேஷம் போட்டாலும் எமது எதிரியில் நீயும் தான் என்பதை மறந்து விடாதே. அற்ப கஞ்சிக்குரியதை இடையில் கடை விரித்து பறிக்கும் நாயிலும் கீழான உன் பிற்படுத்தப்பட்ட சாராய ராச்சியத்தை உன் குண்டர் படையை தலித்தின் பெயரில் வந்தாலும் சகித்துக் கொள்ள முடியாது. சாராயம் காய்ச்சுபவன் தலித் என்றாலும் எந்த நாய்யென்றாலும் மக்களின் எதிரி எதிரிதான்! பெண்கள் சாராய்யம் காய்ச்சுபவர்களை எதிர்த்து அடித்து நொருக்கும் போராட்டத்தில் தலித் முதலாளிகள் சாராய முதலாளியின் பக்கத்தில்தான். ஏன்எனின் அவன் விளிம்பு மனிதன், தலித் அல்லவா.

அடுத்து இன்று அதிகாரபீடங்களில் உள்ள எல்லா ஆளும் கும்பலும் குடித்துவிட்டு மக்களின் பெயரில் தீர்மானங்களையும், சதிகளையும் செய்யும் தமது பொழுது போக்கு சுகிப்பு அரசியலை சகித்துக் கொள்ள உரிமை கோரும் விளிம்பு கோரிக்கைள் விளக்கங்கள் மக்களின் கோவனத்தையே களவெடுக்கும் பின்நவீனத்துவ வாதமாகும். திண்டு குடித்து கூத்தடித்து பெண்களை சுகித்தபடிதான் ஆணாதிக்க ஆளும்கட்சி முதல் எதிர்க்கட்சிகள் ஈறாக தனியாகவும் கூட்டாகவும் ஈடுபடுவதை மக்கள் காண்கின்றனர். இதை அனுமதிக்க முடியாது என்பதை மக்கள் கண்டு போராட எழுகின்றனர். நாம் அந்த மக்களின் பின்னே ஒழிய சுகன் போன்ற அனைத்து குரங்குகளினதும் மக்கள் விரோத பாதையில் அல்ல எமது போராட்ட மார்க்கம். ○

www.tamilarangam.net

63ம் பக்கத் தொடர்-

பெண்களின் மார்புகளைப் பற்றி கொச்சையாக ஆணாதிக்கமாக பெண்கள் மார்பகத்தை பிடிக்க திரிபவர்கள் என்றும், பெண்கள் எல்லோருக்கும் கூட்டுக் கலவி விருப்பம் என்றும், ........ எழுதும் வக்கிரங்களை கண்டு அதே பெண்ணியம் எனப்போற்றி பவனி வருகின்றனர். எதிர்ப்பவர்களின் பார்வைக்கு கோளாறு எனக் கூறி அழகுராணிப் போட்டிகளையும், கவர்ச்சி விளப்பரங்களையும், படைப்புகளை நியாயம் கற்பிக்கும் இவர்கள் ஆணாதிக்க வானரங்களின் எடுபிடிகள் தான். ஐரோப்பாவில் பெண்களை அரை நிர்வாணமாக உணவு பரிமாறவும், டிஸ்கோக்களில் ஆடவும், விற்பனையாளர்களாக ஆக்கியும், தொலைக்காட்சி, மற்றும் விளம்பரங்கள் பெண்ணின் முழு அரை குறை ஆடை அவிழ்புகள் எல்லாம் ஆணாதிக்க வக்கிரங்களாக, பெண்ணை செக்ஸ் பிண்டமாக நிறுவி வெளிவருகின்றது. இது தான் எம் நாட்டிலும் உள்ள நிலை.

ஆனால் இதை படைப்பாக்கின்றனர். ஐரோப்பா நீலப்படக் கதைகள் தான் சுகன், அரவிந் அப்பத்துரை கதைகள். ஒரு விமானப் பெண்ணின் தொழிலை உழைப்பை ஆணாதிக்க வக்கிரத்தால் பார்த்து, முலைப் பால் குடிக்க பார்த்த வக்கிரத்தை கண்டு எந்தப் பெண்ணியமும் எதிர்த்து போராடவோ, விவாதிக்கும் அளவிற்கு கூட கோபம் வரவில்லை ஏன்?. பிரஞ்சுப் பெண் 5 தரம் படுத்தாலும் களைக்க மாட்டாள், எனக் கூறி சுகன் நோர்வேப் பெண்ணை ஒப்பிட்ட ஆணாதிக்கத்தைக் கண்டு கோபம் கொள்ளாதா? பெண்ணிலை வாதிகள் ஜனநாயக வாதிகளின் அரசியல் என்ன? பெண்களை பல திணுசுகளில் வருணித்து பருத்த குத்திட்டி, முலைகளை பூதக் கண்ணாடி போட்டு தேடி நா.கண்ணன் முன் பல் இளித்துப் பேசும் பெண்களுக்கு முதுகெலும்பு கிடையாது என்று அர்த்தம். நிறம் இல்லை என்றால் பல பெண்களை இந்தியாவிற்கு கூட்டிச் சென்று பரிசம் போட முடியும் எனக் கூறிய இந்திய நாசி பார்ப்பனீய ஆணாதிக்க வக்கிரத்தை எந்த ஜனநாயக வாதியும் நிறம் கடந்து கேட்கவில்லை. ஏன்? ஒரு பெண்ணின் வஞ்சகமில்லாத அரவணைப்பை மிகக் கேவலமாக பார்க்கும் ஆணாதிக்க வக்கிரத்தை கேட்பது ஆணாதிக்கமோ?. டிஸ்கோவிற்கு போனதை ஜனநாயகமாக உயர்ந்த பண்பாடாக காட்டிய நா.கண்ணன் செயலைக் கேட்டால் ஏகாதிபத்தியக் கலாசாரம் கலங்கப்பட்டுவிடும் என்ற பார்ப்பனீயத்தில் நின்று பாதுகாக்கின்றனர்.

(இந்தக் கதையை எதிர்த்து 7 பேர் கையெழுத்திட்டு ஒரு துண்டுப்பிரசுரத்தை பிரசுரித்தனர். அது பின் நவீனத்துவ பன்முகத் தன்மைக்குள் என்று சொல்லி, ஒரு துண்டுப்பிரசுர வடிவத்தைக் கூட கொச்சைப் படுத்தி நா.கண்ணனை நியாயப்படுத்தியது. பார்க்க துண்டுப்பிரசுரத்தை. இத்துண்டுப் பிரசுரத்தை விட்டவர்கள் அதைவிட மோசமாக கூட்டுக்கலவி போன்ற கதைகளை வெளியிட்டதுடன், இப்படி எழுதி வருபவர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து தின்று குடித்துக் கூத்தடித்து சுகித்தவர்கள் போகித்தல் மட்டுமே எஞ்சியுள்ளது. ஓரினச் சேர்க்கையையும், கூட்டுக் கலவியையும் எழுத்திலும் அதையே தொகுப்பதில், ஒன்றாக வெளியிடுவதில் எல்லாம் தொடங்கி உள்ளது. எஞ்சியுள்ள நடைமுறையும் அதைச் செய்வது தான் அரவிந் அப்பாத்துரை இந்திய சினிமாப் புத்தகத்தைப் பார்த்து (வாசிப்பதை மறுக்கிறார்) படத்தை பார்த்து காமத்தில் காமம் கொள்ளும் வக்கிரத்தை சொன்னதையிட்டு பெண்களே ஏனிந்த மௌனம். உங்கள் எழுத்துக்கள், சந்திப்புகள், அதற்குக் கூடிக் குலாவி சுகிக்கப் போன போதே புரிகிறது உங்கள் ஆணாதிக்க நியாயப்படுத்தலும். அப்பெண் மூன்று ஆணுடன் உடலுறவு கொள்ள எண்ணினால் என்று நீலப்படக் காட்சியை அங்கீகரித்து, நீலப்படம் பார்த்துடன் ரஜனி, கமல் படத்தைப் பார்த்து எற்பட்ட அந்த வக்கிர உணர்ச்சியை, பெண்கள் மீதான கொச்சைப்படுத்தலை, பெண்கள் தன்மானம், முதுகெலும்பு அற்றவர்களாக பெண்களை நீலப்பட ஆணாதிக்க செக்ஸ் பிண்டமாக வருணித்து அலட்சியப் படுத்திய ஆணதிக்கத்தை அம்பலப்படுத்தினால் உங்களுக்கு கோபம் வருகிறது இது தேவைதானா?


சுகன் பக்கத்து வீட்டுச் சுவரில் இடிக்கும் அராஜக வன்முறையை (புலிகள் இடித்தால் குற்றமோ) பிரசுரித்த எக்ஸிலின் ஜனநாயகம் எங்கே போனது. பக்கத்து வீட்டுக்காரனிடம் பெண் வேண்டும் என்று கேட்ட வக்கிரம் ஆணாதிக்கம் அல்லவோ? பெண் என்றால் வியாபாரப் பண்டமா? ஒரு ஆண் இறுமாப்போடு ஆணால் கேவலப்படுவதை கேட்பதை எப்படி பெண்கள் கூடி மௌனமாக ஏற்றனர்? இதைப் பெண்கள் எப்படி அச்சேற்றினர். ஓர் அழகிய அரபியப் பெண் வேண்டும். என்று கேட்கும் போக்கு பெண் தரகர்களிடம் அதிகார வர்க்கம் கேட்கும் அதே விடையம் தான். சைஸ் முதல் வயது, நிறம் ........ என அனைத்து வகையிலும் கூறி பெண் கொண்டா எனக் கேட்டால் பெண் விடுதலையா? அது ஜனநாயக உரிமையைக் கோரும் எக்ஸிலும், அதன் பிரதிநிதிகளுக்கு தெரியாதா? ஒரு பெண்தான் தனது முடிவை எடுக்கும் உரிமை கொண்டவள். இதை மறுத்த சுகன் அராஜக தலித் பின் நவீனத்துவ குப்பையை இட்டு மௌனம் சாதிக்கும் பிரிவு உண்மையில் மக்களின் விரோதிகள். இதே சுகன் வீதியில் வந்த பெண்ணின் மார்பு இந்தா பிடி இந்தா பிடி என சொல்லிச் சென்றது என்கிறார். இந்த சுகன் முன் எப்படி பெண்கள் நடக்க முடியும். வக்கிரமான கண்கள் ஒரு பெண் என்ன குடிக்கிறாய் என்றால் உன் முலைப்பால் வேண்டும் என்ற வக்கிரம், பெண்கள் எல்லாம் அந்த நாய் முன் செக்ஸ் பிண்டங்கள். ஆணாதிக்க வக்கிரம் பிடித்த செக்ஸ் மனநோயாளியின் வெளிப்பாடுகள் தொடர் பக்:23



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுபான்மை அதிகாரவர்க்க



பின்நவீனத் துவ கோட்பாடு

அப்பாவிகளுக்கு வழங்கிய

# மரணதண்டனை

_அண்மையில் இந்திய நீதிமன்றம் சிறுபான்மை ஆளும்வர்க்கத்தின் நீதியின் பெயரால், உன்னதமான ஜனநாயகத்தின் பெயரால் அப்பாவிகள் இருபத்தியாறு பேருக்கு வழங்கப்பட்ட தீர்ப்புகள் உலகுக்கு புதியனவா? ஜனநாயகத்தைப் பற்றிய பிரமைக்குள் நீடிக்கும் நம்பும் பிரிவுக்கு இவை ஆச்சரியமான அதீசயமான அதிர்ச்சியான விடையங்களாக மாறிவிடுகின்றது. இந்த தீர்ப்பையொட்டி, இந்தியாவிலும் புலம்பெயர் நாடுகளிலும், நாட்டிலும் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தனிவெளியீடுகள் இந்தியா ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வெளியிட்டதுடன், தீர்ப்புக்குள் தமது அதிப்தியை வெளியிட்டு இந்த சிறுபான்மை ஆளும் வர்க்க ஜனநாயகம் அதிராமல் இருக்க கருத்துரைத்துள்ளனர்.

இந்தியா என்ற பிராந்திய வல்லரசு பற்றி மௌனத்துடன் அதன் ஆக்கிரமிப்பு பற்றி அலட்டிக் கொள்ளாது கருத்துரைத்துள்ளனர். இந்த முதலாளித்துவ அரசு அமைப்பு என்பது சிறுபான்மை சுரண்டும் வர்க்க நலன்களை மட்டும் பேசுவது என்பதை காணமறுத்து, கருத்து வெளியிட்ட நிகழ்வு, இந்திய மற்றும் முதலாளித்துவ ஜனநாயக அரசுகள் தொடர்பான நம்பிக்கைகளை நீடிக்க வைக்கும் முயற்சியாக உள்ளது. இன்று இருக்கக்கூடிய அரசுகள் மக்களுக்கானதோ, அவர்களின் ஜனநாயகத்தினை அடிப்படையாக கொண்டதல்ல. சிறுபான்மை ஆளும் வர்க்க சுரண்டல் பிரிவுக்கானதாக, அதன் ஜனநாயகத்துக்கானதாக நீடிக்கின்றது நீடிக்கமுடியும். இருக்கும் சட்டம் இந்த வர்க்க அமைப்பு நீடிக்கவைக்கும் எல்லைக்குள் மட்டும் ஜனநாயகத்தை வழங்குகின்றது. இது சிறுபான்மை பிரிவின் நலனுக்காக மட்டும் உருவாக்கப்பட்டது. இச்சிறுபான்மை மீதான தாக்குதல் வன்முறைகளை இந்த ஜனநாயகமும் அதன் ஆளும் அமைப்பும் அதன் சட்டமும் ஈவிரக்கமின்றி ஒடுக்கும்.

இது வரலாறு முழுக்க நீடித்தன நீடிக்கின்றன. இதன் தொடர்ச்சியில் கொலையாளியின் மூச்சுப்பட்டவர்கள் முதல் ஏதோ ஒரு தொடர்பைக்கூட குற்றமாகக்காட்டி மரணதண்டனை விதிக்க இந்த சிறுபான்மை ஆளும்வர்க்கம் பின்நிற்கவில்லை. பார்ப்பானிய ஆளும் சுரண்டல் வர்க்கத் தலைவன் ராஜீவ்காந்தி மீதான விசுவாசம், அதன் அருவருடித்தனம், அரசியல் பிழைப்புத்தனமாக எல்லாம் சேர்ந்துதான் மரணதண்டனையை விதித்த போக்கு வரலாறு முழுக்க ஆளும்வர்க்க குணாம்சமாக உள்ளது. அநியாயமான வகையில் அப்பாவிகள் மீது மரணதண்டனை தீர்பு வழங்கிய பின் வெளியாகிய எதிர்ப்பு அறிக்கைகள் முதலாளித்துவ அரசு அமைப்பையோ, இந்திய ஜனநாயகத்தையோ கேள்விக்குள்ளாக்கவில்லை மாறாக விமர்சிக்க முற்ப்பட்டனர். இதன் மூலம் இந்திய ஜனநாயகத்தை தூக்கி எறியாத வகையில் சீர்திருத்த மனிதாபிமான ஜனநாயகத்தை, நீதிபதி கண்டுகொள்ளாத உண்மை மீது அதிர்ப்த்தி மீதான, ஜனநாயகத்தைக் கோருவதாகவேயிருந்தது.

இந்த தீர்ப்பு மூலம், இத்தீர்ப்பு எப்படி அ.மார்க்ஸ் கும்பலின் பின்நவீனத்துவம் சிறுபான்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆளும் வர்க்கத்துக்கு சேவை செய்வதன் மூலம் இந்த மரணதண்டனையை எப்படி நியாயப் படுத்துகிறது என்பதை பின்நவீனத்துவ கோட்பாட்டு மூலம் பார்ப்போம்.

அ.மார்க்ஸ் நந்தன் இதழுக்கு (15 மாசி 1998) "காத்திகேயன் கண்டுபிடித்த உண்மைகளும் கண்டு கொள்ளாத உண்மைகளும்" எனத் தலைப்பிட்ட கட்டுரையை "ஏது செய்தோம் நாம்" என்று தலைப்பிட்ட இவ் மரணதண்டனை தொடர்பான வெளியீட்டில் மறுபிரசுரம் செய்திருந் தனர். இத்தலைப்பிலேயே பின்நவீனத்துவ மோசடி தொடங்கிறது. காத்திகேயன் கண்டுபிடித்த உண்மைகள் என அ.மா எதைச் சொல்கிறார். குற்றவாளிகள் என மரணதண்டனை வழங்க சோடித்தவைகளையே காத்திகேயன் கண்டுபிடித்த உண்மையாக அ.மார்க்ஸ் எடுத்து முன் வைக்கின்றார். இந்த உண்மை என்பது ஆளும் வர்க்க உண்மையும், அதைப் பாதுகாக்கும் உண்மையே ஒழிய ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மைகளல்ல அ.மா உண்மை என்கிறார். உண்மை என்பது பின்நவீனத்துவம் கூறுவது போல் குறித்ததுக்குள் காணமுடியாது. காணமுடியும் என்பது சிறுபான்மை பிரிவின் உண்மையாக ஆளும் வர்க்க உண்மையாகத் தான் இருக்கிறது. மாறாக உண்மை என்பது முழுமையில் மட்டும்தான் சாத்தியம். இதை மறுக்கும் பின்நவீனத்துவம் சிறுபான்மை உண்மைமீது (குறித்ததில்) உண்மையை போற் றுகிறது இதனால் பொதுமையை மறுக்கின்றது. பின்நவீனத்துவ கோட்பாட்டில் கொலை-லயாளியுடன் தொடர்பு குற்றவாளியாக்க காரணமாகிவிடுகிறது. மறுவாசிப்பு, வேறுபட்ட பார்வை பார்க்க முடியுமென்றால், பொதுவான உண்மை என்று ஒன்று இல்லை என்றபின் பின் நவீனத்துவ கோட்பாட்டின் பிரதிநிதி காத்திகேயன் போன்ற ஆளும்வர்க்க சிறுபன்மை பிரிவு அப்பாவிகளை குற்றவாளியாக்கிவிடுகிறது. கண்டுகொண்ட உண்மையும் கண்டு கொள்ளாத உண்மையும் நேர் எதிரானவை ஒன்றுடன் ஒன்று இணங்க முடியாதவையாகும். ராஜீவ் ஏன் கொல்லப்பட்டான்?, அவனின் குற்றம் என்ன?, அவனின் அரசியல் என்ன?, அவன் சிறுபான் மையின் பிரதிநிதியா? அல்லது பெரும்பான்மையின் பிரதிநிதியா?, கொலையாளி ஏன் கொன் றான்?, கொலையாளியின் அரசியல் என்ன?, எனவிரிந்த தளத்தில் மட்டும்தான் முழுமையான ஆய்வும் உண்மையான தீர்வும் பிறக்கிறது. இது எல்லாவற்றுக்கும் எல்லாப் போராட்டங்களுக் கம் பொருந்தும். இதைப் பின்நவீனத்துவம் மறுத்து சிறுபான்மைக்காக குரல் கொடுக்கும் போது பகுதியில் தீர்வுகாண கோரும்போது கர்த்திகேயன் பின்நவீனத்துவ வாரிசாக இருப் பதுடன் மரணதண்டனையை கோட்பாட்டுரீதியில் பின்நவீனத்துவம் அங்கீகரிக்கின்றது.

"அவன் ஒரு ஈழத்துப்பையன். பெற்றோர் இராணுவத்தாக்குதலில் செத்துப்போயிட்டாங்களாம். அகதி. அவன் பேசுகிற தமிழ் எனக்கு ரொம்பப்பிடிக்கும். என் மகனுக்கு நண்பன். இந்த வய-தில் இத்தனை இழப்புகளைச் சந்தித்த அவனுடைய சோகமான முகம் என்னை எப்போதும் வாட்டும். வீட்டுக்கு வரும் நேரங்களில் ஒரு வேளை சோறு போடுவதில் எனக்கொரு ஆறதல். அன்றும் அவன் வந்தான். முகமெல்லாம் வேர்த்திருந்தது. பரபரப்பாக இருந்தான். சப்பிடச் சொன்னேன். படுக்கச் சொன்னேன். மாத்திரை வங்கி வந்து கொடுத்தேன். இரண்டு நாள் கழித்து ஊருக்குப் போகிறேன் என்றான். பெங்கருக்கு ஒரு டிக்கட் வேண்டுமென்றான் அவனிடம் காசு இல்லை என்பது எனக்குத்தெரியும். நான் டிக்கட் வாங்கி வந்து கொடுத் தேன். அவன் போய்விட்டான்."

இந்தச் சொற்குவியலை ஒரு "கலிடாஸ் கோப்பு"க்கு ஒப்பிடலாம். வெவ்வேறு கோணங்களில் சாய்க்கும் போது வெவ்வேறு அர்த்தங்கள். மனிதநேய எழுத்தாளர் ஒருவருக்கு இது ஒரு பாசமுள்ள அன்னையின் பரிவு மிக்க சொற்கள். இந்தச் சொற் குவியல் அவருக்கு ஒரு மனிதநேயக் கதையாடலுக்கான கச்சாப்பொருள். ஒரு புலனாய்வுக் குழுத்தலைவருக்கோ இது ஒரு சட்ட ஒழுங்குக் கதையாடலுக்கான கச்சாப்பொருள்! ஏற்கனவே "குற்றச்செயல்" என வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்வுதொடர்பான உண்மை! சொற்கூட்டத்தில் அதன் வெவ்வேறு அர்த்தங்களுக்குமான உறவில் ஒன்றை மட்டும் உருவி எடுத்து "சட்டபூர்வமான உண்மை" இங்கே கட்டமைக்கப்படுகிறது." எனத் தொடரும் அ.மார்க்சின் வாதம் அவரின் பின்நவீனத் துவ வழியில் மரணதண்டனையை மறைமுகமாக அங்கீகரிக்கின்றது.

இதை அவரின் "பின்நவீனத்துவம் இலக்கியம் அரசியல்" என்ற நூலில் உள்ள கோட் பாட்டில் ஆராய்வோம். அந்த நூலின் 68ம் பக்கத்தில் "உண்மை, நீதி, அறம் எதையும் பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவீத்துவம் மறுக்கவில்லை.------------ இவற்றை எல்லாம் தீர்மானிப்பதற்கான அடிப்படையான பொது ஆதாரம் ஏதுமில்லை என்பதை பின்நவீனத்துவம் சொல்கிறது. பேருண்மை, பெருநீதி, பேரறம் என எதுவும் இருக்கமுடியாது." என்கிறார் அந்தோணிசாமி மார்க்ஸ்.

அதாவது பின்நவீனத்துவ கோட்பாட்டின்படி உண்மை, நீதி, அறம், பெருநீதி, பேரறம், பேருண்மை என்பன இருபத்தியாறு மரணதண்டனை கைதிகளின் பக்கத்தில் பொது ஆதாரத்தில் இருக்க முடியாது. இதன் மூலம் மரணதண்டனை வழங்கிய சிறுபான்மையின் பக்கம் நீதி, அறம், உண்மை இருக்கும் என மறைமுகமாக அங்கீகரிக்கின்றார். இதை மேலும் எப்படி பின் நவீனத்தவ சாக்கடையால் அங்கீகரிக்கின்றார் என்பதை அ.மார்க்ஸ்சின் அதே நூலில் பக்கம் 56இல் " பெரும்பான்மைக்கு எதிரான தனிநபரின் கருத்துரிமை என்கிற தாராளவாதக் கோட்பாட்டு மீண்டும் அழுத்தம் கொடுத்து பரிசீலிக்க வேண்டிய ஒன்று" என்கிறார். குற்றவாளிகளாக மாற்றப்பட்ட கைதிகள் தொடர்பாக பெருண்பான்மை மக்களின் நீதியின்பாலான கருத்துரிமையை அ.மார்க்ஸ் பின்நவீனத்துவ சாக்கடையால் மறுத்து தனிநபர் உரிமையின் பெயரில் காத்திகேசனினதும் மற்றும் இந்தியா ஆளும்வர்க்க கருத்துகளை அழுத்தம் கொடுத்து பரிசீலிக்க வேண்டும் என்பதன் மூலம், அப்பாவிகள் மீது வழங்கிய மரணதண்டனையை எதிர்த்த மக்களின் அபிப்பிராயத்தை அ.மார்க்ஸ் பின்நவீனத்துவ வழியில் மறுத்து கர்த்திகேசனின் தீர்ப்புதான் நீதியை விட முக்கியமானது என்கிறார்.

உண்மையில் பின்நவீனத்துவம் சிறுபான்மையின் பெயரால் சிறுபான்மை ஆளும்வர்க்கம் சார்பாக பெரும்பான்மை மக்களுக்கு எதிராக உள்ளது. அதே நேரம் பொது ஆதாரம் எதுவும் இல்லை என்பதன் ஊடாக குற்றவாளிகளாக மாற்றப்பட்டவர்களின் பொது உண்மையை மறுத்து, இந்தியா நீதிமன்றம் பின்நவீனத்துவ வழியில் பொது உண்மை எதுவும் இருக்க முடியாது என மறுத்து வழங்கிய தீர்ப்பு தான், இருபத்தியாறு அப்பாவிகளுக்கான மரணதண்டனை. உண்மையின் பொது ஆதாரங்களை மறுப்பது என்பது பின்நவீனத்துவ அடிப்படைக் கோட்பாடாகும். இந்திய நீதிதுறையும், ஆளும்வர்க்கமும், அதன் ஜனநாயக அமைப்பும் பொது ஆதாரத்தை மறுத்து நிற்பதற்கான அடிப்படைக் கோட்பாட்டை பின்நவீனத்துவம் வழங்கி பாதுகாக்கின்றது. பின்நவீனத்துவத்தின் சிறப்பான பிரதிநிதிகளாக முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ பிரதிநிதிகள் மட்டும்தான் உலகில் இருக்கமுடியும் என்பதை ஆதாரமாக நாம் நிர்வாணமாக காணமுடிகின்றது. இதன் சிறப்பான பிரதிநிதியாக அ.மார்க்ஸ் அளவெடுத்து வெட்டினால் போல் உள்ளார்.

இதை மேலும் அதே நூலில் பக்கம் 61 இல் "....... கருத்தொருமிப்பு என்பதைக் காட்டிலும் கருத்து வேறுபாடு (Dissension) உரிமையை சனநாயகம் எனப் பின்நவீனத்துவம் வற்புறுத்துகின்றது." என்கிறார். சனநாயகம் என்பது மரணதன்டனை வழங்குவதன் மூலம் அதற்க்கு எதிரான போராட்டத்தில் இருக்க முடியும் என்கிறார். இதுமட்டும்தான் சனநாயகத்தின் அடிப்பைக் கூறு என்கிறார். மரணதண்டனை இருக்கும்வரை தான் சனநாயகம் நீடிக்கமுடியும் என்கிறார். அதாவது இதில் கருத்து முரண்பாடு நீடிக்கும்வரைதான் சனநாயகம் நீடிக்க அடிப்படையானவையாக உள்ளது என்கிறார். எனவே மரணதண்டனை நீக்க கோருவது கருத்துமுரண்பாட்டை நீடிக்க வைக்கும் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது. மரணதண்டனை நீக்காதவரைதான் சனநாயகம் நீடிக்கும் என்பதே பின்நவீனத்துவ கோட்பாட்டு விளக்கம். ஏனவே சனநாயகம் நீடிக்க வேண்டின் மரணதண்டனை நீக்கக்கூடாது என்பதும் பொது உண்மையில் விசாரனை நடக்க கூடாது என்பதும், இந்த கனவானின் பின்நவீனத்துவ விளக்கமாகும். மரணதண்டனை நீடிக்கும் வரைதான் கருத்துமுரண்பாடு கொண்ட சனநாயகம் நீடிக்கும் எனவே சனநாயகம் நீடிக்க வேண்டுமாயின் மரணதண்டனை நீக்கக்கூடாது இதுதான் பின் நவீனத்துவ கோட்பாட்டு விளக்கமாகும். இதை மேலும் அதே பின்நவீனத்துவ நூல் பக்கம் 85 உள்ளபடி பார்ப்போம்.

".......“உண்மை” எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்தற்கும் எல்லா மக்களுக்கும் ஒன்றாகவே இருக்க முடியும் என்றும் நம்பினோம்." எனக் கூறி மறுத்ததன் மூலம் உண்மை என எதுவுமில்லை எனப் பின்நவீனத்துவ வழியில் கூறுகின்றார். அப்பாவிக் கைதிகள் குற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றவாளிகள் அல்ல என்பது உண்மை இல்லை என்கிறார். இங்கு உண்மை இடத்துக்கும், எல்லா மக்களுக்கும், காலத்துக்கும் ஒன்றாக இருக்கமுடியாது என்கிறார்.

தமிழர்க்கு உண்மையானது சிங்களவர்க்கு உண்மையாக இருக்க வேண்டியதில்லை என்கிறார். இந்தியா ஆளும் வர்க்கத்துக்கு உண்மையானது மக்களுக்கு உண்மையாக இருக்க வேண்டியதில்லை என்கிறார். மரணதண்டனையை கேட்டு கொதித்த மக்களின் உண்மை மற்றவர்களுக்கு உண்மையாக இருக்க வேண்டியாதில்லை என்கிறர். ஏன்னெனின் உண்மை என்ற ஒன்று எல்லோருக்கும் இருக்காது என்பதன் மூலம் ஆளும் வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிரான பொது உண்மையல்ல என்பதால் நாம் அதை எதிர்க்கமுடியாது என்கிறார். ஆணால் இது சனநாயகத்தின் உயிர் மூச்சு என்பதால் இதை எதிர்ப்பதாக கூறுவோம். ஆணால் உண்மையின் அடிப்படையில் அல்ல. இங்கு உண்மை உயிர் வாழ வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. நாம் கதைப்போம் சனநாயகம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக மட்டும். இது நீடிக்கும்வரைதான் முதலாளித்துவ சுரண்டல் நீடிக்கும். அது உள்ளவரைதான் சனநாயகமும் உயிர் வாழும் எனவே சுரண்டலை பாதுகாப்போம். ஆணால் எதிர்ப்பதாக பாசாங்கு செய்வது சனநாயகத்தின் பின்நவீனத்துவ வழியாகும்.

உண்மை என்ற ஒன்று மரணதண்டனைக்கு எதிராக இருக்கமுடியாது என்பதால் பின்நவீனத்துவ வாதிகள் எப்படி குரல் கொடுப்பார். இதனால்தான் ஆளும் வர்க்கம் சார்பாக இந்தியா ருடே, துக்களக்........போன்ற பத்திரிகைகள் சிறுபான்மையின் சனநாயகத்தைப் பாதுகாக்க பின்நவீனத்துவ வழியில் மரணதண்டனை சரியானது எனவாதிடுகின்றன. இவ்மரணதண்டனை சனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி எனப்பிரகடனம் செய்து, பின்நவீனத்துவ வாதிகளின் கோரிக்கைக்காக யதார்த்தமாக உண்மையாக விசுவாசமாக குரல் கொடுக்கின்றனர். அதாவது மாறுபட்ட இன்றைய சனநாயகத்தில் மட்டும்தான் மாறுபட்டகருத்து, மாறுபட்ட மக்கள் என அனைத்தும் நீடிக்கும் என்பதால் இந்த சமூதாய இருப்புக்காக நனவாக விசுவாசமாக பின்நவீனத்துவவாதிகள் செயல்பாடுகின்றனர். இருபத்தியாறு பேரின் மரணதண்டனை மாறுபட்ட கருத்தில், மாறுபட்ட மக்களில், மாறுபட்ட இடத்தில் சனநாயமாக மையமிடுவதால் இதுபோன்றவை நீடிக்க பாதுகாக்க நனவாக போராடவேண்டும் என்கிறார். சனநாயகத்தை ஒழித்துக் கட்ட கோரும் பட்டாளிவர்க்க சமுதாய கோரிக்கையை எதிர்த்து இன்றைய உலக ஒழுங்கு மட்டும்தான் சனநாயகத்தின் ஒரேயொரு பாதுகாப்பான பாதை என்பதால் அப்பாவிகள் மீதான மரணதண்டனை போன்றவை அவசியமானது, இது சனநாயகத்தை உயர்த்த, குரல் கொடுக்க உள்ள இறுதியான உள்ள ஒரே மார்க்கம் என்பதால் மரணதண்டனையை பாதுகாக்க வேண்டும், அதே நேரம் எதிர்ப்பதாக சனநாயகவழியில் பின்நவீனத்துவ வழியில் பேசுவோம் என்கின்றார். தொடர்ந்தும் அதே நூல் பக்கம் 55 இல் கூறுவதைப் பார்ப்போம்.

"பெரும்பான்மையின் கருத்துக்கு எதிராகச் சிறுபான்மை அல்லது ஒரு தனி மனிதர் தனது கருத்தை முன்வைப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் பிரச்சாரம் செய்வதற்க்குமான உரிமையே சனநாயகம்." என அ.மார்க்ஸ் பின்நவீனத்துவ வழியால் எடுத்து முன்வைக்கின்றார்.
இதற்க்கு அண்மையில் துக்ளக் (27.5.98) இதழில் சிறுபான்மை தனிநபர் சனநாயகத்துக்காக குரல்கொடுத்ததைப் பார்ப்போம். "நினைத்ததை எழுதுகிறேன்" பகுதியில் " போக வேண்டிய சட்டம்" எனப்போட்டு "நில உச்சவரம்புச் சட்டத்தை மத்திய அரசு நீக்கியிருக்கிறது........... கம்யூனிஸ ஆட்சியில் ஒரு சர்வாதிகாரத்தின் கீழ் வேண்டுமானால் இம்மாதிரி சட்டம் செல்லுபடியாகக் கூடுமே தவிர, ஒரு ஜனநாயக நாட்டில் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய சட்டம் அல்ல இது........... பொதுவுடமை என்ற பெயரில், பொதுக் குழப்பத்தை மட்டும் விளைவித்துக் கொண்டிருந்த இந்தச் சட்டம், போக வேண்டிய சட்டம்தான்." இந்த வாதம் எப்படி ஜனநாயகத்தை வரையறுக்கின்றது என்றதற்க்கு நல்ல உதாரணம். சிறுபான்மை, தனிநபர் ஜனநாயகம் என்பது பெரும்பான்மை ஜனநாயகத்துக்கு எதிரானது என்பதை நிலஉச்சவரம்பு சட்டநீக்கம் தெளிவாக காட்டுவதையே அ.மார்க்ஸ் பின்நவீனத்துவ கோட்பாட்டால் கோருகின்றார். மக்களுக்கு சொத்துரிமை இருப்பது ஜனநாயக விரோதம் இது **கம்யூனிச சர்வாதிகாரம்** எனக் கூறுவதையே அ.மார்க்ஸ் தனிமனித உரிமையாகவும், சிறுபான்மை உரிமையாகவும் முன்வைக்கின்றார். இதையே லண்டனில் இருந்து எழுதும் யமுனாவும் எழுதுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த சிறுபான்மை ஜனநாயகத்தை அமுல்படுத்தக் கோரி இந்தியா ருடே (மே 27 98) ஆசிரியர் குறிப்பில் "வெடித்தது குண்டு அடுத்தது?" எனத்தலைப்பிட்ட செய்தியில் அணுகுண்டு வெற்றி போலி மயக்கத்தில் பெரும்பான்மை மக்கள் தங்களை மறந்து கூத்தாடிக் கொண்டிருந்த நிலையை சிறுபான்மை பிரிவுக்கு சாதகமாக மாற்றும்படி எழுதுவதைப் பார்ப்போம்.

"முதல் வாக்குறிதியை நிறைவேற்றியாகி விட்டது. இரண்டாவது வாக்குறிதியையும் நிறைவேற்ற இதுவே சரியான தருணம். இதற்க்கு சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். ஆனால் இப்போது உள்ள மனநிலை வெகு சாதகம்" என்கிற போது ஜனநாயகம் எது என்பதையும், சிறுபான்மை ஜனநாயகத்தின் மறுகாலணியாக்கத்துக்காக போராடும் இந்தியா ருடே, துக்ளக் போன்றவற்றின் குரல்களுக்கும், அ.மாாக்ஸ்சின் குரலுக்கும் எந்த வேறுபாடும் இருக்கவில்லை. சிறுபான்மை நலனுக்காக பாரதியஜனதா அரசு அணுகுண்டை வெடிக்க வைத்தது. குண்டுவெடிக்க முன் அ.மார்க்ஸ்சின் சிறுபான்மை ஜனநாயகத்துக்காக இறக்குமதி தீர்வையை ஏப்பிரல் 13 இல் 340 பொருளுக்கும், ஏப்பிரல் கடைசியில் 300 பொருளுக்கும் (இதில் வேடிக்கை என்னவென்றால் சில அடிப்படை நுகர்வுப் பொருளுக்கும் நீக்கி மக்களின் வயிற்றில் அடித்த சுதேசி வேடம் போட்டு குண்டு போட்டதுதான்) இறக்குமதி தீர்வை நீக்கி சிறுபான்மைக்காக சேவை செய்த அரசு, தமது சுதேசி வேடம் கிழியாது இருக்கவும், மக்களை திசைதிருப்பவும் அணுகுண்டு போட்டு திசைதிருப்பியது என்பது அ.மார்க்ஸ்சின் அதே தொழிலாக ஏகாதிபத்திய நலன்களான சிறுபான்மையை திருப்திசெய்யத்தான்.

இதைப் போல் கத்திகேசனினதும் இந்திய ஆளும் வர்க்க சிறுபான்மையும் தனது ஜனநாயக விரோத தீர்ப்பை வழங்கவும், நடைமுறைப்படுத்தவும் உள்ள உரிமையை மறுப்பது உள்ளவரை அது ஜனநாயக விரோதமானது, எனவே அதைப் பாதுகாக்கும் உரிமைதான் ஜனநாயகம் என்கிறார். மரணதண்டனை வழங்கும் உரிமை ஜனநாயகம் என்பதால் அதைப் பாதுகாத்தபடி அதை எதிர்க்கும் உரிமையும் ஜனநாயகம் என்பதால் எதிர்த்தபடி இரண்டையும் பாதுகாப்போம் என்கிறார். மரணதண்டனையை எதிர்த்த இவரின் அறிக்கை மரணதண்டனையை பாதுகாக்கும் உரிமையினை எதிர்த்தல்ல. இரண்டின் மேலாக மட்டும்தான் பின்நவீனத்துவம் உள்ளதால் நனவாக இருக்கும் சமுதாய அமைப்பை நனவாக பாதுகாக்க பின்நிற்காத அறிக்கைகளை விடுவது அவசியமாகிவிடுகின்றது. மரணதண்டனையை எதிர்த்தல்ல ஜனநாயகத்தைப் பேசிக் கொள்ள மட்டும் பேசுகின்றனர்.

பின்நவீனத்துவம் பொது உண்மையை மறுத்து, சிறுபான்மையினதும், தனிநபரினது உரிமையை பாதுகாத்தும் பெரும்பான்மை மக்களையும், பெரும்பான்மை பொது உண்மையையும் மறுத்து நிற்பதால் பெரும்தத்துவத்தை மறுத்த நனவாக சிறுபான்மை ஆளும் வர்க்கத்துக்கும் அதன்தனிநபர் பிரதிநிதிகளுக்கும் ஜனநாயகத்தின் பெயரில் முண்டுகொடுக்கின்றது. எல்லா மனிதர்க்கும் ஜனநாயகம் இருந்தால் எப்படி ஜனநாயகக் கோரிக்கை எழமுடியும்?. ஜனநாயகம் என்பது குறித்த பிரிவுக்கு மட்டுமானதாகவே எப்போதும் வர்க்க சமுதாயத்தில் நீடிக்கும். எல்லோருக்கும் ஜனநாயகம் இருப்பின் ஜனநாயகம் மறைந்துவிடும். அ.மார்க்ஸ்சின் ஜனநாயகம் என்பது உண்மையில் சிறுபான்மை சுரண்டும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் எழும் குரலாக மட்டும் உள்ளது. O

---

18ம் பக்கத் தொடர்-
தான் ஒரு சாதாரன ஆணாதிக்க வாதியை விட இந்தமாதிரி கொச்சையாக வெளிப்படுகிறது. சாதாரண ஆணாதிக்கம் பெண்ணை பூசிக்கின்றது. அழகியல் பதுமையாக, ........ பார்க்கின்றது. ஆனால் வக்கிரம் பெண்ணை வக்கிரத்தால் வெளிப்படுத்தி, பெண்ணின் அற்ப்ப மதிப்பைக் கூட மறுத்து செக்ஸ் பதுமையாகக் காட்டுகின்றது. குடும்ப முரண்பாடு உண்டு என்பதும் அதைச் சொல்லித் தேடுவது என்பது, குடும்ப முரண்பாடுகளை தனது ஆணாதிக்க வக்கிரத்துக்கு பயன்படுத்துவதே. பாரிசில் தமிழ் போதகர் ஒருவர் சுகன் போன்று தனிமையில் தனது குடும்பப் பிரச்சனையைச் சொன்னால் ஆண்டவன் தீர்ப்பார் எனக் கூறி அதில் அப்பெண்ணை பயன்படுத்தி கெடுக்க முயன்று பிரான்ஞ் பொலிஸ் தேடுகிறது. அதேயே தான் சுகன் செய்கிறார். குடும்ப முரண்பாடுகள் இயற்கையானது. இது ஆணாதிக்கம், பொருளாதாரம், ஏற்றத் தாழ்வு என எல்லாத் தரப்பிலும் நிகழ்கின்றது. இதையே பயன் படுத்த நினைப்பவன் உண்மையில் மிகமோசமான சதியுடன் கூடிய ஆணாதிக்க வக்கிரம் கொண்டவன். தொடர்ச்சி பக்: 48ல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பாரிசில் இருந்து வெளியாகிய எக்ஸில் இதழ் ஒன்றில் எஸ்.வி. ர.்.பேல் என்பவர் "விளக் கமளிப்புக் கோட்பாட்டு அணுகுமுறைகளை.....?" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந் தார். இவரே பாரிசில் வெளியாகிய "இருள்வெளி" மலரில் "பெண்ணியத்தை அணுகுதல் குறித்து" என்ற கட்டுரையையும் எழுதியவராவார்.

இவரின் கட்டுரைகள் மனித அவலங்களை மனம், உளவியல், பயம், திணிப்பு........போன்றவற் றுக்குள் இட்டுச் சென்று, பின் அம்மக்களின் பிரச்சனைக்கு எந்தவிதமான தீர்வையும் முன் வைக்காது மார்க்சியம் மீது சேறடிக்கின்றார். மக்களின் வறுமை, ஆணாதிக்கம், சாதிஒடுக் குமுறை, நிறஒடுக்குமுறை.....போன்றனவற்றை எதிர்த்த போராட்டத்தை உளவியல், மனம், பயம், போன்றனவாக காட்டி, அவர்களின் அடிப்படை உரிமையை, தேவையை சிறுமைப்படுத் தி கொச்சைப்படுத்துவது தான் இந்த மார்க்சிய எதிர்ப்புக் கட்டுரையின் நோக்கம். இவர்க் கோ, இவரின் நண்பர்களுக்கோ இருக்கக்கூடிய நிதிப்பிரச்சனை, விசாப் பிரச்சனை போன்ற எல்லாப் பிரச்சனையும், உளவியல், மனம், பயத்தால் நடைமுறையில் எழுபவையல்ல. இன்று ஐரோப்பாவில் சரி, உலகில் சரி மனிதர்களின் அடிப்படை உரிமைகளை, தேவைகளைக் கோரி போராடியது பாட்டாளிவர்க்கம்தான் என்பதும், தொடர்ந்து போராடும் ஒரேயொரு கோட் பாடு மார்க்சியம்தான் என்பதும் வெள்ளிடைமலை. இதற்க்கு வெளியில் உளவியல், மனம், பயம் போன்றவையல்ல.

இவர் உட்பட மொழிபெயர்த்து அம்மாவில் வெளியாகிய "ஒடிபஸ் ஸ்ராலின்" என்ற கதை சமூக மற்றும் ஸ்ராலின் பிரச்சனையை உளவியலாக காட்டி மக்களின் துன்பங்களுக்கு போராடும் மார்க்சிய வர்க்கப் பார்வையை படைப்பு கிண்டல் அடிக்கின்றது. சோவியத் போராட்டம் வர்க்கப் பிரச்சனை என்பதை கதை சேறடித்து மறுக்கின்றது. சமூகநிகழ்வுகள், போராட்டங்கள், பிரச்சனைகள் அனைத்தும் மனிததேவைக்கு உட்பட்டவகையில் பகிரப் படாமையாலேயே எழுகின்றன. இதைமறுப்பதன் மூலம் மனித தேவைகளை மறுத்து உளவியல், பயம், திணிப்பு போன்றவற்றின் பிரதிபலிப்பாக காட்டுவதன் மூலம் சிலரின் தேவைகள் அமோகமாக பூர்த்தி செய்வதை பாதுகாக்க கோட்பாட்டு சிதைவை நனவாக கொடுத்து பிரச்சனையை திசைதிருப்பி, மனிதர்களின் தேவையான ஜனநாயகக் கோரிக் கையை சேறடித்து மறுக்கின்றனர்.

அண்மையில் பிரான்சில் விசா மறுக்கப்பட்டு நாடுகடத்தலுக்கு உள்ளான மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைக்காக போராடிவரும் அனைத்து அமைப்புகளும் இடதுசாரி பாரம்பரியத்தைக் கொண்டவை என்பதும், இது வரலாறு முழுக்க மீளமீள நிறுவப்படுவதும் காணமுடியும். இல்லாது இப் பிரச்சனை பயம், உளவியலால் எழுந்தவையல்ல என்பதும், இதற்காக உளவியல் என்போர் போராடியதும் கிடையாது என்பது வரலாறாக நீண்டு உள்ளது. ஜெகவா என்ற சமயம் (மற்றைய சமயங்களில் இருந்து வேறுபட்டு) மனிதப் பிரச்சனைகளை திசைதிருப்பி பேசி, நடைமுறையில் வழிகாட்டாத ஆண்டவனிடம் முறையிடும் வடிவம் போல் உள்ளது உளவியல் போன்ற திசைதிருப்பல். மார்க்சியத்துக்கு வெளியில் பேசிக் கொள்ளும் எந்தக் கோட்பாடும் மக்களின் பிரச்சனையை தீர்க்கும் எனச் சொல்ல எந்த கோட்பாட்டு கொம்பனாலும் நிறுவமுடியாது.

இந்தவகையில் எக்ஸில் வெளியாகிய எஸ்.வி.ர.'.பேல் கட்டுரையைப் பார்ப்போம். "ஆளுமையை நிர்ணயிப்பதாக உளவியலால் சொல்லப்பட்ட, பாதுகாப்புணர்வையும் அதனால் இருத்தலையும் தருவதான சமயமும், மார்க்ஸியமும் கூட உண்மையில் ஒருவரைப்பயமுறுத்துதலில் வழியாக பாதுகாப்புணர்வின் தேவைக்குத் தள்ளிவிட்டு பின்னர் அதைத் தருகின்றது." என்கின்றார் சேறடிப்போடே. இதைப் பார்ப்போம்.

மனிதப் பிரச்சனையை உளவியலாக, பயமுறுத்தலாக காட்டுகின்றார். இருத்தலை பாதுகாப்புணர்வுடன் ஒட்டிய உளவியல் என்பதன் மூலம், உலகம் நன்றாக உள்ளது என்கின்றார். மார்க்சியம், சமயம் (இங்கு இவர் மர்க்சியம், சமயத்தையும் எல்லா நேரமும் ஒன்றாக காட்டி தனது மார்க்சிய எதிர்ப்பு வக்கிரத்தை சமயத்துடன் ஒப்பிட்டு முதலாளித்துவ அமைப்பை தூக்கி நிறுத்துகின்றார்.) ஒருவரை பயமுறுத்தித்தான் பாதுகாப்புணர்வையும், தேவையையும் தருகின்றன என்கினறார். மனிதனுக்கு பிரச்சனைகள் இல்லை சும்மா மார்க்சியம் பயமுறுத்தித்தான் பாதுகாப்பு உணர்வை தருகின்றன என்கின்றார். எவ்வளவு மோசமான மார்க்சிய எதிர்ப்பு ஆய்வுரைகள். மனிதனின் வறுமை, பெண் மீதான ஆணாதிக்கம், பார்ப்பாணிய சாதி ஒடுக்குமுறை, கறுப்பின மக்கள் மீதான வெள்ளையின ஆதிக்கம், ஆதிக்க இனவாதிகளின் இன மத ஒடுக்குமுறை, ஏகாதிபத்திய சூறையாடல் என நீளும் சமுதாய ஒடுக்குமுறைகள் எல்லாம் உளவியலாக, மனமாக காட்டி பின் மார்க்சிய பயமுறுத்தலால் பாதுகாப்பை தேடக் கோருகின்றது எனக் கதையளக்கின்றார். அதாவது இருக்கும் சமூக அமைப்பை பாதுகாக்கும் இக்கோட்பாட்டுக்கு (உளவியல் பிரச்சனையாகவும் அதைப் பயமுறுத்தி மார்க்சியம் தீர்ப்பதாகவும்) வெளியில் போராடுவதை பயமுறுத்தலாக காட்டுகின்றார். இதையே ஏகாதிபத்தியம் பயங்கரவாதமாக காட்டுகின்றது.

இங்கு மதம் என்பது இருக்கும் சமூக அமைப்பை மாற்றக் கோருவதில்லை. மக்களின் பிரச்சனையை வழிபடுவதன் மூலம் தீர்க்க முடியும் என்பது, கருத்து முதல் வாதத்துக்குள் வழிநடத்தி இச்சமூக அமைப்பை பாதுகாக்கின்றது. இது மனித அவலங்களின் வெடிப்பை, இருக்கும் சமூக அமைப்பைப் பாதுகாக்க கடவுளிடம் முறையிடவும், கடவுள் பற்றிய பயத்தையும் விதைத்துச் செல்கின்றன. மார்க்சியம் மக்களின் துன்பம், துயரத்தை தொகுத்து மீளவைப்பதன் ஊடாக, அதன் மீதான உண்மையான காரணத்தையும் அம்மக்களின் வாழ்வியல் பிரச்சனை மீது கட்டியமைக்கப்பட்டுள்ள பொய்கள் மீது இனம்காட்டுகின்றது. இங்கு மக்களை பயமுறுத்தியல்ல, மக்களின் பிரச்சனை மீது உண்மையைக் காண மீளக் கோருகின்றது மட்டுமின்றி அவர்களையே போராடக் கோருகின்றது. அவர்களின் பிரச்சனையை விஞ்ஞான பூர்வமாக மீளதொகுத்து அவர்கள் முன் மீள வைப்பதைத்தான் மார்க்சியம் செய்கின்றது. இதை மறுக்க எல்லா வர்ண மோசடிகளையும் மார்க்சியம் அம்பலப்படுத்தி அவர்களுக்கு கற்றுக்கொடுக்கின்றது. இவைகளை பயமுறுத்தலாக காட்டும் மோசடி, சேறடிப்பு எல்லாம் உண்மையில் இந்த ஆளும் வர்க்கங்கள் நடைமுறையில் எதைச் செய்கின்றனரோ அதை கோட்பாட்டில் நியாயமாக விளக்குவதே இதன் பின் உள்ள நோக்கமாகும். மக்களுக்கு பிரச்சனைகள் உண்டா? இல்லையா? என்பதில் இல்லை என்பவர்கள்தான், மார்க்சியம் மக்களின் துன்பம் துயரத்தை சுட்டிக்காட்டி தீர்க்க போராடும் போது, அதை வெறும் உளவியலாக பின் இதன் மீதான பயமுறுத்திய போராட்டமாக வன்மைமிக்க சகிப்பின்மையில் இருந்து சேறடிக்கின்றனர்.

ஐரோப்பாவில் ஒருவன் விசா இன்றி இருப்பது உளவியலா? இதற்க்கு எதிரான அவன்

www.tamilarangam.net

மற்றும் சமூக போராட்டங்கள் மதம், மார்க்சியம் பயமுறுத்தி திணிப்பவையா? இல்லை, மதம் விசா பெற வழிபாட்டை முன்வைக்கின்றது. திணிப்பவன் எனக் கூறுபவன், பயமுறுத்தலாக காட்டுபவன், உளவியலாக அடையாளப் படுத்துபவன் அது தானக கிடைத்துவிடும் என மறைமுகமாக பூர்ஷ்சுவா கண்ணோட்டத்தில் வைக்கின்றான். மார்க்சியம் விசாவைக் கோரி நாசித்தனத்துக்கு எதிராக போராடுவதன் மூலம் வாழும் உரிமையை பாதுகாக்க கோருகின்றது. **இதுமட்டும்தான் தீர்வையும் உண்மையையும் பறைசாற்றுகின்றது.**
நாசிசத்துக்கு எதிரான போராட்டமும், நாசிசத்துக்கு எதிரான வாழும் உரிமை மீதான பயமும் மார்க்சியத்தின் பயமுறுத்திய கண்டுபிடிப்பல்ல. மாறாக நாசிசம் கடந்த காலத்தில் ஆறு கோடி மக்களை கொன்று போட்ட அனுபவங்கள், சமூக விஞ்ஞான ஆய்வுகளில் இருந்து மார்க்சியம் எச்சரித்து, போராடக் கோருகின்றது. இதற்க்கு எதிராக போராட்டத்தை மார்க்சிய வாதிகள் **மட்டும்தான்** முன்னெடுத்துச் செல்வதுடன் இதற்க்கு வெளியில் **எந்தக் கோட்பாட்டு நடைமுறையையும்** காட்ட யாராலும் முடியாது.

பிரான்சில் அண்மைக்காலமாக வெளிநாட்டவருக்கு எதிரான நாசிச சட்டங்களை எதிர்த்து, நடக்கும் போராட்டங்கள் உளவியலோ, பயமுறுத்தலோ, திணிப்புகளோ அல்ல. மாறாக ஒன்றரை லட்சம் விசா மறுக்கப்பட்டு நாடு கடத்தலுக்கு உட்பட (இதற்க்காக போராடிய அமைப்புகள் அனைத்தும் மார்க்சிய தொடர்ச்சி கொண்டவை குறிப்பிடக் கூடியது.) இருந்த நிலையில் எழுந்த இப்போராட்டம் அரைவாசி பேருக்கு அரசை விசா வழங்க வைத்துள்ளது.
இதை உளவியலாக பார்த்து இப்பிரச்சனை மீதான போராட்டத்தை பயமுறுத்தலாக, திணிப்பாக அடையாளப் படுத்தின், மறைமுகமாக நாடு கடத்தவும், சிறையில் அடைக்கவும் கோருவதாகும். மார்க்சியம் இவைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறக் கோருகின்றது.
இது மட்டும்தான் நியாயமான உண்மையாக உள்ளது. அடுத்து இவர் எடுத்து வைக்கும் மார்க்சிய எதிர்ப்பு வரிகளைப் பார்ப்போம். "மனிதனுக்கு பொதுவாய் ஒரு பயம் இருக்கிறது மரணபயம். மேற்சொன்னவர்களின் (மேற்சொன்னவர்கள் - மார்க்சியவாதிகள்) ஆயுதம் அதைத் தூண்டிவிடுவதுதான். மரணபயம் உச்சத்துக்குப் போனால் தானாய் சரணடைய வைக்கலாம் என்பது தந்திரம்." எனக் கூறுவதன் மூலம் மார்க்சிய ஏமாற்று பேர்வழிகள், தந்திரக்கார மோசடியில் இயல்பான மக்கள் பயத்தை சரணடைய வைத்து பிழைப்பவர்கள் எனப் பலபலவாக மறைமுகமாக கூறிவைக்கின்றார். மக்களின் பயம்காரணமாக உருவாக்கும் பிரச்சனைகளை ஏமாற்று பேர்வழிகளின் தமது நலனுக்கு மார்க்சியவாதிகள் சரணடைய வைத்துவிடுகின்றனர் என்கின்றார். மக்களின் பிரச்சனைகளை இதைவிட மோசமாக கொச்சைப்படுத்த முடியாது. மக்களின் பிரச்சனை அவர்களின் பயத்தினால் எழுபவையா?, மக்களின் போராட்டங்கள் பயத்தினால் எழுபவையா? போராட்டங்கள் திணிக்கப்பட்டு தூண்டிவிடப்படுபவையா? இப்படித்தான் ஏகாதிபத்திய ஆய்வுகள், அதன்மீதான ஒடுக்கு முறை இயந்திரங்கள் மக்களின் உரிமைப் போர் மீது சேறடித்து ஒடுக்கின்றன.

மார்க்சியம் உருவாக முன்பே பலப்பல போராட்டங்களைக் கண்டுதான் மனித இனம் இன்று இந்த நிலைக்கு நகர்ந்துள்ளது. மனிதன் மிருங்களுடான போராட்டத்தில் தான் உயிர்வாழ முடிந்தது. இங்கு வாழ்வு மீதான பயமோ, சரணடைவோ அல்ல வாழ்வதற்கான போராட்டம் மட்டும்தான் போராட்டத்தை நடத்தின நடத்திச் செல்கின்றன. இது எல்லாப் போராட்டத்திலும் எல்லா உயிரினத்துக்கும் விதிவிலக்கின்றி பொருந்தும். வாழ்வதற்க்கான போராட்டமின்றி மனித உயிர்வாழ்தல் கிடையாது. பயம், திணிப்பு, சரணடைவு என்பதெல்லாம் மக்களின் போராட்ட மீதான, அவர்களின் வாழும் உரிமை மீதான சிறுபான்மை சுரண்டும் வர்க்கங்களின் சேறடிப்பாகும். அத்துடன் பயம் என்பது பொருளாதார சூறையாடல் உடன் மனிதனுக்கு புகுத்தப்பட்ட அடக்குமுறைக் கருவியாக உருவானதே. உயிரினங்கள் போராட்டத்தையே மார்க்கமாக கொண்ட போது பயத்தைக் கொண்டிருப்பதில்லை. போராட்டத்ததில் மரணத்தை, இழப்புகளை இயல்பானதாக ஏற்றுக்கொண்டன, கொள்கின்றன. சொத்தைப் பாதுகாக்கும் வர்க்கம்தான் பயத்தால் கெலிபிடித்துப் போய் புலம்புகின்றது. உலகம்பற்றி அதன் கொடூரங்களை கேட்டாலே கிலிபிடித்த தொடை நடுங்கியாக, சொல்வதை தடுக்க பயம் காட்டுவதாக சரணடைய வைப்பதாக அழுகின்றது. போராட்டத்தைக் கண்டு சினந்து புலம்புகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டார்வின் மனித இனங்களின் போராட்டம் குறித்த ஆய்வில் அதிர்ச்சியான விடையம் ஒன்றை அவர் சந்தித்த மக்கள் கூட்டம் ஒன்றிடம் கேட்டதை இங்கு குறிப்பிடுவது சிறப்பாக பொருந் தும்."நாய்க்கு மனிதனைத் தீனியாக்குகிறீர்களே" எனக் கேட்க்க அவர்கள் "நாய்கள் வேட்டைக் குப் பயன்படும் கிழவிகள் பயன்பட மாட்டார்கள்" என்றார்கள். மனித உயிர்வாழ்வுப் போராட் டத்தில் கிழவிகளை விட நாய்கள் முதன்மையானதைக் காண்கின்றோம். கார்ல் மார்க்ஸ்சிடம் "மகிழ்ச்சி என்றால் என்ன?" என்ற கேள்விக்கு போராட்டம் என்றுதான் பதில் அளித்தார். பயம் என்றோ, சரணாகதியென்றோ பதில் அளிக்கவில்லை. மார்க்ஸ் தொழிலாளர் வர்க்கத்தை போராட்ட தலைமையாக பிரகடனம் செய்யும் போது பயமற்ற தொழிலாளியை அடையாளம் கண்டுதான் பிரகடனம் செய்தார்.

எறும்புகள், தேனீக்கள், கறையான்கள்.........என அனைத்து உயிரினங்களும் வாழ்வின் மீதான பயத்தாலோ, சரணடைவாலோ அல்ல போராட்டத்தால் போராடியே வாழ்கையை நடத்துவதுடன், வாழ்வையும் சாவையும் ஏற்றுக்கொள்கின்றன. இந்த இடத்தில் புலிகள் என்னை கொல்ல கடத் திச் சென்ற போது கேட்டதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும். புலிகள் என்னை கண் ணைக் கட்டி அழைத்துச் சென்று முழு நிர்வாணமாக்கிய பின் கேட்ட முதல் கேள்வி தற் கொலைபற்றி நீ என்ன நினைக்கின்றாய் என்பதன் ஊடாக போராட்ட உணர்வை பரிசோதித் தனர். பயம் என்பது பொருளாதார சூறையாடல் மீதான சுரண்டல் அமைப்பின் உருவாக்கத்தின் ஊடாக, மனிதனை அடிமைப்படுத்த திணிக்கப்பட்டவையே. இந்த மனித அடக்குமுறைக்கு எதிராக கோடான கோடி தியாகங்கள் போராட்டங்கள் பயத்தால் அல்ல, மனிதன் வாழ்வதற் கான போராட்டத்தினால் வெளிப்பட்டவையே. இதை பொருளாதார சலுகைக்குள்ளும், அடக் குமுறைக்குள்ளும், சொத்துப் பாதுகாப்புக்குள்ளும் பயத்தை விதைத்து போராட்டத்தை,வாழும் உரிமையை சீரழிக்க மேலும் சூறையாட முடிகின்றது. **மார்க்சியம் பயத்தை ஒழித்து போராட அறை கூவுகின்றது. பயம் மீதான எல்லா மனம் பிரமைகளையும் தகர்த்துப் போராட்டத்தை வாழ்க்கையாக, அதையே மகிழ்ச்சியாக மாற்றக் கோருகின்றது.** மனிதர்களின் கோடானகோடி தியாகங்களை பயத்தின் விளைவால் ஏற்பட்ட சரணடைவு எனக் கூறுவது, மனிதர்களின் வாழ் கைக்கான போராட்டத்தை சிறுமைப்படுத்தி கொச்சைப்படுத்தும் ஆளும்வர்க்க சேறடிப்பாகும். நாளை உணவில்லை என்று எந்த உழைப்பாளியும் பயப்படுவதில்லை. மாறாக போராட்டத்தை, உழைப்பை பதிலீடாக முன்வைத்துப் போராடுகின்றான்.

தாழ்த்தப்பட்ட மக்கள் (பள்ளர், பறையர்...) தமக்கு எதிரான சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் பயத்தால் சரணடைந்தோ, திணிப்புக்கு உள்ளாகியோ போராடுவதாக கதை யளப்பது பார்ப்பணிய சதிராட்டமாகும். மனிதனின் துன்பம், துயரம், பயம் காரணமாக திணிப் புகாரணமாக சரணடைவு காரணமாக முன்போ பின்போ உளவியல் மூலம் கட்டமைக்கப்பட் டதாக கூறி சேறடிப்பது, மனிதனின் வாழ்வு உரிமை மீதான பூஷ்சுவா மறுப்பாகவும், போராட்ட மறுப்பாகவும் வெளிவரும் ஆளும்வர்க்க ஆதிக்க தனிநபர் ஜனநாயக கோட்பாடுயாகும். இன்று ஆயிரத்து இருநூறு மில்லியன் மக்கள் அடுத்தநேர உணவு என்ன எனத் தெரியாத வறுமை யில் உள்ளனர். ஐந்நூறு மில்லியன் மக்கள் குடிக்க தண்ணீரின்றி தாகத்தால் தவிக்கின் றனர். இருநூற்றி ஐம்பது மில்லியன் சிறுவர் சிறுமிகள் மிக மோசமான உடல் உழைப்பில் மழலை மொழி இழந்து கருவாடாகின்றனர். இருநூற்றி ஐம்பது மில்லியன் மக்கள் உயர்சா- தியால் தொட்டாலே தீட்டு என்று கூறி அவனை சுரண்டிக் கொழுக்கும் ஜனநாயக பார்ப்பாணிய கொடூரங்கள். இது போல் அரைவாசி பெண்கள் என நீளும் இது போன்று புள்ளிவிபரங்களே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு குவிந்து போயுள்ளது. இதற்க்கு எதிரான போராட்டத்தை பயமுறுத்தல், மரணபயம், திணிப்பு, சரணடைவு என்று கூறும் ஆய்வுரைகள் கருத்துரைப் புகளின் நோக்கம் இதன் மீதான போராட்டத்தை மறுக்கவும், இந்த சமூக அமைப்பை பேணவும் உருவாகும் நனவான கனவாக, பயத்தில் புலம்புவதாக உள்ளது. இதற்க்கு எதிரான போராட் டம் மனிதனின் உயிர் வாழும் இயங்கியலுக்கு உட்பட்டதே. இதை மறுப்பது இருக்கும் ஒற்றை உலக அமைப்பை சிதைவின்றி பாதுகாக்க நடத்தும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்களில் இவைகளும் ஒன்று.

இப்படி விமர்சிப்பதை எப்படி திசைதிருப்ப முனைகின்றனர் எனப் பார்ப்போம். "பாத்தியபளே

www.tamilarangam.net

இப்ப ஈராக் சண்டை உலகப்போராய் வந்திருக்கவேண்டியது, தப்பிப்போச்சு. அடுத்தது வந்தால் அநேகம் யூரோ (Euro) ஏன அமெரிக்காதான். எங்கடையள் விசயம் தெரியாமல் லாச்சப் பலிலை (பாரிஸ் தமிழ் கடைகள் உள்ள இடம்) கடையளும் இந்தியாவிலை வீடுமெண்டு, போர் வந்தால் என்ன நடக்கும் தெரியுமோ. ஒரு சொத்தும் பெறுமதியில்லாமல் போய்விடும். பாங்கில் போட்ட காசெல்லாம் பாங்க்திவாலாகி அம்போதான். கண்ணுக்கு முன்னால பாத்தியள்தானே இந்தோனேசியா காசுமதிப்பு எப்படி விழுந்ததெண்டு இதைக் கேட்டு அவருக்கு வேர்த்து விறுவிறுத்துப்போய்விட்டது. ஒரு சின்ன உரைக்கே இப்படிப் பயமாக்கலாம் என்றால், தொடர்ந்த தாக்குதல்களில் எப்படி என்பது வெள்ளிடை. அது நடந்தால் ஆள் சரண்" இப்படி மார்க்சியத்தை கேலி செய்தபடி யுத்தவாதிகளை, கொள்ளையடிப்போரரை, சுரண்டல் நாய்களை காப்பாற்ற புறப்பட்டுள்ளார். இந்த மேற்கோள் ஆய்வுரைகள் சரியா பிழையா என்பதற்க்கு அப்பால், உலகயுத்தங்கள் பணத்திவால்கள் சம்பளம்வழங்காமை வெளிநாட்டவரை நாசிகள் படுகொலை செய்தல் .......போன்றவை வரமுடியாது என்கிறார். இதை முன்கூட்டியே தெரிந்து கொள்பவர் அதை மற்றவர்க்கு சொல்வது பயமுறுத்தல் சரணடைவுக்கான மோசடி என்பதே மார்க்சிய விரோதிகளின் ஆய்வுரைகள்.

ஆணால் இந்த ஏகாதிபத்திய யாதார்த்தம் என்ன? யுத்த தயாரிப்பும் அதற்காக கொட்டி செலவளிக்கும் மக்களின் பணமும் இவர்கள் கண்டு கொள்ள வேண்டியதில்லை என்கின்றனர். காப்புறுதி நிறுவனங்கள் சட்டதிட்டம் யுத்தக் காப்புறுதியை மறுக்கின்றது. அவன் முன்கூட்டியே தயாராக உள்ளான். மார்க்சியம் மட்டும் அதை இனம் காட்டினால் பயமுறுத்தலாக இவர்கள் காட்டிவிடுகின்றனர். இது சனநாயக நாடாக காட்டி கூத்தடிக்கின்றனர். பணம் திவாலாகிய நாடுகள் இல்லை என்றயளவுக்கு உலகில் பல நாடுகள் நீண்டுகிடக்க, ஒரு வங்கிக்காரன் போல் அது நடவாது என்று கூறி மத்தியதரவர்க்க அற்ப சேமிப்புகளை சூறையாட நல்ல ஆலோசகராக இருக்கவும், அப்பணத்தையே ஏகாதிபத்தியம் மீள் வட்டிக்கு கொடுத்து நாட்டை மறுகாலணியாக்கவும் நல்ல செயல் வீரர்ராக உள்ளார். மக்களின் உழைப்பும், தின்னாமல் குடியாமல் சேமிக்கும் அற்ப்ப சொற்ப சேமிப்புகளும் வெறும் பேப்பர்ராக மாறிய வரலாற்றை மிக சதாரணமாக மார்க்சிய எதிர்ப்பால் கொச்சைப்படுத்திய போக்கும், இந்த ஆய்வுரைகளும் கபடம் நிறைந்தவை. அண்மையில் இந்தோனேசியா மக்களின் பணம் ஏகாதிபத்தியத்தால் சூறையாடப்பட்டு மக்களின் வாழும் உரிமை, அவர்களின் வேலையின்மை அதிகரிப்பு எல்லாம் மார்க்சியவாதிகளின் பயமுறுத்தும் கண்டுபிடிப்பாக காட்டிய சேறடிப்பு, அந்த மக்களின் வாழும் உரிமையிழந்து பரிதவிக்கும் வறுமை துன்பம் துயரங்கள் மீதான ஏகாதிபத்திய வசைகளின் தொடர்ச்சிதான்.

இதை சாதிக்க அடுத்து வைக்கும் வாதங்களை ஆராய்வோம் "கட்சி நடத்தாத, கட்சியால் நடத்தப்படும் மார்க்சியர்களும் அப்படியே. இது ஒன்றும் பேசக்கூடாத ரகசியமான விசயங்களுமல்ல. கேள்வி கேட்பது, வேறு கருத்தியல்களை, போக்குகளை, விளக்கமளிப்புமுறைகளை, பண்பாட்டுப்பார்வைகளை உதாரணம் காட்டிப்பேசுவது ஏகாதிபத்தியப் பார்வையாகவே பார்க்கப்படும் என்பதில் ஐயம் இல்லை. இதற்கு இருப்புக்குறித்த பிரச்சனையே அன்றி வேறேதும் காரணமல்ல." என மார்க்சியவாதிகளை, மார்க்சிய விமர்சகர்களை தாக்கும் போக்கில் இது இருப்புக் குறித்த பிரச்சனையாக சோடித்துக் காட்டுகின்றார். அதுசரி மார்க்சியத்தை கேள்வி கேட்கின்றார்களாம் எங்கே எனத் தெரியாத புரியாத புதிராக உள்ளது. சுரண்டலை, ஆணாதிக்கத்தை, சாதிய ஒடுக்குமுறையை.......போன்ற அனைத்தையும் ஒழிக்கக் கோராத அனைத்துக் கோட்பாடுகளும் ஏகாதிபத்திய கோட்பாடுகள்தான். இதை எந்தக் கொம்பனாலும் மறுக்க முடியுமா? சமூக ஒடுக்கு முறையில் ஏதாவது ஒன்றை பாதுகாத்தபடியோ, சலுகைக்கு உட்பட்ட ஜனநாயக் கோரிக்கை கூட ஏகாதிபத்திய எல்லை பாதுகாக்கும் எல்லைக்கு உட்பட்டதுதான். ஆகவே சமூகத்தை மாற்றக் (தலைகீழாகக்) கோராத அனைத்துக் கோட்பாடுகளும், கேள்விக்கு உள்ளாக்கலும், விளக்கமளிப்புகளும், போக்குகளும், பண்பாட்டுப் பார்வையும் ஏகாதிபத்திய வரைவுகளைக் கொண்டதுதான். இதை யராலும் மறுக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. இந்த சமூகத்தை மாற்றக் கோராதவை எப்போதும், எங்கும், எப்படி வைப்பினும் அது ஏகாதிபத்திய கோட்பாடுதான். அது கேள்வி கேட்டால் என்ன, கேட்க்காவிட்டால் என்ன விதிவிலக்கு கிடையாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் துயரங்களுக்கு முடிவு கட்ட கோரி போராடும் மார்க்சியம், அதற்க்கு எதிராக வண்ணவண்ண கலர்கலராக முன்வைக்கும் எல்லா கோட்பாட்டும் ஏகாதிபத்திய வாதங்களை எடுத்து வைத்து அம்பலப் படுத்துவதை இருப்பு குறித்த பிரச்சனையாக காட்டுவது ஏகாதிபத்தியத் தனமாகும். ஏனெனின் மக்களின் பிரச்சனையை மறுத்து பாதுகாக்கும் இருத்தலில் நின்று போராட்டத்தை மறுக்கும் கோட்பாட்டுக்கு பாதுகாப்பு கவசம் வழங்க முயலும் சேறடிப்பு ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கும் நனவுகளில் எழும் வாதமாகும்.

சுரண்டலை எதிர்க்காத எல்லா ஜனநாயக விரோதக் கோரிக்கைகளும் ஏகாதிபத்திய கோரிக்கைதான். இது பெண்ணியமாகட்டும், தலித்தியமாகட்டும் எதுவாக இருந்தாலும் அது தனக்குள்ளான சுரண்டலை எதிர்க்காத நிலையில் ஏகாதிபத்திய கோட்பாடுதான். இதை யாராலும் மறுக்க முடியாது ஆனால் பின் ஏகாதிபத்திய கோட்பாடு என்று சொல்ல வேண்டாம் எனப் புலம்புவதில் அர்த்தம் கிடையாது. இதை மார்க்சிய இருப்புக் குறித்த பிரச்சனையாக சேறடிப்பதன் நோக்கம் தெளிவானது. நீங்கள் மாாக்சியமல்லாத எல்லா வழிகளிலும் கேள்விகேட்பதையிட்டு மாாக்சியம் ஒருக்காலும் மறுக்கவில்லை. அதை நாம் விமர்சிக்கும் போதுதான் நீங்கள் எங்களின் விமர்சன சுதந்திரத்தை நிந்திக்கின்றீர்கள். நாங்கள் விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் ஊடே சொல்கின்றோம் இந்த ஏகாதிபத்திய அமைப்பை பேண விரும்புகின்ற கோட்பாடுகள் என்றுமட்டும்தான் சொல்கின்றோம். இதை சொல்ல வேண்டாம் எனச் சொல்ல இருப்புக் குறித்த பிரச்சனையாக சொல்லி இப்படி பேசக் கூடாது என எப்படி உங்கள் ஜனநாயகம் மறுக்கின்றதோ, அதையே இன்றைய உலக அமைப்புகளும் கொண்டுள்ளன.
இந்த ஏகாதிபத்திய கோட்பாடுகளை கேள்வி கேட்க்க கூடாது, விளக்கமளிக்க கூடாது (இது மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடுவதை மறுத்து) என மறுத்து, அதை இருப்பு குறித்த பிரச்சனையாக இட்டுக் கட்டுவதன் மூலம், இதற்க்கு எதிரான போராட்டத்தை உளவியலாக, திணிப்பாக, சரணடைவாக, பயமுறுத்தலாக காட்டுகின்றனர் அவ்வளவே.

அடுத்து இவர் மு.தளையசிங்கத்தின் எடுகோள் ஒன்றை தனது மார்க்சிய எதிர்ப்புக்கு இசைவாக முன்வைப்பதைப் பார்ப்போம். "கட்சி ஏதாவது ஒரு படிக்கட்டில் கூடாரம் அடித்துக் கொண்டு குந்திவிடுகின்றது. அதைமீறி வருபவர்களுக்கு அங்கு இடமில்லை. அதைப் பொறுத்தவரை யேசு அல்லது மார்க்ஸ்ஸோடு மனிதவளர்ச்சி முற்றுப்பெற்றுவிடுகிறது. எல்லாவற்றையும் பைபிளிலேயே பார்க்கலாம் என்று சொல்லும் ஜெகோவாவின் சாட்சிகளும் எல்லாவற்றையுமே மாாக்ஸிடமே கேட்கலாம் என்று நினைக்கும் சோசலிஸ்ட் யதாத்தவாதிகளும் அப்படி ஒருநிலையில்தான் இருக்கின்றார்கள்." என்று மு.தளயசிங்கத்தின் மேற்கோள்ளை எடுத்து போட்டதன் ஊடாக தனது நிலையை தெளிவாக்கின்றனர். கட்சியில் என்ன ஐயா வேலை உங்களுக்கு? கட்சி மக்களின் துயரங்களுக்கு போராடுகின்றது. இதைக் கைவிட கட்சியைத் திறந்துவிட என்ன துணிவு உங்களுக்கு. நாங்கள் கண்டவன் போனவன் வந்து போக விபச்சார விடுதி நடத்தவில்லை. அதைச் செய்யக் கோரும் உங்கள் விபச்சாரத்தனத்தைக் கண்டு நாங்கள் கோபம் கொள்கின்றோம்.

மார்க்ஸ்சியத்தை ஏற்றுக் கொண்டோர் சுரண்டலை எதிர்த்து, ஆணாதிக்கத்தை எதிர்த்து, இனவாதத்தை எதிர்த்து, சாதியை எதிர்த்து.........இது போல் சமூகத்தில் உள்ள அனைத்து சமூக முரண்பாடுகள் மீதான போராட்டத்தை முன்னெடுக்கவும், சுயதியாகம் செய்ய தயாரானவர்களின் கட்சியில் திண்ணை எழுத்தாளருக்கு என்ன ஐயா வேலை. மார்க்ஸ்சியமும் அதன் கட்சியும் மக்களுக்காக புரட்சி செய்ய அவர்களால் உருவாக்கப்பட்டது. புரட்சிபற்றி அக்கறையற்ற யாருக்கும் அங்கு இடமில்லை. இப்படி திறந்துவிடக் கோருபவர்கள் தங்களைப் போல் விவாதிப்பதும், கதைப்பதையும் நடைமுறையாக்க கட்சிக்குள்ளும் செய்யும் கோரிக்கையில் தான் கட்சியை திறந்துவிட கோரும் கோரிக்கையாகும்.

சமூக அவலத்தையிட்டு அக்கறையற்ற, அதை மாற்றக் கோராத, அதை நடைமுறைப்படுத்த முன்வராத யாருக்கும் திறந்துவிட இது ஒன்றும் சத்திரமில்லை. அடுத்து மார்க்ஸ்சியத்தையும், மதத்தையும் அடிக்கடி ஒப்பிட்ட போக்கு கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகளின் இரட்டைத்தன்மையாகும். இது இன்று மதத்தையும், மார்க்ஸ்சியத்தையும் மறுதலிக்கும் ஏகாதிபத்திய நிலை

www.tamilarangam.net

யை முற்போக்கின் பெயரில் அரங்கேற்றுவதாக உள்ளது. மதம் மார்க்ஸ்சியத்தை எதிர்கின்றது. மார்கஸ்சியம் மதத்தை எதிர்க்கின்றது. இரண்டு நேர் எதிரான வகையில் உலகை ஆய்வு செய்கின்றது. இதில் எந்தப்பக்கமும் உடன்பாடு இருப்பதில்லை. இரண்டையும் ஒன்றாக காட்டுவதன் மூலம், இருக்கும் ஏகாதிபத்தியத்தின் நிலையை பொது எதிர்ப்பு நிலையில் நின்று பாதுகாப்பதுமாகும். ஏகாதிபத்திய வளர்ச்சிக்கு மதம் மார்க்சியம் தடையாக உள்ளதால் இரண்டையும் இவர் போல் எதிர்க்கின்றனர். மர்க்சிய அபாயம் உள்ள இடத்திலும் மூன்றாம் உலக நாடுகளிலும் மதத்தை ஏகாதிபத்தியம் வளர்த்தெடுக்கின்றது.

அதுசரி மு.தளையசிங்கம் என்ன விடையத்தை சமூக வளர்ச்சிக்கு, சமூக மாற்றத்துக்கு விட்டுச் சென்றுள்ளர். ஒன்றுமேயில்லை. மாறாக மார்க்ஸ்சியத்துக்கு எதிரான போக்கையும், அதற்க்கே உரிய கோட்பாட்டு ஆதரவு தளத்தையும் விட்டுச் சென்றுள்ளார். மனிதர்களின் துன்பம், துயரத்துக்கு தீர்வாக எதையும் வழிகாட்ட முடியாத இவர்களின் மேற்கோள்கள் யாருக்குதான் தேவை. இதைப் படித்து மனிதன் முன்னேற எதுவும் இருப்பதில்லை. அடுத்த பகிடியை கொஞ்சம் ஆராய்வோம். "வரலாறு நகராமல் விட்டதோ என்று ஐயங்கொள்ளுமாறு தளையசிங்கம் காலத்திலிருந்து (அது 1970கள் என்று கொண்டால்) இன்றைய நாட்கள் வரைக்கும் எமது சூழல் மாறவில்லையா?" எனக் கேட்டு மார்க்ஸ்சியம் இல்லை என்றால் நாங்கள் வாழவில்லையா என்பதை மறைமுகமாக கேட்டுவைக்கின்றார். ஐயா எந்தச் சூழல் மாறி உள்ளது. சுரண்டல், ஆணாதிக்கம், சாதி ஒடுக்குமுறை.....என எல்லாம் காணாமல் மந்திர தந்திரத்தில் போய்விட்டதாக நம்பக் கோருகின்றீர்களா? மாறி விட்டது எது ஒடுக்குமுறை புதிய வடிவில் மிக மோசமாக மாறியுள்ளது. இதற்கான பொறுப்பு மு.தளையசிங்கத்துக்கும் உண்டு. மக்களை விடுவிக்க போராடாத தங்கள் அரிப்பு சொறிப்புகளை பேசுவதற்காக எழுதித்திரிந்த இவர்கள், மக்களுக்காக என்னத்தை கிழித்தனால் இன்று நிலைமாறிப் போய்யுள்ளது. மக்கள் அதே துன்பம். அதே ஒடுக்குமுறை. அதே இலக்கிய புலம்பல். ஆனால் சுருதிகள் மட்டும் மக்களை ஏமாற்ற, அடக்க, ஒடுக்க மாறியுள்ளது.

மாற்றம் நிகழ வேண்டுமாயின் சமூகம் தலைகீழாக புரட்டப்பட வேண்டும். இது புரட்சியின்றி உலகில் நடந்ததாக சாட்சியமில்லை. இது எல்லாத் துறையிலும் விதிவிலக்கின்றி நடக்க வேண்டும். இது உங்கள் பயங்களுக்கு வெளியில் போராட்டமாக ஒரே தீர்வாக உள்ளது.
இதற்க்கு வெளியில் மக்களின் துன்பம் துயரங்களைப் போக்க மு.தளையசிங்கம் உட்பட எந்த கோட்பாட்டு கொம்பனிடமும் தீர்வோ, வழியோ கிடையாது என அடித்துக் கூறுகின்றோம். இப்படியிருக்க மார்க்ஸ்சியத்தை எதிர்ப்பது என்பது உண்மையில் இருக்கும் சமூக அமைப்பான ஏகாதிபத்தியத்தை காப்பாற்ற அவர்களுடன் சேர்ந்து போடும் அரோகராவாகவே உள்ளது.

அடுத்த பொன்வரிகளைப் பார்ப்போம்."......நமக்கு வெளியே இருந்து வரலாற்று, நிலைவியல், புவியரசியல் நிலைமைகளினால் நம்மீது விட்டெறியப்படும் சாதாம்சமான மிகுமுகம் கொண்ட அனைத்துமுறைமைகளையும் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?" எனக் கேட்பதன் மூலம் மார்க்ஸ்சியம் மீதான தனது வன்மைமிக்க தாக்குதலை தொடுக்கின்றார். மார்க்ஸ்சியம் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கோரவில்லை. அது விஞ்ஞான பூர்வமான ஆய்வையே நடத்தக் கோருகின்றது. அறிவியல் பூர்வமாக சமுதாயத்தைப் பார்க்கக் கோருகின்றது. இதற்க்கு வெளியில் எந்தக் கோட்பாடும் இதை செய்வதில்லை. எந்த தத்துவவாதியும், எந்தக் கோட்பாடும் விஞ்ஞான உண்மைகளில், அறிவியல் உண்மைகளில் ஆய்வு செய்வதாக யாராலும் நிறுவமுடியாது.

மார்க்ஸ்சியம் பொருளை முதன்மையாகக் கொண்டு பொருளை ஆய்வுசெய்கின்றது. இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் பொதுவான உண்மை. சுரண்டல், ஆணாதிக்கம், இன நிறவெறி, சாதி ஒடுக்குமுறை (சாதி உள்ள நாடுகள்).... என அனைத்தும் எல்லா நாடுகளுக்கும் உள்ள பொதுவான உண்மையாகும். இங்கு ஒடுக்குமுறை வேறுபட்ட சமூகச் சூழல்மட்டும் வேறுபடுகின்றது. இது புவியியல், வரலாறு, சூழல், பொருளாதாரம், கலாசாரம், மதம்....... போன்ற மாறுபட்ட வரலாற்று நிலைமைகளில் தான் ஒடுக்குமுறை வடிவங்கள் மாறுபடுகின்றன. ஆனால் இங்கு சுரண்டும், ஒடுக்கும் வடிவம் மாறுபடுவதில்லை. இதில் பொதுத்தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட நலன்கள் உலகளாவிய ரீதியில் பொதுவாக உள்ளது.

பாட்டாளி வர்க்கம் பொதுவான ஒடுக்குமுறை வடிவங்கள் மீது குறிப்பான நிலைமைகளை கவனத்தில் ஒட்டுமொத்த சமூகமாற்றத்துக்காக போராடுகின்றது. மார்க்ஸ்சியம் ஒவ்வொருநாட்டுக்கும், ஒவ்வொரு கிராமத்துக்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை மிக நுணுக்கமாக கவனத்தில் எடுத்து பொதுவானதுடன் இணைத்துப் போராடுகின்றது. இதனால் உலகில் எந்த தத்துவமும் சாதிக்க முடியாத அளவுக்கு பல வெற்றிகளையும் போராட்டங்களையும் நடத்தின. நடத்துகின்றன. நடத்தப் போராடுகின்றது. அந்தளவுக்கு உலகில் எந்தப் போராட்டத்துக்கும் இல்லாத எதிர்ப்புக்குள்ளும் இது தொடர்ந்து போராடுகின்றது. இது மட்டும் தான் சுரண்டலையும் அதையொட்டியுள்ள அனைத்து ஒடுக்குமுறையையும் ஒழித்துக்கட்ட போராடுகின்றது. **மற்ற எந்தத் தத்துவமும் இதை ஏற்றுக் கொள்வதேயில்லை.** இதனால் தான் இதற்க்கு எதிராக எல்லோரும் போராடுகின்றனர். சுரண்டலை ஏற்றுக்கொள்ளும் அனைத்துக் கோட்பாடும் ஏகாதிபத்திய கோட்பாடாக உள்ளது. அதை எதிர்க்கும், அதை மாற்றக் கோரும் கோட்பாடு மட்டும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உள்ளது. இதற்கு வெளியில் யாராலும் கோட்பாடு உருவாக்கவோ, காட்டவோ முடியாது என்பதை மிக தெளிவாக காணமுடியும்.

---

## "பொருளாதார மறுசீரமைப்பைக் கோரும்"

**அ.மார்க்ஸ்**

## "தலித் ஆணாதிக்கத்தை எதிர்க்காத பெண்ணியம்"

பழைய சரக்குகள் அம்பலமாகிப்போக புதிய சரக்குகளை தேடிச்செல்லும் வியாபாரிகளைப் போல புதிதாக அந்தோனிசாமி மார்க்ஸ் "தலித் பெண்ணியம் ஒரு விவாதத்தின் முன்னுரை" என்ற கட்டுரையை "இருள்வெளி" என்ற இருண்ட மக்கள் விரோத, மார்க்சிய விரோத பாரீஸ் மலரில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில் சாந்தால் மொ.'.பேயின் மேற்கோள்களை தலைப்புக்குக் கீழ் தடித்த எழுத்தில் போட்டே தனது ஆணாதிக்கக் கட்டுரையைத் தொடங்குகின்றார். நாம் அந்த மேற்கோள்களைப் பார்ப்போம். "பெண்ணியங்களில் பலவகை என்பது தவிர்க்க முடியாதது. இவற்றில் 'உண்மையான' பெண்ணியத்தை தேடுவதென்பது கேலிக்குரியது." என்று கூறுவதன் மூலம் ஆணாதிக்கத்திற்கு எதிரான ஒரே ஒரு பெண் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி கேவலப்படுத்துகின்றார். அதாவது பெண்ணியத்தை வரையறுக்க முடியாது என்கின்றார். இதைப்போல் வறுமையை ஒழிக்கக் கோரும் உண்மையான போக்கை தேடுவது கேலிக்குரியது என்கின்றார்.

வறுமை ஒழிப்புப் பலவகை என்பதால் உண்மையான வறுமை ஒழிப்பை தேடுவது என்பது கேலிக்குரியது என்கின்றார். இது சாதிக்குள், மதத்திற்குள் உண்மையான விடுதலையைத் தேடும் உண்மை கேலிக்குரியது என்கின்றார். வறுமைக்குக் காரணம் அதிக பிள்ளை பெறுவதே என்கின்றார். அதனால் கருத்தடையை முன்வைக்கின்றனர் ஒருசாரார், மறுசாரார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்களின் உழைப்புப் போதாது என்கின்றார். இன்னும் ஒரு பிரிவு முதலாளிக்கு வரி கூடியதால் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்கின்றனர். சிலர் சந்தையில்லை எனவே சந்தை பிடிக்க யுத்தத்தை நடத்தி சந்தையைப் பிடித்து வேலை கொடுத்து ஏழ்மையை ஒழிப்போம் என்கின்றனர். நாசிகள் வெளிநாட்டவரை துரத்தினால் மக்களின் வறுமை ஒழியும் என்கின்றனர். இப்படி வண்ண வண்ண பல வறுமை ஒழிப்புகள் முன்வைக்கப்படுகின்றது. எனவே இவைகளில் உண்மையான வறுமை ஒழிப்பை, பெண்விடுதலையைத் தேடுவது கோலிக்குரியது என சாந்தால் மொ.்.பே போல் அ.மார்க்ஸ் முன் வைத்து இதைப் பியோகிக்க எல்லாச் சுரண்டல் போர்வழிகளின் வழியில் கைகோர்த்தபடி வெட்கம் இன்றி சுரண்டும் மக்களின் போராட்டங்களை கேலிசெய்கின்றார்.

<u>வறுமை ஒழிப்பு என்பது ஒரே ஒரு வழியில் சுரண்டலை ஒழிப்பதில் தொடங்கி தேவைக்கு ஏற்ப பகிர்வதால் மட்டும் சாதிக்க முடியும்</u>. இதற்கு வெளியில் எந்த ஒழிப்புக் கோசமும் வறுமையை பாதுகாக்கும் செயல் தந்திரங்களே. உண்மையான வறுமை ஒழிப்பு என்பது வர்க்கப் போராட்டத்தில் மையப்படுகின்றது. இதுபோல் பெண் விடுதலை என்பது உண்மையான பெண் ஒடுக்கு முறைக்கான சமுதாயக் காரணத்தில் இருந்து தான் உண்மையான பெண்ணியம் கண்டு கொள்ளப்படுகின்றது. பெண் ஏன் ஒடுக்கப்பட்டாள் என்ற அடிப்படைக் காரணத்தை கண்டு எதிர்த்துப் போராட அனைத்து வகை வண்ணப் பெண்ணியச் செயற்பாடுகள் ஆணாதிக்கத்தை தக்க வைக்கும் செயல் தளத்தில் அ.மார்க்ஸ் வைப்பது போல் முன்வைப்பவை தான்.

உலகில் உள்ள எல்லாவற்றையும் மனிதன் பகுத்தாய்வு செய்யவும், அதன் மூலம் தனக்கு இசைவாகவும் பயன்படுத்தவும் முடியும். இதன் அடிப்படையில் மட்டும் தான் நாம் பயன்படுத்தும் பொருள் முதல், அனைத்து நோய்களைத் தீர்ப்பது வரை, வான் வெளிப் பயணங்கள் என அனைத்து உண்மைகள் மீது தான் மனித உயிர் வாழ்க்கை செயற்பாடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவை சமூக இயக்கம் முரண்பாடுகள் மீதும் விதிவிலக்கின்றி பொருந்தி உள்ளன. அ.மார்க்ஸ் சரி அவரின் எடுகோள் சரி உண்மையை மறுப்பின் அது பொய் மீது கட்டியமைப்பவையாகவே இருக்கும். உண்மையை மறுத்த செயல் தளம் சமூக இயக்கத்தைத் தடுக்கவும், ஆணாதிக்க செயல் தளத்தைப் பாதுகாக்கவும் (இது ஏகாதிபத்திய அமைப்பை தவிர்க்க முடியாது தக்க வைக்கிறது) நமது வாழ்வியல் பயன்பாட்டு செயல் தளத்திற்கு முரனாக கோட்பாட்டை முன் தள்ளுகின்றனர். இது மக்களின் அறியாமை மீது சவாரி செய்வதாகவும், அறியாமையை மேலும் அதிகரிக்க வைக்க இச்சமூக அமைப்பின் நனவுகளின் பிரதிபலிப்பாக உள்ளது.

கட்டுரையை மேலும் ஆராய்வோம். "பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் முதலிய சிந்தனைகள் 'சாராம்சம்' என்பதைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன." ஒன்றுக்கும் சாராம்சம் இல்லை என்ற அ.மார்க்சின் கண்டுபிடிப்பு நகைப்பிற்குரியது. இது பொருளை மறுத்து கருத்தை முதன்மைப் படுத்துகின்றது. ஏன் "தலித் பெண்ணியம்" கட்டுரை ஒரு சாராம்சத்தைக் கொண்டுள்ளது. அது தலித் பெண்ணியத்தை பேசுவதாக பாசாங்கு செய்கிறது இது உண்மைக்கு வெளியில் பொய் சாராம்சத்தை வெளிப்படுத்துகிறது. சாராம்சம் இன்றி ஒரு படைப்பு படைப்பாக இருக்க முடியாது. இது அ.மார்க்சுக்கும் விதிவிலக்குக் கிடையாது.
ஒவ்வொரு பொருளும் தனக்கிடையில் வேறுபட்ட சாராம்சத்தை கொண்டுள்ளது. ஒவ்வொரு பொருளின் பலவகையில் பொதுவான சாராம்சம் உள்ளது. இந்த இடைவெளியில் வேறுபட்ட ஏற்றத் தாழ்வுக்கான காலம், சூழல்,--- என அனைத்துடன் தொடர்புடையதாக உள்ளது.
(உ-ம்) மாக பெண்ணியத்தை எடுத்தால் நாட்டுக்கு நாடு, நகரத்துக்கு கிராமத்துக்கு, கிராமத்துக்கு கிராமம், வீட்டுக்கு வீடு, நபருக்கு நபர் மீதான ஒடுக்கு முறை வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றது. இது பொருளாதாரம், கலாசாராம், சூழல்,-- -- என அனைத்துடனும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதனால் ஆணாதிக்கப் பொதுச் சாராம்சம் இல்லாமல் போய்விடுகின்றதா? இல்லை மாறாக ஆணாதிக்க ஒடுக்கு முறை உலகில் பொதுவானதாக, பொதுவான சாராம்சம் கொண்டதாகக் காணப்படுகிறது. எனவே ஒரு பொருள் ஒரு நிகழ்ச்சியை ஆராய்வது என்பது சாராம்சத்திற்கு உட்பட்டது. இதற்கு வெளியில் பொருள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாகவே இருக்க முடியாது. பொருள் இருப்பதாயின் உண்மையும் அதற்குள் நீடிக்கின்றது. உண்மை இல்லை எனின் பொருள் இல்லை இது கருத்து முதல் வாதமாக உள்ளது. வாழைப் பழத்தை எடுத்தால் வேறுபட்ட இனங்கள் இருந்த போதும், வாழைப்பழம் என்பது பொதுவான சாராம்சத்தை நிர்ணயிக்கின்றது. அது ஒரு பொது உண்மையைக் கொண்டுள்ளது. இது போல் ஆணாதிக்கம் பொதுவான சாராம்சத்தை அடையாளப்படுத்துகின்றது. இதனால் இது ஒரு பொது உண்மையை பிரதிபலிக்கின்றது. ஏகாதிபத்தியமும் அதன் நிறுவன அமைப்புகள், கோட் பாடுகள் தான் முதலில் மனிதன் என்ற பொதுச் சாராம்சத்தை நிராகரிக்கின்றன. இதன் மூலம் மனிதன் என்ற பொது உண்மையை மறுத்து இனம், நிறம், சாதி, பெண்,--- என பல தளத்தில் பல சாராம்சத்தில் பொதுவை மறுத்து ஒடுக்குகின்றன. இதன் மூலம் இயற்கை செயற்கையில், உயிர் வாழும் நியதியையும் சாராம்சத்தையும் மறுத்து அதன் உண்மையை பொய்யாகக் காட் டி கேலி, செய்து, ஒட்டுமொத்தமாக தமது நலனுக்கு பயன்படுத்தி அழிக்கின்றனர்.

ஒரு பிரச்சனையின் அடிப்படை சாராம்சம் உண்மையை மறுத்து, பிரச்சனைக்கு ஆயிரம் காரணம் கூறி திசை திருப்பும் பொய்கள் தான் இன்றைய ஏகாதிபத்திய அமைப்பின் நீடிப்பிற் கான ஒரே ஒரு நிர்னயமான பாதுகாப்பை வழங்குகிறது. வறுமைக்குக் காரணம் உள்ள பொருட்களை தேவைக்கு ஏற்ப பகிர்க்கப்படாதது சுரண்டுவதுதான் பொதுவான உண்மை. பொதுவான சாராம்சம். ஆனால் இதை மறுத்து "ஒருமித்த அடையாளத்துடன் நாம் வாழ்வதில் லை" என்று கூறிக் கொண்டு வறுமைக்குக் காரணம் அதிக இனப்பெருக்கம், போன பிறப்பில் செய்த பலன் விதி, உழைப்பு போதாது, சந்தை இல்லை ---- என அடுக்கடுக்காக அடுக்கி வைக்கும் பல காரண காரியங்கள் சாராம்சம் இல்லை எனக் கூறியபடி உண்மைகளை மறுத்து பொய்களை முதன்மைப் படுத்தி ஏகாதிபத்திய நலனைத் தக்க வைக்க அச்சமூக அமைப்பைப் பாதுகாக்கும் கடுமையான இடைவிடாத முயற்சியின் விளைவு தான் சாராம்சம் இல்லை என் றதும் உண்மை கிடையாது என்று கதையளப்பதாகும்.

இந்த நோக்கத்திற்காக அ.மார்க்ஸ் எடுத்து வைக்கும் அடுத்த வாதத்தைப் பார்ப்போம்."---- தொழிலாளியில் சாராம்ச முற்போக்குத் தன்மை ஆட்டம் காண்கிறது--- சாராம்ச அடையாளங் களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அரசியல் சமூகங்களில் பிடிக்குள் அகப்படாமல் அழுத்திக் கொண்டு வெளியே நிற்கும் எச்ச சொச்சங்கள், மிச்சம், மீதிகள் (Remain ders) தங் கள் குரலை இன்று மேலெழுப்பத் தெடங்கியுள்ளனர்." என்று கதையளப்பதை ஆராய்வோம். சாராம்சம் இல்லை என்ற கதையளப்புக்கு வெளியில் இலங்கையில் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழ் மக்களின் எதிர்ப்பு சாராம்சத்தில் ஜனநாயகத்துக்கு சார்பானது தான். இந்தியாவில் பார்ப்பனிய பாரதீய ஜனதாவிற்கு எதிரான போராட்டம் ஜனநாயக சாராம்சத்தைக் கொண்டது. 2ம் உலக யுத்தத்தில் நாசிகளுக்கு எதிரான ஒன்று பட்ட போராட்டம் மனித குல விடுதலையை சாராம்சமாகக் கொண்டது. யப்பான் சீனாவை ஆக் கிரமித்த போதோ, வியட்நாம் மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த அனைத்து போராட் டத்திலும் ஒரு மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட சாராம்சத்தை கொண்டு இருந்தது. மக்களின் போராட்டத்தில் சாராம்சம் என்பது முற்போக்கு என எங்கும் எதிலும் உண்டு. இன் றிருக்கும் அதிகார பிற்போக்கு சாராம்சத்தை பாதுகாக்க மட்டும் தான் சாராம்சம் இல்லை என் று கதையளத்து முன்தள்ளுகின்றனர். இது உண்மையை மறுத்து பொய்யை உண்மையாகக் காட்ட முனைகிறது.

இன்று சாராம்சம் இரு தளத்தில் கட்டி அமைக்கப்படுகின்றது. இங்கு இரு தளத்தில் சாராம் சம் உள்ளதுடன் அது நடக்கும் செயல் தளத்தில் முற்போக்கு, பிற்போக்கையும், உண் மையையும், பொய்யையும் கோடு பிரிக்கின்றது. ஏன் தலித்திய ஒன்றினைப்பு என்பது ஒரு பொது சாராம்சத்தில் நின்று கோரும் தன்மையையும், பின் அ.மார்க்ஸ் ---- அதையே மறுத்து சாராம் இல்லை என மறுக்கும் பொய்யையும், ஏமாற்றும் ஒரு மோசடிக்காரனின் கைவந்த குத் துக் கரணம் தான். இந்திய பார்ப்பனீய இந்து என்ற பிற்போக்கு சாராம்சத்தை எதிர்த்த பெரி யார் இந்துக்கும், மதத்துக்கும் எதிரான முற்போக்கு சாராம்சத்தை கட்டியெழுப்பினார். இப்படி அம்பேத்கார் முதல் இன்று வர்க்கப் போராட்டம் என்ற உழைக்கும் மக்கள் என்ற பொதுச் சாராம்சத்தில், அனைத்து மனித ஒடுக்கு முறைக்கு எதிரான பொதுச் சாராம்சத்தில் ஒன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைக்கும் களத்தில் போராட்டம் அணிதிரட்டலைச் செய்கின்றது. இதை மறுக்க மட்டும் தான் சாராம்சம் இல்லை என்று அ.மார்க்ஸ் கதைவிட்டு கதையளக்கிறார்.

ஒரு தொழிலாளி வேறுபட்ட சாதிகளின் பிரதி நிதியாக இருந்தாலும், இங்கு சாதிக்கு எதிரான போராட்டம் முற்போக்கு சாராம்சத்தில் மட்டும் தான் ஐக்கியத்தை பாட்டாளி வர்க்கம் கோருகின்றது. இங்கு எதிலும் முரண்பாடு இருப்பதில்லை. இது ஆண் பெண் என அனைத்து சமூக முரண்பாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் முன்வைத்து பொது சாராம்சத்தில் போராடுகிறது. பாட்டாளி வர்க்கம் மனிதப் பிளவுகளைக் கடந்த பொதுச் சாராம்சத்தை பண்பாடு, பொருளாதாரம், கலாசாரம்,....... என அனைத்திலும் கோருகின்றது. இது உண்மையை அடிப்படையாகக் கொள்கிறது. இதை மறுத்து பொய்யை பிரதிபலித்த படி சாராம்சம் இல்லை என்று கூறுவதன் மூலம் மனிதப் பிளவுகளை நிரந்தரமாக நிலைநிறுத்த, இந்த சமூக அமைப்பைத் தொடர, இருக்கும் ஏகாதிபத்திய நுகத்தடியைப் பற்றிப்பிடிக்க முன்வைப்பதே சாராம்சம் மறுத்த, உண்மையை மறுத்த கோட்பாடு, செயல் தள முயற்சியாக உள்ளது.
சுரண்டலுக்கும், சமூக ஒடுக்கு முறைக்கும் எதிரான முற்போக்கு பொது பெரும்பாண்மை சாராம்சத்தை எதிர்த்து சுரண்டும் பிற்போக்கு சாராம்சத்தை முண்டு கொடுக்க, நியாயப்படுத்த அ.மார்க்ஸ் அரும்பாடுபடும் தனது சுரண்டும் வர்க்க சேவைக்காக தான் சாராம்சம் இல்லை என்பதன் மூலம் சிறுபண்மை, தனிநபர் சாராம்சத்தை பாதுகாக்க, தனிநபர் உரிமையின் பெயரில் பொதுவான சாராம்சம் இல்லை என்பதன் மூலம் தனிநபர் சமூக அமைப்பை இது சாராம்சத்தில் ஏகாதிபத்தியமாக உள்ளது.

இதற்காக அ.மார்க்ஸ் கூறும் அடுத்த வரிகளை நாம் மேலும் பார்ப்போம். " 'பெண்' என்றால் யார்? 'பெண்' என்கின்ற சொல்லின் பொருள் என்ன? எந்த ஒரு சொல்லிற்கும் பொருள் என்பது தனித்துவமான பண்பையும் பிரித்து வரையறுத்துக் காட்டுவதல்ல" என்பதன் மூலம் பெண் என உலகளவில் உள்ள பொதுவான ஆணாதிக்கத்தை மறுக்கும் அ.மார்க்ஸ் இதன் மூலம் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க வெட்கம் இன்றி விபச்சாரம் செய்யக் கோருகிறார்.
உலகளவில் பெண் என்ற அடையாளப்படுத்தல் ஆணுக்கு உட்பட்ட (இனவிருத்தி வேறுபாட்டைத் தவிர்த்து) ஆணாதிக்கம் தான். இங்கு ஆணாதிக்க வேறுபாடு சமுதாயப் பொருளாதார, கலாசார, பண்பாட்டு பண்பியல் வேறுபாடுகள் (ஏற்றத் தாழ்வுகள்) பெண் மீதான ஆணாதிக்கத்தை சாராம்சத்துடன் சீர் திருத்தத்தை, விட்டுக் கொடுப்பை மட்டும் வழங்கி உள்ளது. ஆணால் பெண் எந்த சமுதாயத்திலும் வேறுபாடின்றி அதே ஆணாதிக்க ஒடுக்கு முறைக்குள் மாற்றமின்றி அதேநிலையில் பண்பியல் மாற்றத்துடன் நீடிக்கின்றனர்.

சுரண்டலால் உருவான ஆனாதிக்கம் பெண்ணை ஒடுக்கி சுரண்டும் வழியில் உலகில் எந்த இனமும், சமூகமும் பின் நிற்பதில்லை. இங்கு இதைச் செய்யும் வேறுபாடு சமுதாய ஏற்றத் தழ்வுகளால் பண்பியல் ரீதியில் மட்டும் மாறி உள்ளது. அடிக்கடியான சமூக எழுச்சிகள் போராட்டங்கள் பெண்களுக்கு சீர்திருத்தத்தை வழங்கி வந்தன என்பதற்கு அப்பால் பெண்விடுதலையைத் தந்து விடவில்லை. வர்க்கப் புரட்சிகள் இதை ஒழித்துக் கட்டும் போராட்டப் பாதையை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்ற நிலையில், மீண்டும் அதை ஆணாதிக்க சுரண்டல் சமுதாயத்திடம் போராட்டத்தை இழந்து போனதும், மீண்டும் வர்க்கப் போராட்டப் பாதையை முன்னெடுக்கவும், பாதுகாக்கவும், போராடவும் முனைவதன் மூலம் பெண்கள் மீதான ஆணாதிக்கத்தை ஒரேயடியாக உலகில் ஒழித்துக் கட்ட பாட்டாளி வர்க்கம் கோரிப் போராடுகின்றது.

இதை மறுத்து அ.மார்க்ஸ் எடுத்து வைக்கும் கூற்றை நாம் பார்ப்போம். " 'சொல்' என்பது ஒரு தனித்துவமான பொருளுடன் தீர்மானகரமான உறவைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப்பின்னலாக அது விரிவு பெறுகிறது என்பதே சரியாகும்." என்று சொல்லையே பொருளின் மீது மறுப்பதன் மூலம் பொதுமையை கருத்துமுதல்வாத நிலையில் மறுக்கின்றார்.

பல சிக்கலான செயல்களின் தொகுப்பில் தான் பொருள் உண்டாகின்றது, நிலைக்கின்றது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறுகின்றது. ஒரு பொருள் ஓர் இயக்கம் என அனைத்தும் சிக்கலான பல இயக்கங்களின் விளைவுகளாகத் தான் இது நடந்தன நடந்து கொண்டிருக்கின்றன. இது தொடர்ந்து மாறிக் கொண்டுள்ளது. இது பொருளின் பொதுத் தன்மையை எந்த நிலையிலும் கொடுக்கின்றது. வளிமண்டலத்தை எடுத்தால் O2, N2, CO2 ...... போன்ற மூலகத்துடன் ஊடான ஒரு உண் மையை பூமி எங்கும் உள்ளது. சுரண்டலை எடுத்தால் உழைப்பைச் சுரண்டும் பொதுச்சாராம்ச உண்மை உலகெங்கும் பொதுவாக உள்ளது. பெண்ணை எடுத்தால் ஆணாதிக்க சுரண்டல் சாராம்ச உண்மை உலகளவில் பொதுவாக உள்ளது. சாதியை எடுத்தால் சாதி ஒடுக்கு முறையுடன் கூடிய சுரண்டல் சாதி உள்ள நாடுகளில் பொதுவாக உள்ளது. இது எல்லா இயக்கத் திற்கும், பொருளிற்கும், சிந்தனைக்கும் பொதுவான உண்மையானதாக உள்ளது. இது மாற்றத் துடன் புதிய சாராம்சத்தை பிரதிபலிக்கின்றது. மாறுபட்ட சூழல் பண்பாடு கலாசாரம், பொருளாதாரம், மதம், ...... என நீண்ட இடைவெளியில் வேறுபட்ட பிளவுகள் இடைவெளிகள் கடக்கப்படட முடியும். இங்கு இந்த வேறுபட்ட பிளவுகளில் காணப்படும் பொதுத் தன்மையும், குறித்த தன்மையும் ஒன்றிணைந்து செயல் தளத்தில், வர்க்கப் போராட்டம் எல்லா இடை வெளிகளையும் கடக்க கோரிப் போராடுகிறது.

இதை மறுக்க எடுத்து வைக்கும் அ.மார்க்சின் எடுகோள்களைப் பார்ப்போம். "பெண்ணை ஒரு குறிப்பான பண்புக்குரியவளாகக் காட்டுவதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப் பின்னல்களாக பார்ப்பதே சரியானதாக இருக்கும். ........ உடற் கூறு அடித்தள வாதத்தின் அடிப்படையில் பெண்ணுறுப்புகள் உள்ளவர்களை எல்லாம் ஒரே மாதிரியாக பெண்கள் எனப் பார்ப்பது அவர்கள் அனைவரின் அனுபவங்களையும் பொதுமைப் படுத்த முடியாது. ...... அப் படியானால் பொதுமைக் கூறுகளோடு வித்தியாசங்கள் உண்டு எனப் பார்க்கலாமா? அப்படிப் பார்ப்பது என்பது பின் ஏதோ ஒரு வடிவில் உடற் கூறு அடிப்படையிலான பொதுமைகளைப் பிரதானப் படுத்தி வித்தியாசங்களைப் புறக்கணிப்பதில் தான் முடியுமென்றார் ...... எனவே வெள்ளைப் பெண்ணுக்கும் கறுப்பு பெண்ணுக்கு இடையிலான பொதுமைக் கூறுகளைக் காட் டிலும் வித்தியாசங்களே முக்கியம்" என்கின்றார்.

பொதுமைகளை விட வித்தியாசங்களே முக்கியம் என்கின்றார். நாசிகள் ஆரிய இனம் எனக் கூறி மக்களின் பொதுமையை மறுத்து வித்தியாசத்தைப் பேண யூத மற்றும் இனங்களை அழித்ததும், அதே வித்தியாசங்களை அ.மார்க்ஸ் பெண்ணுக்கும் வைக்கின்றார். அதாவது நாசிகள் இன்று கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக எதை வைக்கின்றனரோ அதையே அ. மார்க்ஸ் கறுப்பு இனத்தின் பெயரில் நாசியாக முன்வைக்கின்றார். பார்ப்பனீய சதிராட்ட வானரங்கள் தொட்டாலே தீட்டு என்று கூறி, பொதுமையை மறுத்து வித்தியாசங்களை முதன் மைப் படுத்தி சாதியமைப்பைப் பாதுகாக்கின்றனரோ, அதையே மறுதளத்தில் தலித்தில் தலித் என முன்வைத்து வித்தியாசங்களைப் பேண முயல்வதன் மூலம், பார்ப்பனீயத்தை பாதுகாக்க முனைகின்றார். பெண்களும், ஆண்களும் பொதுமைப்பட்ட சமூகமாக மாறுவதற்க்கு பதில் வித்தியாசங்கள் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதன் ஊடாக ஆணாதிக்கத்தை மறைமுகமாக தக்க வைக்கின்றனர்.

தலித் பெண்ணியத்தை கூறும் இவர் தலித்தியத்தில் உள்ள வித்தியாசங்களை முதன்மை என்பதால் சாதி அமைப்பு உள் இருப்பது அவசியம் என உயர்த்தி, தலித்தில் சாதிக் கடத் தலை நிராகரிக்க பின் நவீனத்துவ பார்ப்பனியத்தை கோட்பாடாக முன் தள்ளுகின்றனர். வெள்ளை கறுப்பு பெண்களுக்கிடையில் வித்தியாசங்களே முக்கியத்துவம் என்கின்றார். பொதுமை கிடையவே கிடையாது என்கின்றார். ஆணாதிக்கம் என்பது பொதுமையாக கிடை யாது என்கின்றார். வெள்ளை நாசிகள் எதைச் சொல்லுகின்றாரோ அதை கறுப்பு நாசிகள் சார்பாக முன்வைப்பதும் நாசிச, பாசிய அமைப்பை பாதுகாக்க நாயாகக் குரைக்கின்றார். கறுப்பு வெள்ளை இணைவும் அதன் பொதுமைக் கூறும், நாசி தூய்மை வாதத்திற்கு எதிரானது என்பதும் இந்த நிறத்தைக் கடந்த பொதுமைத் தன்மையில் நின்று வெள்ளையின அமைப்பைப் பாதுகாக்கும் கடிவாளமாக உள்ளது.

தலித் பெண்கள் மற்றப் பெண்கள் உடன் இனைந்து பொதுவான ஆணாதிக்கத்திற்கும் குறிப்

www.tamilarangam.net

பான ஆணாதிக்கத்துக்கும் எதிராக இணைந்து போராடுவது மட்டும் தான் உலகளாவில் ஆணாதிக்கத்தையும், மற்றைய சமூக அவலங்களையும் கடக்க முடியும். இதிலிருந்து வித்தியாசங்களை முதன்மைப் படுத்தி பின் நவீனத்துவ பார்ப்பனியத்தை முன் வைப்பின், ஆணாதிக்க அமைப்பை உலகில் நீடிக்க வைப்பதன் ஊடாக, ஏகாதிபத்திய ஆணாதிக்க அமைப்பை தொடர கனவுகளின் புலம்பலே இவை.

அடுத்து இதற்காக அ.மார்க்ஸ் புலம்புவதைப் பார்ப்போம்."மார்க்சியம் பெண்ணியப் பாலியலுக்குரிய முக்கியத்துவத்தை அளிப்பதில்லை. எனத் தீவிர பெண்ணியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்." எனக் கதை அளப்பதை ஆராய்வோம். மார்க்சியம் மட்டும் தான் செக்ஸ் பிரச்சனையை சரியாக ஆய்வு செய்தது, செய்கிறது. தீவிரப் பெண்ணிய வாதிகள் (யார் இவர்கள் எப்படி ஆணாதிக்கத்தை ஒழிக்க உள்ளனர். மர்மமான தீவிரப் பெண்ணிய வாதிகளை யாருக்கும் தெரிவதில்லை) ஏகாதிபத்திய பொருளாதார மாற்றத்திற்கு இசைவாகப் பெண் செக்ஸ்சியத்தை அரங்கோற்றுகின்றனர். இதை மார்க்சியம் விமர்சிப்பதால் தான் பாலியலுக்குரிய முக்கியத்துவத்தை மார்க்சியம் மறுப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். ஏகாதிபத்திய சந்தைப் படுத்தலுக்கு இசைவாக பெண்ணை விளம்பரப் படுத்தும் பெண்ணியம், ஏகாதிபத்திய ஆணாதிக்க உலகத்திற்கு பெண்களை நிர்வாணமாக்கி பெண்களை செக்ஸ் பிண்டங்களாக மாற்றுகின்றது. இந்த செக்ஸ் பிண்டங்களாக பெண்களை மாற்றுவதை, அதைக் கோரும் பெண்களையே பெண்ணியத்தின் தீவிரப் பெண்ணியமாக கூறும் ஏகாதிபத்தியம் முதல் அ.மார்க்ஸ் வரை ஆணாதிக்க வக்கிரங்களை கோரவும் பாதுகாக்க கோருவதுடன், அதை மேலும் பெண்ணிய கோசத்தின் பின்னால் வளர்த்து எடுக்கின்றனர். மேலும் அ.மார்க்ஸ் கூறுவதைப் பார்ப்போம். "வெள்ளை இனத்தவர்கள் மத்தியிலுள்ள ஆண்-பெண் உறவும் கறுப்பர்கள் மத்தியில் உள்ள ஆண்-பெண் உறவும் ஒரே மாதிரியாக இல்லை என்பதால் கறுப்பர்கள் மத்தியில் ஆண்-பெண் உறவை பகுப்பாய்வு செய்வதற்கு <u>தனித்துவமான பெண்ணியப் பகுப்பாய்வுகள் தேவையாகின்றன</u>." என்ற கண்டு பிடிப்பை ஆராய்வோம்.

ஆண்-பெண், வெள்ளை-கறுப்புக்கள் மட்டுமா பிரிகின்றது. இல்லை மாறாக கறுப்பு இனத்துக்குள் பல்வேறுபாடு உள்ளது இது தலித்துக்குள் பலவாக உள்ளது. ஆகவே இந்த வேறுபட்ட உறவு முறைக்கான சமூகக் காரணங்கள் தனித் தனியாக ஆய்விற்குரியவை. இதற்கு முன் ஆண்-பெண் இடையில் உள்ள ஆணாதிக்க உறவு என்பது உலகில் விதிவிலக்கின்றி பொதுவான சாராம்சத்தால், அதன் உண்மையால் கட்டி அமைக்கப்பட்டவை. இயற்கையின் தேர்ச்சியில் உருவான உறவு முறை, ஆரம்பத்தில் ஆபிரிக்காவில் ஒரே இடத்தில் இருந்து தான், மனிதன் உலகேங்கும் சிதறி வாழும் நிலைக்கு முதாதையாவர். பூமியின் ஒரே நிலத் தொடர்ச்சிகள் கடலால் பிளந்து சென்றது முதல், மனிதனின் அறிவியல் தேடல்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் பிரிந்து சென்ற நீண்ட வரலாறு தமக்கிடையில் மொழி நிறம், பண்பாடு, கலாசாரம்........ என அனைத்து இடைவெளிக்கும் அடிப்படையாக அமைந்தது. இருந்த போதும் உலகில் சுரண்டலும், ஆணாதிக்க சமூக அமைப்பும் எங்கும் எல்லா இடமும் ஒரே மாதிரியானதாக, ஒரே காரணியால் கட்டி அமைக்கப் பட்டதை சமூக விஞ்ஞானம் பொருளாதாரம் தெளிவாக இனம் காட்டுகின்றது.

இன்று இடைவெளியைக் கடக்கும் போராட்டம் இரு தளத்தில் மட்டும் நடக்கின்றது. இது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஊடாகவும், ஏகாதிபத்திய உலகமயமாதல் ஊடாகவும் (இங்கு ஏகாதிபத்தியம் பிளவுகளை விதைத்த தொடர்ச்சியில்) நேர் எதிர் தன்மைகள் நடந்தவண்ணமுள்ளது. இதை யாரும் தடுக்க முடியாது. இதற்கு இடையில் மட்டும் தான் போராட்டம் எப்படி நகர்த்துவது என்பதில் நடக்கின்றது. பாட்டாளி வர்க்கம் எல்லா இடைவெளியைக் கடக்க முனையும் போக்கில் செல்ல, ஏகாதிபத்தியத்தில் சிலவற்றில் தனது அதிகாரத்துக்காக செய்ய, இதற்கு எதிராக பாட்டாளி வர்க்க சர்வதேசியம் உலகில் எல்லா இடைவெளியையும் கடக்கப் போரிடுகின்றது.

இன்று ஆண் பொண் உறவில் உலகில் உள்ள எல்லா ஒடுக்குமுறை செயல் தளம்

www.tamilarangam.net

மீதும், குறிப்பாக ஆணாதிக்க செயல் தளமிதான போராட்டத்தை பாட்டாளி வர்க்கம் முன்னெடுத்து இதை ஒழித்துக் கட்ட சர்வதேச பாட்டாளி வர்க்கத்திடம் கோருகின்றது, போராடுகின்றது. இதற்கு வெளியில் எந்த பெண்ணியமும் உலகளவில் ஆணாதிக்கத்தை தகர்க்க கோரவில்லை. இது ஆணாதிக்க உலகை தக்கவைக்க பகுதிக் கோரிக்கைக்குள் முடக்கி விடுகின்றது.

இதை மறுத்து அ.மார்க்ஸ் வைக்கும் அடுத்த பொன் மொழியைப் பார்ப்போம். "கறுப்பு பொதுப்புலம், வெள்ளைப் பொதுப் புலத்தின் அளவு ஆண் தன்மையானதாக (masculine) இல்லை" என்கின்றார். இருக்கும் சமூக அமைப்பில் இதை நேர் எதிராக திசை திருப்புகின்றார். பெண்கள் மீதான ஆணாதிக்க செயற்பாடுகள் வெள்ளைப் பெண்ணை விட கறுப்புப் பெண் மீது அதிகமானது. இதை மறுத்து கறுப்பு பெண்மீது ஆணாதிக்கம் குறைவு என்கின்றார். இதன் பின் கூட ஏகாதிபத்திய நலன் எஞ்சியுள்ளது. ஏன்? பொதுவாக வெள்ளை பெண்கள் வாழும் நாடுகளின் முதலாளித்துவப் புரட்சிக்குள்ளும், அதன் பின்னான ஏகாதிபத்திய தளத்திற்குள்ளும் பெண்கள் பெற்ற ஜனநாயக உரிமைகளை முதலாளித்துவ புரட்சி நடக்காத நிலப்பிரபுத்துவ மதவாத அடிப்படை கொண்ட கறுப்புப் பெண்கள் வாழும் நாடுகளின் ஆணாதிக்கம் கொடூரமானது. அதை மறுப்பதன் மூலம் குறைந்த பட்சம் முதலாளித்துவ புரட்சியை கோருவதை ஏகாதிபத்தியம் போல் இந்த அ.மார்க்ஸ் கும்பல் விரும்புவதில்லை. கறுப்புப் பெண் முன் வெள்ளை இனத்தை விட நீ அதிக ஜனநாயகத்தை சலுகைகளை ஆணாதிக்க வாதிகள் இடம் பெற்றுள்ளாய் என்பதன் ஊடாக, வெள்ளை இனப் பெண் பெற்ற ஜனநாயக உரிமைமீது சேறுவீசுவதும், அவர்களின் போராட்ட அனுபவங்கள் கோட்பாடுகளை தூற்றி வீசவும் செய்யும் முயற்சி தான் இந்தமாதிரி புலம்பித் திரிவதாகும்.

பொதுவில் வெள்ளைப் பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளை கறுப்பு இனப் பெண்கள் அனுபவிக்க முடியாத, ஏகாதிபத்திய தலைமையிலான பொது ஒடுக்கு முறையில் கறுப்புப் பெண் சிக்கி உள்ளாள். கறுப்பு இனப் பெண் வெள்ளை இனப் பெண் அனுபவிக்கும் உரிமையை குறைந்த பட்சம் பெறின் கூட ஏகாதிபத்திய அமைப்பு தகர்ந்து போகும் என்ற உண்மையினால், வெள்ளை இனப் பெண்ணை விட கறுப்பு இனப் பெண் அதிகமாக உரிமை பெற்றுள்ளாள் என்று கதையளக்க வேண்டி உள்ளது. கறுப்பு இனப் பெண்கள் குறைந்த பட்ச ஜனநாயக உரிமையை கோரிப் போராடுவதைத் தடுக்க, ஏகாதிபத்தியத்தில் உள்ள ஆணாதிக்க அமைப்பை தக்கவைக்க, சமூகத்தையே தலைகீழாகக் காட்டுவது அவசியமாகிறது.
இதைக் கவ்வி விளக்க நாலு நாய்கள் கிடைக்காமலா போய்விடும் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டுள்ளார் அ.மார்க்ஸ்.

வெள்ளை இனப் பெண்களை விட கறுப்பு இனப் பெண்கள் அதிகளவு ஆணாதிக்க கட்டுப்பாட்டுக்குள் வாழ்கின்றனர். இதை மறுக்கும் அ.மார்க்ஸ் கபட நகைப்பிற்குரிய ஆணாதிக்கமாகும். பொதுவாக கறுப்பு வெள்ளை இனத் தொழிலாளர்கள், கூலிகள் எப்போதும் மற்றைய பெண்களை விட அதிகமாக சுயாதீனமாக, ஆண்களுக்கு நிகரானவர்களாக உள்ளனர். ஏன் எனில் சொந்த உழைப்பும், போராடும் குணாம்சமும் இவர்கள் வாழ்கையில் உள்ளதால்
இது இயல்பாகவே உள்ளதுடன், மற்றைய பெண்களுக்கு தலைமை தாங்கி விடுகின்றனர்.
இதை மறுத்து அ.மார்க்ஸ் எடுத்து வைப்பதைப் பார்ப்போம். "கறுப்புப் பெண்கள் தமது விடுதலைக்காக வெள்ளைப் பெண்களை நம்பியிருக்க முடியாது" என்கின்றார். அருமையிலும் அருமையான ஏகாதிபத்திய விசுவாசம். கறுப்பு வெள்ளை என பிளக்கும் நாசிகள், பாசிஸ்டுக்கள், இனவாதிகள், ஆணாதிக்க வாதிகள் போல் அ.மார்க்ஸ் போசுகின்றார். பெண் விடுதலை என்பது கறுப்பு வெள்ளை இனம் கடந்த போராட்டம் தான் ஆனாதிக்கத்தில் இருந்து பெண்ணை விடுவிக்கும். பிளவுகள் ஒன்று பட்டு பெண்ணைப் பிளந்து, ஆதிக்கத்துக்கு எதிரான ஒட்டு மொத்தப் போராட்டத்தை மறுப்பதன் மூலம், மனிதனின் ஒட்டு மொத்த விடுதலைக்கு போராடுவதை மறைமுகமாக மறுத்து, ஆணாதிக்கத்தை தக்க வைக்க முனைவதாகும். ஒரு வெள்ளை இனப் பெண் நிறவாதத்தை காக்கும் எல்லா நிலையிலும் கறுப்பு இன நிறப் பெண் அங்கீகரிக்க முடியாது. இது போல் கறுப்பு இனப் பெண் நிறத்தைக் காக்கும் போது வெள்ளை இன, நிறப் பெண் அதை அங்கீகரிக்க முடியாது. இதற்கு மாறாக வெள்ளை, கறுப்பு

www.tamilarangam.net

பெண்ணின் இணைவு தமக்குள் உள்ள விசேட ஒடுக்கு முறையையும் எடுத்து இணைத்துப் போராட வேண்டும். இது சுரண்டல், இனம், மதம், சாதி,..... கடந்து அதற்கு எதிரான போராட்டத்தில் தான் சாத்தியமாகின்றது. இதை மறுப்பது என்பது காலனிய வாதிகள் எதை தமது ஆட்சிக்காக பிளவுகளை ஏற்படுத்தி பிளந்து ஆண்டார்களோ, ஆளுகின்றார்களோ அதை அ. மார்க்ஸ் உலக மயமாதலுக்கான ஏகாதிபத்திய உலகுக்காக விசுவாசமாக பிரகடனம் செய்கின்றார் அவ்வளவே.

இதற்காக எடுத்து இயம்பும் வரிகளை பார்ப்போம். "கறுப்புப் பெண்களைப் பொறுத்த மட்டில் 'பெண்' என்பது அவனது முழு அடையாளமாக இருக்க முடியாது." என்கின்றார். நகைப்பிற்குரிய வாதங்கள், எடுகோள்கள். ஆபிரிக்கா, ஆசிய, ...... எங்குமுள்ள ஆணாதிக்கமுள்ள கறுப்பு நிறப் பெண்கள் பெண்களாக இல்லையா? அப்படியாயின் அவர்கள் கற்பிதமாகவா உள்ளனர். முதலில் பெண் என்ற பொருளை மறுப்பதன் மூலம், அவன் மீதான ஒடுக்கு முறையை மறுத்து, கறுப்புப் பெண்ணை கேலி செய்யும் ஏகாதிபத்திய அமைப்புப் போல் வெட்கம் இன்றி பெண் இல்லை எனக் கேலி செய்கிறார். இங்கு பெண் என்ற அடையாளமே ஆணாதிக்கம் சார்ந்ததே. மூன்றாம் உலகில் உள்ள கறுப்பு நிற பெண்கள் மீதான ஆணாதிக்க ஒடுக்கு முறையை மறைக்க, அதற்கு எதிரான போராட்டத்தைத் தடுக்க முனைவதன் மூலம், இப்போராட்டம் தவிர்க்க முடியாது ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இயல்பாக எழும் என்பதால், அதைத் தடுக்க கறுப்புப் பெண்ணை ஆணாதிக்கமுள்ள பெண்கள் அல்ல என்கின்றார். பின் நவீனத்துவ தமிழ் தலித் சாக்கடைகள் இப்படி ஏகாதிபதியத்துக்காக நாய்வால் ஆட்டி முதுகு முறிய உழைக்கும் கோட்பாடு அலட்டாமல், புலம்பாமல் ஒடுக்குபவர்களுக்கு எதிரான அடக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை சிறுமைப்படுத்தும் கனவுகளின் வெளிப்பாடு தான்.

தலித் பெண்ணை ஆணாதிக்க அமைப்புக்குள் தொடர வைக்க முன்வைக்கும் அ.மார்க்சின் வாதத்தைப் பார்ப்போம். "ஒரு தலித் பெண்ணுக்கு 'பெண்' என்ற நிலையைக் காட்டிலும் 'தலித் பெண்' என்ற நிலையிலேயே அடையாளம் காட்டப்படுகிறது." என்கின்றார். இப்படிப் பார்த்தால் தலித் பெண்ணை பள்பெண், நளப்பெண், சக்கிலியப்பெண், ......... எனப் பிளந்து அல்லவா ஆராய வேண்டும். அதைவிட்டுவிட்டு தலித் பெண் எனப் பொதுமைப்படுத்தும் சதிதான் என்னவோ? தலித் பெண் என்பதைக் காட்டிலும் அவர் அவர் ஒடுக்கு முறை வேறுபட்டது அல்லவா? ஆனால் அ.மார்க்ஸ் வெளுத்துப் போன பின் நவீனத்துவக் தலித் கோட்பாட்டுக்கு திடீர் என இடையில் பிழைப்புக்கு ஏற்றவாறு குத்துக் கரணம் அடிப்பது ஏன் தான் எனக் கொஞ்சம் ஆராய்ந்தால், அதே ஏகாதிபத்திய நோக்கத்தை இனங் கண்டு கொள்ள முடியும். 'பெண்' ஆணாதிக்கத்துக்கு எதிரான ஒடுக்கு முறையில் பெண்ணாக அடையாளம் காண்கின்றாள். இப் பெண் தனக்குமேல் உள்ள ஆணாதிக்க ஒடுக்கு முறையை இனம் கண்டு, அதைக்கடந்து போராட பெண்நிலைவாத நோக்கில் அணிதிரள்கின்றனர். இது சுரண்டல் , இனம், மதம், சாதி, மொழி, ......... என அனைத்து ஒடுக்கு முறையையும் எதிர்த்து, பெண்ணாக, பெண்நிலை வாதமாகக் கட்டி அமைத்து ஆணாதிக்கம் மீது ஒட்டு மொத்த வெற்றிக்காக போராடுகின்றனர். இதை மறுத்த அனைத்தும் விதிவிலக்கின்றி தவிர்க்க முடியாது ஆணாதிக்கத்தை கட்டமைக்கின்றது. ஏன்எனின் ஒட்டுமொத்த ஆணாதிக்கத்தை எதிர்க்காது தமக்குள் தமது நலனுக்குள் சீர் திருத்தத்தைக் கோருகின்றது.

அடுத்து ஆணாதிக்கத் தகவமைப்பை பார்ப்போம். "தலித் பொதுப்புலம் ஆண் சார்பற்றது எனச் சொல்ல முடியாதெனினும் இதிலும் மேற்சாதிப் பொதுப்புலத்தினளவு ஆண் சார்புத் தன்மை இல்லை எனலாம். ....... தலித் பெண்ணியம் சாதீயத்தையும் பார்ப்பனீயத்தையும் ஆணாதிக்கத்திற்கு இணையான இலக்குகளாகக் கொள்வது தவிர்க்க முடியாது." என அ. மார்க்ஸ் தலித் ஆண்களின் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க அதனூடாக இச்சமூக அமைப்பை முண்டு கொடுக்க குரல் கொடுக்கின்றார்.

தலித் ஆணாதிக்கம் இல்லை என்று கூறும் அளவிற்கு ஒப்பீட்டில் கூறியபடி மோசடி செய்கின்றார். சமுதாயப் பண்பாடு, கலாசாரம், பொருளாதாரம், சூழல் ....... போன்றவற்றில் சமூகங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களில் காணப்படும் ஏற்றத் தாழ்வான ஆணாதிக்க வேறுபாடுகளை ஒப்பீட்டளவில் மறுத்து, ஆணாதிக்கத்தை தக்க வைக்கும் முயற்சி உண்மையில் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க வர்க்கப் போரை மறுக்கும் கோட்பாடு உருவாகும் முயற்சியில் முன் வைப்பது தான்.
ஆணாதிக்கம் என்பதும் அதன் அச்சாணி என்பதும் பெண்களை சுரண்டுவதில் இருந்து தொடர்கிறது. இது பெண்களை அடிமையாக்கியதுடன், பாலியலை நுகர்வுக்குரிய பண்டமாக மாற்றியதும் என்பது உலகளவில் பொதுத்தளத்தில் பொது உண்மையாக பெண் மீதான ஒடுக்கு முறையாக உள்ளது. ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பில் உள்ள மாறுபட்ட ஆணாதிக்க ஒடுக்கு முறையை எடுத்து பொதுவான ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை மறுப்பதும் ஏற்றத் தாழ்வுற்குள் குளிர் காய்ந்து அதில் பிழைக்க முனையும் கோட்பாடுகள், செயல் தளங்கள் உண்மையில் மக்களை ஏமாற்றி அதில் ஆணாதிக்கத்தை தக்க வைத்து பாதுகாப்பது தான். தலித் பெண்கள் சாதியையும், பார்ப்பனீயத்தையும் ஆணாதிக்கத்திற்கு இணையாகக் கொள்வது என்பது, தலித் பெண்கள் ஆனாதிக்கத்திற்கு எதிராக போராடுவதை மறுப்பதாகும். தலித் பெண்களின் ஆணாதிக்க ஒடுக்கு முறையை சாதியத்திற்குள்ளும், பார்ப்பனீயத்திற்குள்ளும் மூடி மறைத்து ஆணாதிக்க அமைப்பை பாது காக்க கோருவதன் மூலம், உண்மையில் இச் சமூக அமைப்பைப் பாதுகாப்பதன் மூலம் நனவாக பார்ப்பனீயத்தையும், சாதியையும் பாதுகாக்க முனைவதாகும்.

இதில் சாதியத்தை, பார்ப்பனீயத்தை ஆணாதிக்கத்துடன் ஒப்பிடுவது என்பதும் ஒரு பூர்சுவா குடும்பத்தில் ஆண் பெண் போராடுவது போல் ஆணாதிக்கத்துடன் சமரசம் கண்டு போராடத் தூண்டுவதும், ஆணாதிக்க எதிரியாக பிரகடனம் செய்யாத வகையில் காணக் கோருவதன் மூலம், சாதி என்ற கட்டமைப்பை பார்ப்பனீயம் வரையறுத்த வகையில் சமூகத்தை வாழக் கோருவதாக உள்ளது. ஆணாதிக்கத்துக்கு மாற்றாக சாதியை வைப்பது என்பது இருக்கும் ஆணாதிக்க உலகைத் தக்க வைப்பது மாகும். ஆணாதிக்கம் தகராத வரை சாதியமும் தகராது.

அடுத்து ஆணாதிக்க அமைப்பை பாதுகாக்க வைக்கும் வரிகளைப் பார்ப்போம். "இந்திய மரபுத்துவத்திற்கு உரிய பெண்ணியம் என்ற கருத்தை இன்று இந்துத்துவத்திற்கு உயர்த்திப் பிடிப்போர் முன்வைக்கின்றனர் பாரதீய ஜனதாக் கட்சியின் பெண்கள் பிரிவாகிய 'மகினமோர்ச்சா' சேர்த்து மிருதுளா சின்கா சொல்லுது. 'இந்தியப் பாரம்பரியம் முன் வைத்து ஏற்றுக் கொண்ட பாலியல் சமத்துவத்தை மீட்டுத் தருவதென பாரதீய ஜனதாக் கட்சி சபதமேற்கிறது ...... மேற்கில் வளர்ந்து வரும் பெண் விடுதலை இயக்கங்களில் இருந்து நாங்கள் கோட்பாட்டளவில் வேறு படுகின்றோம், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் ஒரு வகையான மறுசீரமைப்பை நாங்கள் கோருகின்றோம்." என்கின்றார் அ.மார்க்ஸ். மேற்கு நாட்டு பெண் விடுதலையில் இருந்து கோட்பாட்டளவில் வேறுபடுவதாக (அதை என்ன எனச் சொல்ல வக்கில்லாமல் போகிறது) கூறிக் கொண்டு பாரதீய ஜனதா பெண்விடுதலைக்கு மேளத்துடன் அங்கீகாரம் வளங்குகின்றார் அ.மார்க்ஸ். வாழ்க பார்ப்பனீயப் பெண்ணியம். இந்த ஆணாதிக்க பார்ப்பனீயப் பெண்ணியத்தை மறுப்பது என்பதும், வரையறுப்பது என்பதும் கேலிக்குறியது எனக் கூறி ஆணாதிக்க ஏகாதிபத்தியத்திற்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

பார்ப்பனீய ஆணாதிக்கத்தை முன்வைக்கும் மிருதுளா சின்காவின் கோரிக்கையை எப்படி விமர்சிக்க முடியும். ஏன் எனின் பெண்ணியத்தை வரையறுப்பது கேலிக்குரியது எனவே நாம் அதை பாதுகாக்க வேண்டும் என்கின்றார் பார்ப்பனீய கோட்பாட்டாளர் அ.மார்க்ஸ். பாரதிய ஜனதா வைத்தாலும், கிலிங்ரனின் மனைவி வைத்தாலும் கோட்பாட்டளவில் வேறுபாடு உண்டு ஆனால் அந்த ஆணாதிக்கத்தை மறுத்து, எதிர்த்து பெண்ணியத்தை நிலை நிறுத்த மாட்டோம் என்கின்றார். ஏன்எனின் பெண்ணியத்தை வரையறுப்பது கேலிக்குரியது அல்லவா. உச்சரித்தால் போதும் அங்கீகரிப்போம் வாருங்கள் என அழைக்கின்றார்.

தலித் பெண்ணியம் தலித் போன்ற கோசங்களின் பின் இவர்கள் "பொருளாதாரத்தில் ஒரு-வகையான மறுசீரமைப்பைக் கோருகிறோம்" என்பதன் ஊடாக இந்த ஏகாதிபத்திய ஆணாதிக்க பார்ப்பனீயச் சாதிய சமூகத்தில் மாற்றம் இன்றி பொருளாதாரத்தில் சலுகைகளை பார்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பானியத்திடம் கேட்டு பெறுவதை அ.மார்க்ஸ் கறுப்பு வெள்ளை, தலித் கோசங்களின் பின் முன்வைக்கும் அருவருக்கத்தக்க ஏகாதிபத்திய அருவருடித் தனமாகும். இந்த மாதிரி சுரண்டும் பன்றித் தனத்தை தெளிவாகக் காட்டியபின், மார்க்சியத்தை எதிர்ப்பதில் வியப்பேதும் இல்லை. மார்க்சியம் மட்டும் தான் உண்மையில் மக்களின் பிரச்சனையை பொருளாதாரச் சலுகைக்குப் பின் தேடாது, அவர்கள் விடுவிக்கும் போராட்டத்தில் தியாகத்தின் ஊடாகப் போராடுகின்றது. இருக்கும் ஏகாதிபத்திய ஆணாதிக்க பார்ப்பனீய சாதீய அமைப்பை தலை-கீழாக்கிய சமூகத்தை மார்க்சியம் கோரும் போது அதை சேறடித்து சலுகைக்காக பிழைப்புக்காக போராட விளையும் கூட்டம் நாம் போராடுவதை அங்கீகரிக்க மறுத்தும், மார்க்சியத்தை அந்த மக்களுக்கு எதிரானதாகக் காட்ட எல்லா வண்ணக் கோட்பாடுகளையும் மீள மீள முன்வைத்து முயல்வதைத் தான் மேற்கூறிய கோரிக்கை தலித்தியத்தின் பின் எழுவதைக் காணமுடியும். அந்த வகையில் சில பொருளாதார சலுகைக்காக பார்ப்பனீய மந்திரி சபையில் உக்கார்ந்த தலித் எழில்மலையும் இந்த தலித் கோட்பாட்டின் உற்பத்தியே ஒழிய வேறு ஒன்றும் அல்ல.

இதற்காக எடுத்து வைக்கும் அடுத்த வரிகளை ஆராய்வோம். "தலித் பெண்ணியம் இத்தகைய இந்துத்துவப் பெண்ணியத்தில் இருந்து விலகி நிற்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அயோத்தி தாசரும் அம்பேத்காரும் முயற்சித்ததைப் போல தலித் பெண்ணியமும் இந்திய மரபு என்பதை வைதீக வேர்களிலிருந்து அல்லாமல் பவுத்த, சைவ வைதீக மரபில் தேட முயலும், அம்பேத்கார், பெரியார், பூலே வழியில் நின்று சாதியம் பார்ப்பனீயம், ஆணாதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கும், தலித் ஆணை அதுதன் எதிரியாக நிறுத்தாமல் உயர்சாதி ஆணாதிக்க சமூகத்தை அது தனது இலக்காகக் கொள்ளும்" என தலித் ஆணாதிக்கத்தைத் தக்க வைக்க தலித் பெண்ணியம், பெண்ணியப் போராட்டங்களை தடுத்து நிறுத்த தலித் ஆணாதிக்கமும் கிடையாது போராட்டமும் கிடையாது என்கின்றார். தலித் ஆணிய சலுகைகளை விட்டுக்கொடுத்து, உயர்சாதி ஆணியத்தை எதிர்த்துப் போராடக் கோரும் ஜனநாயக விரோத அரசியல், உண்மையில் ஒட்டு மொத்த ஆணாதிக்கத்தை தக்க வைக்கத் தான். அ.மார்க்ஸ் தலித் ஆணாதிக்கத்துடன் சமரசம் கண்டு, தலித் பெண்களை எட்டி உதைக்கும் ஆணாதிக்க சுரண்டல் தலித்தியம் அந்த மக்களுக்கே எதிரானது. ஏன் எனில் தலித் தனக்குள் உள்ள சுரண்டும் வர்க்கத்தை எதிர்ப்பதில்லை. தனக்குள் உள்ள சாதி ஒடுக்கு முறையை எதிர்ப்பதில்லை. இப்படி தலித்துக்குள் உள்ள சுரண்டும் வர்க்க, ஆளும் வர்க்க ஆணாதிக்கப் பிரிவுகளின் சலுகையில் எழும் கோட்பாடு, போராட்டம் எப்படி அந்த மக்களை விடுவிக்கும். என கொஞ்சம் யோசித்தால் இதன் நோக்கம் இந்த உலகை களங்கம் இன்றி சலுகைக்குள் பாதுகாப்பது தான் பொருந்தும்.

தலித் பெண்ணியம் தனக்கு மேல் உள்ள தலித் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதில் தான் எழமுடியும். இது தனக்குள் உள்ள சுரண்டல், சாதி ஒடுக்கு முறை என அனைத்தையும் எதிர்த்து, மற்றைய பிரிவு ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்து தான் எழ முடியும். தலித்துக்குள் ஒரு பார்ப்பனீயப் பிரிவும், பிழைக்கும் சுரண்டல் பிரிவும், தமது சலுகைகளை தனித்துவமாகப் பெற எழும் கோட்பாடுகள் இயக்கங்கள் அற்ப சலுகைகளை வீசி எறிந்து, ஒட்டு மொத்தமாக சூறையாடுவதே எஞ்சும். கோட்பாடுச் செம்மல் அ.மார்க்ஸ் சலுகைக்காக என வைத்து, தலித் ஆணாதிக்கத்தை எதிர்த்து அல்ல, சுரண்டலை எதிர்த்து அல்ல, சாதி ஒடுக்கு முறையை எதிர்த்து அல்ல என்ற ரீதியில் இதற்கு வெளியில் எந்தப் பிரிவும், எந்தப் போராட்டக் கோட்பாடோ, வழியோ, நடைமுறையோ யாராலும் வைக்க முடியாது. தலித்துக்குள் முதலாளிச் சலுகை, தரகு முதலாளிச் சலுகை, ஆணாதிக்கச் சலுகை, நிலப்பிரபுத்துவச் சலுகை, உயர்சாதிச் சலுகை என்று நீளும் கோட்பாட்டு வரையறைகள் உண்மையில் பாட்டாளி வர்க்கம் எதை மறுத்துப் போராடுகின்றதோ, அதன் மீது அதற்கு நேர் எதிராக முன்வைத்து நிலை நிற்கிறது. பாட்டாளி வர்க்கம் தலித்துக்குள் இச் சலுகைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நின்று மறுக்கின்றது.

இதனால் தான் அம்பேத்கார் வழியில் போராடக் கோருகின்றார். இந்திய மரபை வைதீக மரபில் இருந்தல்ல பவுத்த, சைவ, வைதீக மரபில் தேட வேண்டும் எனக் கூறி, வைதீக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரபில் மக்களை மீளவும் மூடிப் போட்டு வைக்க விரும்புகின்றார். இதற்கு பெரியாரைக் கொண்டு வரும் முரண்பாட்டுக்குப் பதில் அளிக்க வேண்டியது இல்லை என நம்புகின்றார். பெரியாரின் போராட்டம் மொத்த சமயக் கருத்து முதல் வாதத்திற்கு எதிரானது. அம்பேத்கார் கருத்து இதற்கு எதிரானது.

இப்படி முரண்பாட்டை முன்வைக்கும் கோட்பாடு இடியப்பச் சிக்கலை மாறிமாறிப் போசுவதால் யாருக்கும் புரிவதில்லை, விளங்குவதுமில்லை என நம்புகிறார். பெயர்களை உச் சரிப்பது நாய்ப்பிழைப்பிற்கு அவசியமாகிறது. இதன் மூலம் தலித், தலித் பெண்ணிய மோசடிகளை அரங்கேற்ற முடியும் என்ற கனவுகள் பெயர்களால் நனவாக்க முனைகின்றார்.
இதே மேலும் முரண்பாட்டின் சிக்கலில் முன்வைப்பதை ஆராய்வோம். " 'தலித்' என்றும் உரி மையைப் பயன்படுத்தி ஒரு தலித் ஆண், தலித் பெண்ணின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அது ஏற்றுக் கொள்ளாது ........ 'தீண்டாமை' என்கின்ற சொல்லாடலைப் பயன்படுத்தி ஒரு தலித் ஆண் தலித் பெண்ணுக்கு எதிரான சலுகையைக் கோர முடியாது." இது யாராவது கேள்வி கேட்டாலும் இல்லை எனச் சொல்ல, விரும்பியவாறு, மறுவாசிப்பாவது, மறுவிக்கம் சொல்ல முன்வைத்த மோசடியாகும். வெள்ளையில் இருந்து கறுப்பைப் பிளந்து, கறுப்பில் தலித்தைப் பிளந்து அங்கு படிப்படியாக ஒடுக்கு முறையில்லை எனக் கூறிய ஆய்வுரைகள், பின் போராட்டம் உள்ளே இல்லை எனப் பிரகடனம் செய்து, பின் சலுகை கோர முடியாது என கதையளக்கிறார்.

தலித் ஆண் தலித் பெண் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது எனக் கூறும் அ.மார்க்சின் கோட்பாடு தலித் ஆணை தனது எதிரியாக நிறுத்தாது எனக் கூறினார். இது எப்படிப் பொருந் தும் என விளக்க வேண்டியது இல்லை என நம்புகின்றார். இதைச் சொல்லிப் பிழைத்தால் போதும் என்பதே நிலை. குழப்பம், இடியப்பச் சிக்கல், முடிவு, இருக்கும் அமைப்பை அசை யாது பாதுகாக்கும் மறு வாசிப்பு செய்து ஒரு நாய்க் கூட்டத்திற்கு வழிகாட்டுவது தான் இதன் செயல் களம். மார்க்கியம் ஆணாதிக்கத்தை எதிர்த்து மறுத்து, ஆணாதிக்கத்தைப் புரட்டிப் போடுகின்றது. இதை மறுத்து மறுசீரமைப்பை நாங்கள் (தலித்-தலித் பெண்ணியம்) பொருளா- தாரத்தில் கோருகின்றோம் என்பது நாம் இனி எதை எனக் கூறத் தேவை இல்லை. இது
இருக்கும் சமூக அமைப்பைச் சலுகை பெற்று பாதுகாப்பதே. தலித் பெண்ணியம், தலித்தியம், மற்றும் அனைத்துக் கோட்பாடுகளும், இதைத் தூக்கிப் பிடிக்கும் எல்லோரும் இதற்குள் தான் தமது அரசியல் பிழைப்பை தொடர்கின்றனர். இதை நாம் வேரறுக்க வேண்டும் இது தான் எஞ் சியுள்ளது.

**<u>'பூடகமான' மார்க்சிய எதிர்ப்புப் பெண்ணியம்</u>**

இக்கட்டுரையை தொட்டு வரக் கூடிய கூற்று ஒன்றை 'எக்சில் 2' இல் அரவிந் அப்பாத்துரை எழுதியிருந்தார். அதைப் பார்ப்போம்.

"ஜாதி வேற்றுமை பெண்ணை ஒடுக்கும் விதிமுறைகள் ஆகியவற்றைப் போதிக்கும் மனுதர்மம் என்ற நூலை எதிர்த்து போராடுவதில் மட்டுமே தலித்தியமும் பெண்ணியமும் ஒன் று சேர்கின்றது. மற்ற எல்லா பரிமாணங்களிலும் பெண்ணியம் தலித்தியமும் வெவ்வேறு போராட்டங்கள்." என்றார் ஆனால் எப்படி என விளக்கவில்லை.

மனு தர்மம் என்ற நூலை எதிர்த்து எப்படி பெண்ணியம் போராடும் ஐயா? பார்ப்பணீயப் பெண்ணியம் அதாவது அ.மார்க்ஸ் குறிப்பிடும் 'மிருதுளா சின்கா' எப்படி மனுதர்மத்தை எதிர்க்கும். அ.மார்க்ஸ் என்ற அறிவியல் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார் பெண்ணியத்தை வரை யறுப்பது கேலிக்குரியது என்கின்றார். நீங்கள் எந்த பெண்ணியத்தை சொல்லுகின்றீர்கள். கேலி செய்யும் பெண்ணியத்தையா? எதை? மனுதர்மப் பெண்ணியத்தை எதிர்க்க வேண் டுமாயின் அது உண்மையான பெண்ணியமாக இருக்கவேண்டும். அது ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்தது சுரண்டலை, ஆணாதிக்கத்தை, மற்றைய பூர்சுவா,பார்ப்பணீயப் பெண்ணியத்தை எதிர்த்தும் சாதி அமைப்பைக் கடந்து கோர வேண்டும். இந்தப் பெண்ணியம் தான் மனுதர்மத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தை எதிர்க்கும். இந்தப் பெண்ணியம் கம்யூனிசப் பெண்ணியமாகும்.

அடுத்து தலித்தியம் மனுதர்மத்தை எதிர்க்கும் என்கின்றார் இது முழுமையானது அல்ல. தலித்தியம் மனு தர்மத்தை எதிர்க்க வேண்டுமாயின், தனக்குள்ள மனுதர்ம வழிவந்த சாதிப் படி நிலையை முதலில் தகர்க்க வேண்டும். இதை தலித் மனுதர்மம் மறுக்கின்றது. இது மறுக்கப்படும் போது மிக கீழ் மட்ட சாதிக்கு இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண் டால் என்ன எல்லாம் ஒன்று தான். மனுதர்மத்தை எதிர்த்துப் போராட வேண்டும் எனின் தலித்துக்குள் உள்ள மனுதர்மக் கூறுகளை எதிர்த்து போராடுவதில் தொடங்குகிறது.
தலித்துக்குள் உள்ளுள்ள மனுதர்மம் பாதுகாத்த படி ஒருக்காலும் வெளியில் உள்ள மனுதர்மத்தை தகர்க்க முடியாது. மனுதர்மத்தை எதிர்த்த போராட்டம் எல்லாம் சாதிப் படி நிலை ஒடுக்கு முறைக்குள்ளும் தொடங்குகின்றது. இது சாதியைக் கடந்த போராட்டத்தைத் தொடங்குவதும், ஒடுக்கப்பட்ட மற்றும் அனைத்து கோரிக்கையிலும் கைகோர்க்கின்றது. இது மட்டும் தான் மனுதர்மம் வேர்றறுக்கின்றது. சாதியைக் கடந்து கோரும் மக்கள் தான், ஒடுக் கப்பட்ட மக்கள் தான் ஒட்டு மொத்த மனுதர்மத்திற்கும் எதிராகப் போராடுகின்றனர். அதை வேர் அறுக்கின்றனர். மற்றவை அதைத் தக்க வைக்கவும், அ.மார்க்ஸ் கோருவது போல் சலுகைகளை கையேந்துவதிலும் தான் நீடிக்கின்றது.

அடுத்து அரவிந் அப்பாத்துரையின் பொன் மொழியைப் பார்ப்போம். "தத்துவரீதியில், கம் யூனிசம் என்பது சம உரிமைக்கான போராட்டம். இது முக்கியமான பொருளாதார, சமத் துவத்திற்கான போராட்டம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ...... மார்க்சிய வாதிகள் பெண்ணியப் போராட்டத்தில் பங்கு பெறுவோருக்கு துணை நிற்கக் கூடும் இதைத் தவிர்த்து கம்யூனிசத்திற்கும் பெண்ணியப் போராட்டத்திற்கும் என்ன நேரடித் தொடர்பு இருக்கின்றது என்பது ஒரு "பூடகம்." என்கின்றார். கம்யூனிசம் பற்றி தனது "பூடகம்" நிலையில் நின்றும், திரித்தும் வெளியிடும் கம்யூனிச எதிர்ப்பு அறிவியல் சார்ந்ததல்ல. கம்யூனிசத் தத் துவரீதியாக சம உரிமை கோருகின்றார். இதை பொருளாதாரத்தில் கோருகின்றார். எல்லா வண்ணப் பிழைப்பு வாதிகளும் கம்யூனிசத்தை பொருளாதாரப் போராட்டமாக சுருக்கி அதில் போராடிப் பிழைத்து அம்பலப்படுகின்றனர்.

பொருளாதாரத்தில் சமத்துவம், சம உரிமை தான் எனின் தொழிற்சங்கப் போராட்டம் போதுமானதாக இருக்கும். இன்றைய தொழிற் சங்கங்கள் கம்யூனிசப் புரட்சியில் இருந்து விலகிச் சென்ற பாதை இதுதான். கம்யூனிசம் வர்க்கப் போர்ரைக் கோருகின்றது. வர்க்க ஆட்சியைக் கோருகின்றது. அதைப் பாதுகாக்கக் கோருகின்றது. இது வர்க்க எதிரிகளை ஒழித்துக் கட்டக் கோருகின்றது. இதன் போராட்ட பதையில் சம உரிமை என்பது மறுத்து விடுகின்றது. பொருளாதாரத்தில் சமத்துவம் அல்ல தேவையை எடுக்க கோருகின்றது. பொருளாதார வாதத்துக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தை நிறுவ மார்க்ஸ்-லெனின் பல நிறைய தத்துவப் போராட்டங்களை நடத்தி கம்யூனிசத்தை நிறுவினர். இதை 'பூடகம்' போல் இல்லாது படித்து கம்யூனிசத்தை திரிக்காது பார்க்கக் கோருகின்றோம். பெண்ணியத் தில் சம உரிமை துணை நிற்கும், அதற்கு வெளியில் கம்யூனிசம் ஒரு பூடகம் என்கிறார். அறிவு சூனியத்தில் குருட்டுப்பார்வை தான். பெண்ணியத்திற்கு சம உரிமை கிடைத்தபின் எப்படி ஐயா பெண்ணியக் கோரிக்கை எழும்? சம உரிமை என்பது எல்லாத் துறையிலும் நடக்க வேண்டும்.

கம்யூனிசம் வர்க்கப் போரை பொருளாதாரத்தில் நடத்துவதில்லை. அது சுரண்டலுக்கு எதிராக, அதற்கு காரணமான அனைத்துத் துறைகளுக்கும் எதிராகப் போராடுகின்றது. சுரண் டல் என்பது உருவாக்கியது தான் ஆணாதிக்கம், சாதிய கட்டமைப்பு, பாலியல் வக்கிரங்கள் , ........ என அனைத்தும். இதை எதிர்க்கும் வர்க்கப் போராட்டம் சுரண்டலை ஒழிக்கும் போது அது அனைத்துத் துறையிலும் மாற்றத்தை நிகழ்த்தியிருக்க வேண்டும். இது மட்டும் தான் கம்யூனிசத்தின் கோரிக்கையும் வெற்றியும். மொழி, பண்பாடு, கலாசாரம், பொருளா-தாரம், மதம், ........ என அனைத்திலும் மறுத்து மாறுதலையை கம்யூனிசம் கோருகின்றது.
இதைப் புரிந்தால் பெண்ணியத்துக்காக ஒரே ஒரு போராட்ட வடிவம் கம்யூனிசமாக இருப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதைக் காண முடியும். இதைவிட்ட அறிவு சூனிய 'பூடகமாக' இருப்பதால் எதுவும் நடக்காது வம்பளப்பதும் சுகிப்பதும்தான் எஞ்சும்.

**பகிர்ந்து உண்ண வரும்படி கோரும் பிச்சையை நிராகரிப்போம்**

எம் உணவை உரிமையை

சூறையாடுவதற்கு

**எதிராக**

போராடிப் பெறுவோம்

அண்மையில் கோட்பாடற்ற பிரதிநிதிகளின் வெளியீடாக பிரான்சில் இருந்து எக்ஸில் தனது முதலாவது இதழ் வெளியீட்டிருந்தனர். இவ்விதழ் கோட்பாடற்ற நிலைக்கூடாக எதை நியாயப்படுத்துகின்றனர் என அவர்களின் வரிகளுடாக எக்ஸிசில், தனது முதல் ஆசிரியத் தலையங்கத்தில் என்ன சொல்கிறது எனப் பார்ப்போம்.

"புகலிடத்து வாழ்வில் இருந்து புறப்படுகிறோம். ஏவரும் எங்களுடன் இணைந்து கொள்ளலாம். எங்கிருந்தேனும் எந்த மொழியிலும் எம்மிலும் முகம் பார்த்துக்கொள்ளட்டும். மீண்டும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" கருத்துக்கள் இலக்கியங்கள் எதுவாயினும் எம்மிலும் பட்டுத் தெறிக்கட்டும். எக் கருத்துக்கும் மதிப்பளிக்கும் மனப்பக்குவம் எமக்குண்டு. எதையும் தவிர்த்து உண்ணும் பாங்கு எம்மிடம் இல்லை. கிடைப்பதைப் பகிர்ந்து உண்ணும் காகங்களாய்." என்ற தமது விபச்சாரத்தை துல்லியமாக அம்பலப்படுத்துகின்றனர். இது எப்படியென ஆராய்வோம்.

காகங்கள் சேர்ந்து உண்ணுகிறது என்பது உண்மையே. அதனால் மனிதனாகிய நாமும் சேர்ந்து உண்ணுவோம் என்கின்றனர். எடுத்த எடுப்பில் பார்த்தால் உயர்ந்த மனிதவிழுமியமாக இருக்கும். காகம் போல் வாழவேண்டும் என இலங்கை பாடப் புத்தகத்திலேயே இப்படித்தான் உள்ளது. இதை மீள இவர்களும் வைப்பதன் நோக்கம் என்ன? காகங்கள் மனிதனைப் போல் ஆண் பெண் வேறுபாட்டை பேணுவதில்லை. பள்ளன், பறையன் என சாதியால் பிளந்து ஒடுக்குவதில்லை. ஒருவன் உழைப்பை ஒருவன் சுரண்டி கொழுப்பது போல் செய்வதில்லை. இப்படி மனிதன் பிளவுகள் போல் காகங்கள் இல்லாததால் அவை கூடியுண்டு கூடிவாழ்கின்றன. மனிதனும் காகம் போல் பிளவின்றி இருப்பின் இப்படி ஆசிரியர் தலையங்கம் எழுதியேயிருக்க முடியாது. இப்படி இல்லாத போது அதை மனிதனுக்கு கோருவது என்பது, ஒடுக்குபவனை எதிர்த்துப் போராடாத கூடி வாழ்வைக் கோருவதே. குருசேவ் முன்வைத்த "சமாதான சகவாழ்வு" ஏதோ அதைத்தான் இவர்கள் கூடிவாழ்வும் கூடி உண்ணவும் கோருகின்றனர். கூடிவாழ்வோம் கூடிக் குடிப்போம் என மனிதர்களைப் பார்த்து கோரும் போது முரண்பாடுகளை கைவிடு என்கின்றனர். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை கொடு எதிர்த்து போராடதே என்ற தத்துவத்தை மீள மக்களுக்கு முன்வைக்கின்றனர். இன்று சமுதாயத்தில் வன்முறையை யார் எதிர்க்கின்றனர். ஆளும் வர்க்கமும் அதன் பிரதிநிதிகளான சுரண்டும் வர்க்கமும் தான் இருக்கும் இவ்வமைப்பை தொடர்ந்து பேண வன்முறையை எதிர்க்கின்

றனர். இங்கு ஆளும்வர்க்கம் தனது அமைப்பை வர்க்க எல்லை கடந்ததாக ஜனநாயக அமைப்பாக கூறுகின்றனர். தனது ஆளும் அதிகாரத்தை வன்முறையற்றதாக காட்டுகின்றது. எதிர் வன்முறைதான் வன்முறைக்கு அடிப்படையானதாக மீளமீள காட்டுவதன் மூலம் வன் முறையற்ற கூடிவாழ்வை முன்வைக்கின்றனர். இந்த சமுதாயத்தின் ஒடுக்குமுறை, அமைதியாக கூடிவாழ முடியாதவாறு ஒடுக்கப்படுபவன்தான் எப்போதும் எதிர்வன்முறையை ஒடுக்கு முறைக்கு எதிராக கையாள்கின்றான்.

இன்று வன்முறையை கோருவது ஒடுக்கப்படும் வர்க்கமாகவும் வன்முறை எதிர்ப்பது ஒடுக்கும் வர்க்கமாக (சுரண்டும் வர்க்கம்) இச்சமுதாயச் சுரண்டலை அசைவின்றி பாதுகாக்க வன் முறை பற்றிய கோட்பாட்டையும் கூடி வாழ்வதைப் பற்றியும் பேசுகின்றனர். இன்றைய உலகில் பிளவுபட்டுள்ள மனித இனத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர் வாழ்வென்பது வன் முறை என்ற ஒரேயொரு வழியில் அதாவது வன்முறையில் மட்டும்தான் நீடிக்கின்றது. இங்கு நான் வன்முறை என அடையாளப் படுத்துவது மனிதனின் சுரண்டும் அனைத்துவகை ஒடுக்கு முறைக்கு எதிராக மனிதர்கள் மனிதனுக்கு எதிராக வெளிப்படுத்தும் சிறிய அசைவு முதல் உடல் மீதான வன்முறை ஈறாக உள்ளடக்கியதே. வன்முறை என்பதை சிலர் உடலால் மட்டும் வரையறுப்பது மோசடியாகும். வன்முறை இந்த வர்க்க சமுதாயத்தில் மனிதனின் எல்லா கருத்து செயல் தளத்துக்குள்ளும் எல்லா மனிதர்களுகிடையில் விதிவிலக்கின்றி நீடிக்கின்றது. இவ்வன்முறை செயலுக்கு செயல் வடிவத்துக்கு வடிவம் என பலதளத்தில் பண்பால் மட்டும் வேறுபடுகின்றது.

வன்முறையின் எதிராளராக காட்டி நடிக்கும் பலர் சமுதாய இயங்கியலை, பொருட்களின் இயங்கியலை மறுத்து இருக்கும் ஒடுக்குமுறையை பாதுகாக்க வன்முறை எதிர்ப்பு வேடம் தேவையாகின்றது. பொருட்களின் எல்லா இயக்கமும் இயற்கையில் மற்றதன் மீது வன்முறையை கையாள்கின்றது. பொருட்கள் சுயாதீனமாக ஒன்றையும் சார்ந்து இருக்காத ஒரு நிலையில் மட்டும்தான் வன்முறை இருக்க முடியாது. ஆனால் சுயாதீனமாக ஒரு பொருள் இருக்க முடியாத நிலையில் எல்லா அசைவும் எல்லா இயக்கமும் வன்முறையின்றியிருக்க முடியாது. இது உயிரினத்தில் விதிவிலக்கின்றி உள்ளதுடன் உணவுக்காக மற்றைய உயிரினம் மீது வன்முறை உயிர்வாழ்வதற்கான நிபந்தனையாக உள்ளது. இது மனித இனத்துக்குள் எடுக்கும் போது மனிதர்களின் சிறுபான்மை பிரிவு சூறையாடலுக்கூடாக பெரும்பான்மை பிரிவை வன்முறைக்குள்ளாக்கிய இருத்தலை வன்முறையற்றதாக காட்டுவதன் மூலம் வன்முறை எதிர்ப்பை முன்வைக்கின்றனர். பெரும்பான்மை மக்களின் வாழ்வு என்பது சிறுபான்மை சூறையாடலுக்கு எதிரான வன்முறையூடாக மட்டும்தான் உயிர்வாழ்தல் சாத்தியமாகின்றது. ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்விடுதலை ஆணாதிக்கத்துக்கு எதிரான வன்முறையாக உள்ளது. பார்ப்பணியத்துக்கு எதிரான தாழ்த்தப்பட்ட பள்ளர் பறைய மக்களின் போராட்டம் பார்ப்பணியத்துக்கு எதிரான வன்முறையாக உள்ளது. முதலாளிக்கு எதிரான தொழிலாளர் வார்க்க போராட்டம் முதலாளிக்கு எதிரான வன்முறையாக உள்ளது. இது எல்லா போராட்டத்திலும் எல்லா செயல் தளத்திலும் விதிவிலக்கின்றியுள்ளது.
இருப்பதை எல்லோரும் அவரவர் தேவைக்கு ஏற்ப எடுக்கும் ஒருநிலையில் மட்டும் வன்முறை மனிதர்களுக்கு இடையில் தேவையற்றதாக மாறிவிடுகின்றது.

வர்க்க சமுதாயத்தில் எல்லாவற்றுக்கும் மதிப்பளிப்பது என்பது உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான வன்முறையாக உள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஒடுக்கும் சிறுபான்மைக்கும் நடக்கும் வன்முறைப் போராட்டத்தில், கருத்துப் போராட்டத்தில் நடுநிலை சாத்தியமில்லை. மாறாக இருக்கும் ஒடுக்கும் சமுதாயத்தை பாதுகாக்க கையாளும் நடுநிலை வேஷமாக கபடத்துடன் கூடிய மோசடியாக உள்ளது. இதைத் தான் முதலாளித்துவ பராளுமன்றங்கள் ஒடுக்கும் வர்க்கங்கள் வீதியில் இறங்கி போராடும் போது முன்மொழிகின்றன. போராட்டங்களின் போது ஒடுக்குபவன் மக்களை பேசித் தீர்க்க முடியும் வெளியில் போராடவேண்டாம் என்கின்றனர். தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைய வேண்டாம் என இவர்களைப் போல் கோரும் முதலாளிகள், மாற்றாக பரஸ்பரம் பங்குபற்றும் அமைப்பு முறையை முன்வைக்கின்றனர். முதலாளிகள் தம்மில் முகம்பார்த்தும் தெறிக்க

www.tamilarangam.net

கோரி போராட்டங்களை **சமபந்தி** நடத்தியதன் மூலம் தமது சமபந்தி (பகிர்ந்துண்ணும்) நோக்கத்தின் ஊடாக அம்மக்களை ஏமாற்ற முடிந்தது. தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க, இவர்களைப் போல் அமைப்பு வடிவங்களை விதிவிலக்கின்றி வைத்திருப்பதன் மூலம் மக்களைச் சூறையாடுகின்றனர். எல்லா முதலாளியும் விதிவிலக்கின்றி பகிர்ந்துண்ண விரும்புவதாக பிரகடணம் செய்வதுடன், தான் கொடுக்கும் சம்பளத்தை பகிர்ந்துண்ணும் வெளிப்பாடாகவே இவர்களைப் போல் பிரகடணம் செய்கின்றனர். ஏகாதிபத்தியம் ஏழை நாடுகளுக்கு வழங்கும் கடன்கள் உதவிகளை பகிர்ந்துண்ணும் விடையமாக இவர்களைப் போல் விதிவிலக்கின்றி முன்வைக்கின்றனர். பகிர்ந்துண்ணல் என்பதை இந்த வர்க்க சமுதாயத்தில் சுரண்டுவோரே மீளமீள முன்வைப்பதை இவர்கள் மீண்டெடுத்து முன்வைக்கின்றனர். எல்லோருக்கும் எல்லாம் இருப்பின் பகிர்ந்துண்ணல் சாத்தியமில்லை. இல்லாது இருப்பதால் மட்டும் தான் முதலாளிகள் பகிர்ந்துண்ணலை பிரேரிப்பதன் மூலம் தமது சூறையாடலை பாதுகாக்க முனைகின்றனர். இதுபோல் எல்லா துறையிலும் முதலாளிகள் விதிவிலக்கின்றி முன்வைப்பதன் மூலம் ஒடுக்கப்பட்டவனை சமாளிக்க பகிர்ந்துண்ணலை பட்டுத் தெறிக்கும் வழியை பிரகடனம் செய்கின்றனர். இதுமட்டும் தான் சொத்துரிமையை தனது எல்லா ஆதிக்கத்தையும் பாதுகாக்கவும் தொடரவும் முன்வைக்கும் பாதையாக உள்ளது. பகிர்ந்து உண்ணலை கோருபவன் தன்னிடம் உள்ள ஆதிக்கத்தில் நின்றுதான் இல்லாதவனை பார்த்து பகிர்ந்து கொள்ளத் தயார் என்கின்றான். ஆணாதிக்கவாதி பெண் போராடும் போது பெண்ணிடம் பகிர்ந்து கொள்ள முன்வருகின்றான். இதுமட்டும் தான் ஆணாதிக்கத்தை தகர்க்காது. இப்பகிர்ந்துண்ணும் வடிவத்தைதான் கூட்டணி முதல் எல்லா ஆதிக்க சக்திகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் முன் வைத்து சமபந்தி நடத்தியதன் மூலம் தமது சமபந்தி (பகிர்ந்துண்ணும்) நோக்கத்தின் கூடாக அம்மக்களை ஏமாற்ற முடிந்தது. மக்களுக்கு பிச்சையிட்டு பகிர்ந்து கொடுத்தும் மக்கள் போராட்டங்களை தணித்துவிட எல்லா முதலாளித்துவாதிகளும் மீளமீள செய்வதையே எக்ஸில் ஆசிரியர் குழுவும் விசுவாசமாக பிரகடணம் செய்கின்றனர்.

**பின்குறிப்பு:** முதலாளியும் தொழிலாளியும் சேர்ந்துண்ண அழைப்புவிடுவதை விமர்சனமாக நேரடியாக குறிப்பிட்டு, இதை ஒட்டிய விமர்சனம் ஒன்றை சமரில் எழுதுவதாக எக்ஸில் பிரதான கோட்பாட்டாளருக்கு குறிப்பிட்டிருந்தேன். இதை அடுத்து மற்றொருவர் மூலம் எனது கருத்துச் சுதந்திரத்துக்கு மறைமுக மிரட்டல் விடுத்துள்ளார். தமது கூடித் தின்னும் முதலாளித்துவ கோட்பாடுகளை விமர்சித்தால் எனது தனிநபர் நடவடிக்கை என சிலவற்றைக் குறிப்பிட்டு அதை எழுதுவேன் என்று கூறி மறைமுகமாக மிரட்டியுள்ளார்.. நேரில் எப்போதும் நடிப்பதும் பின்னால் சேறுயடிப்பதும், சாடைமாடையாக பேசுவதும் என தொடரும் இந்த தனிநபர் தாக்குதல் அரசியல் பிழைப்புத்தனத்தை, நேரில் கேட்டால் அப்படி பேசவேயில்லை என மறுக்கும் தொடர்ச்சியில், என்மீது முதுக்குப்பின்னால் கதைப்பவைகளை தொகுத்து அவர்கள் முன்னும் உங்கள் முன்னும் வைக்கின்றேன். எனது தனிப்பட்ட பிரச்சனைகளை இதில் தொகுத்து வைப்பது அவசியமா என்ற கேள்வி என் முன்னும் உள்ளது. இதையே சிலர் அரசியல் விடையமாக மாற்றி வம்பளப்பதாலும், இதை தொகுத்துவைப்பதன் மூலம் இது போன்ற அரசியல் வம்பளக்கும் போக்கை நிறுத்தி அரசியல் தளத்துக்குள் மாற்ற முடியும் என நம்புகின்றேன். இதுபற்றி பின்புறம் பேசுவதை விடுத்து ஆதாரமாக அரசியல் ரீதியில் முன்வைத்து வம்பளப்புக்கு பதில் விவாதிக்க கோருகின்றேன். மறுபுறம் உங்கள் முதலாளித்துவ கோட்பாடுகளை நாம் விமர்சிக்கும் போது அதை விஞ்ஞான பூர்வமாக மறுக்க முடிந்தால் மறுங்கள், இதை விடுத்து தனிநபர் மீதாக முதுகுக்கு பின்னோ, எழுத்திலோ மாற்றாக முன்வைக்காதீர்கள். தனிநபர் மோசடியாக இருந்தால் அதை தனியாக அரசியல் ரீதியில் அம்பலப்படுத்துங்கள் வரவேற்கின்றோம்.

என்மீதான அவதூறாக, முதுக்கு பின் நான் போராடத் தொடங்கிய காலம் முதல் கற்பனையாக வைக்கப்பட்டவைகளை, நான் அறிந்தவைகளை மட்டும் எனது அபிப்பிராயத்துடன் கீழ் தொகுக்கின்றேன். விடுபட்டவை எனக் கருதக்கூடிய ஏதாவது தெரிந்தால் எழுதி அனுப்புங்கள். நான் இயக்கத்தில் இருந்த போது இயக்கப்பணத்தை கையாடினேன் என்ற அவதூறு தொடர்பாக இதற்கு முன் நான் சமரிலும் ஆதாரம் கேட்டு எழுதியிருந்தேன். ஜெயபாலனின் கோட்பாட்டை விமர்சிக்கப்போன என்னை நோர்வை சுவடுகளில் இதே குற்றச் சாட்டை முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்த போது என்ன ஆதாரத்தில் எழுதினீர்கள் எனக் கேட்டு எழுதிய பின் மௌனம்தான் நீடிக்கின்றது. என்.எல்.எப்.ரி. மற்றை இயக்கம் போலல்லாது அதன் கணக்கு வழக்கு இந் தியா, N.L.F.T, P.L.F.T என மூன்று இடத்திலும் இருந்ததுடன், இயக்கம் இருந்த காலத்தில் மூன்று முறை கணக்கு சரி பார்க்கப்பட்டது. அங்கு இருந்த கணக்கு கொப்பியில் இருந்து இக்குற்றச்சாட்டு ஆதாரங்கள் உடன் முன்வைக்கப்படவில்லை. மாறாக எனது அரசியல் நிலைகள் மீதுமட்டும் அவதூறாகவே முளைத்தெழுகின்றது. இந்த கதைகட்டுக்கு முன் ஊரில் நான் இயக்கத்தில் வேலைசெய்த போது, நான் இருந்த வீட்டை இயக்கப் பணத்தில் கட்டியதாக நான் எதிர்த்துப் போராடிய பிரிவுகள் கதைகட்டித் திரிந்தது. இந்தளவுக்கும் எனது குடும்பத்துக்கு அன்றும், இன்றும் சொந்த வீடு கிடையாது என்பதுதான் இதில் வேடிக்கை. ஆனால் அவதூறுக்கு எல்லையிருக்கவில்லை முடிவிருக்கவில்லை தொடர்கின்றது.

அடுத்து நான் பிரான்ஸ் நாட்டில் பிரஜாவுரிமை பெற்றதால் எனக்கு கருத்து சுதந்திரமும் விமர்சிக்கும் உரிமையும் கிடையாதாம், இது எப்படி?. பிரஜாவுரிமை பெறுவதற்க்கு நியாயமான காரணங்கள் உள்ள போதும், இது பிழை என எடுப்பின் எனக்கு கருத்துச்சுதந்திரம், விமர்சிக்கும் சுதந்திரம், அதுவும் முதலாளித்துவ கோட்பாட்டுக்கு எதிராக எப்படி இல்லாமல் போய்விடும் என்பது பின்நவீனத்துவ அதீதஜனநாயகத்தில் பிடிபடவில்லை, முடிந்தால் சொல் லுங்கள். அடுத்து ஊரில் எனது குடும்பம், குடும்ப மோதல்களில் (இம் மோதல் தொடங்க காரணம் கொம்யூனிச கட்சிக்கு எனது அப்பா ஆதரித்தது, கூட்டணி செல்வநாயகத்தை எதிர்த்த போராட்டத்தில் எழுந்ததே. தாழ்த்தப்பட்ட கிராமத்தில் கொம்யூனிச கட்சிக்கு வாக் களிக்கக் கோரியதுடன் அப்பா பின் அணிதிரண்டதை சகிக்காத நிலையில் 1972 இல் உமா மகேஸ்வரன் கும்பல் இரவில் தாக்கி, அடுத்த நாள் சுவர்களில் இத்தாக்குதலை பறைசாற் றினர்.) சிக்கியிருந்த நிலையை இன்று கூறி, அதை ரவுடித்தனமாக அதே குடும்ப மோதலில் எதிர்த்தரப்பில் ஈடுபட்டோர் இன்று சித்தரித்து, எனது எழுத்து ரவுடித்தனமானது எனக் காட்டி முதலாளித்துவ கோட்பாட்டை பாதுகாக்க பின்நிற்காத அவதூறுக்குள் இறங்கியுள்ளனர். இது எப்படி எனப் புரியவில்லை புரிந்தால் அறிவியுங்கள்.

நான் யாழ்ப்பல்கலைக் கழகத்தில் இருந்த போது தமிழ்பேசும் மக்களின் ஜனநாயகத்துக் காக நான் முன்னின்று நடத்திய இறுதியனாதும் மிகப் பெரியதுமான போராட்டத்தில், புலிகள் என்னையும் முன்நின்றவர்களையும் சதிகாரர் என்றும், தீயசக்திகள் என்று கூறிய அவதூறு களின் பின் மக்களின் ஜனநாயகத்தை கொடுக்க மறுத்து கூறிய போக்கு சரியானதா என உங்களிடம் கேட்கின்றேன். என்னை புலிகள் உரிமை கோராது கடத்திச் சென்று கொல்ல வைத்து இருந்த போது 80 நாள் சித்திரவதைக்கு உள்ளாகி இருண்ட சிறையில் இருந்து நான் தப்பி வந்தேன். இதன்பின் பல்கலைக் கழகம் எனக்காக போராடிய நிலையில், புலிகள் எனது உயிர்ருக்கு உத்தரவாதம் அளித்துப் பேசிய மேடையில் என்னை சமூகவிரோதி என மறைமுகமாக கூறிச் சென்றனர். நான் அன்று தலைமறைவில் இருந்து வெளிவந்து அதே மேடையில் பல்கலைக்கழக மற்றும் மக்களின் ஆதரவுடன் பேச முற்பட்ட போது புலிகள் பகிஸ்கரித்து இறங்கிச் செல்ல, நான் புலிகளை நோக்கி நான் சமூகவிரோதியா என பலவற் றை எழுப்பினேன். ஆனால் இதுவரை இவ் அதூறுக்கு பதிலாளிக்கப் படவில்லை. நான் புலிகளிடம் பிடிபட்டிருந்த நிலையில் என்னை இடையில் ஒரு வீட்டுக்கு சில பொருட்களை எடுக்க கொண்டு சென்றனர். அப்போது அங்கு அகதியாக பலர் வந்து நின்றனர். புலிகள் தம் மை N.L.F.T என்று கூறி நான் நிதிக்கையாடல் செய்ததாக அதனால் கைது செய்து விசாரிப் பதாகவும் கூறிச்சென்றனர். இது காட்டுத் தீய் போல் பரவியதுடன் நான் தப்பிவரும் வரை இப்படிதான் நம்பியது. இதற்க்கு சிகரம் வைத்தாற் போல் அங்கு கிண்டியெடுத்த பொருளை மூட்டை மூட்டையாக பணமும் நகையும் எடுத்ததாக யாழ் முழுக்க கதைக்கப்பட்டது. அப் படித்தான் ஊரம் உலகும் நம்பியது. இந்த அவதூறுக்கு நான் தப்பிய பின் புலிகள் பகிரங் கமாக என்ன என்னிடம் எடுத்தது என அறிவித்து, யாழ் பத்திரிகையில் வெளியிட்ட செய் திதான் அவதூற்றை முடிவுக்கு கொண்டுவந்தது. ஆணால் சிலருக்கு இன்னமும் இதில் தெளிவுவராத அவதூற்றை தொடர்கின்றனர். ஏன்?

எனது ஊரில் நான் உட்பட சிலர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் சென்று அவர்களை வர்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப் போராட்டத்துக்கு அணிதிரட்ட போராடினோம். இந்தப் போக்கில் அவர்கள் மீதான சாதிய ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடினோம். இதன் அங்கமாக எனது உறவினரையும் எனது உறவினருமான உமாமகேஸ்வரின் பிளாட் இயக்கத்தை எதிர்த்தும் கோயில் நுளைவுப் போராட் டத்தையும் அதே நேரம் அங்கு நடந்த உணவு பரிமாற்றத்தில் பலாத்காரமாக சமபந்தி நடத்தி (இப் போராட்டம் சண் தலமையிலான வர்க்கப் போராடத்தின் பின் நடந்த மிக முக்கியமான ஓரிரு போராட்டங்களில் கூறிப்பிடக்கூடிய போராட்டம்.) வெற்றி பெற்ற இப்போராட்த்தை எதிர்த்த பிரிவுகள், என்னை பள்பள்ளிகளுடன் திண்று படுப்பவன் என அவதூறு கூறி கதைகட்டிய அவதூற்று அரசியல் நோக்கம் என்ன என்பது புரியவில்லை.

நான் யாழ் பலகலைக்கழகம் புகுந்த போது ராக்கிங்க்கு எதிரான போராட்டத்தில் தனித்து போராட வேண்டியிருந்தது. இதன் தொடர்ச்சியில் ஒரு துண்டுப்பிரசுரத்தை எனது இயக்க உறுப் பினருடாக எழுதி (இந்தப் பிரசுரத்தை சஞ்சீவி இதழ் மிக அண்மையில் வெளியிட்டிருந்தது.) நான் தனியாக விநியோகித்தேன். இத்துண்டுப் பிரசுரம் பெண்களிடம் எப்படி குளித்துவிட்டு உடுப்பு மாத்துவீர்கள் என்பதை செய்து காட்டுங்கள் என்பது முதல் உள்ளாடையின் நிறம் என்ன எனக் கேட்கும் ராக்கிங் ஆணாதிக்க வக்கிரங்களை கேட்டு, தெரிய சொந்த அக்கா அம்மா இடம் கேளுங்கள் அப்போது புரியும் என அம்பலட்படுத்தினோம். இதற்கு அந்த ஆணாதிக்க வக்கிரங்கள் தந்த அவதூறு "பல்கலைக்கழகத்தில் மனநோயாளர் ஒருவர்" என்று துண்டுப் பிரசுரம் அடித்து வெளியிட்டதுடன் அதை ஈழநாடு தனது ஆணாதிக்க வக்கிரத்துடன் தனது பத்திரிகையில் பெருமைபட வெளியிட்டது. இதனால் பல்கலைக்கழகம் இரண்டானது மட்டுமின்றி பல்கலைக்கழகம் சிலநாள் வகுப்புகள் ஆணாதிக்க வக்கிர வானரங்களால் பகிஸ் கரிக்கப்பட்டது. இந்த மனநோய்பற்றி அவதூறு எதற்காக என்பது அதன் அரசியல் நோக்கமும் புரியவில்லை என்பது சிலரின் வாதம் புரிந்தால் அறிய ஆவலாக உள்ளேன்.

மக்களின் ஜனநாயக உரிமைக்காகவும், இயக்க அராஜகங்களுக்கு எதிராகவும், இந்தியாவின் தயவில் மக்களை ஒடுக்க, எலும்புநக்கி காவிதிரிந்த ரெலோ இயக்கத்தை நானும் எமது அமைப்பினரும் 1984 இல் யாழ் தமிழ் பிரதேசங்களில் அம்பலப்படுத்தினோம். இதை சகிக்க முடியாத இந்தியக் கைக்கூலிகள் என்னை கைது செய்ய முனைந்து தோல்வி பெற்ற நிலை-யில், வேறு சிலரை கைது செய்ததுடன் கண்ட இடத்தில் சுட்டுக் கொல்ல உத்தரவு வழங்கி தேடியலைந்தனர். இதற்கு அவர்கள் இட்டுக்கட்டியது நான் சமூக விரோதியென்று. கைது செய் தவர்களை விடுவிக்க நான் வேலை செய்த ஊர் தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்து எழுந்ததுடன் , இப்போராட்டம் தான் தமிழ் பிரதேசத்தின் முதல் இயக்கத்துக்கு எதிரான ஜனநாயக போராட் டமாகும். சமூகவிரோதி என்ற அரசியல் நோக்கம் புரியாது மீண்டும் அதை கூறுவதன் நோக்கம் என்ன? நானும் இயக்க நன்பர்களும் எனது ஊரில் பள்ளர் சமூகத்தை அணிதிரட்டி எனது ஊர் வெள்ளாள சாதித்திமிருக்கு எதிராகவும், இயக்கம் மறுத்த ஜனநாயகத்தையும் கோரியும், இலங்கை அரசின் இனவெறித்தாக்குதலை எதிர்த்தும் போராடியபோது, முன்னாள் சாதிதிமிர் பிடித்து பல சாதி தாக்குதலில் முன்னின்று நடத்திய எனது உறவினர்ரும், பிளாட் இயக்க தலைவருமான உமாமகேஸ்வரனுக்கு, அதுவும் அவரின் சொந்த ஊரில் நான் பள்ளர் சமூகத் தை அணிதிரட்டியது சகிக்க முடியாது என்னைக் கொல்ல வாமதேவனை அனுப்பினார். தேசவிடுதலையை பிளக்கும் மக்கள் விரோதி என முத்திரை குத்தி இந்த சதியை பிளாட் டில் இருந்த அரசியல் பிரிவுகளின் மூலம் தெரிந்த நான், அதை மக்கள் மற்றும் பிளாட்டின் முன் பகிரங்கமாக அம்பலப்படுத்தியதால் கைவிட்டு சென்றர். இதையே இன்று சிலர் வேறு வார்த்தையில் கூறுவது நடக்கின்றது.

நான் புலிகளில் இருந்து தப்பிய பின் இந்திய இராணுவம் யுத்தத்தை தொடங்கிய பின் இந் தியா இராணுவத்தை எதிர்த்து முதல் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை பல்கலைக்கழகம் ஊடாக தலைமையேற்று நடத்தியதுடன் மட்டுமின்றி ஜனநாயகத்துக்காக தனியாக, எனது இயக்கத் துடன் முற்றாக முரண்பட்ட நிலை: போராடிக் கொண்டிருந்த போது விமேலேஸ்வரனை புலிகள் சுட்டுக்கொன்றனர். இச்சடலத்தை பல்கலைக்கழகம் கொண்டுவர முயன்ற போது, அவரின் புலி உறவினர் கொல்லப்பட்ட இடத்தில் முன்கூட்டியே புலிகள் அழைத்து வந்து சடலத்தை தர மறுத்த நிலையில், அடுத்த நாள் நான் முன்நின்று பல்கலைக்கழக பகிஸ்கரிப்பை நடத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினேன். அன்று தலைமறைவான என்னை அடுத்தநாள் கொல்ல தேடி பல இடத்தில் விசாரித்த போது அவர்கள் அங்கு கூறியவை இயக்கக்கணக்கு வழக்குகளை காட்டவில்லை தாம் என்.எல்.எப்.ரி என்று கூறிய அவதூறுக்கு பின் உள்ள அரசியல் நோக்கம் புரியவில்லை என்பது சிலரின்வாதமாக உள்ளது. அதையே சிலர் மீளக் கூறுகின்றனர்.

பிளாட் இயக்கம் 1984 இல் தனது இயக்க உறுப்பினர் ஒருவரை தாக்கி அவரை இயக்க விரோதியாக தனது இயக்கம் முன் கூறி சித்திரவதையை நடத்தியதுடன், அவரை அங்கு இருந்தோர் துப்பியே குளிப்பாட்டுவர். இந்த தாக்குதலால் இன்று அவரின் பல மூளை நரம்புகளை செயல் இழக்கப் பண்ணியதுடன் உயிர்வாழ போராடும் சமூக அக்கறைக்குரிய அந்த மனிதனின் நரம்புகளை சரி செய்ய நரம்புகளுக்கு விலை பேசப்பட்ட நிலையில் என்னிடம் உதவி கோரினார். பெரும் தொகையை தனிப்பட என்னால் கொடுக்க முடியாத நிலையில், பணத்தைச் சேர்ப்பின் எதிர்காலத்தில் இதையே அவதூறாக காட்டத்தயங்காத இந்த முற்போக்கு ஜனநாயக அமைப்பை புரிந்து கொண்டு, மனிதனுக்கு உதவுவது என்ற அடிப்படையில் நிதியுதவியை பகிரங்கமாக எழுத்தில் கேட்டேன். பணம் சேர்க்க முன்பே அவதூறு வந்து சேர்ந்தது. நான் மனிதாபிமானி என நிறுவத்தான் இதைச் செய்வதாகவும், அவருக்கும் அவரின் நண்பர்களுக்கும் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை குப்பையில் போட்டுவிட்டதாக பிரகடனம் செய்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் இவர்கள் அவரைத்தாக்கிய பிளாட்டுக்குள் அன்று இவர்களை துரோகி எனச் சொல்லத் தயங்காத செயல் தளத்தில் இருந்ததுடன், தாக்குதலுக்கு துணையாக இருந்தவர். இன்று ஜனநாயகத்துக்காக போராடுவதாக கூறிக்கொள்ளும் அவரும் அவரின் நன்பர்களுக்கும் தான் இந்த குற்றுயிராக கிடந்த மனிதனுக்கு உதவுவார் என எதிர்பார்ப்பது நடைமுறை. ஆனால் அவதூறு ஊடாக இதை சேறடித்து மறுத்ததன் மூலம் மீள ஒருமுறை அந்த மனிதனை மறைமுகமாக தாக்கியதுதான் நிகழ்ந்துள்ளது. ஆனால் இந்தமாதிரியான ஜனநாயக மனிதர்களை விட மக்கள் நேர்மையானவர்கள் என்பதற்க்கு, இதற்க்கு கிடைத்த எதிர்பாராத கைகொடுப்பு அவதூறுகளுக்கு சிறந்த பதிலாக உள்ளது. அவதூறு அரசியல் நோக்கம் என்ன என்பதை உங்கள் முன் விட்டுவிடுகின்றேன்.

அண்மைக்காலமாக தமிழ் பேசும் மக்களுக்குள் ஏற்பட்டுவரும் சமூகச் சீரழிவை சுட்டிக் காட்டி துண்டுப்பிரசுரம் ஒன்றை சேர்ந்து விட்டிருந்தேன். இதே சமரில் அத் துண்டுப் பிரசுரம் மறுபிரசுரமாகியுள்ளது பார்க்கவும். மக்களின் பிரச்சினையை சொல்லி தின்ன குடிக்க கூத்தடிக்க சுகிக்க அழைத்தபோது அதை விமர்சித்த துண்டுப்பிரசுரத்துக்கு பதிலளிக்காது அவதூறுகள் மட்டுமே பதிலாக தனிப்பட்ட அவதூறுக்கு மேல் உள்ளதை உள்ளடக்கி முன்வைக்கப்பட்டது. இந்த அரசியல் என்ன?. o

---

23ம் பக்கத் தொடர்ச்சி-

பிரச்சனைக்கு தீர்வுகளை விட அதைப் பயன்படுத்தி தனது ஆணாதிக்க வக்கிரத்தை வெளிப்படுத்துபவன் கடைந்தெடுத்த நாயாவான். செவ்விந்தியன் பொய்களின் மேல் உருளுகின்றார். இயற்கையின் தேர்வு தான் ஓரினச் சேர்க்கை என்கின்றர். வரலாற்றுப் பொய். இயற்கையின் தேர்வு ஆண்-பெண் என்பதே ஒழிய ஓரினச் சேர்க்கை அல்ல. ஓரினச் சேர்க்கை ஆண் பெண் பிளவில் உருவானதே. அடுத்து 0.03-100 நிகழ்தகவு 100க்கு 3 அல்ல 10000க்குத்தான் 3.ஆகும். ஓரினச் சேர்க்கை, கூட்டுக் கலவி, ........ போன்றவை இயற்கை அல்ல. மாறாக ஆண்-பெண் பிளவுகளிலும், செல்வத்தை கொள்ளையடித்து கொட்டமடித்த பிரிவுகளின் அந்தப்புரங்களில் அது போன்ற இடங்களில் உருவானது. இன்று டிஸ்கோ, நீலப்பட வக்கிரங்களை இலக்கியப் படைப்புகளில் படைப்போர் சமூகத்தில் ஒரு ஆரோக்கியமான பிரிவல்ல. எப்படி பொருளாதாரத்தில் தரகு முதலாளிகள் உள்ளனரோ அதே போல் இலக்கியத்தில் இவர்கள் உருவாகின்றனர், உருவாகினர்.

இன்று இந்த மாதிரிப் பிரிவுகள் மக்களின் எதிரிகள் ஆவர். மக்களின் துயரத்தில் குளிர் காயும் மக்கள் விரோதிகளாவர். இவர்கள் உடன் கூடிச் செல்வோர், விவாதிப்போர் என அனைவரும் மக்களை ஏமாற்றி அதில் நக்கித் திரிய முடியும் என்ற ஒரே ஒரு கனவு தான் எஞ்சியுள்ளது. இவர்களை இனங் காணவும், எதிர்த்துப் போராடுவதும் இன்று எம்முன் உள்ள சமூகப் பணியாக உள்ளது o



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலியெதிர்ப்புக்கு பின்
## முகிழ்ந்த
# வெண்தாமரை
## ஒரு வரலாற்று துரோகம்

...அடுத்து இருண்ட "இருள்வெளி" தொகுப்பில் முதல் தொகுக்கப்பட்ட ஜோர்ஜ்.இ.குருஷ்ஷேவ்வின் "வாக்களிக்கப்பட்ட பூமிக்கு" என்ற இலங்கையரசு சார்பு கட்டுரையைப் பார்ப்போம்.

இவர் புலியெதிர்ப்பு காய்ச்சல் பிடித்து முத்திப் போய்யுள்ளவர். புலியெதிர்ப்பின் பின் ஒளித்தபடி ஜனநாயக வேஷம் போட்ட இவர் தமிழ் மக்களின் துன்பம் துயரத்துக்கு மாற்றுத் தீர்வு எதையும் முன்வைக்க முடியாது, சிங்கள அரசு ஒடுக்குமுறைக் கூடாக தீர்வை முன்மொழிபவர். யுத்தமற்ற சிங்கள இனவாத ஆதிக்க அமைதிதான் ஜனநாயகம் எனக்கூறும் இவர், சுரண்டும் - சுரண்டப்படும் போராட்டத்தில் சுரண்டும் பக்கம்தான் என தாயகத்தில் எழுதி தனது கம்யூனிச எதிர்ப்பை பச்சையாக பிரகடனம் செய்தவர் என் பதால் இருண்ட "இருள்வெளி"யில் வர்க்க விசுவாசத்துடன் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை கொச் சைப்படுத்தி எழுதியவைகளை கொஞ்சம் ஆராய்வோம்.

"இந்திய இராணுவகாலத்திலும் நிலைமை வழமைக்கு திரும்புவதன்மூலம் தங்களின் முக்கியத்துவம் மறைந்து விடுமோ என்ற அச்சம் தான் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எதிர்த்து புலிகளை போரிடச் செய்தது." என்று தமது மக்கள் விரோத கண்டுபிடிப்புகளை வைக்கின்றார். புலிகளின் பொதுவான தவறான அரசியல் வியூகங்களை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, சிங்கள இனவெறி ஆக்கிரமிப்பாளனுக்காக, துரோகிகளுக்காக புலியெதிர்ப்பு ஜனநாயக வேடத்தின் நின்று கூறும் கூற்றுதான் இவை. இலங்கை - இந்தியா ஒப்பந்தம் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங் கியதல்ல. மறாக தமிழ்பேசும் மக்கள் பிரதிநிதித்துவம் செய்யாத தமிழ்மக்கள் மீது பலாக்காரமாக திணித் த உடன்பாடு இந்தியா நலனை உள்ளடக்கியதும், சிங்கள மேலாதிக்க இனநலன்களை உள்ளடக் கிய இவ்ஒப்பந்தம் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான வகையில் உருவாக்கப்பட்டது. இது அன்றும் இன்றும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் புலியெதிர்ப்பு காய்ச்சல் பிடித்தவர்களுக்கு தமிழ்மக்களும் புலிகளும் ஒன்றுபோல் இனவாத அரசுக்கு தெரிவது போல், இந்த மக்கள் விரோத கனவான்களுக்கும் ஒன்றாக தெரிகின்றது. தமிழ்மக்களின் நலன்களும் புலிகளின் நலன்களும் வேறு என்பதை காணத் தவறுவதும், பின் சிங்கள இனவாத தீர்வுகளை தமிழ்மக்கள் முன் புலிஎதிர்ப்பின் பின் ஒளித்து நின்று திருடன் போல் திணிப்பது ஒரு போக்காக உள்ளது. தமிழ்மக்களின் ஜனநாயக கோரிக்கைக்கு தீர்வை வழங்காத எல்லா ஒப்பந்தமும், அங்கு போராடிக் கொண்டிருக்கும் எந்த குழுவும் (புலி அல்லது எதுவாயினும்) எதிர்த்து போராடுவது யதார்த்தம். இங்கு புலிகள் உள்ளனரே ஒழிய வேறு முரண்பாடு இருப்பதில்லை. தமிழ் பேசும் மக்களின் தீர்வு சுயநிர்ணயத்தில் மட்டும்தான் தீர்க்கப்படமுடியும். அதாவது குடும்பப்பிரச்சனையில் ஆண்சார்பு குடும்பம் தலையிட்டு திணித்த தீர்வை பெண் எதிர்த்தால் அடங்காப் பிடாரி எனத் திட்டுவதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும். இது பெண்நிலைவாதிகளுக்கு நன்றாகவே தெரியும்.

புலிகளின் ஜனநாயக விரோத அரசியலை விமர்சிக்கும் உரிமைவேறு, தீர்வை திணிக்கும் கோடரி பாம்பு வேலையும் கூட்டிக் கொடுக்கும் காவாலி தொழில்தான். இந்த கூட்டிக் கொடுக்கும் வரிகளை மேலும் பார்ப் போம். "இன்றும் யாழ்பாணத்தில் நிலைமை வழமைக்கு திரும்புவதால் தமிழ் மக்கள் தங்களை அடியோடு மறந்துவிடக்கூடும் என்ற அச்சம்தான் இன்று யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே நிகழும் தாக்குதல்களுக்கு காரணமாகின்றது." என்ற புல்லரிக்கும் வரிகள் எட்டப்பர்களின் தொழில்ரீதியானது. ஏகாதிபத்திய தயவில் பாசிச சிங்கள இனவெறி தர்பார் ஆக்கிரமிப்பில் தமிழ்மக்கள் ஜனநாயக தீர்வை அடைந்துள்ளதாக கூறுவதும், ஆக்கிரமிப்பை அங்கீகரிப்பதும் சமாதான மண்டலமாக காட்டுவதும் நயவஞ்சகத்தனமானது தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டம் இயல்பானது. இதில் புலியல்லாத அமைப்பு இருப்பினும் இது நிகழ்ந்தேயிருக்கும். மக்கள் ஜனநாயகத்தை மட்டும்தான் கோருகின்றனர். சிங்கள - தமிழ் மக்கள் வேறுபாடுயற்ற ஜனநாயக உரிமையைத்தான் கோருகின்றனர். இது மறுக்கப்படும் எல்லா நிலையிலும் போராட்டம் இயல்பானது. இங்கு புலிகள் தாக்கினால் என்ன கம்யூனிசகட்சி தாக்கினால் என் ன இது போராட்டப் பாதையின் வடிவமாகும். புலிகளின் ஜனநாயக விரோத அரசியல் மட்டும் விமர்சனத் துக்குரியதே ஒழிய போராட்டமல்ல.

மேலும் சிங்கள அரசு சார்பாக கூறுவதைப் பார்ப்போம். "..... அங்கு வாழுகின்ற மக்களுக்கு? எங்களை

www.tamilarangam.net

மீட்டுச் செல்லுங்கள் என்றோ, அந்நிய இராணுவம் வெளியேற வேண்டும் என்றோ மக்கள் அபயக்குரல் எழுப்பவில்லை." என்கின்றார். பாசிச சிங்கள ஆக்கிரமிப்பாளனின் இனப்படுகொலை, கற்பழிப்புகளுக்குள் எல்லாம் நல்லாக உள்ளது எனவே போராட்டத்தை கைவிடவேண்டும் என்கிறார் இ.குருஷ்ஷேவ். ஆனால் புலிகளின் மக்கள் விரோத அரசியலைத் தாண்டி மக்கள் ஆதரவும், புலிகளில் இணைவதும் நீடிக்கின்றது. அதுசரி உங்கள் சிங்கள இராணுவம் ஆக்கிரமிக்க மக்கள் கோரினார்களோ. அப்படித்தான் என இனவாதிகளும் அதன் எடுபிடிகளும் விதிவிலக்கின்றி கூறிவருகின்றனர் என்பதை மேற்கூறிய வரிகள் துல்லியமாக நிறுவுகின்றது.

பாசிச சிங்கள ஆக்கிரமிப்பாளனின் சிங்கள மேலாதிக்க ஒடுக்குமுறைக்குள் உள்ளமக்கள் எப்படி புலிகளை போராட பகிரங்கமாக அழைக்கமுடியும். சிங்கள இனவாத அரசு, புலிகள் மக்களை நிர்ப்பந்தித்து போராடவைப்பதாக கூறுவதும், இந்த எட்டப்பன் கூறுவதும் ஒன்றாக உள்ளது. புலிகளின் மக்கள் விரோத அரசியல் மக்களின் அபிப்பிராயத்தை மறுக்கின்றது என்பதால் மக்களின் போராட்டத் தேவையை அது மறுத்துவிடவில்லை. இந்த மக்களின் ஜனநாயகக் கோரிக்கைக்கான போராட்டத்தில் தான் புலிகளின் அரசியல் நீடிப்பு நிகழ்கின்றது. இதை தமிழ்துரோகிகளும், இனவாத அரசும் காணமறுப்பதும் சேறுயடிப்பதும் தொடர்கின்றது. அடுத்து சிங்கள இனவாதஅரசுக்காக வக்காளத்து வாங்குவதைப் பார்ப்போம். "......, சந்திரிகா அரசையும் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தில் இரகசியமாக இராணுவரீதியில் பலப்படுத்திக் கொண்டு சமாதான முயற்ச்சிகளை முறியடித்து மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததன் விளைவு...... ஆப்பிழுத்த நிலைதான்." என்று கூறுவதன் மூலம் சந்திரிகாவின் வெண்தாமரை இயக்கத்தின் ஆதரவாளராக மாறி சிங்கள சமாதான வாதியாகிவிடுகின்றார். பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் மற்றும் இனவாதிகள் போல் இவரும் புலம்புகின்றனர். புலிகள் யுத்தைத்தைத் தொடங்கிய தவறான ராஜதந்திரமற்ற இராணுவவதாப் போக்கை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, சிங்கள இனவாத ஆக்கிரமிப்பாளர்களை சமாதான புறாக்களாக காட்டி, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை "சமாதான முறியடிப்புக்குள்" பூச்சுற்றி விலை பேசும் கயமை புலியெதிர்ப்பு கோசங்களுக்குள் மக்களை விற்று பிழைக்க விரும்பும் துரோகிகளுக்கு ஒப்பானதாக உள்ளது. சிங்கள அரசு சமாதானத்தை முன்மொழியும் நேர்மையான அரசாக இருப்பின் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இன்றியே சுயநிர்ணயயுரிமையை அங்கீகரித்து அதன் அடிப்படையில் சுயமாக இயங்கமுடியும். இதற்க்கு புலிகளோ வேறு யாருமோ தடையாக இருக்கமுடியாது. இதற்க்கு முதலில் தேவை இனவாதமல்லாத சமூகப் பார்வைதேவை. இது உமக்கே இல்லாத போது அந்த இனவாத அமைப்பின் தலைவர்களுக்கு எப்படி ஏற்பட முடியும்.

அடுத்த இனவாத ஆய்வைப் பார்ப்போம். "பலம் பொருந்திய நிலையில் ஆயுதங்களை கீழேபோடாமல் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள் தற்போது, வெற்றிகரமாகப் பின்வாங்கி (அல்லது தற்காலிகப் பின்னடைவு) பேச்சுவார்த்தை மூலமான தீர்வுமீது இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் தகர்த்திருக்கிறார்கள்." என்கின்றார். பேச்சுவார்த்தை மூலம் இன்றைய சிங்கள இனவாத பாசிச புத்தமத அரசிடம் தமிழ்மக்கள் தீர்வு பெற்று இருக்கமுடியும் என்று சத்தியம் செய்கின்றனர். புலிகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வை அடைய முயன்று தோற்கடிக்கப்படும் நிகழ்வை மீள நிறுவவேண்டிய இராஜதந்திர போக்கை மறுத்து, சிங்கள இனவாத சதிக்கு இரையாகி தொடங்கிய இராஜதந்திரமற்ற யுத்தத்தை இனவாத அரசுபோல் இந்தத் துரோகிகளும் பயன்படுத்தி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக பயன்படுத்துவதில் தான் என்ன ஒற்றுமை. ஏதோ அரசு தீர்வை வழங்க காத்திருந்ததாக கயிறு விடுவதும் அதை தமிழ்மக்கள் நம்பவேண்டும் என புலியெதிர்ப்பின் பின் ஒழித்தபடி ஊளையிடுகின்றனர். இருக்கும் இனவாத அரசமைப்புக்குள் ஒரு சமாதான தீர்வு சாத்தியமில்லை என்பதை உலக அரசியல் இலங்கை அரசியல் பலமுறை மீளமீள நிறுவியுள்ளது. அப்படி ஏதாவது ஒரு தீர்வு தள்ளப்படின் அது இனவாதத்தை தகர்க்காத அதன் எல்லைக்குள் மட்டும்தான் பிரசவிக்கப்படுகின்றது. இதை போராடும் அமைப்பு ஏற்றுக்கொள்ளும் எல்லாப் போக்கிலும் துரோகத்துடன் மட்டும் தான் அரங்கேறுகின்றது.
இவரின் அடுத்த கூற்றைப் பார்ப்போம். "பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் துணிச்சலுடன் கடந்தகால நிபந்தனைகளைக்கூட விதிக்காமல் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்த அரசின் கரங்களைப் பலப்படுத்தாமல், காலைவாரிவிட்டதால் அரசுக்குக்கூட அந்த தீர்வுப்பொதி முக்கியத்துவம் அற்றதாகப் போய்விட்டது. வடக்கு - கிழக்கு இணைப்பு, மாநில சுயாட்சி முதல் ஆயுத ஒப்படைப்பு நிபந்தனைவரை பல்வேறு விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வந்த அரசுக்கு, இராணுவத்தின் முனைப்புக்கு அடிபணியவேண்டிய நிலையைக் கொடுத்த பெருமை புலிகளையே சாரும்." என்கின்றார்.

அதாவது துரோகிகள் போல் இனவாத சுத்துமாத்து போல் கைதேர்ந்திருக்கவேண்டும் என்கின்றார். அரசு இராணுவத்திடம் சரணந்துள்ளதாம். இது மாபெரும் கண்டுபிடிப்பு. இராணுவம் யுத்தம் செய்யாது ஒடிஒளித்து விட விரும்பும் நிலையில், புத்தமத குருக்களும், அதன் அச்சு ஏகாதிபத்திய இனவாத அரசும்தான் யுத்தத்தை நடத்த முனைப்பு கொண்டுள்ளது. இந்த சுரண்டும் இனவாத தரகுமுதலாளித்துவ அரசுதான் இராணுவத்தை யுத்தத்துக்கு நகர்த்துகின்றது. இதை மறுத்து புலிகளை குற்றம் சாட்டுவது பச்சை இனவாதமாகும். அடுத்து சந்திரிகா வடக்கு - கிழக்கை இணைத்த மாநில சுயாட்சியை

www.tamilarangam.net

முன்வைத்தாராம். நம்புங்கள் கூறுவதை. எங்கே யாரிடம் முன்வைத்தார். பச்சை இனவாதிகளின் தீர்வு பொதி எனக் கூறுவது இன்று வரையும் வெற்று வார்த்தையாகவே உள்ளது. இது எல்லோருக்கும் தெரியும். ஆனால் புலிக் காய்ச்சல் பிடித்த செம்மறிகளுக்கு மட்டும் தெரிவதில்லை. ஏன்?
தமது வயிறும், தனது குடும்பமும் வாழ்ந்தால் போதும் என நம்பும் இவர்கள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையைக் கூட விலைபேசி சிங்கள இனவாதத்துக்கும், ஏகாதிபத்திய கயவர்களுக்கும் விற்று பிழைப் பவர்கள் இவர்கள். அதற்க்காக இல்லாத ஒன்றை உண்டென்றும், பொய்களை முன்வைத்து இனவாதிகள் போல் பிரச்சாரம் செய்கின்றனர். அதுசரி புலிகள்தான் தீர்வுப் பொதியை குழப்பினர் என்ற ஒருதலைப்பட் சமான சேறுயடிப்புக்கு வெளியில் வரலாற்று அனுபவம் நீடித்துள்ளது. 1948 முதல் எத்தனை பேச்சு வார்த்தைகள், எத்தனை ஒப்பந்தங்கள் அமுலுக்கு வந்தன. அப்போது எல்லாம் புலிகளா குழப்பினர். எப் போதும் சிங்கள இனவாதிகள்தான் அற்ப சலுகையைத்தானும் வழங்க மறுத்து தமிழ் மக்கள் மீது யுத் தத்தை திணித்தனர். இது அன்றும் இன்றும் பொது உண்மையாக உள்ளது. இங்கு புலிகள் இதை சரியாக கிரகிக்க தவறி தாக்குதலில் முந்திக்கொண்ட இராணுவாத அரசியல்தான் விமர்சனத்துக்குரியது. யுத்தம் நிச்சயம் வரும் என்பதை இந்த இனவாத அமைப்பில் சரியாக கிரகிக்க தவறிய புலிகளின் அரசி யல் பலவீனத்தை விமர்சிக்க தவறி, சிங்கள அரசு போல் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை சேறுயடிப்பது துரோகத்தனமாகும்.

அரசு விட்டுகொடுத்ததாம். ஏதை? எனின் யாருக்கும் தெரியாது. அதுசரி தமிழ் மக்களின் நியாயமான உரிமையை, ஜனநாயகக் கோரிக்கையில் நாங்கள் அரசிடம் பிச்சை கேட்க்கவில்லை. அரசு விட்டுக் கொடுக்க அவர்களின் உரிமையில் நாம் பங்கு (இப்படித்தான் சிங்கள இனவாதம் பேசுகின்றது.) கோரவில் லை. மறாக எமது உரிமையை மீட்க்க போராடுகின்றோம். அரசு விட்டு கொருத்தது என்று கூறும் அனை-வரும் இனவாத சிங்கள அரசு நிலையில் நின்றுதான் பேரம் பேசி தமிழ் மக்களை அந்த இனவாத எல் லைக்குள் ஆழப்புதைத்து மீளமுடியாத வகையில் ஒடுக்கத்தான் விட்டுக் கொடுத்ததாக கதையளக்கின் றனர். புலிகள் காலை வாரிவிட்டதால் அரசுக்கு தீர்வு வைக்கவேண்டிய அவசியமற்றதாகிவிட்டது என்று கூறி இனவாத அரசின் நிலையை பாதுகாக்கின்றார். அரசு என்பது தமிழ் - சிங்கள - முஸ்லிம் - மலை-யக மக்களுக்கானதாக இல்லாத போது மட்டும் தான் தீர்வுப் பொதி வைக்கவேண்டிய அவசியமற் றதாகிவிடுகின்றது. இந்த அரசு சிங்கள இனவாத அரசாக உள்ளது அம்பலமாகின்றது. இதை மூடிமறைக் க புலிகள் மேல் குற்றம் சாட்டுபவன் அசல் துரோகியே. அவ்வளவே.

அடுத்த வரிகளை ஆராய்வோம். "சர்வதேச அரங்கில் நடைபெறும் மாற்றங்கள் என்னவோ நம்மவர்கள் கண்ணில் படுவதில்லை. சர்வதேச "கெடுபிடி" அரசியல் சமன்பாடு மாறியதால் ஏற்பட்டமற்றங்கள் எங் களை இன்னமும் பாதிக்கவில்லை.......பாலஸ்தீனம் முதல் அயர்லாந்து வரைக்கும் யுத்தவெறியர்களுக்கும் மத்தியில் சமாதானத் தீர்வுகான முனைப்பு முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. எழுபதுகளில் கம்போடியாவும் எண்பதுகளில் லெபனானும் தொண்ணூறுகளில் பொஸ்னியாவும் இருந்த நிலையில் அங்கு சமாதானம் நிலவுமென்று யார் நினைத்திருப்பார்? ......சர்வதேச பங்களிப்பு......" என அமெரிக்க ஒற்றை உலக ஆதிக் கத்துக்காக சமாதான வேடம் தரிக்கின்றார். "கெடுபிடி" மாறியதைப் போற்றும் மர்மம் அமெரிக்கா தலைமை-யில் உலகை ஆளும் கணவுகளில் தத்தளித்தபடி எழுதும் போது அது அம்மனமாகிவிடுகின்றது. கனடா நாட்டில் அகதி பெயரில் அதில் சுகமாக இருந்தபடிதான் இவர் இப்படி எழுதுகின்றார். இராமேஸ்வரம் மண் டபம் முகாமில் அகதியாக வாழ்தபடியோ, அடுத்த நேர உணவுக்கு என்ன செய்வது எனத் தெரியாது பரிதவித்தபடியோ, குழந்தையின் கதறலுக்கு ஒருவாய் பால் கொடுக்க முடியாத தாய்மையில் நின்றோ, சிறுமியின் பால்மனம் மாறாத நிலையில் விபச்சாரம் செய்யும் நிலையில் நின்றோ, நடக்க முடியாத சிறுவர் சிறுமியர் உடல்உழைப்பில் நாள் பூராவும் உழைத்தபடியோ அல்ல இந்த கனவானின் குடும் பம் இந்த துரோகியும் சமாதானம் பற்றி உரைக்கின்றனர்.

சமாதானம் யாருக்கு வேண்டும் எனின் சுகமாக வாழ்பவனுக்குத்தான். சமாதானத்துக்கு எதிரான போராட்டம் யாருக்கு வேண்டும் எனின் வறுமையில் வாழ்பவனுக்கு, தொட்டாலே தீட்டு என சேரியில் தள் ளபட்டவனுக்கு, கறுப்பு என்றால் நரகம் எனச் சொல்லி ஒடுக்கும் நிறவெறிக்கு எதிராக, பெண் என்றால் அடிமை எனச் சொல்லும் இந்த உலகுக்கு எதிராக என எங்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆயுதப் போராட் டம். இதற்க்கு எதிராக ஒடுக்கும் வர்க்கம்தான் சமாதானத்தை முன்மொழிவதன் மூலம் தமது அதிகாரத் தை பாதுகாக்கின்றனர். அதாவது உலகமயமாதல் அதற்க்கு இசைவான அரசியல் மாற்றங்கள் இ துதான் இன்றைய உலக சமாதானமாகும். கோட்பாட்டில் புலியெதிர்ப்புடன் யோர்ஜ் இ.குருஷ்ஷேவ் ஏகாதிபத்திய அமைதிதான் உலக அமைதியெனக் கருதுபவர். அதுதான் இப்படி புலம்ப முடிகின்றது.
தென் ஆபிரிக்கா கறுப்பு இனமக்கள் கறுப்புத் தலைவனைத் தெரிந்ததுக்கு அப்பால், அரசும் பொருளா-தாரமும் வெள்ளையினத்திடம் இருக்க எற்பட்ட சமாதானம் நீடிக்கமுடியாது. ஏன்எனின் அந்தமக்கள் தமது விடுதலைக்கு போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. பாலஸ்தீன மக்களின் தியாகங் களை விலைபேசி விற்றதுக்கு அப்பால் அரபாத் சாதித்தது என்ன எனக் கேட்பின் இஸ்ரேலிய ஆதிக்கத் துக்கு பட்டுக்கம்பளம் விரித்து சாமரை வீசியதுதான் நிகழ்ந்தது வரலாறாகியுள்ளது. இஸ்ரேல் இடம் கெஞ்சிக் கேட்பதுதான் பாலஸ்தீன மக்களுக்கு சமாதானம் கோருகின்றது. ஒப்பந்தத்தை செய்தவர்களும்

www.tamilarangam.net

அதை பேனை பிடித்து கையெளுத்திட வைத்த அமெரிக்காவும் பாலஸ்தீனமக்களை எட்டி உதைக்கத் தான் முடிந்தது.

கம்போடியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது சுரண்டலை எதிர்த்து அமெரிக்கா ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளரை எதிர்த்து போராடிய வெற்றிகளை பறித்தெடுத்து வழங்கிய சமாதானம் அந்த மக்களை சமாதானவாதிகள் இடம் கையேந்த வைத்துள்ளதுடன் கம்போடியா செல்வத்தை அன்னியர் சூறையாடவே சமாதானம் பிறந்தது. இதுதான் உலக மாற்றம். இதுதான் உலக அமைதி. இதை இலங்கைக்கு கோருவதும், சிங்கள இனவாதத்துக்கு கம்பளம் விரித்து சாமரை வீசுவதும், தனது இனத்தை தற்கொலைக்கு இட்டுச் செல்ல தமிழ்மக்களை கோருவது ஒரு தேசதுரோகியின் குரலே ஒழிய வேறுஒன்றுமல்ல. இவர்கள் ஏகாதிபத்திய அமைப்பை பாதுகாக்க விளக்கங்கள் ஆய்வுகள் பெயரால் மக்களின் அடிப்படை உரிமைகளை கூவிவிற்பது மட்டும்தான் நிகழ்ந்தவண்ணமுள்ளது.

அடுத்த பொன் மொழியைப் பார்ப்போம். ".....இந்தச் சண்டித்தனங்கள் எங்களை "விட்டுக் கொடுப்புகளுடன்" கூடிய சமரசத்துக்கு விடுவதில்லை. மாற்றுத் தரப்பு மட்டுமே சமரசம் செய்ய வேண்டும்........ இந்த யுத்த மனோபாவம் சமாதான வேட்கையாக மாறாதவரைக்கும் சமாதானம் எங்களுக்கு கைக்கெட்டாத ஒன்றுதான்" என்கின்றர். யுத்தமனோபவாம்தான் யுத்தம் என்கின்றர். தமிழ்மக்களின் ஜனநாயகக் கோரிக்கைதான் யுத்தம் என்பதை சிங்கள பாசிச இனவாதிகள் போல் மறுக்கின்றர். முதலில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்கிய பின் யுத்தமனோபாவம் இருப்பின் அதைப் பேசுங்கள். சிங்கள இனவாதிகள் தமது ஏகாதிபத்திய எட்டப்பர் வேலையை மறைக்க பாசிச வடிவம் எடுத்து தமிழ்மக்கள் முன் திணித்த யுத்தத்தை திசைதிருப்பி தமிழ்மக்கள் மீது சாத்துப்படி வைக்கும் பார்ப்பான் போல் வைப்பது கடைந்தெடுத்த நரித்தனமாகும். யுத்தமனோபாவம் தான் சமாதானத்துக்கு தடையென்பது அடிப்படையிலும் தவறானது. மாறாக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை தரமறுப்பதுதான் சமாதானத்துக்கு தடை மட்டுமின்றி இன்றைய யுத்தத்துக்கும் அடிப்படையாக உள்ளது.
புலிகளின் அரசியல் தவறான போக்கில் அதன் ஜனநாயக விரோத அரசியலை சாதகமாக கொண்டு தமிழ்மக்களின் உரிமைப் போரை சேறுயடிப்பது கேடுகெட்ட மோசடியாகும். புலிகளின் ஜனநாயக விரோத அரசியலுக்கு எந்த விதத்திலும் குறைந்தல்ல அரசு தமிழ்மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை மறுத்து ஒடுக்குவது.

ஆனால் புலியெதிர்ப்பு கனவான்களுக்கு முதலாவது மட்டும் கண்ணுக்கு தெரிவதும் மற்றதை மூடிமறைத்து பிரச்சனையை திசைதிருப்புவது சிங்கள இனவாதத்துக்கு சாமரை வீசுவதாகும். இப்படி வேடம் இடுபவர்களையிட்டு "சமூகப்பொறுப்புடனும் சமாதான வேட்கையுடனும் ஈடுபடுபவர்களுக்குக்கூட, பல்வேறு தடங்கல்கள்." என்கின்றார். என்ன சமூக பொறுப்பு. என்ன சமூக வேட்கை. எல்லாம் ஏகாதிபத்திய ஒழுங்குதான். எல்லாம் வசதியனவன் வழ வைக்கும் வேட்க்கைதான். எப்போதும் ஒடுக்குபவனின் சார்பான சமாதான சமூகப் பொறுப்புதான். சிங்கள மேலான்மை மீதான பற்று விசுவாசம் தான் சமாதான நாட்டம். இதுதான் புலியெதிர்ப்பு ஜனநாயக வேடதாரிகளின் கனவு. தொடர்ந்து கடமை தொடர்பாக கூறுவதைப் பார்ப்போம். "எது தடையாக இருந்தாலும் எங்கள் குறிக்கோள் ஒன்றுதான். அடிப்படை மனிதஉரிமைகளை மதிக்கும், சமாதானத்துடன் கூடிய, சுயகௌரவத்துடன் வாழும் ஜனநாயக வாழ்க்கைமுறை. யுத்தத்திற்க்கும் அழிவுக்கும் எதிரான சிந்தனைப்போக்கு. அதை நோக்கியதாகத்தான் எங்கள் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்." என்கின்றார்.

அடிப்படை மனித உரிமை என்பது முதலாளி தொழிலாளியை சுரண்டும் உரிமை. சுயகௌரவத்துடன் வாழும் உரிமை இருப்பவன் இல்லாதவன் பற்றி அக்கறையற்ற சுயகௌரவம் கொண்ட பூமியின் அமைதி. ஒடுக்கப்பட்டவன் யுத்தம் செய்தால் முதலாளியின் அழிவை எதிர்த்த சிந்தனை அதை நோக்கிய குரல்கள்தான் குறிக்கோள். பார்ப்பான் - பள்ளன் அமைதிப் பூங்கா, தமிழன் - சிங்களவனின் இனவாதத்தைக் கேள்வி கேட்க்காத சமாதான வேட்கையை படைக்க வேண்டுமென்கின்றார். அமைதி, சமாதானம் ஒடுக்குபவனுக்கும் வசதியாக வாழ்பவனுக்கும் சார்பானது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சார்பானதல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் எப்போதும் தமது உரிமைக்காக போராட்டத்தை நடத்துகின்றனர். இது அமைதியை கெடுக்கிறது என்றோ, யுத்த பிரியர்கள் என்றோ ஒடுக்குபவன் மீளமீள வரலாறு எங்கும் புலம்பிய நத்தல்களே. மக்கள் எப்போதும் போராட்டத்தையே தமது வாழ்வாக கொண்டனர்.
இதை மறுத்து ஆதிக்க சக்திகளுக்காக எப்படி குரல் கொடுக்கின்றார் எனப் பார்ப்போம். "உலகநாடுகள் எங்கும் சிதறிப்போனாலும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் தங்கள் மொழியையும் தாய்நாட்டையும் மறக்காமல், "அடுத்த பாஸ்கா ஜெயுசலேமில்" என்று பாடிக்கொண்டே யூதர்கள் வாழ்ந்தார்கள். வெறும் கோஷங்களோடு மட்டும் நில்லாமல், பொருளாதாரரீதியில் பலம்பெற்றதால் இன்று தமது விருப்புவெறுப்புகளிற்கேற்ப உலக அரசியல் போக்கிலும் அவர்களால் அழுத்தம் கொடுக்க முடிகிறது." என்று எழுத சுகன் தொகுக்க சனநாயகவாதிகள் அச்சேற்றிய நிலையில் அதை கொண்டாட "சுகிப்பு" சந்திப்பையும் நடத்தினர்.

www.tamilarangam.net

யாழ்பாண வெள்ளாளர் மேலான்மைதான் அடிக்கடி யூத உதாரணத்தைக் காட்டி அப்படி நாம் இருக்க பிரகடனம் செய்கின்றனர். ஆயிரம் ஆண்டு தாண்டினாலும் தங்கள் தாய்நாட்டை மறக்காமல் இருப்பதாக கூறுவதன் மூலம் 1948 இல் பாலஸ்தீன மக்களை துரத்தி ஆக்கிரமித்த அராஜகத்தை மூடிமறைத்து இந்த ஏகாதிபத்திய விசுவாசி யூதரின் பெயரில் கரடிவிட்டு சாமரை வீசுகின்றார். பொருளாதார பலம் பெற்று உலக அரசியலில் விரல் விட்டு ஆட்டுகின்றனராம். அருமையிலும் அருமை பொருளாதாரத்தில் எப்படி பலம் பெற்றனர். யூத முதலாளிகள் மக்களை ஓட்டச் சுரண்டி அதை ஆக்கிரமிப்புக்கு பயன் படுத்தும் அதே தந்திரத்தைத் தான் இந்தியா பார்ப்பான் பெரும் செல்வந்தர்ராக தாழ்த்தப்பட்ட மக்கள் முதல் அனைவரையும் சுரண்டி ஆக்கிரமிப்புக்கு ஆதிக்கத்துக்குமாக அலைகின்றனர். யூத மக்களுக்கு என்று ஒரு தேசம் இஸ்ரேல் என்ற நாட்டை அமெரிக்கா ஏகாதிபத்திய ஆதரவுடன் உருவாக்க முன் இருந்ததில் லை. இன்றும் அமெரிக்கா வரவு செலவிலும், அமெரிக்க ஏகாதிபத்திய உலக பாதுகாப்பிலும் தான் இஸ் ரேல் இருக்க முடிகின்றது. நாட்டை இராணுவ மயமாக்கி யுத்த நெருக்கடியை பேணுவதன் மூலம், அரபு உலகில் அமெரிக்கா ஏகாதிபத்திய ரவுடித்தனத்தில் குட்டி ரவுடியாக உயிர் வாழும் நாடுதான் இஸ் ரேல். இன்று பாலஸ்தீன மக்களின் வாழ்வு எங்கள் ஊரில் சேரியில் வாழ்வோர் போலும், அவர்களின் மண் ணை தொடர்ந்து ஆக்கிரமிப்பதன் மூலமும், படுபிற்போக்கான யூத மத பேணுகையிலும் அதன் கேவலங் களிலும் பாதுகாக்கும் மதப் பண்பாடு கலாச்சாரம் மொழி என்பன சமூக ரீதியில் எதிர் தன்மை வாய்ந் தவை. யூத முதலாளிகளின் ஈவிரக்க மற்ற சுரண்டும் பண்பாட்டை மற்றைய முதலாளிகளில் இருந்து வேறுபடுத்தி பார்க்கக் கூடிய வகையில் வேறுபட்ட மிக கேவலமான பாத்திரத்தை இனம்காணமுடியும். யூத இனத்தை இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசிகள் ஒடுக்கிய வரலாற்றில் இருந்து எந்தவிதத் திலும் வேறுபட்டது அல்ல இன்றைய பாலஸ்தீன மக்களின் நிலை. அந்தளவுக்கு யூத ஒடுக்குமுறையுள் ளது. யூதன் பற்றிய பிரமைகள் விளக்கங்கள் முன்னெடுப்புகள் எல்லாம் மற்றவனை ஒடுக்கும் போக்கு சார்ந்தது. இருபது கோடி செவ்இந்திய மக்களை கொன்றும் ஆக்கிரமித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் யூத ஒடுக்குமுறையை பாதுகாக்க அணிவகுப்பதும், அதை விளக்கி போற்றுவதும் ஆக்கிரமிப்பாளன் சார்பானதே.

இதைப் பாதுகாத்து போற்றுவது பள்ளன் பறையரை பொருளாதார பலம் கொண்டு ஒடுக்கி பலம் பெற்ற உயர்சாதிகள் போற்றுவதுக்கு இணையானது. பின்நவீனத்துவ படைப்புகள் இது போன்ற ஆதிக்க பிரிவுகளை பாதுகாக்க உருவாக்கப்பட்டது தான் என்பதை இவ் வெளியீடு கோடுயிட்டு காட்டியது. தலித் பின்நவீனத்துவம் என எல்லாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏகாதிபத்தியத்தை பாதுகாக்கும் நெம் புகோல்கள் தான் என்பதை இவ்மலர் செம்மையாக நிறுவியுள்ளது.

__குறிப்பு 1:__ இதையொட்டி கருத்துகளை கொண்ட ஏகாதிபத்திய பிரச்சார நாயகன் காமினி வியான்கொட "அரசியல் தீர்வின் எதிர்காலம்" என்ற கட்டுரையை எழுதியுள்ளார். "அரசியல் தீர்வில்" நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தமிழ்மக்களையும், புலிகளையும் கோருவதன் மூலம் சிங்கள அரசின் இனவாதத்துக்கு மூகமுடி போடுகின்றார். அரசியல் தீர்வு என்பது ஆணுக்கு எதிரான பெண்ணின் ஜனநாயகக் கோரிக் கையை மறுத்து, ஆணின் ஆணாதிக்கத்துக்கு உட்பட்டு வாழும் விட்டுக்கொடுப்புக்கு உடன்பட வேண்டும் என்கின்ற ஆணாதிக்கமாகும்.(இது சிங்கள மேலாதிக்கமாகும்.)
__குறிப்பு 2:__ அடுத்துபெண்ணியத்தை அணுகுதல் குறித்து எஸ்.வி.ற.'.பேல் எழுதிய கட்டுரையில் ஒருப- குதியைப் பார்ப்பதன் மூலம் அக்கட்டுரையை விமர்சனமின்றி புரிந்து கொள்ளமுடியும். "பாலியல் செயற் பாடுகளில் மீதான, அவை தொடர்பான மனித நடவடிக்கைகளில் மீதான பார்வையுடன் மட்டுமே பெண் ணியச் சிந்தனைகளை அணுகுவதென்பது காலங்கடந்த ஒன்றாகத் தோற்றம் அளிக்கின்றது. ஏனெனின் "பெண்" எனும் கருத்தாக்கம் "பெண்" சார்ந்த உடலாகவும், பெண்சார்ந்த மனம் ஆகவும் பார்க்கப்படத் தொடங்கியாயிற்று." என்கின்றார். பெண்விடுதலை என்பது பாலியலின் பின் உடலாகவும் தற்போது மனம் சார்ந்ததாகவும் பார்பாதல் பார்த்தால் பெண்விடுதலைக்கு வித்திடும் என்கின்றார்.
பெண்விடுதலையை இந்தமாதிரி கொச்சைப் படுத்துவது நகைப்புக்குரியது. பெண்ணின் பிரச்சனையை பாலி யல், உடல், மனம் என வகைப்படுத்தி காட்டுவது பிரச்சனையை திசைதிருப்புவதாகும். பெண்ணின் பிரச் சனை என்பது ஆணாதிக்கமாகும். இது சுரண்டுவதில்தான் கட்டியமைக்கப்பட்டுள்ளது. அதாவது சுரண்டல் சமூகத்துக்கு இசைவாக பெண் ஒடுக்குமுறை மாற்றம் காண்கின்றது. பெண்விடுதலை என்பது சுரண்டல் சமுதாயத்துக்குள் சாத்தியமில்லை. ஆனால் சீர்திருத்தங்கள் நடக்கமுடியும். இதுவும் மாறுகின்ற உற்பத் திமுறைக்குள் மட்டும்தான் சாத்தியம். இது வரலாறு முழுக்க நீண்ட ஆதாரமாக உள்ளது. பெண் அடிமைப்படுத்திய வரலாறு என்பது சுரண்டல் சமுதாயத்தின் தொடக்கத்தில் உருவானதே. இதில் ஆண் பெண்ணின் உழைப்பை, உடலை என அனைத்தையும் சுரண்டிய போக்கு சமுதாய சுரண்டலுக்கு வெளியில் ஒருபோதும் தொடங்கியதில்லை. பார்ப்பானியம் எப்படி சுரண்ட தீண்டத்தகாதவர் முதல் சாதியமைப்பை தொடங்கினர்ரோ அது போல்தான் இந்த ஆணாதிக்கமும் மற்றவனை சுரண்டி சுகபோகமாக வாழ எனக் கருக்கொண்ட அடக்குமுறையாகும். பெண் ஆணாதிக்கத்தில் இருந்து விடுபட வேண்டுமாயின் சுரண்டல் சமுதாயத்தை எதிர்த்த போராட்டத்தில் எல்லா துறையிலும் விதிவிலக்கின்றி நடத்தவேண்டும்.
இந்த ஆணாதிக்கம் சுரண்டல் சமுதாயத்தில் ஒன்றுடன்ஒன்று இணைந்து போய்யுள்ளது. —> பக்:4ல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓர் சமூகச் சீரழிவின் தொடக்கம்...........

குப்பையைக்கிண்டி பொறுக்கி வாழ நிர்ப்பந்திக்கும் நவநாகரிக உலகில், மிருகத்திலும் கேவலமாக எலும்புக் கூட்டு மனிதனாக வாழ நிர்ப்பந்தப்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த "ஜனநாயக சமாதான" உலகம். இங்கு நூற்றியிருபது கோடி மக்கள் அடுத்த நேர உணவுக்கு வழி தெரியாது பரிதவிக்கும் படுமோசமான வறுமையில் வாடுகின்றனர். ஐம்பது கோடி மக்கள் ஒரு வாய் குடிக்க தண்ணீர் இன்றி பரிதவிக்கின்றனர். இருபத்தி ஐந்து கோடி பச்சிளம் பாலகர்கள் உடல் உழைப்பிலும், விபச்சாரமும் செய்யவும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இதே தொகை கொண்ட மக்கள் சாதியத்தால் ஒடுக்கப்பட்டு தொட்டாலே தீட்டு எனக் கூறி சேரியில் தள்ளி கையேந்த வைக்கப்பட்டுள்ளனர். இப்படி எங்கும் எல்லாம் உலகமே மனிதனின் துன்பங்களினதும் துயரங்களினதும் நரகமாய் சாக்கடையாய் உள்ளது.

இதே நேரம் இலங்கையில் இனவாத யுத்தம் மக்களை மேலும் மேலும் துன்பத்துக்குள்ளும், துயரத்துக்குள்ளும் நகர்த்துகின்றது. தமிழ் பேசும் மக்களை இலங்கையில் நாயிலும் கீழாக வாழ வைத்துள்ள இனவாதிகள், அவர்களைக் கொன்றும், பெண்களை பாலியல் பலாக்காரத்துக்கு உட்படுத்தியும், சிறார்களை குண்டு மழைக்குள் மிரட்டி நலிவுற்ற எதிர்கால தமிழ் சமூகத்தை உருவாக்கவும், தமிழ் பேசும் மக்களின் வாழ்வை அழித்தும் சூறையாடியும், சொந்த மண்ணை கவர்ந்தும், பயங்கரவாதிகளாக காட்டியும், கைது செய்தும், சித்திரவதை செய்தும் முடிவற்ற எல்லையில்லாத அரக்கத் தனத்தில் ஈடுபட்டுள்ளது. மறுபுறம் புலிகள் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயகத்தை, சுதந்திரத்தை மறுத்து, நியாயமிக்க போராட்டத்தை சுத்த இராணுவவாதத்துக்குள் நகர்த்தி, இன்று போராட்டத்தை மீளமீள தொடர்ச்சியான முட்டுக்கட்டைக்குள் இட்டுச் செல்கின்றனர்.

இலங்கை இன்று ஏகாதிபத்திய நுகத்தடிக்குள் மறுகாலனியாக்க வேகம் பெற்றுள்ளது. மக்கள் வாழ வழிதெரியாது முழிபிதுங்கி நிற்க்கின்றனர். கடன்வாங்க நிர்ப்பந்திக்கும் ஏகாதிபத்தியம், மானியங்களை நிறுத்தவும், ஏகாதிபத்தியத்துக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்யவும் உத்தரவிடுகின்றது. வரவுசெலவை ஏகாதிபத்தியமே தயாரிக்கவும், யுத்தத்தை நடத்தவும், மக்களை ஒட்ட உறுஞ்சவும் என நாட்டின் உயிர் மூச்சை நெரிப்பதில் தமது கைக்கூலிகளை வைத்துள்ளது. தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக உரிமையை பறிக்கக் கூட இன்று ஏகாதிபத்தியம் வந்துவிட்டது. பெண்கள் அதே ஆணாதிக்கப் பிடியில் தொடரும் நிலை. பற்பல வேஷங்கள், கோட்பாடுகள் வந்து சென்றன செல்கின்றன வருகின்றன. பெண்கள் ஆணாதிக்க அதே சுரண்டல். சாதியம் தனது போராட்ட வீறு இழந்து அதே சேரியில் முடங்கிக்கிடக்கின்றது. சேரி பெயரில் "காலனி" என பெயர்மாற்றம் கண்டதுதான் மிச்சம். சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் புதிய சாதிய கோசங்களால் மீண்டும் ஒடுக்கப்படும் கொடூர நிலை. மாற்றம் எல்லாம் வசதியாக சிலர் சுரண்டிவாழக் கோருவதற்க்கு அப்பால் நகரவில்லை.

இப்படி மக்களின் துன்பங்கள், துயரங்கள் தொடர, இவைகளை கேலி பேசியபடி அண்மைக் காலமாக மக்களின் போராட்ட உணர்வை, தியாகத்தை அரசியல் அற்ற புலியெதிர்ப்பு கோசத்தின் பின்னால், முற்போக்கு வேஷசத்தில் கொச்சைப்படுத்தி கருத்துச் சுதந்திரத்தின் பெயரில் வெளிவரத் தொடங்கிய வெளியீடுகள், மக்களை வழிகாட்ட எந்த முயற்சிகளுமின்றி, அவர்களுக்கு எதிராக கூடிக்குடித்து கும்மாள வம்புகளுக்குள் கூத்தடிப்பாக பலதளத்தில் களம் கண்டுள்ளது. முற்போக்கு வேடமிட புலியெதிர்ப்பு கோசம் மட்டும் போதுமானது என நினைக்கின்றனர் பலர். புலியெதிர்ப்பு கோசத்தின் பின் மக்கள் விரோத அரசியலை அரங்கேற்றுகின்றனர் சிலர். சிலர் அரசுக்காகவே சேவகம் செய்யும் நாய்களாக தமது துரோகத்தை அரங்கேற்றுகின்றனர். சிலர் கடைந்தெடுத்த வியாபாரிகளாக அரசியலைப் பயன்படுத்தி மக்களை வறுகத் தொடங்கியுள்ளனர். இன்னுமொரு கூட்டம் இன்று நடைபெறும் போராட்டத்தை கொச்சைப்படுத்திய படி தமது வக்கிரங்களை வெளியிடுகின்றனர். இன்று ஆயிரம் ஆயிரம் மக்கள் எம் நாட்டில் தமது உயிரை, உடைமைகளை, வாழ்வை இழந்து நாதியற்ற மக்களாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ள நிலையில், அவைகள் எல்லாம் இவர்களுக்கு பொழுதுபோக்கு விடையமாக, மக்களின் தியாகங்களை தமது அரிப்புகளுக்கு தீனி போடும் விடையங்களாக மாற்றிவிட எந்த வெட்கமுமின்றி வெளிக்கிளம்பியுள்ளனர்.

இன்று சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக போராடி ஆயிரம் ஆயிரமாக இறந்து போகும் போராளிகளின் தியாகங்களை, போராட்டயுணர்வுகளை புலியெதிர்ப்பு கோசத்தின் ஊடாக கொச்சைப்படுத்தி கேவலப்படுத்தி சேறுவீசும் இவர்கள் மக்களுக்காக என்ன செய்கின்றனர் எனக் கேட்டால் போதைத்தன கலாசார சீரழிவைத்தான் "கட்டுடைத்த" புரட்சியாக முன்வைக்கின்றனர். போராட்டத்தின் பின் உள்ள தியாகங்கள், போராட்ட உணர்வுகள் கொச்சைப் படுத்த முடியாத மகத்தானவை. இதில் உள்ள விமர்சனம் புலிகளின் அரசியல் தான். போராட்டத்தின் நியாயமான பக்கங்கள், அதற்க்கு போராட வேண்டிய உணர்வுகள், அதற்கான தியாகங்கள் புலிகள் என்பதால் கொச்சைப்படுத்தி வந்த இந்த வம்பளக்கும் பிரிவு, மாற்றாக எதையும் வைக்க முடியாத நிலையில் முதலாளித்துவ சீரழிவுக்குள் சிக்குண்டு அலைகின்றனர்.


இன்று இலங்கையில் இனவாத யுத்தம் மக்களை சொல்லொண்ணர துன்பத்திலும், துயரத்திலும், அவ் வாழ்வை வார்த்தைகளால் எழுதமுடியாத வேதனைகளுக்குள் இட்டுச் சென்றுள்ளது. இவற்றைப்பற்றியோ, ஆணாதிக்க கொடுமைகளையோ, சாதிய கொடூரங்களையோ..... எந்தவிதமான சமூக அக்கறையுமின்றி, புலம் பெயர் நாட்டில் சந்திக்கின்ற முடிவற்ற நெருக்கடிகளைப் பற்றி எந்த உணர்ச்சிகளுமின்றி இவைகளை புலியெதிர்ப்பின் பின் மூட்டை கட்டி வைத்துக் கொண்டு, அதில் ஏறிநின்ற படி புகழ் உரைக்கவும், பெருமை பேசிக்கொள்ளவும் பின்நிற்காத கூத்தும், குடியும் கும்மாளமும், கொசிப்பும், முதுகு சொறிவும் தான், புலிக்கு மாற்றாக இவர்கள் வைத்திருக்கும் ஒரே வேலைத் திட்டமாகும். எல்லாவற்றுக்கும் இவர்களிடம் உள்ள ஒரே பதில் புலிகள் கருத்துச் சுதந்திரத்தை மறுப்பதால் எதுவும் செய்ய முடியவில்லை என்பதாகும். இன்று இவர்களுக்கு புலிகள் கருத்துச் சுதந்திரத்தை மறுக்க, இவர்களிடம் என்ன மாற்று தீர்வு, மாற்று வழி உண்டு எனின் "முதலாளித்துவ சீரழிவும்", அதில் வம்பு விவாதம் நடாத்துவதும்தான்.

இலக்கியம் என்பதும், எழுத்து என்பதும் முதலாளித்துவ சீரழிவுகளோடும் ஏகாதிபத்தியத்தின் எச்சிலை விழுங்கிக் கொண்டும் அதற்க்கு விசுவாசமிக்கதாகத்தான் படைக்கமுடியும் என வாதிடும் இக்கும்பல் இச் சீரழிவில் சிக்குண்டு இப்புலம் பெயர் சூழலில் உருவாகி வருவது புகலிட இலக்கியத்துக்கும் எமது போராட்ட உணர்வுகளுக்கும் எதிர்நிலை கொண்டதாகவே காணப்படுகின்றது. சமூகச் சீரழிவின் வெளிப்பாடான குடியும், போதையும், "டிஸ்கோ"தனங்களும் தங்களது முற்போக்கை நிர்ணயம் செய்யும் காரணியென புதியவியாக்கியானம் கொடுக்கும் இக்கும்பல், எமது மக்களின் போராட்ட உணர்வுகளைப்பற்றி எவ்வித அக்கறையுமற்று எதிர் நிலை கருத்துகளை வைப்பதும் சீரழிவு கலாசாரங்களை தூக்கிப் பிடிப்பதும் மிகவும் கண்டனத்துக்குரிய விடையமாக இருக்கின்றது.

இவர்களின் இந்த முதலாளித்துவ கலாசார சீரழிவின் உச்சநிலைக்கும், கொசுப்புத்தனத்துக்கும் எடுத்துக்காட்டாக அண்மையில் இவர்களால் வெளியிடப்பட்ட இரண்டு துண்டுப் பிரசுரத்தையும் நாம்கவனத்தில் கொள்ளலாம். சமீபத்தில் வெளி வந்த "இருள்வெளி" மலர்பற்றி "சுகிக்க" அழைத்த துண்டு பிரசுரத்தில் (பார்க்க பிரசுரத்தை) "நாலுநியாயத்தை அடிச்சுக் கதைக்க "வைன் விஸ்கி பியர்" எனப் போட்டு (இங்கு சுகிக்க பெண் மட்டுமில்லை. ஆதையும் போட்டு இருந்தால் மேலும் பின்நவீனத்துவ வழியில் கட்டுடைத்த மாதிரி இருந்திருக்கும்.) ஆயிரம் ஆயிரம் மக்களின் தியாகத்தையும், போராட்டவுணர்வுகளையும் "வசந்தகால ஒன்றுகூட"லில் "சுகிக்கவும்", "நாலுநியாயத்தை அடிச்சுக் கதைக்க"வும் "வைன்", "விஸ்கி", "பியர்"ரை..... குடித்து கூத்தடிக்கவும் சமூகப் பற்றாளர்களை அழைத்து, போராட்டத்தை கேவலப்படுத்த அழைத்த, இந்த "முற்போக்கு" வேடமிட்ட பிற்போக்குகளை இனம் கண்டு அம்பலப்படுத்த வேண்டியது, சமூக அக்கறை கொண்டோரின் இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

www.tamilarangam.net

மக்களின் பிரச்சனையை சொல்லி "தின்ன", "குடிக்க", "சுகிக்க", "வம்பளக்க", "முதுகுசொறிய" அழைப்பதன் மூலம், மக்களுக்காக போராட வேண்டிய மிக பொறுப்புள்ள அர்பணிப்புள்ள சீரிய பணியை கேவலப்படுத்துவதன் ஊடாக, இவர்களின் கனவுகளும் தீர்வுகளும் நனவாகின்றது.
இன்று மண்ணில் தியாகம் செய்யும் ஒருவனின் உணர்வுகளில் நூறில் ஒரு பங்கு கூட செய்ய முடியாத இந்த கூட்டத்தின் நக்கிப்பிழைக்கும் அரசியல் கேவலத்தை சமூக அக்கறைக் குரிய வர்கள் இனம் காணவேண்டியது கடமையாகும். சமூக அக்கறைக்குரியவர்களாக தம் மைத்தாம் சொல்லிக் கொள்ளும் இவர்கள், சமூகத்தின் ஏதாவது ஒரு பிரச்சனையை எடுத்து அதற்காக நேர்மையாக உழைக்க முடியாத இவர்களின், மோசடியை இனம் கண்டு கொள்ள வேண்டியது இன்றைய சமூக கடமையாகும். மக்களின் வறுமை, இன ஒடுக்குமுறை, மக்களுக்கு மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம், ஆணாதிக்கம், சாதிய கொடூரங்கள்.......போன்ற துன்பங்கள், துயரங்கள் "சுகிக்கும்" வக்கிரங்களால் மேலும் அதிகரிக்குமே தவிர, மக்களின் பிரச்சனைக்கான தீர்வு இந்த மாதிரியான "பம்பல்" அரசியல் கும்மாளங்களினால் தீர்வதில்லை. மாறாக மேலும் அதிகரிக்கவே செய்கின்றது..




புலிகளை ஜனநாயக விரோதிகள் எனக் கூறிக் கொண்டு மக்களுக்காக உண்மையாக இருப்பதாக கூறிக் கொள்ளும் இவர்களின் போதைத்தனமும் முதலாளித்துவ சீரழிவுகளும் புலிகளின் நடவடிக்கைகளை விட மிககேவலமானதும், மோசமானதாகும். அவர்களின் ஜனநா யக விரோதத்தை விட மக்களின் தியாகங்களை, போராட்ட உணர்வுகளை விபச்சாரம் செய்யும் - சேற்றில் உழலும் இவர்களின் பன்றித்தனம் தான் மிக மோசமானது. இன்று தேவை மக்களுக்காக உண்மையில் போராடும் நேர்மையான மனிதர்கள்தான். போராட்ட தியாகங்களை மதிக்கும், போராட்டத்தை நேசிக்கும், புலிகளின் அரசியலை கேள்விக்குள்ளாக்கும் அதற்க்கு மாற்றான போராட்டப் பாதையை வைக்கும் கோட்பாடுகள் தான் உண்மையான முற்போக்கு மாற்று அரசியலாகும். அரசின் இனவாதத்துக்கு எதிராக உறுதியாக போராடவும், புலிகளின் அரசியல் வழியை விமர்சிக்கும் தெளிவான போராட்ட மார்க்கம் மட்டும் தான் மக்களின் பிரச்சனைக்கு உண்மையாக போராட அழைக்கும் அறைகூவலாகும்.

றயா, அசோக்

குறிப்பு:- இத் துண்டுபப்பிரசுரம் வெளியாகிய பின் நடந்த இந்த தின்டு குடித்த சந்திப்புக்கு
சமூக அக்கறைக்குரியோர் கலந்து கொள்ளாது பகிஸ்கரித்தனர். அதே நேரம் இதில் அரைக்கரவாசி இலங்கை அரசுடன் இயங்கும் துரோககுழுக்களின் ஆதராவாளர்கள் அனுதாபிகள் தயவுடன் முதுகு சொறிவோர் மற்றும் குடிப்பதற்க்கு நாக்கை தொங்கப் போட்டபடி அலைந்து திரிவோர் உள்ளடக்கி நடந்த கூத்தடிப்பில் சமூகம் பற்றி எந்தவிதமான அக்கறையுமின்றி தம்மைத்தாம் முதுகு சொறிவதிலும், குடித்து கும்மளமடித்தும் தமது சமூக சிராழிவை மிகதுல்லியமாக மீள ஒருமுறை நடைமுறையில் இனம் காட்டிக் கொண்டனர்.

இணையவலை முகவரி http://home.c2i.net/thesam

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழாக வெளிவருகிறது

NAME
T.NAZEERATAF
Post Books = 10
5125 Bovagen
Norway

தமிழீழ தேசபக்த முன்னணியினர் கூழக வெளியீடு
(த.தே.மு.க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுரண்டுவதில் தொடங்கிய ஆணாதிக்கம்

## சுரண்டல் ஒழியும் போது பெண்விடுதலை அடைவாள்

"தென்னாசிய சமூகத்தில் பெண்நிலைவாதம்" என்ற தலைப்பில் லஷ்மியால் மொழிபெயர்க்கப் பட்ட கட்டுரை தென்னாசிய பெண்கள் அமைப்பு பிரதிநிதிகளால் எழுதப்பட்ட நூலில் இருந்து தமது கோட்பாட்டு இணக்கத்துடன் விசுவாசமாக எடுத்து எக்ஸிலில் முன்வைத்துள்ளார். இதை ஆராய்வோம்.

"சமூகத்தில் நிலவும் பால் அடிப்படையிலான ஒடுக்குதல், ஆணாதிக்கம், தந்தைவழி சமூகம் என்பவற்றின் இருப்பைக் கண்டுகொண்டு, இவற்றிற்கு எதிரான ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர் பெண்நிலைவாதி ஆவார்." எனக்கூறும் கட்டுரை பெண்கள் மீதான ஒடுக் குமுறையை மறைமுகமாக மறுத்தும், இயங்கியலை மறுத்தும் பெண் விடுதலையின் ஆரம்ப பார்வையே ஆணாதிக்கத்தில் இருந்து தொடங்குகின்றது. முதலில் ஒரு பெண் பெண்ணாக இருக்கிறாள் எனின் அவளின் ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தான் அவள் உயிர்-வாழ்கின்றாள். ஆணாதிக்க சுரண்டலுக்கு எதிரான போராட்டம் இன்றி உலகில் எந்தப் பெண் ணும் உயிர்வாழவில்லை. இதுதான் பெண் உயிர் வாழ்தலின் அடிப்படையாகும். ஆனால் இப் போராட்டம் தன்னியல்பாக நாள் தோறும் அவர்களை அறியாமலும் அறிந்தும் நீடித்தவண்ணம் உள்ளது. முதலில் ஒரு பெண் பெண்ணாக இருக்கும் போக்கில் போராட்டம் பிரிக்க முடியாத அம்சமாக இருக்கின்றது. ஆகவே போராட்டத்தை ஆணாதிக்கத்துக்கு எதிராக தெரிந்தும் தெரியாமலும் தன்னிச்சையாகவும் செய்யும் அனைவரும் பெண்ணிலைவாதிகளாக இருப்பதில் லை. மாறாக பெண்களாக உள்ளனர்.

பெண்ணிலைவாதி பெண் ஒடுக்கு முறை எப்படி தொடங்கியது என்பதை தெரிந்து கொண்டு அதை எப்படி ஒழித்துக் கட்ட முடியும் என்பதை விஞ்ஞான பூர்வமாக புரிந்து அதற்க்காக போராடுபவர்கள் மட்டும்தான் பெண்ணிலைவாதிகள் ஆவர். சமூதாயத்தில் பெண் ஒடுக்குமுறை தொடங்க காரணமான சுரண்டலில் தொடங்கி, பெண்ணை சுரண்ட அடிமையாக்கிய தொடர்ச் சியில் பெண் மீதான பாலியல் சுரண்டலை தொடங்கியது முதல் இதை ஒழித்துக் கட்டும் போராட்டத்தில் இறுதியானதும் முடிவானதுமான சுரண்டலை ஒழித்துக் கட்டும் போராட்டத்துடன் தொடர்புடையது என்பதை புரிந்து அதற்க்காக போராடாத எவரும் பெண்ணிலைவாதியாக இருப் பதில்லை. ஏனெனின் இதை மறுக்கும் யாரும் பெண்களுக்கு சலுகை கோருவதற்க்கு அப்பால் ஆணாதிக்கத்தை ஒழித்துக்கட்ட போராடுவதில்லை.

இன்று பொதுவாக ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதை மறுக்கின்ற, புரிந்து கொள்ளாத பலர் பெண்ணிலைவாதிகளாக சித்தரிக்கப்படுகின்றனர். இந்த வகையில் இருக்கும் சமூக எல் லையை தாண்ட கோரும் (கட்டுடைப்பை) எல்லா செயல்களிலும், ஈடுபடும் அனைவரும் பெண் நிலைவாத வேடம் போட்டுக்கொள்கின்றனர். ஒரு கவர்ச்சி மொடலிஸ்ற் முதல் சீர்திருத்தத்தை முன்வைக்கும் அனைவரும் உண்மையில் பெண்நிலைவாத வேஷத்துடன் ஆணாதிக்க இருத்

www.tamilarangam.net

தலுக்காக முண்டுகொடுக்கின்றனர். அதாவது சமூகத்தில் வேறுபட்ட பல்வேறு ஒடுக் குமுறைகளில் ஒடுக்குவதற்கு சாதகமாக இருந்தபடி பெண்நிலைவாதிகள் வேஷத்துடன் பெண்களை ஏமாற்றி சீரழிக்க ஆளும்வர்க்கங்களால் கோட்பாட்டு செயல் தளங்கள் இடப் படுகின்றன. இன்று ஏகாதிபத்தியத்தால் பெண்விடுதலை கோசங்களுடன் கட்டியமைக்கப்பட்டு களத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தன்னவர் பெண் விடுதலைக் குழுக்களின் பிரதிநிதிகள் கூட பெண்நிலைவாதியாக உலாவருகின்றனர். இன்னுமொருபுறத்தில் மாறுபட்ட பொருளாதார (நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, ஏகாதிபத்திய) இடைவெளிகளில் பெண்களின் ஒடுக் குமுறையின் வடிவங்கள் மாறுபடும் போது, அதைமறுத்து (பிந்தியதை) மற்றையதை கோரும் போது பெண்விடுதலையாக காட்டப்படுகின்றது.

சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட ஒட்டுமொத்த நலனுக்கும், ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட பெண் களின் விடுதலைக்கும் உதவும் வகையில் இல்லாத எல்லா பெண்நிலைவாதக் கோரிக் கையும் ஆணாதிக்கத்தை தக்கவைக்கும் முயற்சியின் அங்கமாக உள்ளதுடன், மனிதப் பிளவுகளில் உயிர் வாழும் நச்சுக்காளானாக உள்ளனர். பெண்நிலைவாதி யார் என்ற விளக் கத்தின் ஊடாக ஏகாதிபத்திய நஞ்சுகளுக்கும் பால்வார்த்து வளர்க்க விரும்பும் தொடர்ச் சியில்தான் இக்கட்டுரை நகர்கின்றது. பெண்விடுதலையை அடையும் வழியில் முன்வைக்கும் மோசடித்தனத்தை பார்ப்போம்

".......ஒருத்தி ஒருவன் பெண்நிலைவாதியாக இருப்பதற்க்கு ஒரு குழவில் அல்லது ஒரு அமைப்பில் அங்கம் வகிக்கவேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் எதையாவது காத் திரமாகச் செய்வதற்க்கு ஒரு குழுவில், அமைப்பில் இருத்தல் நன்று." எவ்வளவு மோசடி. பெண் விடுதலைடைய அமைப்பின்றி சாத்தியம் என்பது இருக்கும் ஆணாதிக்க சமூகத்தை கட்டிக்காக்கும் நனவான கனவுகளில் பெண் விடுதலையின் பெயரால் முன்வைப்பதுமாகும். தனிநபர் அமைப்புக்கு வெளியில் காத்திரமாக எதுவும் செய்ய முடியாது என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டு போராடாத பெண்விடுதலையின் பெயரில், புத்தக மார்க் சியவாதிகள் போல் பெண் திண்ணை விடுதலை பேசுவதை அங்கீகரித்து பிழைக்க பின்நிற்க் கவில்லை. இதைச் செழுமைப்படுத்தும் வகையில் "பெண்நிலைவாதியாக இருப்பதற்க்கு சொற்கள் அல்லது சொற்கட்டுகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு கோட்பாடு அல்லது தத்துவத்தைக் கொண்டிருக்கத் தேவையில்லை. தேவையானது எல் லாம் ஆணாதிக்கத்தைக் கண்டுகொள்ளலும், இரட்டை நிலைப்பாடுகளையும், அநீதியையும் ஆணாதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான துணிவைக் கொண்டிருப்பதும் தான்." என்று கூறுவதன் மூலம் ஆணாதிக்கத்தை தக்க வைக்க கோட்பாடற்ற பூர்ஷ்சுவா பெண்களை, ஆண்களை பெண்நிலைவாதிகளாக முன்மொழிகின்றனர். இதையே திரொக்சி கட்சி உறுப்பினராக இருப்பதுக்கு எல்லாத் தொழிலாளிக்கும் தகுதி உண்டு எனச் சொன் னதைத் தான் பெண்ணிலை வாதத்துக்கும் பூர்சுவா பெண்நிலைவாதிகள் மீள முன்வைக்கின் றனர்.

ஆணாதிக்க அமைப்பில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை மட்டும் கோரும் பெண் பெண்நிலைவாதியாக சித்தரிப்பதன் மூலம் பெண்களை ஏமாற்றி பிழைக்க பூர்ஷ்சுவா வர்க் கம் முயல்கின்றது. இந்தியாவில் பார்ப்பாணிய பாரதியஜனதாக் கட்சிப் பெண்கள் வரையறுக் கப்பட்ட எல்லைக்குள் ஆணாதிக்கத்தை எதிர்த்து போராடுகின்றனர். ஏன் பராளுமன்றத்தில் பெண்பிரதிநிதித்துக்காக போராடுகின்றது. அண்மையில் இந்தியாவில் அழகுராணி போட் டியை எதிர்த்து சிவசேனை பெண்கள் அமைப்பு நிலப்பிரபுத்துவ இந்து கோட்பாட்டில் போராட, பட்டாளிவர்க்கம் ஏகாதிபத்திய ஆணாதிக்க பண்பாட்டை எதிர்த்து பாட்டாளி வர்க்க பண்பாட்டை உயர்த்தி போரிட்டன. இங்கு இரு போராட்டமும் நேர் எதிர்த்தன்மை கொண் டன. இங்கு ஆணாதிக்கத்தை எதிர்த்த என்ற எல்லைக்குள் பெண்ணிலைவாதியாக சிவசேனை பெண்கள் அமைப்பை அங்கீகாரிக்க முடியாது.

நடைமுறையில் இயல்பாக எப்போதும் பெண்கள் கோட்பாடு தெரிந்தோ தெரியாமலோ ஆணாதிக்கத்துக்கு எதிராக எப்போதும் போராடியபடிதான் உயிர்வாழ்கின்றனர். இவைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊடாக சில வெற்றிகளைப் பெறவோ, சலுகைகளை பெறவோ முடிகின்றது. இவை இறுதியான வெற்றிக்கு இட்டுச் செல்லும் போராட்டத்தை நடத்திவிடுவதில்லை. இவர்கள் பெண் நிலைவாதிகளாக இருந்துவிடுவதில்லை. மாறாக தம் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக போராடு வதால் மட்டும் பெண்களாக உள்ளனர். பெண்நிலைவாதிகள் இவர்களில் இருந்து மாறுபட்டு பெண்ணின் ஒடுக்குமுறையை விடுதலையை விஞ்ஞானபூர்வமாக புரிந்து சமூகத்தின் அனைத்து ஒடுக்குமுறையையும் ஒடுக்கும் மக்கள் சார்பாக நின்று, முரணின்றி எதிர்த்து போராட தத் துவார்த்த அமைப்பைக் கோருபவளும் அமைப்பில் இருப்பவள் மட்டும்தான் பெண்நிலை வாதியாவர். இதற்கு வெளியில் பெண்ணின் ஒடுக்குமுறையில் ஏதாவது ஒன்றை உயர்த்தும் போது இவை ஜனநாயகக் கோரிக்கையாக மட்டும் இருக்கின்றது. இது சில சலுகைகளை ஆணாதிக்கத்திடம் பகிர்ந்துண்ண கோருவதற்கு அப்பால் ஆணாதிக்கத்துடன் இணைந் துகொள்கின்றன. இன்று காணப்படும் பெரும்பாலான அமைப்புகள் இந்த எல்லைக்குள்தான் செயல்படுகின்றன. விஞ்ஞான பூர்வமாக ஆணாதிக்கத்தை ஒழித்துக்கட்ட ஒருபெண்நிலைவாத அமைப்பு உருவாகும் பட்சத்தில் இச்சமூக அமைப்பு ஆட்டம் காணத்தொடங்கிவிடும். இது சமூ கத்தின் எல்லா முரண்பாடுகள் மீதும் போராடுவதன் மூலம் இச்சமூக அமைப்பை தலைகீழாக் கிவிடுகின்றது. இதுமட்டும் தான் பெண்நிலைவாதியின் ஒரே பாதையாக இருக்கமுடியும். இதை மறுத்து வைக்கும் வாதத்தைப் பார்ப்போம்.

"இதனுடைய இறுதித்தீர்வு ஒரு குழுவின்மேல் இன்னொன்று வெற்றிவாகை சூடுவதில்லை. (இந்தச் சந்தர்ப்பத்தில், பெண் ஆணின் மேல்) ஆணினால் சமூகத்தின் எல்லா விஷயங்களிலும் ஒரு மீள்சிந்தனை, ஒரு மீளமைப்பு. ஏனைய வர்க்கங்கள் தந்தைவழி ஆதிக்க ஆணாதிக்க அமைப்பினுள்ளேயே தங்களுடைய குறிக்கோள்களை அடையமுடியும் தங்களுடைய விரோ திகளை வென்றோ அல்லது அழித்தோ அவர்கள் வெற்றியை அடையமுடியும். அவர்கள் உள் வர்க்க, சாதி, மத, இன வேறுபாடுகளற்ற ஒரு பொது காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் பெண்கள் அமைப்பு இயக்கம் இவைகளில் எதையும் செய்ய முடியாது. அது அதனுள் ளேயே வர்க்கம் மற்றும் வேறுபாடுகளைக் களைந்து வெல்லுதல் வேண்டும். அது சமூகத்தின் சாராம்சத்தை மாற்ற வேண்டும். அது விரோதப்போக்கைத் திசை திருப்ப வேண்டும்." என்று தமது பெண்விடுதலை கண்டுபிடிப்பை கூடி உண்ணும் போக்கில் முன்வைக்கும் வாதத்தைப் பார்ப்போம்

ஆண்களின் போராட்டங்கள் முரண்பாடற்ற பொதுகோரிக்கையில் வெல்ல முடியும் என்கின் றனர். அதாவது எக்ஸில், மற்றும் இலக்கிய சந்திப்பு வகையாறுகளும் தான் எதுவித குறிக் கோள்களுமின்றி இருக்க முடிகின்றது. சமூகத்தின் உயிர் ஓட்டமுள்ள எல்லாப் பிரச்சனை களிலும் பொது நீர்ரோட்டம் ஒன்றை ஆண் சரி பெண் சரி வந்தடைய இந்த வர்க்க சமுதாயத் தில் ஒருக்காலும் முடியாது. எல்லா முரண்பாடுகளும், எல்லா கோரிக்கைகளும் வர்க்க சமுதாய பிளவுகளால் எதிர்நிலைப் போராட்டத்துக்கு உட்பட்டுத்தான் யதார்த்தத்தில் உள்ளது. பெண்விடுதலைப் போராட்டம் ஆண் பெண் வேறுபாடின்றி ஒரே தளங்களில் நடப்பதுடன் பொது வாக ஆண் சார்பு நிலைக்கு எதிராக நடக்கின்றது. இங்கு விரோதப் போக்கை இல்லாது ஒழிக் கும் கற்பனைகளில் அல்ல மாறாக ஆணாதிக்க கருத்து நிலைக்கு எதிரான, அதன் ஆதிக்க பிரிவுகளுக்கு எதிராக விரோதத்துடன் போராடக் கோருகின்றது உண்மையான பெண் நிலைவாதம். ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் சமூகத்தின் அனைத்து முரண்பாட்டுக் கும் வெளியில் நடக்க முடியும் என்பது கற்பனையான கருத்துமுதல்வாதம். மாறாக பெண் விடுதலை என்பது மற்றைய முரண்பாடுகளுக்குள் புதைந்து போய்யுள்ளது. பெண் ஒடுக்குமுறை மற்றைய முரண்பாட்டுக்கு வெளியில் உருவானவையல்ல. சுரண்டல் எப்போது தொடங்கியதோ அப்போதே பெண்மீதான ஒடுக்குமுறை தொடங்கியதுடன், அதன் வேறுபட்ட பண்பியல் மாற்றங் கள் காலத்துக்கு காலம் இணைந்து கொண்டன. பெண்நிலைவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் பலர் சுரண்டலை பேசுவதில்லை என சபதம் எடுத்துதான் பெண்விடுதலை பேசமுனைகின்றனர். அதாவது பெண் எப்படி ஒடுக்குமுறைக்குள் உள்ளாக்கப்பட்டாள் என்ற வரலாற்று உண்மையை பார்க்க மறுப்பதும், பின் எம் ஒடுக்குமுறைக்கு எதிராக நாம் போராடக் கூடாது எனக் கேட் பதன் மூலம் பெண்விடுதலை பேசுவதாக பாசாங்கு செய்கின்றனர். இங்கு இவர்கள் ஆணாதிக் கவாதிகளிடம் சலுகைகளை கோரிப் போராடுகின்றனரேயொழிய ஆணாதிக்கத்தை ஒழித்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டப் போராடுவதிலை. ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமாயின் அது ஆணாதிக்க சுரண்டல் சமூகத்துக்கு எதிராக போராடும் ஒரேஒரு பாதையில் மட்டும் நிகழ்வதாக உள்ளது. ஏனெனின் பெண் ஒடுக்குமுறை சுரண்டலை தொடங்கியதில் இருந்துதான் உருவானது. மருத்துவர் போல் அடிப்படை கராணத்தை தெரிந்து மருத்துவம் செய்வது போல் ஆணாதிக்கத்தை ஆராய மறுக்கும் அரசியல் நோக்கம் கபடம் நிறைந்தது.

இன்றைய சுரண்டல் சமுதாயத்தை பற்றி கேள்விகேட்க்காத அமைதிப் பெண்நிலைவாதம் பேசி சலுகைகள் கேட்பதன் மூலம், தொடர்ந்தும் ஆணாதிக்க சுரண்டல் சமுதாயத்தை காப்பாற்ற கனவான நனவுகளுடன் செயல்படுகின்றனர். இதுதான் வேறுபாடுகளை களைந்த பெண்நிலை அமைப்புகளை எக்ஸில் போல் முன்வைக்கின்றனர். வர்க்க சமுதாயத்தில் வர்க்க எல்லை தாண்டாத நிலையில், வர்க்கம் கடந்த போராட்டம் நடத்த வேண்டும் என்பது நஞ்சுத்தனமான ஆணாதிக்க முன்மொழிவாகும். பெண்விடுதலையை கோரிப் போராடும் போது ஆணாதிக்க சுரண்டலை இனம் கண்டு அதற்க்கு எதிராக வர்க்க எல்லைக்குள் போராடுவதன் மூலம், எந்த வர்க்கம் பெண் ஒடுக்குமுறையின் காரணமாக யதார்த்தத்தில் உள்ளதோ அதை ஒழித்துக் கட்ட போராடுகின்றது. நாம் இந்த பெண்நிலைவாத ஆணாதிக்கவாதிகளின் அடுத்த கூற்றைப் பார்ப்போம்.

"ஏனைய பல இசம்கள் தரமுடியாததை பெண்நிலைவாதம் தரமுடியும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகின்றோம். இவற்றில் அநேகமானவை மனித குலத்தின் பாதியை மறந்தன அல்லது புறக்கணித்தன" என்று தமது ஆணாதிக்க இசம்மை முன்வைக்கின்றனர். இந்த ஆணாதிக்க இசத்தைப் பார்ப்போம்.

பெண்நிலைவாதம் எப்படி தனியாக ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டும் எனக்கூற முடியாத வார்த்தைப் புரட்ச்சிதான் ஆணாதிக்க இசமாக வெளி வருகின்றது. பெண்நிலைவாதம் எப்படி எங்கிருந்து சமுதாயத்துக்குள் புகுந்துகொண்டது. ஆணாதிக்க சமுதாயத்தின் ஒடுக்குமுறைகளில் பிறக்கும் போராட்டம் அதன் இருப்புகளை கேள்விக்குள்ளாக்குவதன் ஊடாக, அதற்க்கு எதிரான போராட்டத்தில் மட்டும்தான் பெண்நிலைவாதம் இருக்கமுடியும். இதைமுன்வைக்காத பெண்நிலைவாதம் உண்மையில் ஆணாதிக்க பெண்நிலைவாதமாக உள்ளது. மற்றைய இசங்கள் தரமுடியாததை பெண்நிலைவாதம் தரமுடியும் என்கிற போது, எதைக் குறித்த தாக்குதலாக வெளிவருகின்றது என்பதை ஆராய்வோம்.

பெண்விடுதலை முன்வைத்த ஒரே கோட்பாடு மார்க்சியமாக உள்ளது. மற்றைய எல்லாம் பெண்களுக்கு சலுகைகளை கோரிணவே ஒழிய பெண்விடுதலையை அதன் தொடக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் கோரவில்லை. மார்க்சியம் சரிபாதி பெண்களின் விடுதலையை பேசவில்லை என்று மறைமுகமாக கூற முனைவது சுரண்டல் வர்க்கத்தைப் பாதுகாக்க முனையும் போக்கில், பெண்விடுதலையின் பெயரில் முன்வைக்கும் ஆணாதிக்க நனவுகளில் முளைத்தெழுகின்றது. மார்க்சியம் மட்டும்தான் பெண்விடுதலையை சரியாக இனம் காட்டுவதனூடாக, அதை ஏற்றுக் கொண்ட பெண்கள் அமைப்பு மட்டும்தான் பெண்நிலைவாத நிலைப்பாட்டில் மிகச்சரியாகவும் ஆராய்ந்து போராடுகின்றனர். ஏனெனின் பெண் ஒடுக்கு முறை ஆணாதிக்க சுரண்டல் சமுதாய விளைவுகளாக உள்ளதால் அதை எதிர்த்து போராட்டத்துக்கு வெளியில் பெண்விடுதலை சாத்தியமில்லை. இதற்கு வெளியில் பெண்நிலைவாத இசங்கள் எல்லாம் சுரண்டல் சமுதாயத்தை கேள்விக்குள்ளாக்கி போராடாத சமரச சலுகைக்காக ஆணாதிக்க சமூகத்திடம் கையேந்துகின்றன. மார்க்சியம் மட்டும்தான் சமுதாயத்தின் எல்லா முரண்பாடுகள் மீதும் முரண்நிலையின்றி பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நியாயமாக யதார்த்ததில் போராடிக் கொண்டிருக்கும் ஒரேயொரு தத்துவமாக, போராட்ட அமைப்பாக உள்ளது. இதை யாராலும் மறுக்கமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# மக்களின் எதிரிகளை இனங் காண்போம்

தமிழில் எழுதிக் கொண்டிருப்போர், தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இனவாத ஒடுக்கு முறையையோ, அந்த மக்களின் அனைத்து ஜனநாயகக் கோரிக்கைகள் போராட்டங்கள் தியாக த்தைப் பற்றி அக்கறையோ, எழுத்தையோ முன்வைக்க முடியாது, தமிழ் மக்களில் இருந்து அன்னியப்பட்ட தமது தனிமனித வக்கிரங்களால் படைப்புக்களை இலக்கியங்களாக பேந்து விடுகின்றனர்.

மக்களின் துயரம் மலையானது அதில் ஒரு சிறு துளியைக்கூடப் படைப்பாக்க முடியாது சூனியவாதத்துக்குள் சென்றுள்ள நிலையில் புதிதாக அதற்குள் இருந்து இன்று ஓர் இலக்கிய மரபு உருவாகத் தொடங்கி உள்ளது. இது கவிதை, சிறுகதை, ...... சஞ்சிகை, மலர்கள் என புறப்பட்டுள்ள போக்கு அவர்களின் இருப்புப் பற்றி நிலை நிறுத்தலுடன் நீடிக்கவும், சீரழியவும் என புலம் பெயர் இலக்கிய களம் சீரழிந்துள்ளது. ஆரம்பங்களில் கோட்பாடு பற்றிய விவாதங்கள், சந்திப்புகளில் தொடங்கி, பின் கூடி வாழும் கோட்பாட்டை தொழிலாக்கியும், இன்று அதையும் கடந்து ஏகாதிபத்திய சீரழிவுப் பண்பாடுகளை உயர்த்தத் தொடங்கி விட்டனர். குறிப்பாக பெண்ணியம் தொடர்பாக வெளிப்பட்டு வரும் ஆணாதிக்க வக்கிரத்தை பெண்ணியமாகக் காட்டியும், அங்கீகரிக்கும் போக்கும், பெண்ணியம் கதைத்தோர் தொகுத்து வெளியிடும் போக்கும், அதை மாற்றுக் கருத்தின் ஜனநாயகமாக காட்டி பின் ஒழித்து நறுமணம் தெளித்து சாமரம் வீசுவதும் தொடக்கப்பட்டு விட்டது. நாம் அண்மையில் வெளியாகியவற்றில் சில வக்கிரங்களைப் பார்ப்போம்.

நோர்வே சுவடுகள் 75 இல் 'சார்ள் து கோல் விமான நிலையம்' என்ற கவிதையில் சுகன்
"நோர்வேப் பெண்கள் அழகானவர்களா?
பேரழகிகள் அல்ல, ஒரே ஒருதரம் படுத்தவுடன்
களைத்துப்போய் விடுகிறார்கள், பிரஞ்சுப் பெண்கள்
அப்படியல்ல, ஓரிரவில் ஆறுமுறை படுத்தும் களைக்க மாட்டார்கள்"
சுவடுகள் 75 இல் "ஒஸ்லோவில் இருந்து துரம்சோவிற்கு" என்ற கவிதையில் சுகன்
"விமானப் பணிப்பெண்ணே, குடிப்பதற்கு
ஏதாவது தா
என்ன குடிக்க விரும்புகிறீர்கள்?
உனது முலைப்பால் ......."



அம்மா இலக்கம் 5 இலும் , இந்தியா ருடே இதழ் மே 13, 1998 இல் நா.கண்ணன் பெண்பற்றிய ஆணாதிக்க வக்கிரம் "நெஞ்சு நிறைய" என்ற சிறுகதையில் "எனக்கு பாதி உயரம் தான் இருந்தால் இந்த ஜேர்மனியருள் பனை உயரத்திலிருந்து, பருத்திச்சேடி உயரம் வரை பல தினுசுகள் இருக்கின்றன. எதிர்க்க வருபவரை நாலுஅடி முன்னாலே நின்று பேசவைக்கும் பருத்த, குத்திட்டி முலைகளில் இருந்து, பூதக் கண்ணாடிபோட்டுத் தேடும் மார்பகம் உடைய மங்கையர் பல தினுசுகளிலும் இங்குண்டு. பொலாய் பணங்கிழங்கு பிழந்தது போன்ற மெல்லிய உதடுகள் தான் அதிகம் என்றாலும், ஆபிரிக்க தடித்த உதடுகள் கண்ணில் படுவதுண்டு .......... இந்த வெள்ளை நிறம் இல்லை என்றால் இவர்களை இந்தியாவிற்கு கூட்டிச் சென்று தாராளமாய் பரிசம் போடலாம். ........... நான் கிளம்பு முன், அவள் என்னிடம் வந்து ஆரத் தழுவிக் கொண்டாள். மிக மிக இறுக்கமாக .......... ஆண்டாள் நாச்சியார் மொழியில் செல்லவது போல் "குற்றமற்ற முலை தன்னை குமரன் கோலப் பனைத் தோளோடு அற்ற குற்றம் அவைதீர அனைக்க அழுக்கிக்கட்டீரே" என்று கட்டிக் கொண்டாள். ........... "சரி நாங்கள் வருகிறோம் .... அடுத்து ஒரு டிஸ்கோவிற்குப் போகவேண்டும், யாராவது வாரீர்களா" " என பலவாகத் தொடர்கிறது.

சுகன் தொகுத்த இருண்ட "இருள் வெளி"யில் "அனுபவம் தனிமை" என்ற சிறுகதையில் அரவிந் அப்பாத்துரையின் வக்கிரத்தைப் பார்ப்போம். "சினிமா எக்ஸ்பிரஸ் என்ற திரையுலக வாழ்க்கையை விமர்சனம் செய்யும் பத்திரிகையை புரட்டிப் பார்த்தால் கமல்,
ரஜனி, சிவாஜி, பாரதிராஜா, மற்றும் புதுமுகங்களின் புகைப்படங்களாவது அவள் கவனத்தை ஈர்த்தன. என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதைப் படிக்க அவளுக்கு ஆர்வமும் இல்லை, இஸ்டமும் இல்லை. .......... 'ஏன் எனக்கு சத்தமாகப் பேசி நித்திரையைக் குழப்புபவர்களை போய் பார்த்து வாயை மூடுங்கள் என்று சொல்ல துனிச்சலில்லை' தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டாள் 'அடுத்தமுறை அப்படி நடக்கும் போது, நிச்சயமாக போய்ச் சொல்வேன்.' அப்படி பேசிக் கொண்டிருக்கும் நபர்கள் கொட்டவர்களாக இருந்து தன்னை பலாத்காரம் செய்து விட்டார்கள் என்றால்? விஜிக்கு பயமாக இருந்தது..... விஜியால் தூங்க முடியவில்லை. அத்துடன் டீவியில் பார்த்த ஆபாசக் காட்சிகள் வேறு அவளுக்கு காம உணர்ச்சியைக் கிழப்பிவிட்டிருந்தன. திடீர் என விசித்திரமான எண்ணங்கள் விஜியின் மனதில் தேன்றின பக்கத்து ரூமில் பேசிக் கொண்டிருக்கும் மூன்று பேரோடும் உடலுறவு கொள்ள வேண்டும் எனும் ஆசை அவள் மனதில் தேன்றியது. எப்படி அவர்களைக் கோட்பது? மெல்ல கட்டிலில் இருந்து எழுந்தாள் கதவை திறந்து பக்கத்துக் கதவைத் தட்டினாள். அந்த அறை ஒரே புகைமூட்டமாக இருந்தது. 'என்ன வேண்டும் பெண்ணே?' என்

www.tamilarangam.net

றான் அவன். 'உங்கள் மூன்று பேருடனும் உடலுறவு கொள்ள வேண்டும்' எனக் கூற விஜிக்குத் தைரியமில்லை" என்று தொடர்கிறது கதை.

அடுத்து சரிநிகர் 149 இல் "வக்கற்றுத் தாவும் முற்போக்காளார்!" எனக் கிண்டல் செய்து எழுதும் நட்சத்திர செவ்விந்தியன் "ஒரு பாலுறவு பற்றி ஒரு பிற்போக்கு 'தமிழ் எழுத்தாளர்' கீழ்தரமாகவே இயற்கைக்கு ஒவ்வாததாக கூறுவது ஆச்சரியப்படக் கூடியதல்ல. ....... மனிதர்கள் உருவாகிய காலத்தில் இருந்து பாலுறவும் இருந்து வருகிறது. இது இயற்கையானது பிறப்பினால் வருவது. ஒருவர் ஒரு பாலுறவுக் காறராகப் பிறப்பதற்குரிய ஒரு நிகழ்தகவு 0.03-100 நபர்களில் மூவர் (0.3 வீதம்) என்ற பாலியற் கல்வி கூறுகிறது." என்கின்றார்.
எக்சில் இரண்டில் "மதிப்பு மறுப்பறிக்கை" என்ற கதையில் செக்ஸ் மனநோயாளி சுகன் கூட்டுக் கலவியைப் போற்றி "வழமையான நித்திரை இன்மைக்கு குளிசை போடுவதற்குப் பதில் அன்று ஏதாவது செய்தாக வேண்டி இருந்தது. முதலில் சுவரிற்கு கையால் இரண்டு தரம் குத்தினேன். பக்கத்து றூம் கிழவன் ஸாபிக் வந்து கதவைத் தட்டினான் என்ன? 'கொஞ்ச நாளைக்கு ஆரும் அரேபியப் பேரழகியை என்னோடு தங்குவதற்கு உண்ணால் ஒழுங்கு பண்ண முடியுமா?' ........ 'பெரிய முலைகளுள்ள பெரிய பெண்ணவள் தெருவில் நடந்து வந்தால் முலைகள் 'இந்தாபிடி இந்தாபிடி' என்று என்னைக் கேட்பது போல் இருந்தது.' .......... 'சொன்னால் நம்ப மாட்டாய் இரவு முழுவதும் ஒரே கூட்டுக் கலவி ..... இந்தப் பெண்களுக்கு கூட்டுக் கலவிக்கு நல்ல விருப்பம் தான் ....... இல்லையா? உங்கள் புருசனுடன் நீங்கள் சந்தோசமாக இல்லை என்பதற்காக .......உனக்கு எப்படித் தெரியும் நானும் புருசனும் தொடர்ந்து சண்டை என்று ......... உங்கள் மீது கொண்ட அன்பின் விளைவால் எனக்கு அப்படி ஒரு எண்ணம் ஏற்படுகிறது போலும்......... நீ முதலில் எனது --------- சூப்பு நான் பிறகு உனது சப்பாத்தைத் துடைக்கிறேன் .......... வேறு எல்லோரையும் விட மகிழ்சியாக அதியற்புத சந்தோசத்தில் நீங்கள் சுகித்திருக்கும் அந்த இனிய நாளுக்காக ........ ஒழுங்கையில் இருந்து வந்த ஒருத்தி நீ உன்ரை அம்மாவிற்கு முன்னுக்குச் செய்தால் என்ன பின்னுக்குச் செய்தால் என்ன ........ அங்கு வந்த கழுதையுடன் ஒரு நாள் உடலுறவு கொண்டான் ...... இருவரும் அவனது ஆடைகளைக் களையத் தொடங்கினோம். சாந்தி என்னை களையத் தொடங்கினாள்" எனத் தொடர்ந்து செல்லும் வக்கிரங்கள்.

இன்று இப்படி பலர் எழுதத் தொடங்கி உள்ளனர் யமுனா ராஜேந்திரன் ஓரினச் சேர்கை முதல் எல்லாச் சினிமாக் குப்பைகளையும் மறுவாசிப்பு, வேறுபடுத்திப் பார்த்தல், பன்முகத் தன்மை என்பதன் ஊடாக அதில் உள்ள ஆணாதிக்க வக்கிரங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கின்றனர். ஆணாதிக்க வக்கிரங்களை, இந்த ஆணாதிக்க உலகம் கொடுத்த கொடைகளை பெண்விடுதலை அங்கமாக சித்தரிப்பதில், காட்டுவதில் இன்று
இவர்கள் மட்டுமல்ல இவர்களுடன் சேர்ந்து பலர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரசுரிப்பதும், கூடி விவாதிப்பதன் மூலம், இன்று ஆதரித்து பெருமை பேசி நிற்கின்றனர். இது தமிழிற்குப் புதிதா? இல்லை. ஈழத் தமிழர்களுக்கு மட்டும் புதியது. இப்புதியது தமிழ் மக்கள் ஜனநாயகக் கோரிக்கை மீதும், வர்க்கப் போராட்டத்தின் மீதும், அதை ஒட்டிய பெண்ணிய விடுதலை மீதும், சாதி ஒழிப்பு போராட்டத்தின் மீதும், சுயநிர்ணய போராட்டத்தின் மீதும் அதை அடைய இதை முன்வைப்பதாகக் காட்டும் போக்கில் தான் இது புதியதாக உள்ளது.
இந்தியச் சினிமாவில் பாலச்சந்திரன், பாலுமகேந்திரா, முதல் எல்லா சினிமாத் தயாரிப்பாளர்க ளும் ஒரு பெண்ணின் மார்பகம், அவளின் செக்ஸ்சை காட்டாததையா இவர்கள் முன்வைக்கிறார்கள். அதையே முற்போக்கில் வைக்கின்றனர். சிலுக்கு கமார முன் அறிமுகமாகியதை விடவா சுகன், நா.கண்ணன், அரவிந் அப்பாத்துரை முன்வைக்கின்றனர். இல்லை. அதையே மீள வாந்தி எடுக்கின்றனர்.

கூட்டுக்கலவி, ஓரினச்சேர்க்கை, சகோதரர் சகோதரி உறவு, பெற்றோர் பிள்ளை உறவு, காட்டும் மார்பகம், பலபேர் உறவு என்பது இச்சமூகத்தில் காலாகாலமாக இருக்கின்றது. இவை அரசு மாளிகைகளில், நிலப்பிரபுக்களின் மனைகளில், வணிகர்களின் மாடமாளிகைகளில், பிரபுக்களின் வீடுகளில் இருந்து இன்று டிஸ்கோக்களில், மசாச் நிலையங்களில், சினிமாக்களில், நீலப்படங்களில், .......... என பணக்காரர்கள் எங்கெங்கெல்லாம் குந்தியபடி சுகித்துக் கிடக்கின்றானோ அங்கெல்லாம் இது உள்ளது. இல்லையா? இதை மறுக்க முடியுமா? இது சிற்பம், ஓவியம், சினிமா, நீலப்படம், ....... என எங்கும் உள்ளது. இன்று தமிழில் இதை முன்வைப்பவர்கள் டிஸ்கோ முதலாளிகளும், நீலப்படத் தயாரிப்பாளர்களும் தான் பெண்விடுதலை யினதும், ஜனநாயக வாதிகளினதும் உண்மையான பின்நவீனத்துவ கட்டுடைப்பு நபர்களாக
இருக்கின்றனர். இங்கு குடும்பம் உருவாக முன் இருந்த கூட்டு பாலியல் நுகர்வு அச்சமுகத்தின் அங்கமாக இருந்தது. அதைக் குறித்து அல்ல இக்கட்டுரை.

அண்மையில் பிரான்சில் இருக்கும் ரொட்ஸ்கிய அமைப்புப் போல்சவிக் பத்திரிகையை வெளியிடுவோர் ஓரினச் சேர்க்கை, கூட்டுக் கலவி, சகோதரர் சகோதரி, தாய் தந்தையருக்கிடையிலான உறவுகளை தனிநபர் பிரச்சனையாக அங்கீகரித்து இது இன்பத்தின் செயலாக வருணித்து நியாயப்படுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினர். தனிநபர் ஜனநாயகம், தனிநபர் இன்பம், என்ற எல்லைக்குள் மட்டும் சமூகத்தை மதிப்பிடும் போகும் சமூகத்திற்கு முதல் தனிநபர் என உயர்த்தும் இந்த கடைந்தெடுத்த போக்கு இன்றைய உலகம் தழுவிய முதலாளிகளின் நிலையை மீள வைப்பதாக இருக்கிறது. சுகன் போன்றோருக்கு ஒரு பெண்ணை யாராலும் கொடுக்க முடியும். எனெனின் அவரின் அரசயில், கவிதை எல்லாம் முடிவுக்கு வந்து விடும். அந்தளவுக்கு மிகவும் வக்கிரமான செக்ஸ் மனநோயாளியாக அ.மார்க்ஸ் அருள் பெற்று உலாவுபவர் தான் இவர். ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரப் படுத்த முனைபவன் எந்த விதத்திலும் இவர்களை விட வக்கிரமானவன் அல்ல. ஏனெனின் இவர்களின் எழுத்துக்கள், செயல்கள் அரசியல் வன்முறை பாடத்தைக் கற்று தான் அவன் ஒரு வன்முறை பாலியல் பலாத்காரப் படுத்துபவனாகத் தோற்றம் பெறுகிறான். அவனுக்கு முன்னால் உள்ள நெருக்கடியான செக்ஸ் நுகர்வு இன்மையுடன் சேர்த்து, திணிக்கும் வக்கிரமான அசிங்கங்கள் அவனை மிருகமாக்கின்றது. இதில் அவன் குற்றவாளியாக இருப்பது என்பது ஒரு பங்குதான். மாறாக இதற்கான உணர்ச்சியைத் தூண்டும் எழுத்துக்கள், அதை ஒட்டிய சமூக அமைப்புத்தான் முதல் குற்றவாளியாக உள்ளது. இவர்கள் தான் மிக மோசமான ஆணாதிக்க நடத்தை கொண்ட வண்முறையாளர்கள்.

ஒரு பெண்ணின் இயற்கையைப் படைப்பு, இலக்கியம், அழகு என்பதன் ஊடாக அவளை செக்ஸ் பிண்டமாக, கேவலமாக காட்டி ஆணாதிக்க வக்கிர வரைவிலக்கணத்திற்கு போதை ஏற்றும் எல்லா ஆணாதிக்க செக்ஸ் நோய் எழுத்துக்களும், வருணனைகளும் மிக மோசமான சமுதாய இழி பிறவிகளால் முன் வைக்கப் படுபவைதான். பல்கலைக்கழக ராக்கிங் பெயரால் ஆண்கள் பெண்களிடம் கேட்கும் அனைத்து ஆணாதிக்க வக்கிர வன்முறையை இலக்கியத்தின் பெயரால் தனிமனித உரிமையின் பெயரால் மேற்கூறிய படைப்பு நேரடியாக, மறைமுகமாகவும் நியாயப்படுத்தி உள்ளது. அங்கு "உனது சைஸ் என்ன, என்ன உள்ளாடை போட்டிருக்கிறாய், எப்படிக் குளித்து விட்டு உடுப்புப் போடுவாய், செய்து காட்டு, உள்ளடை நிறத்தை தெரிந்து கொண்டால் அதைக் கேட்பது, காதலன் உண்டா?, என்ன கதைப்பான், ........" என நீளும் இந்த வக்கிரத்தை இன்று முற்போக்கு பெயரால் மீள வைக்கப்படுகிறது. இதையொட்டி 1985 இல் வெளியான ஒரு துண்டுப் பிரசுரத்தை சஞ்சீவி 27 இல் மறுபிரசுரம் செய்துள்ளது. பார்க்க.

இதைப் பின் புலம்பெயர் இலக்கிய ஆணாதிக்க கதையைப் போல் பல்கலைக்கழக மாணவர்கள் பெண்களையும், ஆணாதிக்க வக்கிரங்களையும் வருணித்து பேசிக் கொள்கின்றனர். வீதியில் போகும் ஒரு பெண்ணை ஆண்கள் பார்க்கும் பார்வை, கேட்கும் கேள்வி, கதைக்கும் உள்டக்கம், இந்த படைப்பாளிகளின் அதே உள்ளடக்கம் தான். ஐரோப்பாவில் ரெலிபோன்களில் தமிழ் பெண்களுக்கு எடுக்கும் முகம் தெரியாத (உங்களைப் போன்றோர்) கதைக்கும் விடையங்கள் உங்கள் கதைகளில், செயலில் செறிந்து போய் உள்ளது. எங்கும் பெண்கள் பற்றிய வக்கிரங்கள் அதை ஆணாதிக்கவாதிகள் தமது தனிநபர் உரிமை மீது, சுதந்திரம் மீது, இலக்கியம் மீது, ரசனை மீது, அரசியல் மீது, முன்வைப்பதும், பாதுகாப்பதும் தான் இன்றைய ஈழத் தமிழர்கள் மீது முன் வைக்கும் புதிய ஆணாதிக்க வக்கிரங்கள் இவை. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தால் கடந்த 20 வருடங்களில் இது தோன்றுவதற்கு தடையாக இருந்தது. சர்வதேச ரீதியான மாற்றங்கள் வேகம் பெறப் பெற, ஏகாதிபத்திய களம் சோவியத் சிதறலுடன் வேகம் பெற்றது. ஏகாதிபத்திய ஆணாதிக்க வக்கிரக் கலாசாரம் ஊடுருவ ஊடுருவ அதற்கான எழுத்தாளர்கள் தரகு முதலாளிகள் போல் உருவாகின்றனர்.

இந்த வகையில் இந்தியாவில் இந்தியாருடே, ஆனந்தவிகடன், குமுதம், ...... எனத் தொடங்கி சினிமா இதழ்கள், சினிமாக்கள், தொலைக்காட்சி நிகழ்சிகள், அழகு ராணிப் போட்டிகள் எல்லாம் இது போன்ற படைப்பு, இலக்கியங்களை, நியாயங்களை உற்பத்தி செய்து குவித்துள்ளது குவிக்கின்றனர்.. இது போன்ற தரகுப் பிரிவுகள் ஈழ இலக்கியத்தில் உருவாகாது இருந்த போராட்ட தடையை மீறி இன்று புறப்பட்டவை தான் இந்த இலக்கியங்கள். இதற்குப் பக்க துணையாக இந்திய எழுத்தாளர் கைகோர்க்க, புலம் பெயர் சஞ்சிகைகள் தமது வக்கிரத்தை அண்மைக்காலமாக வெளிப்படுத்த தொடங்கி உள்ளன. இதை எதிர்க்கும் மார்க்சியத்தை, எதிர்க்கும் போராட்டத்தில் முதலில் கூட்டு அமைத்து தொடங்கியதே இந்த, இதன் ஆரம்பப் போக்கு. இங்கு முதலில் கோட்பாடு அற்ற சந்திப்பு, மார்க்சிய எதிர்ப்புடன் கூடி உண்ணும் சந்திப்புகள், என தொடங்கி மேல் தட்டு ஏகாதிபத்திய கலாசாரத்தால் பண்பாடல், எழுத்தால் அணை கட்டி புறப்பட்டுள்ளது. இதை பெண்களும் சேர்ந்து பாதுகாக்கும் (இனவாத அரசியலில் கதிர்காமர் உள்ளது போல்) நியாயம் பேசுவதும், அவைகளை அச்சில் ஏற்றும் போக்கு மிகக் கேவலமானது. ஆபாசப் போஸ்டர்களை எதிர்த்து எரித்து, கிழித்து போராடிய பெண்கள் ஆனாதிக்க வாதிகளால் சிறையில் இடப்பட்டு சித்திர வதை செய்கின்றனர். இங்கு ஆபாசப் போஸ்டர்களை பெண்களே பாதுகாத்து முண்டு கொடுக்கின்றனர். அழகுராணிப் போட்டியை எதிர்த்து போராடிய பெண்களை சிறை செய்கின்றனர். ஆணாதிக்கக் கேள்விகள், கொச்சைப்படுத்தல்களை எதிர்த்து பெண்கள் போராட களம் காண்கின்றனர். இங்கு அவைகளை நியாயப்படுத்தி அந்த ஆணாதிக்க வனரங்கள் கூட்டுக் கலவி செய்ய திண்டு குடித்து கூத்தடிக்கவும் சுகிக்கவும் பின் நிற்காது செயல் தளத்தை தொடங்கி உள்ளனர்.

தொடர்ச்சி பக்: 18ல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வேயிய (ஏகாதிபத்திய) அரசின் தேவைக்காக அவர்களின் பணத்தில் ஜெயபாலனின் முஸ்லீம் மக்கள் பற்றிய கருசனை'



சரிநிகர் 144 இல் ஸ்பாட்டகஸ்தாசன் என்பவர் ஜேர்மனியில் இருந்து வாசகர் கடிதம் ஒன்று எழுதியிருந்தார். இவர் சரிநிகரில் வெளிவந்த எம்.ஆர்.ஸ்ராலினுடைய விமர்சனத்தை விமர்சித்த தொடர்ச்சியில், இலக்கியச் சந்திப்பில் ஜெயபாலன் புலிகள் திருந் திவிட்டனர் எனக் கூறியதை "சமர்" விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்ததை "பொய்ச் செய் தி" எனக் குறிப்பிட்டு பலகருத்துகளை வெளியிட்டிருந்தார்.

நாம், ஜெயபாலனை தொட்டு வெளியாகிய பலவிதமான கருத்துக்குள் செல்வதைத் தவிர்த் துக் கொண்டு குறிப்பாக ஆராய்கின்றோம்.

முதலில் எம்.ஆர்.ஸ்ராலின் என்ற பெயர்களைப் பாவிப்பவர்கள், புனை பெயரை தெரிவு செய்யும் போது ஸ்ராலின் உடைய பொதுக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும். இல்லாது ஸ்ராலின் பெயரைப் பயன் படுத்துபவர்கள் உண்மையில் ஸ்ராலினுக்கு சேறடிக்கும் தொடர்ச்சியில் தான் இப்பெயர் பயன்படுத்தப்படுகிறது. இன்று இந்த எம்.ஆர்.ஸ் ராலின் கோட்பாடற்ற கூட்டத்தின் உறுப்பினர் ஆவர். அண்மையில் சுகிக்க கூட்டிய கூட்டத் தொடரில் முன்நின்று பங்கு கொண்டு சுகித்தவர். எப்போதும் ஸ்தாபனத்தையும் கோட்பாட் டையும் உயர்த்திப் பிடித்த ஸ்ராலினை அலங்கோலப்படுத்தும் வழமையான முயற்ச்சியின் தொடர்ச்சியில் அவர் பெயரை திட்டமிட்டு இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இன்று மார்க்ஸின் பெயரில் உள்ள மார்க்சியத்தை எதிர்க்கும் அ.மார்க்ஸ் மார்க்சின் (அது அவரின் சொந்தப் பெயராக இருந்த போதும்) பெயரால் வரலாற்றில் நீடிக்கும் பொய்மையை நாம் கேள்விக்கு உள்ளாக்க வேண்டும். அவரின் பெயரில் உள்ள கோட்பாட்டை எதிர்ப்பவர் அப்பெயரில் ஒட்டிக் கொள்ளும் போலித்தனம் கேவலமானது. பெரும் கோட்பாட்டு எதிப்பாளர் தன்பெயரை தூக்கியெறிய முடியாத கேள்விக்குள்ளாக்கல் மோசடியானதே. சமர் இதழில், 1997 இல் நடந்த இலக்கியச் சந்திப்பில் ஜெயபாலன் புலிகள் திருந்தி விட்டனரென ஒப்பாரி வைத்தை விமர்சித்ததை, பொய் எனச் சொல்லி சரிநிகரில் எழுதிய ஸ்பாட்டகஸ்தாசன் வேறுயாருமல்ல ஜெயபாலனின் சொந்த தம்பி என்பதுதான் விசித்திரமானது. இங்கு தம்பி விமர்சிக்க கூடாது என்பதல்ல மாறாக தனது ரொக்சிய கோட்பாட்டால் அண்ணன் ஜெய-பாலனின் முதலாளித்துவ புலம்பல்களை விமர்சித்தல்லவா இருக்கவேண்டும். இதைத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரொக்சியவாதிகளிடம் மக்கள் எதிர்பார்ப்பார்கள். அண்ணன் என்றால் கொள்கை கோட்பாடெல் லாம் அரோகராதான் போலும்.

சமர் "பொய் சொன்னது" எனக் கூறும் ஜெயபாலனின் தம்பி ஒற்றைவரியில் ஆதாரமின்றி புலம்புகின்றார். அதுசரி உங்களால் ஆதாரமாக மறுக்க முடியுமா? ஏன் உங்கள் பாரிஸ் இலக் கிய சகாக்கள் ஜெயபாலன் புலிகள் திருந்திவிட்டனர் எனக்கூறி புலம்பியதை கசெட்டில் பதிவுபண்ணி வைத்துள்ளனர். முடிந்தால் அதில் இருந்து ஆதாரமாக மறுங்கள் பார்க்கலாமே. ஏன் அன்று ஜெயபாலன் தான் புலித்தலைவர்களை சந்தித்த யதார்த்தத்தையும், அவர்களில் மாற்றம் நிகழ்ந்ததாக புலம்பிய போது, சபை முணுமுணுக்கச் செய்தது. அப்போது புலிகள் கூறுவதுபோல் யதார்த்தம் தெரியாத நீங்கள் (மறைமுகமாக விமர்சிப்பதை எதிர்த்து புலிக ளைப் போல்) (இதையே தம்பி மீள இக்கட்டுரையில் முன்வைக்கின்றார்.) எனக் கூறி புலி திருந்திய கதையை புலம்பினார். புலிகளின் ஜனநாயக மறுப்பை, இல்லை எனக் கூற மண் ணின் யதார்த்தம் தேவையாகிவிடுகிறது. இலக்கியச் சந்திப்பில் புலிகள்பற்றி ஜெயபாலனின் யதார்த்தமற்ற புலம்பல் அடிப்படையில் ஜெயபாலனின் நக்கிப்பிழைக்கும் கழிசடை அரசியலின் ஊற்று மூலமாக உள்ளது. இதை இலக்கிய சந்திப்பில் ஜெயபாலனின் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய நித்தியானந்தனும் ஜெயபாலனும் பரிமாறிக் கொண்ட பதிவான செய்தியில் இருந்து பார்ப்போம்.

நித்தியாணந்தன் யெயபாலனை காட்டுமிராண்டி மனுசன் எனக் கூறி அழுவான், புலம்புவான், என்ன செய்வான் எனத்தெரியாத காட்டுமிராண்டி எனப் பலவாக கூற, ஜெயபாலன் நித்தியை ரத்வத்தைக்கு ஒப்பிட்டு பொய்யன் என்றார். இவர்களின் தனிமனித மற்றும் அரசியல் பண்புக ளை அவர்களே புட்டுவைத்த உண்மையின் தொடர்ச்சியில் நாம் ஜெயபாலனின் பிழைப்புப் தனத்ததைக் காணமுடியும். நாம் இதைக் கூறுவதை விட என்ன பேசி புலம்பினார் என்பதை கசெட்டுகளில் ஆழமாக பதியப்பட்டு உள்ளது. எம்மைப் பார்த்து அண்ணனுக்காக வக்காளத் து வாங்குவதை விடுத்து அரசியல் ரீதியில் பிரச்சனைகளை ஆராய்யவேண்டும். இந்த இடத் தில் நாம் ஜெயபாலனை அரசியல் ரீதியாக மட்டும்தான் விமர்சிக்கின்றோம். இலங்கையில் மிகச் சிறந்த கவிஞர்க்குள் குறிப்பிடக் கூடியவர். பலர் தம்மைத் தாம் கவிஞர், சிறு கதை எழுத்தாளர் எனப் போட்டுத் திரியும் புரட்சியின் வரிசையில் அல்லாது ஜெயபாலன் தரமிக்க பூர்ஷ்வா வர்க்க கவிஞராக உள்ளார். கவிதையில் அவரின் பூர்ஷ்சுவா தனத்தை விமர்சிக்கும் போது, ஒடுக்கப்பட்ட பாட்டாளி சார்பாக நின்று விமர்சிக்கின்றோம். இது கவிதையின் தரத்தை மறுத்துவிடவில்லை. சிலர் தனிப்பட்ட முரண்பாடக விமர்சனங்களை காட்டிவிடுகின்றனர். ஜெய- பாலனுக்கும் எமக்கும் என்ன குடும்பச் சண்டையா உண்டு?. இல்லை. மாறாக மக்களைப் பற் றிய செயல் தளத்தில் எந்த வர்க்கம் சார்ந்து எப்படி போராடுவது என்பதே எமது பிரச் சனையாகும். இதில் தனிமனித செயல் பாடுகள் எப்படி அரசியல் உடன் இனைகின்றது என் பது ஆய்வுக்குள்ளாகின்றது. புலிகளில் மாற்றம் நிகழ்ந்ததாக ஜெயபாலன் கூறியதை நாம் விமர்சிக்கும் போது ஒருக்காலும் அவரை புலியாக அடையாளப்படுத்தியதில்லை. அதவது துரோக இயக்கங்களை அரசின் கைக்கூலி என்கிற போது ஒருக்காலும் இரண்டையும் ஒன்றாக அடையாளப்படுத்துவதில்லை. அவர்களுக்கிடையில் முரண்பாடுகளும் நலன்களும் வேறுபாடு காணப்படுகின்றது. சில விடையங்களில் ஒத்துழைப்பு தனித்து செய்ய முடியாத போக்கில், ஒத் த வர்க்க நலன்களால் சமூக முரண்பாட்டின் எழுச்சியுடன் போராட்டத்துடன் நடக்கின்றது. ஜெயபாலனை புலியென கூறுவதோ, கவிஞன் அல்ல எனக் கூறுவது அரசியல் அடிப்படை அற்ற விடையமாகும். இவைகள் மீதான எந்த காழ்புமற்ற எமது நிலையில் ஊன்றிநின் றபடிதான் அவரின் அரசியலை விமர்சிக்கின்றோம். இப்படித் தான் நாம் புலிகளை பார்க்கின் றோம். இதற்கு வெளியில் அல்ல.

அடுத்து ஜெயபாலன் கிழக்குமாகாணத்தில் யதார்த்தம் தெரிய மண்ணில் கால்பதித்து நிற்க் கின்றார் அதுவும் மக்களுக்குள். அதுவும் புலிகளின் திருந்திய தளத்தில், இது ஒருபுறம். மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் மக்களுக்குள் புலிகளின் அனுமதியுடன் சென்று வர எப்படி பணம் வந்தது. நோர்வையில் கைவலியுடன் விறைத்துப் போக மீன் கீறி வியர்வை சிந்த உழைத்த பணத்திலோ, அல்லது ஐரோப்பாவில் வீதிகூட்டிய, கோப்பை கழுவிய பணத்திலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களுக்காக சேவை செய்ய நாடுதிரும்பி யதார்த்தம் கண்டு சேவை செய்ய ஜெயபாலன் ஒன்றும் முட்டாளல்ல. நோர்வேயிய (ஏகாதிபத்தியம்) அரசு பணம் கொடுக்க, நோர்வேயிய மற்றும் அரசுகளுக்கு தேவைப்படும் தகவலைத் திரட்டிக் கொடுக்க யதார்த்த களம் கண்டு கிழக்கில் நிற்பதை கேள்வி கேட்க்க முடியாத முட்டாள்கள் நம்பலாம் மக்கள் சேவையென்று நம்பக் கோருவார்கள்.

இந்நிலையில் புலிக்காக வக்காளத்து வாங்கியதை விமர்சித்த எம் நிலையால் "Free to Shoot" நிலைமைக்கு ஆளாகியுள்ளதாக எம்மீது குற்றம்சாட்டி சரிநிகர் சமமாக மதித்து பிரசுரித்ததில் இதை மேலும் அதிகரிக்க வைத்துள்ளது என்கிறார். சரிநிகர் சமருக்கும் அதன் எழுத்தாளருக்கும் மார்க்சியத்தை உயர்த்துவதால் கருத்துச் சுதந்திரத்தை மறுத்து வருகின்றது. அப்படியிருக்க எமது கட்டுரை பிரசுரிக்காமலே எம்மீது குற்றம் சாட்டுவதுதான் வேடிக்கை. அடுத்து இப்படிக் கூறுவதன் மூலம் ஜெயபாலனின் கண்டுபிடிப்புகள் விமர்சனத் துக்கு அப்பாற்பட்டதாக மாற்றிவிட முனைகின்றனர். ஜெயபாலனை காட்டிக் கொடுத்து சுடும் நிலைக்குள் நகர்த்தி உள்ளதாக கூறுவதன் மூலம், தமது நாய்ப் பிழைப்பை பாதுகாக்க முனைவதாகும். நாம்தான் காட்டிக் கொடுத்தோமா? இப்படி கூறும் போலி றொக்சிய கோட் பாட்டாளருக்கு எப்படி முடிகிறது.

இலக்கியச் சந்திப்பில் மதவாதிகள், புலிகள், சிங்கள இனவாதிகள், துரோகிகள் உள்ளிட ஏகாதிபத்திய ஒற்றர்கள் ஈறாக கலந்து கொள்ளும் கொள்ளக் கூடிய கோட்பாடற்ற கதம்ப புலம்பல் இடமாய்யுள்ளது. அண்மையில் பிராங்போட்டில் இந்த ஸ்பாட்டஸ்தாசன் நடத்திய திருவிழா இலக்கியச் சந்திப்பு றொக்சிய கோட்பாடல்ல, ஏகாதிபத்திய எல்லை வரை திறந்து வைத்துதான் விபச்சாரம் செய்யும் போது விமர்சித்த எம்மால்தான் ஏய்ட்ஸ் வந்தது என்று நம்பக் கோருகின்றனர். இப்படியிருக்க நாம் காட்டிக் கொடுத்தோம் என்ற அவதூறான பொய் களில் முகிழ்ந்து, அதனூடாக புலிகள் மீதான மாயையை விதைத்து செந்தாமரை இயக்கம் ஒன்றை தொடங்க முன்னோடியாக இவை விமர்சிக்கும் உரிமை மீது காட்டிக் கொடுத்தல் என முத்திரை குத்தி தமது விபச்சாரத்தை மறைக்க முனைகின்றனர். விடுதலைப்புலிகள் தனிப்பட்ட ரீதியில் தனிநபர்கள் உடன் அண்மைக் காலமாக அணுகிக்கொள்ளும் அணுகு முறைகளைக் கொண்டு பலர் புலிகளில் மாற்றம் நிகழ்துள்ளதாக கருத்துரைக்கின்றனர். நாம் இதை விமர்சிக்கும் போது புலிகள் மீதான தனிமனித புலி எதிர்ப்பு கோசங்களில் இருந்து அல்ல மாறாக மக்களின் பொதுவான போராட்ட நிலைகளில் நின்றுதான் பார்க்கின் றோம். புலிகள் தம்மை மாற்றும் பட்சத்தில் எமக்கு இருக்க கூடிய மாற்று அரசியலுக்கு அப்பால் புலிக்காக உரத்து குரல்கொடுப்பவராக இருப்போம். புலிகள் தம்மை மாற்றிக் கொள்ளாத எல்லா போக்குகளும் நீடிக்கும் வரை மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத் தை சிதைக்கும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்து குரல் கொடுத்தோம் குரல்கொடுக்கின் றோம். இந்நிலையிலும் புலிகளை மக்கள் அல்லாத எந்தப் பிரிவுகளும் அழிக்க, சேறடிக்க முனையும் போது எதிர்த்து குரல்கொடுத்தோம் குரல்கொடுப்போம். புலிகளில் மாற்றம் நடக்க வேண்டுமாயின் அது அரசியலில் நடக்க வேண்டும். இது கடந்தகால தவறுகளை சுயவிமர்சனமாக பார்க்கவேண்டும். அதற்கான நிவாரணங்களை தொடங்குவதில் நம்பிக் கையூட்டவேண்டும். இது ஒரு போக்காக வளரவேண்டும்.

இந்த நிலைகளில் எல்லோரையும் விட உறுதியாக ஆதரிப்பவர்களில் நாம் முதன் மையானவராக இருப்போம். ஏன்னெனின் மக்களின் பிரச்சினையை பிரமுகத்தனத்துக்கோ, வம்பளப்புக்கோ, பொழுதுபோக்குக்கோ, சுயயின்பத்துக்கோ பயன்படுத்துவதை நாம் வெறுத்து மக்களின் துயரங்களின் விடிவுக்காக உண்மையாக இருக்கவிரும்புகின்றோம்.

அடுத்து முஸ்லீம் மக்கள் பற்றிய ஜெயபாலனின் அக்கறையும், அதையொட்டிய பார்வைகளும், ஜெயபாலனை உயர்த்திப் பிடிக்கும் ஆர்பாட்டங்களும் வரலாற்றில் மிகச் சரியாக விமர்சிக்கப்படும். முஸ்லீம்மக்கள் பற்றிய சரியான ஆய்வைசெய்யவும், முஸ்லீம் மக்களை குத்தகைக்கு எடுத்து பிழைப்பவர்களை இனம்காணவும் உருப்படியாக முஸ்லீம் மக்களுக்கும், வெளியிலும் உருப்படியான தலைமுறை உருவாகாதவரை புலம்பித் திரியவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய பணத்தில் அவர்களைப் பற்றி அறிக்கைப் போரும் கவிதை கட்டுரைகளும்தான் சமுதாய நடைமுறையாக காட்டப்படும். குறிப்பாக முஸ்லீம் மக்களுக்குள் மதத்துக்கு வெளியில் வந்து சமூகத்தை பார்ப்பது என்பது இல்லாத இன்றைய நிலையில் முஸ்லீம் மக்கள் தம்மைப்பற்றிய குரல்களைக் கூட ஏமாற்றுப் பேர்வழிகளிடம் விற்றுவிடுவதற்கு மேல் எதுவும் நடக்காது. அன்று இயக்கங்களுக்குள் எப்படியோ அதுபோல் இன்று முஸ்லீம் மக்களுக்குள் புகுந்து அதேபோல் இருந்தபடி பலர் இயக்கத்தையும் மக்களையும் ஏமாற்றி பிழைத்து சீரழித்தனரே அதை இன்று விழிப்புறாத முஸ்லீம் சமூகபிற்போக்குகளை பயன்படுத்தி பிழைத்து நக்குகின்றனர். அந்தமக்களின் விழிப்புணர்ச்சிக்கும், அந்த மக்களின் மீது கட்டிப்போடப்பட்டுள்ள மதப்பிற்போக்குகளுக்கு எதிராக போராடுவதன் மூலம், அம்மக்கள் தமது விடுதலையை இனம்கண்டு போராடுவது நிகழ்ந்து விடும் எனக்கருதி அதன் மீதான சமரசத்துடன் வியாபாரம் ஆகா ஓகோ எனக் களைகட்டியுள்ளது.

மறுபுறம் இலங்கை - ஐரோப்பா என ஜெயபாலன் முதல் பலர் சுற்றிவர எப்படி பணம் வருகிறது என்பதை சமூக அக்கறைக்குள் மட்டும்தான் கேள்வி கேட்கும் விடையமாக எஞ்சிப் போய்யுள்ளது. இன்று ஐரோப்பாவில் வாழ்பவர்கள் கூட நினைத்த மாத்திரத்தில் எங்கும் செல்ல முடியாத புலம்பெயர் வாழ்வில் உள்ளவர்கள். ஆனால் சுற்றித் திரியும் இவர்களுக்கு எப்படி பணம் வருகிறது என்பது மர்மாக உள்ளது. பின் இவர்களின் செயலை புரட்சியின் பணியென வாதிட பின்நிக்காத அரசியல் விபச்சாரிகள் வேறு இன்று நக்கிப் பிழைக்கின்றனர். இதையே சரிநிகரில் "வெளிநாட்டில் ஓரளவு பாதுகாப்புடன் இருந்து கொண்டு கருத்து முதல்வாதத் தன்மையுடன் நாட்டு யதார்த்தத்துடன் தொடர்பற்று, வார்த்தை தீவிரவாதத்தை விதைத்துத் திரியும் POST புரட்சியாளர்கட்கு ஒரு வேண்டுகோள், தலையை மேலே வைத்துக் காலைக் கீழே பதியுங்கள்" என்று கூறி ஏகாதிபத்திய செயல் தளத்தை வரிந்து நியாயப்படுத்தி தாக்குதலை முடிக்கிறனர். இதைப் பார்ப்போம்.

இதை சொல்பவர் வெளிநாட்டில் புரட்சி பேசும் போலி ரொக்சியவாதியான ஜெயபாலனின் தம்பி ஜெயபாலனின் ஏகாதிபத்திய பணத்தில் மண்ணில் கால் பதித்ததை புகழ்ந்து சொல்வதுதான் இதில் வேடிக்கை. இவர் அண்மையில் ஏகாதிபத்திய கயவர்கள் வரை கலந்து கொள்ளும் வகையில் கோட்பாட்டற்ற இலக்கியச் சந்திப்பு வேறு நடத்தியவர். வெளிநாட்டில் இருந்து கதைத்தால் யதார்த்தம் தெரியாத கருத்துமுதல்வாதம் என்கிறார். அருமையிலும் அருமை. ரொக்ச்சி வெளிநாட்டில் திரிந்த போது யதார்த்தம் தெரியாத கருத்துமுதல் வாதியாகவா திரிந்தவர். ஜெயபாலனின் அரசியல் விபச்சாரத்தை விமர்சித்தால் யதார்த்தம் தெரியாத கருத்துமுதல்வாதி. ஏகாதிபத்திய பணத்தில் மண்ணில் கால்பதித்ததால் யதார்த்தம் தெரிந்த பொருள்முதல்வாதி. இதுதான் ரொக்சியை வைத்து பிழைக்கும் ரொக்சிய பிழைப்பு. வெளிநாட்டில் ஓரளவு பாதுகாப்புடன் என்று ஓரளவு போட்டபடி புரட்சி கதைக்கின்றீர்கள் என்று கூறிக்கதைக்க வேண்டாம் நாட்டில் கதையுங்கள் என்கின்றார்.

இது அடிக்கடி புலிகள் இடமிருந்து ஒலிக்கும் குரல் அல்லவா. எப்படி இந்த போலி ரொக்சியவாதியிடம் வந்தது. எப்படி கோட்பாடற்ற இலக்கிய கூத்தடிப்பு நடத்தும் இவர்கள் இடம் வந்தது. அண்ணனுக்காக தம்பி, தனது இருத்தலுக்காக கோட்பாடற்ற புலம்பல் நடத்தும் இவர்கள் புலிகளின் பாணியில் விமர்சனத்தை தடுக்க, எடுத்து வைக்கும் விடையமாக உள்ளது அவ்வளவே. O


வெளிவந்துவிட்டது!

**பி.இரயாகரனின்**

தேசியம் எப்பொழுதும்,
எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே
ஒழிய
பாட்டாளிவர்க்க கோரிக்கையல்ல



கீழைக்காற்று
வெளியீடு

பக்: 108

www.tamilarangam.net

# இன்றைய உலகில்

ஆயிரத்து இருநூறு மில்லியன் மக்கள் அடுத்தநேர உணவு என்ன எனத் தெரியாத வறுமையில் உள்ளனர். ஐந்நூறு மில்லியன் மக்கள் குடிக்க தண்ணீரின்றி தாகத்தால் தவிக்கின்றனர். இருநூற்றி ஐம்பது மில்லியன் சிறுவர் சிறுமிகள் மிக மோசமான உடல் உழைப்பில் மழலை மொழி இழந்து கருவாடாகின்றனர். இருநூற்றி ஐம்பது மில்லியன் மக்கள் உயர் சாதியால் தொட்டாலே தீட்டு என்று கூறி அவனை சுரண்டிக் கொழுக்கும் ஜனநாயக பார்ப்பானிய கொடூரங்கள். இது போல் அரைவாசி பெண்கள் என நீளுகின்றது இன்றைய உலகப் பட்டியல்



"Samar"

87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE
FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்